


# அந்தர்யாமின்-iii



பகவானின் 60வது ஜென்மதினச் சிறப்பிதழ்

ஸ்ரீ அம்மாபகவான் சரணம்

# அந்தர்யாமின் - iii

"பகவத் சேவையே மகா பிரசாதம்
பகவத் பக்தியே முக்திக்கு மூலம்
பகவத் பத்னியே மஹா சக்தி
பகவத் சாக்ஷாத்காரமே
அந்திம த்யேயம்"

நூற்பெயர்

# அந்தர்யாமின்

**அந்தர்யாமின்** i
வெளியீடு - 14.11.2008

**அந்தர்யாமின்** ii
மறுபதிப்பு - 01.01.2009

**அந்தர்யாமின்** iii
வெளியீடு - 07.03.2009

தொகுப்பாசிரியர் - திருமதி. ஜோதி செல்வராஜன் (ஐடியல்)
2554909, 2554888

பக்கவடிவமைப்பு - செல்வி. கலைவாணி அருளானந்தசோதி
செல்வி. சுகந்தமலர் பகவத்ராம்

ஆசிரியர் குழு
அட்டைப்
படவடிவமைப்பு - திரு. துளசிராம் சிவகடாட்சம்
060-2212251(வைகுந்தம்)
செல்வி. சந்திரிக்கா செல்வராஜன்
(ஐடியல்)

அச்சகம் - விகடன் அச்சகம்
541/2 காலி வீதி, வெள்ளவத்தை
2361329, 2504370, Fax : 2504370

தொடர்புகளிற்கு - திருமதி ஜோதிசெல்வராஜன்
"ஸ்ரீ கல்கிசரண்" ஐடியல்,
இல-01 சின்சபா வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு, இலங்கை.
தொலைபேசி:- 0094-112554909
தொலைநகல் 0094-112593874.
Email :- antaryamin@live.com

# நமஸ்தே, அம்மாபகவான் சரணம்



பக்த பராதீனா பார்புகளும் தேவா
முன்னை வினை அகற்றும் முக்தீஸ்வரா!
கர்ம வினை போக்கும் கல்கீஸ்வரா" உன் கருணைக்கு
இதயத்தில் குடியிருக்கும் இதயீஸ்வரா
நன்றியை சொல்லிட வார்த்தைகள் இல்லை
உன் பாதம் பணிந்தோம் ஸ்ரீஸ்ரீ பகவான்
நாளும் பொழுதும் உன் நினைவானோம்
உன் பாதம் பணிந்தோம் ஸ்ரீஸ்ரீ பகவான்
நிற்பதும் நடப்பதும் உன் அருளாலே
உன் பாதம் பணிந்தோம் ஸ்ரீஸ்ரீ பகவான்
நீயின்றி எமக்கு யார் துனை ஐயா
உன் பாதம் பணிந்தோம் ஸ்ரீஸ்ரீ பகவான்

நன்றியுடன்
திருமதி. ஜோதி செல்வராஜா
ஸ்ரீலங்கா
07.03.20090

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்ப் பவதி பாரத**
**அப்யுத்தானம் அதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்**

(எவ்வப்போது தருமம் குறைந்து அதர்மத்திற்கு எழுச்சி உண்டாகிறதோ அப்போது நான் என்னைப் படைத்துக் கொள்கிறேன்.)

**பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்**
**தர்ம ஸம்ஸ்த்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே**

**- பகவத் கீதை**

(சாதுக்களைக் காப்பதற்கும் துஷ்டர்களை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகந்தோறும் வந்துதிப்பேன்)

**ஆகாசாத் பதிதம் தோயம் யதா சாகரம் கச்சதி**
**சர்வதேவ நமஸ்காரம் ஸ்ரீ பகவந்தம் ப்ரதிகச்சதி**

(ஆகாயத்திலிருந்து விழும் (மழை) நீரானது, எவ்வாறு சமுத்திரத்தைச் சென்றடைகிறதோ, அவ்வாறே, அனைத்து தேவர்களுக்கும் செய்யும் பூஜையானது. ஸ்ரீ பகவானையே சென்றடையும்.)

**உங்களில் ஏற்படும் சிறிய மாற்றங்களே**
**உலகில் பெரிய மாற்றங்களை உருவாக்கும்.**

ஸ்ரீபகவான்

# பொருளடக்கம்


பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 01. | அந்தர்யாமின் என்றால் என்ன? | - | 07 |
| 02. | 7ன் மகிமைகள் | - | 08 |
| 03. | அவதார மகிமை | - | 09 |
| 04. | வாழ்க்கை ஓட்டம் | - | 11 |
| 05. | அருள் பெருகிட ஸ்ரீகல்கி கூறுகிறார் | - | 20 |
| 06. | ஸ்ரீகல்கியின் ஜென்மதின சிறப்புச் செய்தி | - | 21 |
| 07. | ஸ்ரீகல்கி, இளைஞர்களுக்கு ஆற்றிய உரை | - | 24 |
| 08. | பெற்றோருக்கான செய்தி | - | 29 |
| 09. | ஸ்ரீகல்கியின் அமுதமொழிகள் | - | 31 |
| 10. | விடுதலை | - | 65 |
| 11. | அவதாரம் பக்தபோதனாவின் கதை | - | 69 |
| 12. | பிரார்த்தனை | - | 71 |
| 13. | சேவை செய்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள் | - | 75 |
| 14. | சத்கர்மா | - | 78 |
| 15. | கர்மா | - | 85 |
| 16. | ஆனந்தமான வாழ்விற்கான மார்க்கம் | - | 88 |
| 17. | இன்றைய மனிதனின் நிலை | - | 90 |
| 18. | மனஅழுத்தம் | - | 91 |
| 19. | யக்ஞம் என்பது என்ன | - | 92 |
| 20. | வரயக்ஞம் | - | 94 |
| 21. | தெய்வீக ஹோமங்களும் யாகங்களும் | - | 95 |
| 22. | நமஸ்தே என்னும் நம்முடைய பழமையான வரவேற்கும் முறையின் முக்கியத்துவம் என்ன? | - | 104 |
| 23. | பூஜ்ய ஸ்ரீவிமலகீர்த்தி ஆச்சாரியாரின் செய்தி | - | 106 |
| 24. | ஸ்ரீபகவான் மூலமந்திரம் ஹோமம் | - | 109 |
| 25. | துளசி | - | 112 |
| 26. | பாதுகா பூஜை | - | 116 |
| 27. | வெற்றியின் திறவுகோல் | - | 125 |

28. ஸ்ரீபகவான் சரிதம் - 134
29. பகவான் கவசம் - 149
30. கல்கி புகழ்மாலை - 157
31. சொல்லத்தகுமாகுமா - 167
32. திருப்பல்லாண்டு - 168
33. சுப்ரபாதம் - 170
34. அண்டசராசரம் - 171
35. திருப்பாதங்கள் தாங்கிய பாதுகைக்கு அபிஷேகம் 172
36. திருப்பாதங்களே திருப்பாதங்களே - 174
37. பரம்பொருளின் நேர்த்தியான - 176
38. உன்பாதம் சரணடைந்தேன் கல்கி ஐயனே - 177
39. விண்ணும் மண்ணும் கிடுகிடுக்க - 179
40. கல்கி பகவதி பொற்பாதங்கள் - 180
41. உன்பாதம் பணிந்திடுவோம் - 182
42. ஆனந்த சாகரா - 183
43. You are the Sunshine in the morning light - 184
44. I see the Lord in everything - 185
45. Oh Lord, please take me home - 186
46. சுயநலம் - 187
47. வியக்கிறேன் இறைவா - 188
48. கணமேனும் பிரியாத வரம் வேண்டும் - 193
49. அம்மா பகவான் நாமம் - 194
50. ஆவிர்பாவம் காணவேண்டும் - 195
51. ஆனந்த நாட்டியம் - 196
52: அருளாலே உலகாளும் - 197
53. கல்கி என்ற நாமம் - 198
54. நன்றிகள் - 199
55. சரணாகதி - பக்தியால் உனைப்பாடி - 200
56. ஸ்ரீகல்கி அஷ்டோத்திரம் - 201
57. மங்களம் - 207
58. வாழி - 208

ஸ்ரீ பகவானின்

# சஷ்டியத்தபூர்த்தி விழா



ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம
புருஷோத்தாம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத
ஸ்ரீ பகவதே நமஹ:

# அந்தர்யாமின் என்றால் என்ன?

**ஸ்ரீபகவான் : ~நாம் "கடவுள்" எனும் பதத்தை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம்.** ஆனால் கடவுள் என்றால் வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறான பொருள். ஆகையால் கடவுளை நாம், உங்களுடைய சொந்த உயரிய நிலை அல்லது உயரிய புத்தி அல்லது உயரிய சைதன்யம்... எனப் பலவழிகளில் வர்ணிக்கலாம்.

சில சமயங்களில் நூற்றுக்கணக்கான பறவைகள் ஒரே பறவையைப்போல பறப்பதைப் பார்த்திருப்பீர்கள். உண்மையில், அந்த முழுக் கூட்டத்திற்கும் **ஒரே சைதன்யம்** தான் உள்ளது. ஒவ்வொரு தனிப்பறவைக்கும் தனிச் சைதன்யம் உண்டு. ஆனால் ஒரு தனிப்பறவை, அந்த முழுமையான சைதன்யத்தையே தொடர்ந்து செல்லும். சில சமயங்களில், ஒன்று அல்லது இரண்டு பறவைகள் கூட்டத்திலிருந்து விலகி வெளிச்சென்று விடுவதையும், மறுபடி அவை பறவைக் கூட்டத்தோடு சேருவதையும் பார்த்திருப்பீர்கள். **நீங்கள் தான் அந்தத் தனிப்பறவை என்றால் ஒரு பெரிய பறவையைப் போல தோன்றும் அந்தப் பறவைக் கூட்டம்தான் 'அந்தர்யாமின்'** என்பது இதைக் கடவுள் என்றோ உயர்ந்த சைதன்யம் என்றோ அல்லது... பலவாறாகக் கூறலாம். பல தனிப்பறவைகள் எவ்வாறேனும் அந்த உயரிய சைதன்யம் அல்லது அந்தர்யாமினுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. **'அந்தர்யாமின் உள்ளது' அல்லது 'உங்களுடைய அந்தர்யாமின் விழித்தெழுந்துள்ளது'** எனக் கூறினால் **அதன் பொருள் என்னவெனில் நீங்கள் முழுமையின் ஓர் அங்கம் என்பதே .** நீங்கள் அந்தப் பூர்ணத்துடன் தொடர்பு கொண்டுள்ளீர்கள். உங்களுக்கு அந்த முழுமையைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். பறவைக் கூட்டத்தில் ஒரு பறவை பிரிந்து சென்று விட்டால் இரண்டு அல்லது மூன்று பறவைகள் கூட்டத்திலிருந்து வெளிவந்து அந்தப் பறவைக் கூட்டத்துடன் சேர்க்க உதவி புரியும். அதன் பிறகே அந்தக் கூட்டத்தால் செயல்பட முடியும். அந்தச் சிறு பறவை, பெரிய கூட்டத்தோடு செல்லும் வரைதான் **'அந்தப் பறவை**

**கூட்டத்தின் விருப்பப்படி அதைத் தொடர்கிறது'** எனக் கூறலாம்.

**ஆகையால் உங்கள் அந்தர்யாமியுடன் உங்களுக்கு பேச முடிந்தால் 'நீங்கள்' எனும் ஒரு பாகம், அந்த முழுமையின் விருப்பத்திற்கு இணங்க செல்கிறீகள் என்று பொருள்,** அதாவது, தெய்வத்தின் இச்சைக்கு இணங்க செயல்படுகிறீர்கள். தெய்வத்தின் விருப்பத்திற்கிணங்க செயல்பட விருப்பம் இருந்தால் மட்டும் போதாது, தெய்வத்தின் விருப்பம் என்னவென்று உங்களுக்குத் தெரிய வேண்டும். அந்த உயர் சைதன்யத்தின் விருப்பம் என்னவென்று தெரியாவிடில், நீங்கள், கூட்டத்திலிருந்து பிரிந்த ஒரு பறவையைப் போலவேதான். உண்மையில், நீங்கள் ஓர் அனாதை.

ஆகையால், **அந்தர்யாமின் என்பது, உயர், சைதன்யம்,** முழுமை அல்லது பூர்ணம். உங்களுக்கு அந்தர்யாமின் உள்ளது என்று கூறினால் நீங்கள் அந்தப் பூர்ணத்துடன் தொடர்பு கொண்டுள்ளீர்கள் என்று அர்த்தம். இல்லையெனில் நீங்கள் ஒரு அனாதைதான்.

## 7ன் மகிமைகள்

வார நாட்கள் ஏழு
முக்கிய ரிஷிகள் ஏழு
ஸப்த ஸ்வரங்கள் ஏழு
உலக அதிசயங்கள் ஏழு
உலகின் கண்டங்கள் ஏழு
வான வில்லின் நிறங்கள் ஏழு
இருள் நீக்கி ஒளி கொடுக்கும்
சூரிய பகவானின் குதிரைகள் ஏழு
மனிதனுக்கு ஞான ஒளி கொடுக்கும்
ஸ்ரீ கல்கியின் ஜென்ம தினம் ஏழு

# அவதார மகிமை

ஸ்ரீகல்கிபகவான் 1949ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 7ஆம் நாள் குடியாத்தம் வட்டம் நத்தம் கிராமத்தில் பிறந்தார். தாயார் வைதர்பி அம்மாள் தந்தையார் வரதராஜீலு ஆவார்.

ஸ்ரீகல்கிபகவான் தம் இளம் பிராயத்திலேயே மக்களைப் பற்றிய தீவிர சிந்தனையில் ஈடுபட்டார். அவர் மற்ற குழந்தைகள் போல் விளையாட்டிலோ மற்ற விஷயங்களிலோ ஈடுபாடில்லாது தனித்தே இருந்தார். மற்றவர்களுடன் சகஜமாகப் பழகினாலும் அவர் மனதில் மட்டும் மனிதன் துன்பப்படுவதற்கான காரணம் பற்றிய எண்ணம் ஓடிக்கொண்டே இருந்தது. அச்சமயத்தில் தான் தன்னைப்பற்றி உணர ஆரம்பித்தார். அவர் கோவிலில் விக்கிரத்தை சுற்றி வரும்போது அவர் தன்னையே சுற்றி வருவதை உணர்ந்தார். இந்த அனுபவமே அவர் தன்னுள் தெய்வீத் தன்மை இருப்பதை உணர்ந்த முதல் அனுபவமாகும். இதைத் தொடர்ந்து அவரைச் சுற்றிப் பல அற்புதங்களும், தெய்வீக அனுபவங்களும் ஏற்பட ஆரம்பித்தன. ஸ்ரீகல்கிபகவான் 1976ஆம் ஆண்டு தம்முடைய அவதாரத் துணையாக ஸ்ரீபத்மாவதி அம்மாவைத் திருமணம் செய்து கொண்டார்கள். அதிக தெய்வநம்பிக்கையுள்ள நடுத்தரக் குடும்பத்தில் ஸ்ரீபகவதிஅம்மா அவர்கள் நெல்லூர் மாவட்டம் சங்கம் கிராமத்தில் 1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ம் நாள் பிறந்தார்கள்.

பகவத் தர்மம் என்ற இந்த பெரும் நிகழ்வானது 1989ல் முதல் முதலாக ஸ்ரீ பகவான் நடத்தி வந்த ஜீவாஷ்ரமப் பள்ளியின் மாணவர்கள் மத்தியில் ஆரம்பமானது. **ஜீவாஷ்ரம் பள்ளி இருந்த இடமே இன்றைய சத்யலோகமாகும்.** அப்பள்ளி மாணவர் ஒருவரின் ப்ரம்மரந்திரா வழியாக தெய்வீகத்தன்மை பொருந்திய தங்க உருண்டை புகுந்ததுதான் முதன் முதலில் ஸ்ரீ கல்கி பகவான் செய்த அற்புதமாகும். **இந்த அற்புதமானது கடவுள்**

**அந்தர்யாமினாகத் தோன்றி அருள் பாலிக்கும் நிகழ்வாகும்.** இவ்வற்புதம், பின்னர் பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயத்தில் நிகழ்ந்து வந்திருக்கிறது. இச்சூழலில் மற்ற மாணவர்களும் இது போன்ற பல தெய்வீக அனுபவங்களையும், சமாதி அடைதல், முந்தைய பிறவிகள் பற்றிய அனுபவங்கள் முதல் பல்வேறுபட்ட அற்புதங்களையும் உணர்ந்தனர். அவர்கள் இவ்வனுபவங்களின் பின்னணியில் ஸ்ரீபகவான் இருப்பதை உணர்ந்தனர். இதன்பின்னர் இத் தெய்வீக அனுபவ அற்புதங்கள் பல இலட்சக் கணக்கான மக்களின் அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளாயின.

இன்று ஸ்ரீகல்கிபகவான் ஸ்ரீபகவதி (அம்மாபகவான் என அன்போடு அழைக்கப்படுகிறார்கள்) இருவரும் மனித சமுதாயத்தின் எல்லா வகை துன்பங்களிலிருந்தும் மனிதனை விடுவிப்பதோடு அன்பு, அமைதி மற்றும் ஒற்றுமை உணர்வோடு வாழவும் அருள் பாலிக்கிறார்கள்.

**மார்ச் 7, 1949 சரித்திரத்தின் மிகச் சிறப்பான காலகட்டம், 60 வருடங்களுக்கு முன்பு, இந்நாளில் துவங்கியது; ஸ்ரீ பகவான், அவதாரமாக இப்புவிக்கு இறங்கி வந்த ஜன்ம தினம்**

இருளிலிருந்து ஒளியை நோக்கி
அசத்தியலிருந்து சத்தியத்தை நோக்கி
அழிவிலிருந்து அழிவற்ற நிலையை நோக்கி
பயணம் துவங்கியது. இந் நன்நாளிலே தான்.

**ஸ்ரீபகவான் : இந்தப் புதிய நாகரீகத்தின் உதயத்தை, ஒருமையுகம் என்றும், நம் வாழ்நாளில் நிகழக்கூடிய மாபெரும் ஒரே உண்மையின் பகிரங்கமான வெளிப்பாடு என்றும் அழைக்கலாம். இருப்பவை அனைத்துடனும், ஓர் ஒருமை உணர்வை ஏற்படுத்தவல்ல சைதன்ய நிலையை உருவாக்கும் விதி நமக்கு உள்ளது.**

# வாழ்க்கை ஓட்டம்

ஸ்ரீஅம்மா பகவானின் பிரதம சிஷ்யை
பூஜ்ய ஸ்ரீஆச்சாரிய சமதர்ஷிணி அவர்கள் வழங்கிய
ஆங்கில அருளுரை
"Flow of Life" தமிழாக்கம்

அன்புக்குரிய ஸ்ரீ அம்மா பகவானின் பாதக்கமலங்களுக்கு வணக்கங்கள். உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கங்கள்!

ஆன்மீகமானது அநேகமானோருக்கு எப்போது மலர்கின்றதெனின், **அவர்கள் தமது வாழ்க்கையில் விளக்கமுடியாத அபூர்வமான தற்செயலான நிகழ்வுகள், மிகப்பெரிய அனுபவங்கள் அல்லது அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய தாக்கம் ஏற்படும்பொழுது, அதனால் பெருந்துயரம் ஏற்படும்போது இந்த வகையில் தான் மலரும்.** அப்போது அவர்கள் ஆன்மீக வழிக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

மக்கள் தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றிச் சிந்தித்து தங்களுக்கு ஏன் அவ்வாறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன? அவற்றின் தீர்வுதான் என்ன? போன்ற கேள்விகளுக்கு தர்க்க ரீதியாகவும், காரண ரீதியாகவும் விடை கண்டுபிடிக்க முடியாத நிலையில், அவை பற்றிய விளக்கங்கள் தெளிவு பெறாத நிலையில், அவர்கள் உள்நோக்கி ஆராய முற்படுகின்றனர். இந்நிலையில் தங்களினுள்ளே அதற்கான விடையை நாடி நிற்கிறார்கள் . அவர்கள் தங்கள் உள்நோக்கிய பயணத்தில் மிக ஆழமான நிலையை அதாவது மூல நிலையைத் தேட ஆரம்பிக்கிறார்கள். இவர்களைத்தான் நான் ஆன்மீகமுள்ளவர்களாகக் கருதுகின்றேன்.

**ஆன்மீக நிலையில் உள்ள ஒருவருக்கும் மத ஈடுபாடுடைய ஒருவருக்கும் பெரியளவில் வேறுபாடுகள் உள்ளன.**

ஆனால் ஆன்மிக ஈடுபாடுடையவனோ சம்பிரதயமாக வணங்கப்படும் இறைவனில் நம்பிக்கையற்றவனாகவும் இருப்பான். அவன் முற்றாக சமயபற்றற்றவனாக இருக்கலாம். ஆன்மீக நிலையில் உள்ளவன் வெளிநிலையிலிருந்து உள்நிலைக்கான பயணத்தை நாடி நிற்பான்.

மக்கள் அடிப்படையாக மூன்று நிலையில் உள்ர் என்று சொல்வதை விட அவர்கள் மூன்று வேறுவிதமான வாழ்க்கைகளை வாழ்கிறார்கள் என்பதே சாலப் பொருந்தும்.

1. **லௌகிக வாழ்க்கை – பொருட்களில் ஆசை வைக்கும் மேலெழுந்த வாரியான உலகியல் வாழ்க்கை.**

2. **ஆன்மீகம் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் வாழ்க்கை.**

3. **இறைவனின் இயல்பை உணரும் தெய்வீக வாழ்க்கை.**

இவையே அந்த 3 வகையான வாழ்க்கை நெறிகள். உலகின் பல்வேறு வகையான மக்கள் இம் மூன்று நெறிகளில் ஏதாவதுதொன்றை வாழ்ந்து அனுபவித்து கொண்டிருப்பார்கள்.

முதல் வகையான லௌகீக வாழ்க்கையை வாழ்வோரைப் பற்றி நோக்குவோமேயானால், இவர்கள் பெரும்பாலும் சொகுசையும் அதற்கான பாதுகாப்பையும் நாடி நிற்பர். **அளவற்ற சுகபோகம், வியத்தகு வாழ்க்கைத்துணை, அழகான குழந்தைகள், சிறப்பான தொழில், அழகிய வீடு,** அதன்முன் நான்கைந்து மோட்டார் வண்டிகள் இவை தவிர வேறொன்றையும் விரும்பமாட்டார்கள். இவர்களுக்கு வாழ்க்கை என்பது மேற்சொன்னவை தவிர வேறொன்றுமில்லை. இவர்கள் தான் முதல் நெறியை பின்பற்றுவார்கள்.

அடுத்து இரண்டாவது நெறியை பின்பற்றுபவர்கள், இவர்களை நாம் ஆன்மிக நிலையில் உள்ளவர் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடும் போக்குள்ளவர் என அழைக்க வருகிறேன். இவர்கள் **"அடுத்தது என்ன?"** என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். **"இவ்வளவு தான் எனது வாழ்க்கையா?" நான் ஒரு புழுவைப் போன்று உண்டு தன்னினத்தைப் பெருக்கி, பின் இறப்பதற்காக இவ்வுலகில் பிறந்தேன். நான் இவ்வுலகில் வாழ்வதற்கும் நிலைத்திருப்பதற்கும் என்ன உயரிய நோக்கம் உள்ளது? இவையே ஒரு ஆன்மீக நிலையில் உள்ளவன், இன்னும் என்ன? அடுத்தது என்ன?"** என்பதன் மூலம் கேட்கும் கேள்விகள் ஆகும்.

**அதாவது எந்தவித சுகபோகங்களும் வாழ்க்கையை நிறைவுபடுத்த முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். இந்த சுகபோகங்கள் எப்போதும் ஒரே மாதிரியான விறுவிறுப்பை கொடுக்கமாட்டா.**

ஒவ்வொரு சுகபோகமும் காலப்போக்கில் அதன் பெறுமானம் வலுவிழந்துவிடும் என்பதை உணர்வார்கள். இவர்கள் ஆழ்ந்து சிந்தித்து வாழ்க்கையைப் பற்றியும் அவர்களின் மனதின் போக்கை பற்றியும் வாழ்க்கை முறையைப் பற்றியும் தம்மை சுற்றியிருக்கும் உலக விவகாரங்கள் பற்றியும் விசாரணை செய்வார்கள். இவர்கள் உலகியல் வாழ்வில் இருந்து கொண்டு உலகத்தைப் பற்றிய இருட்டிற்குள் சென்று ஆராயமுற்படுவார்கள். ஆனால் தங்கள் வாழ்க்கையைப் பற்றி உணர்ச்சிபூர்வமாக முற்றாக அறிய விரும்புவார்கள்.

மூன்றாவது வகையான மக்கள், அதாவது இறையியல்பை உணர்ந்து தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்கள். அவர்கள் இறை இயல்பைப் பற்றி அறிய வேண்டிய தமது தாகத்தைப் பூர்த்தி செய்து தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்கள். எல்லாவற்றையும் தாண்டிச் சென்ற நிலையில் மேலான அனுபவங்களைப் பெற்றவர்கள். இவர்களுக்கு வாழ்க்கை என்பது முற்றாக தெய்வீகமானது.

இப்பொழுது நாங்கள் எங்களுக்குள் சென்று உள்நோக்கிப் பார்ப்போம். ஆழ்ந்து சிந்தித்து இதனை நோக்குவோம். **அதாவது எங்களுடைய மனத்தையே நாங்கள் பார்ப்போம். புத்தகங்களைப் படித்தும் பிரசங்கங்களை கேட்டும் அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஞானமும் ஒளியும், நீயே நோக்குவதாலும் உனது நிலையை நோக்குவதாலும் உனது இதயத்தைப் பார்ப்பதாலுமே பெறப்படக் கூடியன. எமது வாழ்வு பெரும்பான்மையாக உறவுமுறையை அடிப்படையாகக் கொண்டது. இரு தேவைகளைக் கொண்டு பண்படுத்தப்பட்ட உறவுமுறையைக் கொண்டதே பெரும்பாலான வாழ்க்கை அவையாவன,**

1. **அன்புறவை ஒருவர் மேல் வெளிப்படுத்தும் தேவை**
2. **அன்பை நாடி நிற்கும் தேவை**

இந்த இரண்டாவது **வகையானது** அன்பு நிபந்தனையற்ற முறையிலும் **உணர்ச்சிபூர்வமாகவும்** ஆர்வத்துடனும் அளிக்கப்படும் அன்பு ஆகும்.

எங்கள் வாழ்க்கையில் எமது செயல்களும் அதன் பெறுபேறுகளும் இவ்விரு அடிப்படைத் தேவைகளையும் பூர்த்திசெய்வதை அடிப்படையாகக் கொண்டவையே. அதாவது அதன் பொருள் அறிவு, பதவிநிலை போன்றவையாகவும் இவ்விரு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரியனவாகவும் இருக்கும்.

நாங்கள் முதலில் அன்பை நாடி நிற்கும் தேவையை பார்ப்போம். நான் பேசும்போது நீங்கள் உங்களினுள்ளே சென்று இரண்டாவது நிலைப்பாட்டைப் பாருங்கள். அதாவது அன்பை நாடி நிற்கும் தேவையை.

நீ உன்னை பற்றிய நிலையை நோக்கிய நாளிலிருந்து உன்னை ஒருவர் அன்புடன் நேசிப்பதை நாடி நிற்கிறாய். அதாவது உன்னை அன்புடன் நேசிக்கும் ஒருவரை தேடுகிறாய், எதிர்பார்க்கிறாய், நிபந்தனையற்ற முறையில் உன்னை அன்புடன் நேசிக்கும் ஒருவரை நாடி நிற்கிறாய். உனது குறைபாடுகள் எப்படி இருந்தால் என்ன? அதாவது அழகு, குணம் பதவி போன்ற நிலைகளில் என்னென்ன வேறுபாடுகள் இருந்தாலென்ன? இவை எல்லாவற்றையும் தள்ளிவிட்டு அன்பை நாடி நிற்கிறாய்.

**இந்த அன்பை நாடி நிற்கும் வேட்டை, முதன் முதலில் எம்மை இந்த பூமிக்கு கொண்டு வந்த தாயிடம் செல்கிறது. தாய் தந்தையிடம் ஆரம்பித்து,அவர்களின் முற்றான அன்பை எதிர்பார்த்து, அவர்கள் உன்னை தமது கண்ணின் மணிபோல் நேசிப்பதை எதிர்பார்க்கிறாய். அவர்கள் உன்னை மட்டுமே நேசிக்க வேண்டும் என நீ எதிர்பார்க்கிறாய். இது சாத்தியப்படாது போகிறது. இந்நிலையில் நீ வேறு இடங்களை, அதாவது உன்மீது உணர்ச்சிபூர்வமான அன்பைச் செலுத்தும் நிலையை எதிர்பார்த்து நிற்கிறாய். உயிர் நண்பன் என்ற நிலைமையை அவனிடத்தில் நாடி நிற்கிறாய். அதன்பின் ஆசிரியரை நாடிச்சென்று அங்கும் உனது தேடுதல் நிறைவு பெறாத நிலையை உணர்கிறாய்.அதன் பின் உனது வாழ்க்கைத் துணையிடமும் பிள்ளைகளிடமும் பின்னர் பேரப்பிள்ளைகளிடமும் இந்த அன்பை எதிர்பார்கிறாய். உனது அன்பைத் தேடும் வேட்டை இப்படியே தொடர்கிறது.** ஆனால் அன்பைத் தேடும் வேட்டையில் அவர்களது தேவைக்கேற்ப அது கிடைத்தற்கரியதாக இருக்கிறது. எவ்வாறிருப்பினும் குறிபபிட்ட

ஒரு உறவு முறையில் அந்த அன்பைப் பெற்ற உணர்வில் அந்த அன்பு தொடருமென்றும் நிலைத்திருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவனுக்கு தான் அழகாய், அறிவாளியாக, செல்வந்தனாக இருக்க வேண்டும் என்ற ஆசைகள் உண்டாகும். இவையெல்லாம் உண்மையில் அன்பை வேண்டி நிற்கும் நிலைப்பாடுடையனவே.

நீ அழகாக இருக்க விரும்புவதன் காரணம், உன்னிடம் பலர் அன்பு செலுத்த வேண்டும் என்பதேயாகும். நீ செல்வந்தனாக இருப்பின் உனது மனைவியும் பிள்ளைகளும் உன் மீது அதிக அன்பை செலுத்துவார்கள். நீ அறிவாளியாக இருப்பின் உனது பெற்றோர் உன்னை கூடுதலாக மதிப்பார்கள், நேசிப்பார்கள். உனது சகோதரர் சகோதரியைவிட பெற்றோர் உன்மீது கூடுதல் அன்பைச் செலுத்துவர். இவையெல்லாம் அன்பை வேண்டி நிற்றலின் அடிப்படையில் உருவானவையே! அதாவது நேசிக்கப்படுபவரை வேண்டி நிற்றலாகும். உனது வாழ்க்கையின் ஓட்டத்தைப் பார்க்கும்போது, **இவ்வுலகில் யாருமே நிபந்தனையற்ற அன்புடன் நேசிக்கப்படவில்லை என நீ உணர்கிறாய்.** இவ்வுலகில் ஒருவர்கூட அவ்வனுபவத்தைப் பெற்றிருக்க மாட்டார்கள்.

ஏனெனில் எமது ஆழ்ந்த இதயத்தில் பெரிய வெற்றிடம் இருக்கின்றது. உன்னை எல்லோரும் அன்புடன் நேசித்தார்கள் என்பதை நீ நம்ப மறுக்கிறாய். அளவிடமுடியாத எவ்வளவு அன்பை அள்ளிக் கொட்டினாலும், அது உன்னை திருப்திப்படுத்த முடியாததென நீ உணர்கிறாய். அதாவது ஒரு வெற்றிடம், அன்பைப் பற்றியதொரு பயம் அப்படியே பலவிதமான நிலைகள் உனக்கு ஏற்படுகின்றன.

இப்பொழுது அன்புறவை ஒருவர்மேல் வெளிப்படுத்தும் தேவையை பார்ப்போம். உனது வாழ்க்கையின் ஓட்டத்தைப் பார்க்குமிடத்து, உறவு முறையில் பல நிலைப்பாடுகள் உனது விதிக்கு காரணமென்பதை உணர்கிறாய். இந்த உறவுமுறை உன்னால் ஏற்பட்டதல்ல அல்லது நீ அதற்கு காரணமல்ல. **உனது தாய், தந்தை, சகோதரர்களை நீ தெரிவு செய்யவில்லை. ஆனால் வேறு சில உறவுமுறைகளை நீயே தெரிவு செய்துள்ளாய்.** உனது வாழ்க்கைத் துணை, தொழில் பங்கீட்டாளர், உனது நண்பன், ஆன்மீக குரு யாவரும் நீ தெரிவு செய்வதையே இந்த உறவுமுறையில்

ஒரு விசித்திரமான அசௌகரியத்தை காணக்கூடியதாக உள்ளது. **அந்த அசௌகரியம் உனது சுயநலத்தால் உருவானதென எப்பொழுதாவது நீ உணர்வாய்,** நாங்கள் மற்றவர்களை எங்கள் சுயநலத்திற்காக பயன்படுத்துவோம். ஒரு தாய் தனது குழந்தை வளர்ந்து பெரியதொரு இசைக் கலைஞராகவோ அல்லது பெரியதொரு நடனக் கலைஞனாகவோ உருவாக வேண்டும் என விரும்புகிறாள்.

அது அவளது சுயவிருப்பைப் பூர்த்தி செய்வதற்காக வேயாகும். இவ்வாறு எங்கள் தேவைகள் சுயநலத்தின் அடிப்படையிலேயே அதாவது **நாங்கள் எங்கள் வாழ்க்கையில் எதனை அடையமுடியவில்லையோ அதை எங்கள் பிள்ளைகளாவது அடையவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் குடும்ப கௌரவத்தை வேண்டிச் செயற்படுகின்றோம்.** நாங்கள் எங்கள் சுய கௌரவத்திற்காக வேறொருவரைப் பயன்படுத்துகின்றோம் என்றுணராதவராக வாழ்கிறோம். எங்கள் பிள்ளை சந்தோஷமாக வாழவேண்டும் என்ற உணர்வு ஒரு பகுதியிலிருப்பினும் **உள்ளத்தினடிப்படையில் எங்கள் பெருமை நாட்டமே இதற்குக் காரணம்.** அதாவது எங்கள் பிள்ளை எங்களுக்கு புகழ் சேர்ப்பான் என்ற அவாவே ஆகும். இதை நீங்கள் ஏற்க மறுத்தாலும் ஆழமாக உங்களின் உள்ளே நீங்கள் உணர்கிறீர்கள். **நாங்கள் எங்கள் உறவுமுறையில் சுயநலமாக இருக்கின்றோம்** என்பதை உணர்கிறோம். அதனால் எங்கள் சுயநலத்திற்காக அவர்களை பயன்படுத்துகிறோம் எனவும் அறிகிறோம்.

**ஏன் ஒவ்வொரு உறவுமுறையிலும் சில காலத்தின் பின் சலிப்புத்தன்மை ஏற்படுகின்றது?** சில காலத்தின் பின் ஒவ்வொருவரும் ஏன் இவ்வாறு நடக்கிறார்கள்? அன்புறவை ஒருவர் மீது வெளிப்படுத்தும் தேவை கூட 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என காலம் ஓடியும் நிறைவேறாத நிலையில் உள்ளது.

இவ்விரு தேவைகளும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் எமது வாழ்க்கையின் ஓட்டம் அமைந்துள்ளது. இதற்கு என்ன செய்ய முடியும்? என்று சிந்திப்போம். நிபந்தனையற்ற அன்பை ஏற்படுத்த நாங்கள் எதுவும் செய்யமுடியுமா? அதாவது **"நான் இன்று தொடக்கம் ஒருவர் மீது முற்றாக அன்புச் செலுத்த முயற்சிப்பேன்."** என்று நீங்கள்

உங்களுக்குள் தீர்மானம் எடுப்பின் இதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமா? அல்லது இன்று தொடக்கம் நான் அன்பைப் பயிற்சி செய்யப் போகிறேன் என்றால் அது சாத்தியமா? சாத்தியமாக முடியாது.

**பயிற்சி முறையில் அல்லது விருத்தி செய்தல் முறையில் அன்பை ஏற்படுத்த முடியாது. அது உங்கள் எண்ணத்தாலும் உணர்ச்சியாலும் ஏற்படுத்தப்பட்ட நிலைப்பாடே. இதயத்தில் ஏற்பட்டதல்ல. இதனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.**

மன்னித்தல் என்பது கொள்கை ரீதியாகவும் சமாதானம் என்பது இலட்சிய ரீதியாகவும் அன்பு என்பது விருத்தி செய்யும் வகையிலும் ஏற்படுத்த முடியும் என்பது வாழ்க்கையில் ஒரு சாத்தியமற்ற நிலையே. **இவைகளை நிறைவேற்ற ஆன்மீக சாதனையே ஒரே வழி. இந்த உண்மை ஏற்படும்போது சடுதியான அன்பை பற்றிய அனுபவம் அல்லது பெருவேகம் அல்லது இதயமலர்ச்சி ஏற்படுகிறது. இது உங்களுக்கு ஏற்படவேண்டும்.**

கல்கி தர்மம் இந்த நிகழ்வை உங்களுக்கு உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்துகிறது. **அதாவது இதய மலர்வு, அன்புப் பெருவேகம், அன்பு அனுபவம் யாவற்றையும் கல்கி தருமத்தின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தமுடியும். அன்பைக் கண்டு பிடிப்பதும், இதயத்தை மலரச் செய்வதும் கல்கி தருமத்தின் போதனை மூலம் சாதிக்கப்படுவதல்ல. கல்கி தர்மம் அன்பை உங்கள் வாழ்க்கையில் ஒரு நிகழ்வாக ஏற்படுத்துகிறது. உங்களுடைய சுய நிலையைப் பற்றிய உணர்வை முற்றாக நீங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். இது தான் முதலாவது படி. இரண்டாவது கல்கி பூஜா, கல்கி யக்னா போன்றவற்றில் பங்குகொள்ளல் இவை யாவும் கல்கி தாசர்களால் நடாத்தப்படும் ஆன்மீக சாதனை வகுப்புக்களே.**

இந்த சாதனைகள் உங்களது ஆழ்ந்த நிலையை உங்களுக்கு உணரவைத்து, **அந்தர்யாமினில்** இறைவனைக் காணும் நிலைப்பாட்டை அளிக்கிறது. அப்பொழுதுதான் நீங்கள் இவ்வன்பை, அன்பின் உட்பொருளை கண்டு பிடிக்கிறீர்கள். **தயவுசெய்து வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம் என்பதை உணருங்கள். இப்பள்ளிக்**

**கூடத்தில் எத்தனையோ பாடங்களை கற்கிறீர்கள்.**

அன்பு என்பது ஒரு இலட்சியமல்ல. அதை பயிற்சி செய்தும் பெற முடியாது. உங்களுக்குள் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது. உங்களுக்குள் எத்தனையோ தெய்வீக அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவ்வன்பை உணரும் போதுதான் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அண்மையில் ஒரு பெண்மணி ஒரு யக்னாவில் பங்குபற்றினார். அவர் கவலையில் ஆழ்ந்திருந்தார். கடந்த ஏழு வருடங்கள் பெரிய அளவில் சத்திரசிகிச்சைக்கு உள்ளாகியிருந்தார்.

அதனை தொடர்ந்து உடல் தேறலை நாடி நின்றார். ஏன் யக்னாக்கு வந்தாரெனில், தனக்கேற்பட்ட நோயைவிட தனது மகள் கடந்த மூன்றாண்டுகளாக மூளையில் கட்டி ஏற்பட்டு, புற்றுநோயினால் அவதியுற்றதைக் கண்டு கவலைப்பட்ட நிலையில் அக்கவலையை தீர்ப்பதற்காக யக்னாவிற்கு வந்தார். அந்தப் பெண்ணுக்கும் இரண்டு சத்திரசிகிச்சை ஏற்பட்டு ஒரு கண் பார்வையை இழந்தார். தாயின் துன்பத்தை உணரமுடியாது இருந்தார்.(3வருடம் பலமுயற்சிகள் எடுத்தும் மீளமுடியாது இறுதியாக கல்கி தர்மத்தை நாடி வந்தார்.) அவள் என்னை மன அவஸ்த்தைக்கு உள்ளாக்கியிருந்தார். இறுதியாக பகவானிடம் கேட்பது என்னவென்றால் " **அவளுக்கு நோய் நிவாரணம் கொடுங்கள் அல்லது அவளை எடுத்துக் கொள்ளுங்கள்**" எனக் கூறினார். இதைக்கேட்டுக் கொண்டு சாய்வு நாற்காலியில் இருந்த மகள் ஏளனச் சிரிப்பு சிரித்தார். நான் சொன்னேன், "நீ யாக்னாவில் பங்குபற்றுங்கள்." அதற்கு அப்பெண்மணி கூறினாள் "எனது சிறுநீரகங்கள் சீர் கெட்ட நிலையிலுள்ளன" என வைத்தியர் கூறியுள்ளார். நான் இப்போது வாழ்க்கையைப் பயந்து பயந்து எண்ணிக் கொண்டிருக்கிறேன் என விடையளித்தாள்.

எனது வேண்டுகோளின் பிரகாரம் யக்னாவில் பங்கு பற்றினார். தனது கடந்தகால வாழ்க்கையை முற்றாக கண்டு கொண்டார். அவர் **அது தெய்வீக ஒப்பந்தம் என்பதை கண்டு பிடித்தார்.** அவள் வீட்டுக்கு சென்றபோது மகள் கட்டிலில் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதைக் கண்டார். அவள் தனது மகள் தன்னிலிருந்து பிரிந்த நிலையில் இல்லை என்பதை சடுதியாக உணர்ந்தார். **தனது உடம்பின் நீக்கப்பட்ட ஒரு பகுதியே மகள் எனக்கண்டார்.**

முதன் முதலில் ஒரு பேரன்பு அவளிடமிருந்து வெளிப்பட்டது. **தனது மகளிடம் சென்று அவளது நெற்றியில் முத்தமிட்டார்.** அன்றிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் அவளுடைய மகள் இறந்தாள். **தாய்க்கும் மகளுக்கும் இடையேயுள்ள உறவு பேரன்பானது.** அந்த ஒரு மாதத்தினுள் வாழ்க்கையின் பயணம் முற்றுப்பெற்ற நிலை ஏற்பட்டது. அந்த மகள் அமைதியாக இவ்வுலகை நீத்தார். அவர் தனது மகளுடனான அன்பைக் கண்டுபிடித்தார். பின் தனது சிறுநீரக நோய் பற்றி வேண்டி நிற்க விதியிருந்தும் அவளுடைய மகளுக்காகவே யக்ஞாவில் பங்கு பற்றினார். ஆனாலும் அவளுடைய சிறுநீரகங்களின் நிலை சீரடைந்தது.

**உங்கள் வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம். அதில் பெறும் அனுபவங்கள் யாவும் பாடங்கள் என்று உணருங்கள். அன்பை கண்டுப்பிடிக்காத வாழ்க்கை அழுக்கு, சேறு தேங்கி நிற்கும் நீக்குட்டை போன்றது. அன்பைக் கண்டு பிடிக்கும் நிலை உங்களுக்கு ஏற்படுமாயின் அது ஒரு ஓட்டம். ஓட்டம் எதற்காகவெனின், தொடங்க முடியாத ஒன்றைத் தொடங்குவதற்கான ஓட்டம், முடிக்கமுடியாத தொன்றை முடிப்பதற்கான ஓட்டம்.** இது ஒரு உள்ளார்ந்த இயக்கம். நான் உங்கள் ஒவ்வொருவரையும் அழைகிறேன். அன்பு செலுத்துவதற்கும் இவ்வாழ்வில் ஓட்டத்துக்கு உற்சாகமாகப் பங்கு பற்றி, ஏன் பிறந்தீர்கள் எனவும் எப்படி உங்களுக்கு நிகழ்கால வாழ்க்கை இருகின்றது எனக் கண்டுப்பிடிக்கவும் பேரன்பையும், பெரிய சுதந்திரத்தையும், நிரந்தரமான சுதந்திரத்தையும் தேடுவதற்கும் உங்களை அழைக்கின்றேன். இதுவே உள்ளார்ந்த மனதின் இயக்கமாகும். இலக்கு என்பது முழுமையான விடுதலையாகவும் **மனிதனின் விடுதலை என்பது எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறுதல். அதாவது உடல், உள ஆன்மீக ரீதியாக துயரங்களில் இருந்து விடுபடுவதாகும்.**

இப்பொழுது நான் எனது அடிகளை முன்னெடுத்து செல்ல விரும்புகிறேன். நீங்களுமே அங்ஙனமே சில அடிகளை முன்னெடுத்து செல்வதை விரும்புகிறேன். நீங்கள் எடுத்துச் செல்லும் அடிகள் இறைவனின் தெய்வீக கமலத்துள் சங்கமம் ஆகட்டும். அதாவது ஸ்ரீகல்கியின் இதயக் கமலத்துள்.

வணக்கம்.

## அருள் பெருகிட ஸ்ரீகல்கி கூறுகிறார்

**நீங்கள் என் அருளை நாடும்போது, எப்போதும், முதல்அடியை,அதுசிறியதோ, பெரியதோ, நான்தான் எடுத்து முன் வைக்கின்றேன்,** அதன் பிறகு அதனை(அருளை) உணர்ந்து உங்கள் ஹ்ருதயம் நன்றியால் நிரம்பினால், இரண்டாம் முறையாக உங்களுக்கு அருள் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொருமுறை நீங்கள் அருளைக் கண்டுபிடிக்கும்போது என்னுடன் ஒரு பந்தத்தையும் கண்டுபிடிப்பீர்கள்,மேலும் என்னைப் புதுமையாகக் காண்பீர்கள் **ஆபத்தில் உதவுபவனே நண்பன், எவருமே நினைத்திராத வகையில் என்னால் உதவ முடியும். இன்று நட்பு என்பது ஒருவரை மற்றவர் தன் சுயநலத்திற்காக உபயோகப்படுத்துவது. இது உங்களுக்கே தெரிந்த விஷயம்,** ஆனால் உங்களுக்கும் எனக்கும் இடையில் நான் கேட்பதெல்லாம் பின்வரும் உறவுமுறையே (பந்தம்). ''**உங்களுக்கு நான் எவ்வாறு தேவையோ, அவ்வாறே நானும் உங்களுடன் இருக்க ஏங்குகிறேன்,**''

உருவமற்ற நான், நீங்கள் என்னை முழு மனதுடன் நாடுகின்ற போது மட்டும் நான் உங்களது இதயத்துள் நீங்கள் விரும்பும் விடிவிலோ அல்லது நான் தேர்ந்தெடுக்கும் வடிவிலோ **அந்தர்யாமினாக** வருவேன் அல்லது நான் உங்களுக்கு வெளியேயும் மீண்டும், நீங்கள் விரும்பும் வடிவிலோ அல்லது நான் தேர்ந்தெடுக்கும் வடிவிலோ தோன்றுவேன். ஏனென்றால் அனைத்து வடிவங்களும் என்னுடைய வடிவமேயாகும். மேலும் நானே உங்களது பரமமித்ரனானேன்.

## ஸ்ரீகல்கியின் ஜென்மதின சிறப்புச் செய்தி

அன்று நம் பிரிமான பகவானின் ஜென்மதினம். சூரியன் மலைநடுவே புன்முறுவலுடன் சென்று ஒளிந்த ரம்யமான மாலை வேளை, பறவைகள் ஆனந்தக் கீக்சிட்டு தங்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. சில்லென்றமெல்லிய பூங்காற்று அனைவரையும் மயங்கச் செய்தது. முக்தியைப நாடி, இந்தியாவிலிருந்தும், பல மேலை நாடுகளிலிருந்தும் வந்திருந்த பக்தர்கள், பகவானின் தரிசனம் காண ஆவலோடு பூங்காவில் அமர்ந்திருந்தனர். நடைபாதையை அலங்கரித்த அழகிய விளக்குகள் பகவானை வரவேற்றன. ஆஹா! எந்த ஜென்ம புண்ணியமோ! அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும்.

வெண்ணிற ஆடை தரித்து, ஜொலிக்கும் சிகப்பு அங்கவஸ்திரம் உடுத்தி, பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் புன்சிரிப்புடன் நடந்து வந்து, பகவான் சிம்மாசனத்தின் மீது அமர்ந்தார். பகவானின் சுவாசம்படும் தூரத்தில் நின்று அவரைக் காணும் பாக்கியம் பெற்றபக்தர்களுக்கு அது ஒரு மகத்துவமான அனுபவம், அவர்கள் ஆனந்தக்கடலில் மிதந்ததை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. அந்தப் பக்திப் பரவசத்திலே பகவானுக்கு ஆராத்தி எடுக்கப்பட்டது.'அன்யதா சரணம் நாஸ்தி' என்று அனைவரும் பாத நமஸ்காரம் செய்தனர். பஜனைப் பாடல்கள் பாடும் சமயத்தில் பகவானின் கருணை திருஷ்டி அனைவரின் இதயத்தையும் உருக்கியது. அங்குக் கூடியிருந்த அனைத்துப் பக்தர்களும்,'சமயம்' நின்று விட வேண்டும் என்றும் அந்தச் சில நிமிடங்கள் நிரந்தரமாகி விட வேண்டும் என்றும் ஏங்கினர்.'ஞான வைராக்கிய சித்யர்த்தம் பிக்ஷாம் தேஹி தயாநிதே!' என்று பகவான் அன்று முக்தியை நாடி வந்திருந்த பக்தர்களுக்கு அளித்த பொன்மொழிகள் இதோ:

இங்குக் கூடியிருக்கும் பக்தர்களில் பெரும்பாலானவர்கள், ஜீவன் முக்தியை நாடி, அப்பாதையில் சென்று கொண்டிருப்பதால், இதைப்பற்றி இரண்டு மிக முக்கியமான விஷங்களை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முதன்மையானது, உங்களுக்கு நீங்களே நேர்மையாக இருந்தல் (Inner Integrity). உங்கள் உண்மை ஸ்வரூபம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நிங்கள் யார் என்பதோ, என்னவாக இருக்கின்றீர்கள் என்பதோ முக்கியமே இல்லை. உங்களால் உங்கள் உண்மை ஸ்வரூபத்தை எதிர்கொள்ள முடியுமா? உங்களையே நீங்கள் நேருக்கு நேர் பார்க்க முடியுமா? உங்களுக்கு நீங்களே போலித்தனம் இல்லாமல் நேர்மையாக இருக்க முடியுமா?

இது செய்வதைவிட சொல்வதற்கு மிகச் சுலபம். ஏனெனில், பெரும்பாலானவர்கள் தனக்குத் தானே நேர்மையாக நடந்து கொள்வதில்லை. உங்களுக்கு உங்களைக் கண்டாலே பயம். இந்த உண்மையைப் பார்க்க உங்களுக்கு விருப்பமில்லை. உங்களுக்குள் இருக்கும் விகாரங்கள் அனைத்தையும் கார்பெட் (Carpet) அடியில் தள்ள விரும்புகின்றீர்கள். அது உங்களுக்கு எவ்விதத்திலும் உதவவே உதவாது.

இரண்டாவதாக, நீங்கள் புரிந்து கொள்ளவேண்டியது - நீங்கள் உங்கள் வாழ்க்கையை ஒரு விளையாட்டைப்போல் விளையாடத்தான் இப்பிறவி எடுத்து வந்துள்ளீர்கள். கிரிக்கெட் ஆட்டத்தில். இந்தியாவும் பாகிஸ்தானும் விளையாடும்பொழுது, அது ஒரு போரைப் போல் இருக்கும். வாழ்க்கையே அந்த ஆட்டத்தின் வெற்றியில் தான் உள்ளது என்றவாறு அவர்கள் ஆடுவார்கள், ஆனாலும், அது ஒரு விளையாட்டுதான் என்பது அவர்களுக்குத்தெரியும். அதேபோல்தான் வாழ்க்கையும், ஒரு போரை எதிர்கொள்வதைப்போல் சிரத்தையோடு, அலட்சியம் இல்லாமல் வாழ வேண்டும். அதே சமயம் அது ஒரு விளையாட்டுதான் என்று தெரிதிருக்கவேண்டும்.

வாழ்க்கையில் அலட்சியமாக, பொறுப்பில்லாமல், அக்கறை இல்லாமல் இருக்கலாகாது. மிகவும் சிரத்தையோடு இருக்க வேண்டும் அதே சமயம் அது ஒரு விளையாட்டு எனத் தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்று ஒரு கண்ணோட்டத்தை உங்களால் வளர்த்துக்கொள்ள முடிந்தால், ஜீவன் முக்தி நிலையை அடைவதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும்.

நீங்கள் ஜீவன் முக்தி அடைந்தால், இந்த உலகம் எவ்வளவு அழகானது. எவ்வளவு சீராக இயங்குகின்றது என்பதை உணர்வீர்கள். வாழ்க்கையை முதன்முறையாக வாழத்துவங்குவீர்கள். இப்பொழுது நீங்கள் வாழ்க்கையை வாழவே இல்லை. ஒரு பிறந்த நாளுக்குப் பிறகு அடுத்த பிறந்த நாள் என வந்துகொண்டே இருக்கிறது. இறுதியில் எல்லாம் முடிந்தே விடுகிறது. நீங்கள் எதையுமே அனுபவிக்கவில்லை. பெரும்பாலோரின் வாழ்க்கை இன்று இப்படித்தான் இருக்கின்றது.

உங்கள் பிறவியின் நோக்கத்தை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் இங்கு வந்திருப்பதே வாழ்க்கையை நன்றாக அனுபவித்து மகிழத்தான்! அதை மறந்து இன்று துக்கத்தில் மூழ்கிவிட்டீர்கள் ஜீவன் முக்தி அடைந்த பிறகு, நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் வாழ்க்கை ஒரு இனிய அனுபவமாக இருக்கும். அதனால்தான் நாம் வாழ்க்கையை ஒரு 'லீலை'' ஒரு விளையாட்டு' என்கின்றோம். உங்களைப் பார்க்கும் பொழுது, நீங்கள் ஒவ்வொருவரும் சுமந்து கொண்டிருக்கும் சுமைதான் எனக்குத் தெரிகிறது. உங்கள் சுமையையும், வேதனையையும், எந்நேரமும் நான் அனுபவித்துக் கொண்டே இருக்கிறேன்.

இன்னும் சில நாட்களில் உங்கள் சுமைகளிலிருந்து நீங்கள் விடுபட்டு. ஆனந்தமாக ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், வாழ்க்கையை ஒரு விளையாட்டைப்போல் வாழ்வீர்கள் என்று நம்புகிறேன். இந்தக் கண்ணோட்டத்துடன் நீங்கள் தியானம் செய்யுங்கள். தியானம் செய்ய 'முயற்சிக்காதீர்கள்'. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ''தியானம் செய்ய என்னால இயலாது'' என்று பார்க்க வேண்டும், உணர வேண்டும். இதை நீங்கள் செய்யுங்கள், மற்றவைகளை நான் செய்கிறேன்.

**உங்களால் தியானம் செய்ய முடியும் என்று நினைத்தால், தியானம் செய்ய 'முயற்சித்தால்', என்னால் உங்களுக்கு உதவ முடியாது என்பதை உணர்ந்தால்...... அப்பொழுது தியானம் உங்களுள் தானாக நிகழும்!**

**நான் உங்களுடனேயே இருப்பேன்! துவங்கலாமா?**

## ஸ்ரீ கல்கி, இளைஞர்களுக்கு ஆற்றிய உரை

**நீங்கள் அனைவரும் சேவையில் ஈடுபட்டு வருவதைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்த சேவை, உங்களுடைய கல்வி, தொழில், இவற்றை பாதிப்பதாகவோ அல்லது உங்கள் குடும்பத்தினருக்கு துன்பம் கொடுப்பதாகவோ அமைவது கூடாது. தர்மாவுக்கு செய்யும் சேவையை உங்கள் கடமைகளிலிருந்து தப்பிக்க ஒரு மார்க்கமாக கொள்ளக் கூடாது. சேவை என்பது உங்கள் குடும்பத்திலிருந்து தொடங்கட்டும். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்த பிறகு, உங்களுக்கு எஞ்சியிருக்கும் நேரத்தையும், சக்தியையும் தர்மாவின் பணிகளுக்காக ஒதுக்கலாம்.**

முதலில் நீங்கள் வாழ்வில் வெற்றிகான வேண்டும். தோல்வியுறும் மனப்பான்மை உள்ளவர்களை தோல்வியே தழுவுகிறது. நமது தர்மம் உலகளவில் வியாபிக்க இருக்கும் தர்மம். நீங்கள் வாழ்வில் வெற்றி பெற்றாதான், ஆன்மீகத் துறையிலும் வெற்றி காண இயலும், ஆன்மீக முன்னேற்றத்திற்கு பொருளாதார முன்னேற்றம் இன்றியமையாத ஒன்று. ஒரு மனிதனுக்கு ஆசைகள் இருப்பது இயற்கையே, அதை விடாமுயற்சியின் மூலம் அடைய இயலும். பிரச்சனைகள் வாழ்வில் இருப்பினும், அவற்றை எதிர்கொண்டு வெற்றி காண முயல வேண்டும். பிரச்சனைகள் எழும்போது, எங்கு, எதில் தவறு நேர்ந்து உள்ளது என்று புரிந்து கொள்ள, உங்களுக்கு உதவ, நன்கு தேர்ச்சி பெற்ற தாஸர்கள் இருக்கிறார்கள். இந்த உதவியுடன், உங்கள் ஹ்ருதயம் தெரிவிக்கும் எந்த துறையையும் தேர்ந்தெடுத்து. அதில் வெற்றி காண முயலுங்கள்.

உங்களுடைய கோஷங்களின் மீது கவனம் செலுத்தங்கள். முதலில் வருவது **அன்னமயகோஷா**. நல்ல உணவைத் தேர்ந்தெடுத்து சரியான நேரத்தில் உணவருந்துங்கள், அந்த உணவை உட்கொள்ளும் சமயம் அதனை அனுபவித்து உண்ணுங்கள், உணவு அருந்தும் சமயம், தேவையற்ற வேறு எண்ணங்களுக்கு இடம் கொடுக்கலாகாது. நீங்கள் தேக ஆரோக்யத்துடனும், திடகாத்திரத்துடனும் திகழ வேண்டும். நாம்

மேல் நாட்டவரைப் பார்த்தால் நம் உருவம் எவ்வளவு சிறிது என்பது புரியும். நன்கு நிமிர்ந்து நடந்து செல்லுங்கள். பலர் உடல் நடக்கும் சமயம் கூனி இருப்பதைக் காண்கிறோம். ஸ்வாமி விவேகானந்தர் இதனை அடிக்கடி இளைஞர்களுக்கு அறிவுறுத்துவார். இரண்டாவதாக வருவது **பிராணமய கோஷா.** மூச்சை உள்ளிழுப்பது, நன்கு ஆழமாக இழுக்க வேண்டும். மேலோட்டமாக சுவாசிக்காதீர்கள், மூன்றாவதாக **கர்மமய கோஷா.** இயன்றவரையில் யாருடைய மனமும் புண்படும்படி நடக்காதீர்கள். நீங்கள் பிறருக்கு மனோகாயம் ஏற்படுத்தினால், உங்களுக்கு கர்மா வந்து சேருகிறது. இந்த கர்மா பூமியில், முழுவதமாக யாரையும் மனோகாயம் ஏற்படுத்தாமல் இருந்து முழுவதுமாக கர்மாவை தவிர்ப்பது இயலாத காரியம்தான். ஒரு அவதாரபுருஷரும் கூட இதற்கு விதி விலக்கல்ல. **இயன்றவரை யாரையும் மனோ காயப்படுத்தாமல் இருக்க பழகிக் கொள்ளுங்கள்.** உங்கள் பெற்றோர் எப்படியிருப்பினும் அவர்களை மன்னிக்கும் தன்மை கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் பெற்றோரிடம் வைத்துள்ள சீரான உறவுமுறையைப் பொறுத்தே என் அருள் உங்களுக்கு கிடைக்கும். உங்கள் வாழ்வின் வெற்றியும் இதன் பின்னணியிலேயே அமைகிறது. நீங்கள் மற்றவரை மன்னிப்பது ஹ்ருதயபூர்வமாக இருத்தல் வேண்டும். மன்னிப்பு என்பது வெறும் உதட்டளவில் அமைதல் தவறு. பிறரை மன்னிப்பது என்பது கடினமான செயல்தான். இதற்கு **நீங்கள் அமைதியாக உட்கார்ந்து. உங்கள் உள் உணர்ச்சிகளில் மேல் விழிப்புணர்ச்சியை செலுத்தினால் மட்டுமே மன்னிக்கும் பாவம் தோன்றும்.** உணர்ச்சிகளின் கொந்தளிப்பு மறைந்தால், உங்களால் ஆனந்தத்தை அடைய முடியும்.

நான்காவதாக **மனோமய கோஷா** நீங்கள் தர்மாவில் கிடைத்த போதனைகளை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் பெற்ற போதனைகள் மிகவும் யதார்த்தமானதும், நடைமுறைக்கு ஒன்றிப்போவதுமாக அமைந்துள்ளன. இந்த போதனைகளைக் கேட்டுவிட்டு, அவை எவ்வளவு சுலபம், என்று கூறுகிறீர்கள். ஆனால் நடைமுறை வாழ்வில் அந்த போதனைகளைக் கடைபிடிப்பதில்லை.

ஐந்தாவதாக வருவது **விஞ்ஞான மயகோஷா.** உங்கள் அறிவாற்றலை பெருக்கிக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்பரீதியாகவும்,

நம்நாடு மிக பின்தங்கிய நாடாகும். மேல்நாட்டவரோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் மிக பின்வாங்கியிருக்கிறோம் என்பதை உணரலாம். பௌதீகம், பொறியியல், போன்ற துறைகளில் நமக்கு இருக்கும் தேர்ச்சி குறைவு. ஆசிரியர் கல்வி கற்பிக்கும் நோக்கமே "Educare"அதாவது உங்களுக்குள் இயல்பாக அமைந்திருக்கும் திறனை வெளிக் கொணர்வதே ஆகும்.

ஆறாவதாக **ஆனந்தமய கோஷா**வைப் பார்ப்போம். நீங்கள் வாழ்வில் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க பழகிக் கொள்ள வேண்டும். உங்கள் மனதில் ஒரளவாவது ஆனந்தம் இருத்தல் வேண்டும். நீங்கள் வாழ்வில் வெற்றிபெற்றால் ஆனந்தம் கிடைக்கிறது. ஒரு மகிழ்ச்சியான மனிதன், நல்ல மனிதனாக இருக்கின்றான். இதற்கு காரணம், மகிழ்ச்சியான மனிதன் மற்றவர்களுக்கு கெடுதல் விளைவிப்பதில்லை.

நான் உங்களுக்கு விடுக்கும் செய்தி - " **வெற்றியை வழிபடுங்கள், வெற்றி பெறுங்கள் என்பதே.**"

**பக்தன்** ~ பகவான், பகவத் தர்மாவில், இளைஞர்களின் பங்கு என்ன?

**ஸ்ரீகல்கி** ~ ஒரு நாட்டின் எதிர்கால நம்பிக்கையே, அதன் இளைஞர்களிடம் உள்ளது. மனித சரித்திரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், எந்த வகையானாலும் சரி, இளைஞர்களால்தான் கொண்டு வரப்பட்டன. கன்.ஃபூஷியஸ், சீனநாட்டிலும், சாக்ரடீஸ் கிரிஸ் நாட்டிலும் காந்தி இந்தியாவிலும், இளைஞர்களின் உதவியால்தான் மாற்றங்களை ஏற்படுத்தினர். ஆகையால், இந்நாட்டின் எதிர்காலம், இளைஞர்களாகிய, உங்கள் கையில்தான் உள்ளது.

இதற்காக, முக்கியமான 3 சாதனைகள், நீங்கள் செய்ய வேண்டும். **1. தன்னைத் தானே நேசிப்பது 2. உறவுமுறைகளைச் சீர்செய்வது, 3.ஹ்ருதயத்திலிருந்து வரும் விருப்பங்களைக் கண்டுபிடிப்பது.**

1. நீங்கள், யக்ஞையில் கற்றுக்கொண்ட அடிப்படை விஷயம் - நீங்கள், உங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும், உங்களை நேசிக்க வேண்டும். இதுவே முதல் அடிக்கல்.
2. இரண்டாவதாக, உங்கள் பெற்றோரிடம், உங்கள் உறவு முறைகளைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது,

பெற்றோரை நேசிப்பது அவர்களுக்கு சேவை செய்வது மற்றும் மதித்து நடப்பது. நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுவதுமாகப் பார்த்தீர்கள் என்றால், அதில் ப்ரபஞ்சமே சம்பந்தப்பட்டிருப்பது புரியும். உங்களுடைய பெற்றோர்கள், ஒரு விதமாக நடந்து கொள்கின்றனர். அது அவர்களுடைய முற்பிறவிகள். பிறந்த விதம்... மற்றும் பலவற்றின்மேல் ஆதாரப்பட்டுள்ளது. அதற்கு அவர்கள் பொறுப்பாளி அல்ல. அவர்களை எடை போடுவதற்கு உங்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அவர்கள் எவ்வாறு உள்ளனரோ அவ்வாறே ஏற்றக்கொள்ள வேண்டும். அவர்களிடம் அன்பாக இருத்தல் வேண்டும், அவர்களுக்கு சேவை செய்தல் வேண்டும் மற்றும் அவர்களை மதித்து நடத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால், உங்கள் உறவுமுறை சீராக இருக்கும். எடை போடாத காரணத்தினால், உறவுமுறை சீராகும். உறவுமுறைகள் சீரானதால் ஹ்ருதயம் மலரும். **உங்கள் ஹ்ருதயத்திற்கும், பூமியின் ஹ்ருதயத்திற்கும் மிக நெருங்கிய ஒற்றுமை உள்ளது. இவை இரண்டும் ஒரே லயத்தில் செயல்பட்டால், நல்ல உடல் ஆரோக்கியம் இருக்கும், உங்களுக்கு காரியங்கள் கை கூடும். அருள் வெள்ளம் பாயும். இளைஞர்கள், இதைத்தான் சாதிக்க வேண்டும்.**

நீங்கள், உங்கள் பெற்றோரிடம், அன்பாக, மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு சேவை செய்யுங்கள். இந்த உலகில் தேவையான அனைத்து ஆசிகளும் உங்களுக்கு கிடைத்து விடும். என்னுடைய அருள் 100%, உங்களுக்கு வந்து சேரும். உங்களுக்கு பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும், திருமணம்.... உங்களுக்கு வேறு எதை சாதிக்க வேண்டுமோ, அதை சாதிப்பீர்கள். உங்கள் வாழ்க்கை மிக வெற்றிகரமானதாக இருக்கும். ஆனால், இதில் தோல்வி அடைந்தால், அது வேறு விதமான பிரச்சனைகளாக... குழந்தைகள், வேலை, விபத்து, நோய்கள்... இவ்வாறு திரும்ப வரும். இதுவே பிரச்சனைகளுக்கு 'வேர்' இதைச் சீர்செய்தால், அனைத்தையும் சீர் செய்தது போலாகும். உங்கள் பிரச்சனைக்கு கல்கி தர்மம், இவ்வாறுதான் வழி கூறி உதவுகின்றது.

மூன்றாவதாக, நீங்கள், உங்கள் ஹ்ருதயத்தின் ஆசைகளைக் கண்டறிய வேண்டும்.

ஆசைகள் இருப்பது நன்மையா அல்லது தீமையா? உங்களில் சிலர் ஆசைகள் இருப்பது நல்லதுதான் என்றும், சிலர், தீமை என்றும் கூறுகிறீர்கள்! **2500 வருடங்களுக்கு முன் புத்தர், ஆசைகளைத் துறந்து, ராஜ்ஜியத்தை துறந்து, தவம் செய்து , ஞானோதயம் பெற்றார். உலகிற்கு அவர் அளித்த செய்தி – "ஆசையே துன்பத்திற்கு மூல காரணம், ஆசையை அறவே விட்டொழியுங்கள்", என்பதே. ஆனால், புத்தர் உண்மையில் இரண்டு சத்தியங்களைக் கூறியுள்ளார் – அவை – ஹ்ருதயத்திலிருந்து வரும் ஆசைகள் நியாயமானவை. மனதின் ஆசைகளைத் தான் துறக்க வேண்டும்.**

உங்கள் கோரிக்கைகள் ஹ்ருதயத்திலிருந்து வர வேண்டும். நான் அவைகளை நிறைவேற்றுவேன். நீங்கள் ' ஒரு காரில் போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என விரும்பினால், இந்த விருப்பம், ஹ்ருதயத்திலிருந்து வந்தால், அது நிறைவேறும். 100% நம்பிக்கையோடு இருங்கள். ஆனால், உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் ஒரு மிக உயர்ந்த காரில் போவதைப் பார்த்து, உங்களுக்கு இன்னுமொரு சிறப்பான கார் வேண்டும் என விரும்பினால், அது, மனத்திலிருந்து எழுந்த ஆசை. அது நல்லதல்ல. இதை நிறைவேற்ற இயலாது. ஆகையால், **உங்கள் ஹ்ருதயத்தின் விருப்பங்களைக் கண்டு பிடியுங்கள்.**

**பக்தன்** – பகவான், நான் நன்றாகப் படிக்க வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்? உங்கள் உதவியை நான் எங்ஙனம் பெற முடியும்?

**ஸ்ரீகல்கி** – நீ, நீயாக இரு. அப்போது உனக்கு படிப்பதற்கு மிகுந்த சக்தி இருக்கும். உன் மனது போராட்டங்களால் நிரம்பி இருக்கும்போது, உன் ப்ராண சக்தி வீணாகிறது. அதனால், என்னால், உனக்கு உதவ முடிவதில்லை. நீ நன்றாக படிப்பதில்லை என்பதை முதலில் ஏற்றுக்கொள். உன்னை நீயே தாழ்வாக எண்ணாதே. கடிந்து கொள்ளாதே. உன்னைப்பற்றிய உண்மையை, உள்ளவாறே ஒத்துக்கொள். நீ இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு, அனுபவித்தால், போராட்டங்கள் இருக்காது. உனக்கு ப்ராண சக்தி கிடைக்கும். அப்போது நான் கண்டிப்பாக உனக்கு உதவுவேன்.

**பக்தன்** – பகவான், பெற்றோர்கள் நான் என்ஜினீயர் ஆக வேண்டும் என விரும்புகிறார்கள். ஹ்ருதயம் அதில் இல்லை. ஆனால் நீங்கள் பெற்றோர் சொற்படி கேட்க என்கிறீர்கள். என்ன செய்வது?

***ஸ்ரீ கல்கி*** – உன் பெற்றோர் சொற்படி கேட்டு நீ என்ஜினீயர் ஆகலாம். அல்லது உன் ஹ்ருதயம் சொற்படி நீ கேட்கலாம். இந்த இரண்டிலுமே, மற்றொன்றை செய்யாத காரணத்தினால் துன்பம் இருக்கும். பெற்றோர் சொல்படி கேட்டால்,

உன் உணர்ச்சிகள் கீழே தள்ளப்பட்டுவிட்டது போல உணருவாய். அந்த வலியை அனுபவிக்கிறாய். அந்தத் துன்பத்தை அப்படியே ஏற்று அனுபவித்தால், அப்போது அந்த விந்தை நடக்கும். வினோதமான ஓர் ஆனந்தத்தை அனுபவிப்பாய், இதோபார், வாழ்வில், எப்போதும், உனக்கு வேண்டியதையே அடைய முடியாது. வலி இருக்கும். அந்த வலியிருந்து தப்பிக்காமல், அதை அனுபவித்தால், அது வினோதமான, ஆனந்தமாக மாறிவிடும்.

## பெற்றோருக்கான செய்தி

**பகவான்** – குழந்தைகளிடம் நாங்கள் பழக வேண்டிய முறை மற்றும் அவர்களை வளர்க்கும் முறை பற்றியும் கூறுவீர்களா?

***ஸ்ரீகல்கி*** – ஆறு வயது வரை, குழந்தை வளர்ப்பின், மிகமிக முக்கியமான காலகட்டமாகும். நீங்கள் குழந்தையை, குழந்தையாக இல்லாமல் ஒரு வயது வந்த வரைப்போல் நடத்த வேண்டும். அதாவது, குழந்தைக்கு நீங்கள் ஒரு பெரியவருக்கு, கொடுக்கும் முழு மரியாதையைக் கொடுக்க வேண்டும். அதாவது, அவனிடம் மரியாதையான வார்த்தைகளைப் பேச வேண்டும், மரியாதையுடன் நடத்த வேண்டும். உதாரணத்திற்கு - ஹாலந்து நாட்டில் பல வீடுகளில், சாப்பிடும் மேஜைக்கு, உயரமான நாற்காலிகள் வைத்துள்ளார்கள், இதனால், ஒரு குழந்தை, பெரியவர்களுக்கு சமமாக தன்னை உணரும். உங்களுக்கு சமமாக, அவன் தன்னை உணர வேண்டும். இதை 6 வயது வரை உங்களால் செய்ய

முடிந்தால், அவன் வாழ்நாளில், அவனைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. உங்களுக்கு ஒரு பிரச்சனைக்குரிய குழந்தை இருக்காது, உங்களுக்கு மிக அழகான, மிக அன்பான, மிக சாமர்த்தியமான குழந்தை இருக்கும்.

ஆகையால், மிகச் சுலபமான ரகசியம் என்னவெனில் 6 வயது வரை, அவனை ஓர் ராஜா போல் நடத்துங்கள்! இதைத்தான் 'பஞ்சதந்திரங்கள்' கூறுகின்றன. இதை நாங்கள் சோதித்துப் பார்த்தும் விட்டோம் (ஜீவாஸ்ரமத்தில்). 6 - 14 வயது வரை ஒரு ராஜகுமாரனைப்போலும், 14 வயதுக்கு மேல் ஒரு நண்பனைப்போலும், ஒரு குழந்தையை நடத்த வேண்டும். அவன் உங்களைவிட சிறியதாக இருப்பதால் அவனை, உங்களைவிட கீழ்த்தரமாக நினைத்து நடத்தக்கூடாது.'ராஜா' என்பதன் பொருள் நீங்கள் அவன் ஆட்டுவிக்கும்படியெல்லாம் ஆட வேண்டும்! இதை உங்களால் செய்ய முடியுமா? எந்த விதமான மனோதத்துவமும் இங்கு தேவையில்லை. இதுதான் மனோதத்துவம்! ஒரு ராஜாவிடம் எவ்வாறு நாம் நடந்து கொள்வோமோ, அதே போல் நடந்து கொள்ள வேண்டும். ஒரு ராஜாவிடம் கடும் சொற்களைப் பேச முடியாது. முரட்டுத்தனமாக நடக்கலாகாது. மிகவும் பணிவாக இருத்தல் வேண்டும். இந்த நாடு முழுவதும் இவ்வாறு செய்ய முடிந்தால், இது ஒரு உண்மையான நாடாக மாறிவிடும். ஒரு மகத்தான நாடாந மாறிவிடும். நம் குழந்தைகளை வளர்க்கும் முறை நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் கருத்தரிக்கும் முன்னரே, சில முக்கியமான நிகழ்ச்சிகளில் நீங்கள் பங்கேற்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இன்று (ஒரு டாம், டிக்,மற்றும்,ஹரி)யார் வேண்டுமானாலும் குழந்தையைப் பெற்றுக் கொள்கிறார்கள், வளர்க்கிறார்கள், ஒரு பயங்கர உலகை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஆகையால் நீங்கள், இவைகளின் மேல் உங்கள் கவனத்தைச் செலுத்தி உழைக்க வேண்டும்.

## ஸ்ரீ கல்கியின் அமுத மொழிகள்

ஆனந்த யக்ஞங்களின் சிறப்பு அம்சமான, புருஷோத்தம பகவான், அவருடைய பக்தர்களின் கேள்விகளுக்கு திருவாய் மலர்ந்து அளித்த விளக்கங்கள், கீழே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இந்த விளக்கங்களிலிருந்து, ஸ்ரீகல்கி, மனிதன் மேல் கொண்டுள்ள அபரிமிதமான அக்கறையையும், அவருடைய தெய்வீக அன்பையும் அனுபவிக்க முடியும். ஸ்ரீ கல்கியின் பதில்கள், எத்தனையோ பரிதவிக்கும் உள்ளங்களை, துக்கத்திலிருந்து விடுவித்து. இவ்வுலகில் வாழ்வதற்கு ஒரு புதிய அர்த்ததை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

ஆதலால், இவைகளை மிகுந்த பக்தியுடனும் வினயத்துடனும் படித்தோமானால், இந்தத் தெய்வீக வார்த்தைகள் நம்மை ஒரு ஆழமான அன்பும், கருணையும் கூடிய நிலைக்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

**பக்தன் :** பகவான் இந்த ஸ்ருஷ்டி எப்படி உருவாயிற்று? ஸ்ருஷ்டியின் பின்னால் உள்ள நோக்கம் தான் என்ன?

***ஸ்ரீகல்கி :*** கேள்வி என்னவென்றால் ஆரம்பம் என ஒன்று உள்ளதா முடிவு என ஒன்று உள்ளதா? இந்தக் கேள்விகளுக்கு அறிவு பூர்வமாகப் பதிலளிக்க இயலாது. ஆனால் சித்த சக்தியால், உங்களால் அனுபவிக்க முடியும். நீங்கள் பார்ப்பது ஒரு ஆரம்பமற்ற ஆரம்பம் மற்றும் முடிவற்ற முடிவு. இதுதான் நிதர்சனமான உண்மை. 'ஸ்ருஷ்டியின் நோக்கம் என்ன?' என்ற கேள்விக்கு பதில் இல்லை 'நோக்கம் எதுவும இல்லை' நீங்கள் ஒரு கிரிக்கெட் மாட்ச்சுக்கு செல்கின்றீர்கள் என வைத்துக் கொள்வோம்; டென்டுல்கர் ஒரு 6 ரன்கள் அடித்தால், மக்கள் மேலும் கீழும் குதிக்கின்றனர். இவ்வாறு குதிப்பதற்கு 'நோக்கம்' எதுவும் இல்லை; ஆனால், குதிப்பதற்கு ஒரு 'காரணம்' உள்ளது. அந்தக் காரணம் என்னவெனில், அவர் அந்த 6 ரன்கள் அடித்ததால், மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளார். ஆனால், அவர் ஏன் குதிக்க

வேண்டும்? அதற்கு எந்தக் காரணமும் இல்லை. அவருடைய சந்தோஷத்தை,மேலும் கீழும் குதிப்பதன் மூலமும் மற்றும் கைகளை ஆட்டியும், தெரிவிக்கிறார். ஆகையால் ஸ்ருஷ்டியின் மையத்தில் (அங்கு என்ன உள்ளதென்று விரிவாகப் பார்ப்போம்)'ஆனந்தம்' உள்ளது இந்த ஆனந்தம் ஸ்ருஷ்டிக்கு நோக்கம் ஏதும் இல்லை. ஆனால் ஒரு காரணம் உண்டு. காரணம் என்னவெனில், கட்டுபடுத்த முடியாத, அளவில்லாத ஆனந்தம். அந்த ஆனந்த நடனம் தொடர்ந்து கொண்டே உள்ளது. அடங்கவும் செய்கிறது. 'நடராஜர்',இந்தத் தத்துவத்தைத்தான் குறிக்கின்றது.

ஆரம்பமற்ற ஆரம்பம், முடிவற்ற முடிவு இந்தக் கேள்விக்கு பதிலைக் கண்டுபிடிக்க, நீங்கள் 'இடம்' மற்றும் காலத்தின் (Space & Time) இயற்கைத் தன்மையைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.நாம் வகுத்த சில சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுக்களின் அடிப்படையில் நம் எண்ணங்கள் அமைகின்றன. இந்த விஷயங்களின் உள்ளே மிக ஆழமாகச்சென்றோமானால், 'இடம் என்பதோ அல்லது காலம் என்பதோ இல்லவே இல்லை. ஆகையால் 'எப்போது இவையெல்லாம் ஆரம்பித்தன என்ற கேள்விக்கும் இந்த ஆரம்பத்தின் முதல் தொடக்கம் எது' என்ற கேள்விக்கும் அர்த்தமே இல்லை. ஏனெனில் 'இடம்' என்பதே இல்லை. காலம் என்பதே இல்லை என்பவை முடிவான கருத்து. ஆனால் இதை சித்த சக்தி மூலம் உணர மட்டுமே முடியும். அதனால் நீங்கள் 'என்னை' ஒரு மிகச் சக்தியுள்ள அந்தர்யாமினாய், உங்களுக்குள் வருவதற்கு அனுமதித்தால் அனுபவபூர்வமாக இவையனைத்தையும், நான் உங்களுக்கு உணர்த்துவேன். ஆனால் உங்களால் அறிவுபூர்வமாக, இதைப் புரிந்து கொள்ள மட்டுமே முடியும்.

நன்கு திசைகளான, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, இவைகளை எடுத்துக் கொள்வோம். நீங்கள் விண்கலத்தில் (Spaceship) மேலே போனால். உங்கள் திசைகள் என்னவாகும்? அவைகள் இருப்பதில்லை. வடக்கு, கிழக்கு, மேற்கு,தெற்கு திசைகள் நம் சௌகரியத்திற்காக சொல்லப்பட்டவை. ஒரு நிலை வரையில் மட்டுமே அவைகளுக்கு உபயோகம் அதற்கு மேல்,

அவைகளுக்கு எந்தவிதமான அர்த்தமும் இருப்பதில்லை. ஆகையால் 'காலம்' என்பதே ஒரு மாயைதான். இதை, சூஷ்மமாக அனுபவிக்க முடியும். எய்ன்ஸ்டைன் (Einstein), அடிப்படையில் ஒரு சித்தபுருஷர். அவரால் சூஷ்மமாக இடம் மற்றும் காலத்தை அனுபவிக்க முடிந்தது. பௌதீகமும், கணிதமும், அதற்கு ஆதாரமாகப் பிறகு வந்தன. ஆகையால் நீங்களும் ஒரு சித்த புருஷராக முடிந்தால், என்னால், உங்களை, இடம் மற்றும் காலம் என்பவை இல்லவே இல்லை என்பதைப் பார்க்கச் செய்ய முடியும். அவைகளே இல்லாதபோது. எப்போது. இவையெல்லாம். துவங்கின என்ற கேள்வி அர்த்தமற்றதாகி விடுகிறது. அதனால் இந்தக் கேள்விகளுக்கு பதில்கள் கிடையாது. இந்தக் கேள்விகளே மறைந்துவிடும். இந்தக் கேள்விகள் ஏன் உள்ளன என்றால், நாம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் எண்ணுவதற்குப் பழகியுள்ளோம். இந்த உலகத்தில், சாதாரணமாக பரவியுள்ள தத்துவங்கள், நாம் படித்த பள்ளிகள், நமக்கு கிடைத்த கல்வியறிவு, பௌதீகத்திலுள்ள தத்துவங்கள், இது போன்ற கேள்விகளை நம்முள் உருவாக்குகின்றன. ஆனால் உங்களுக்கு, ஆன்மீக அனுபவம் கிடைத்ததும் இதுபோன்ற தத்துவங்களே மறைந்துவிடும். தத்துவங்கள், மறைய மறையக் கேள்விகளும் போய்விடும். அந்தக் கேள்விகளுக்கு ஒரு போதும், பதில்கள் இல்லாதபோது, கேள்விகள் இல்லை, கேள்விகள் இல்லாதபோது உங்களுக்கு முழுமையான திருப்தி கிடைக்கின்றது. ஏக்கங்கள் ஏதும் இல்லை. 'ஜீவன் முக்தி'யின் ஒரு பகுதி. மற்றொன்றைப்பற்றியும் சொல்லவிரும்புகிறேன். உதாரணத்திற்கு உங்கள் அனைவரையும் பார்க்கும்போது, மிகமிக வயதானவர்களாகத் தெரிகின்றீர்கள். சிலர் 50,000 வயது, 1 மில்லியன் வயது - இப்படித்தான் நான் காண்கிறேன்! எல்லாம், நாம் எவ்வாறு காண்கிறோம் என்பதைப் பொறுத்தே அமைகிறது. நாம் சில கண்ணோட்டங்களில் மாட்டிக்கொண்டுள்ளோம். அதனால் அவ்வாறு கேள்விகள் பிறக்கின்றன.

***

**பகவான் :** பகவான், சமுதாய ஒருமைப்பாடு, அமைதி, எங்கும் ஆனந்தம் நிறைந்த ஒரு காட்சியைத் தாங்கள் எனக்குக் காண்பித்தீர்கள். எப்போது, இந்த அழகான காட்சி, நிஜமாகும், பகவான்?

**ஸ்ரீ கல்கி :** இது வெகு விரைவில் நடக்கும். வரதையபாளையம் என்ற ஓர் இடம் உள்ளது. இது நாங்கள் 18 மாதங்கள் முன்பு தேர்ந்தெடுத்த ஒரு கிராமம். '1995 - முஸ்லீம் சச்சரவுகள், குடி, கொள்ளை மற்றும் எல்லாவிதமான சண்டைகள் நிறைந்த, ஆந்திராவிலேயே, மிக மோசமான இடமாயிற்றே - இதை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்"? என அங்குள்ள மக்கள் கேட்டனர். நாங்கள் அங்கு வேலையைத் தொடங்கி 18 மாதங்கள் கடந்துவிட்டன. இப்போது, நீங்கள் அங்கு சென்று பார்த்தால் நம்பவே மாட்டீர்கள். கொள்ளையர்கள், ரவுடிகள் இப்போது அங்கு இல்லை. அவர்கள் 'சத்சங்கம்' நடத்துகின்றனர்! நமது தர்மத்தை பரப்புபவர்கள். பெரும்பாலும் முஸ்லீம்களே. அதுவும் சாதாரண முஸ்லீம்கள் அல்ல. ஒரு மசூதியில் செயலாளர், மற்றும் காசாளர் ஆவார். முன்பு, அங்கு கழிவுநீர் ஓடுவதற்கு வழியைத் தர மறுத்தனர் 'இது எங்கள் நிலம்'' என்றனர். அதன் விளைவாக, கழிவுநீர் தேங்கி, துர்நாற்றமும், வியாதிகளும் பரவிக் கொண்டிருந்தன. ஆனால் இன்று, அங்கு கதையே மாறிவிட்டது! இன்று அவர்கள் க்யூவில் நின்று 'நான் வழி கொடுக்கிறேன், தயவு செய்து எடுத்துக் கொள்ளுங்கள்' என்கின்றனர். அந்தக் கிராமம் முழுவதுமே சுத்தமாக உள்ளது. யாராவது ஒருவர் வீட்டில் பழுதடைந்து விட்டால், கிராமமே, அந்த வீட்டில் உள்ளோருக்கு உதவ முன் வருகிறது. அங்குள்ள காவல் காரர்களிடம் மனமாற்றம் காணப்படுகிறது. ஒரு திருடனைப் பிடிக்க வேண்டுமென்றால், பொதுமக்களும் பொலீசாரும் சேர்ந்து துரத்திப் பிடிக்கின்றனர். வருவாய்த் துறையில், மனமாற்றமும், ஒற்றுமையும் காணப்படுகின்றது. அனைவரும் ஒரு குடும்பம் போல், ஒரு பெரிய ஆசிரமத்தில் உள்ளது போல் வாழ்கின்றனர். இந்த மாற்றம் அந்தத் தாலுக்கா முழுவதுமே பாதிப்பை ஏற்படுத்தத் துவங்கியுள்ளது.

சமீபத்தில் 250 கிராம மக்கள் வந்திருந்தனர். அவர்கள் பணம் ஏதும் கேட்கவில்லை.'எங்களுக்கும் மனமாற்றம் வேண்டும்', என்றனர். மனைவியை அடிப்பது நின்றுவிட்டது. குடிப்பது நின்றுவிட்டது எல்லாம் மாறிவிட்டது. குழந்தைகள் தவறாது பள்ளி செல்லத் துவங்கியுள்ளனர்.

பதினெட்டே மாதங்களில், இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. கடந்த 10 வருடங்களாக, அரசுப்பணிகள் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. ஏதும் நிகழவில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் நாம் ''ஆன்மீகமாக, அவர்களுக்கு தேவையானதை அளித்தோம். பிரமிக்கத்தக்க மாறுதலைக் காண்கிறோம். இது சத்திவேடு எனும் தாலுக்காவில் நடந்தது. இது போன்று இந்தியாவின் ஒவ்வொரு தாலுக்காவிலும் நிகழும். இந்த ஆண்டு டிசம்பருக்குள் 5000 சமூக சேவகர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். அவர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்து வருகின்றோம். அவர்களுக்கு பண உதவி அளிப்போம். அவர்கள் மற்ற தாலுக்காக்களையும், இதேபோல் மாற்றுவார்கள். 2005-ம் ஆண்டுக்குள், இது நிறைவேறிவிடும் என நம்புகிறோம்.

அதனால் நீங்கள் கண்ட காட்சி உண்மையே. அது போலவே நடக்கும், உங்களில், யாருக்கு, இது போன்ற சமூக சேவகராக, விருப்பம் உள்ளதோ, எங்களோடு சேர்ந்து, ஒரு தாலுக்காவை எடுத்துக் கொண்டு அதன் மாற்றத்திற்காக உழைக்கலாம். உங்களுக்கு, எவ்வாறு இது போன்ற மாற்றத்தை ஏற்படுத்துவது என்று சொல்லித்தருவோம். ஏனெனில், இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் கலை எங்களுக்குத் தெரியும்.

ஆன்மீக மாற்றம் ஏற்படுத்தும் சமூக மாற்றம் ஏற்படுத்தும் பொருளாதார மாற்றம் ஏற்படுத்தும். ஒரு புதிய பாரதம், அங்கு ஏற்கனவே உருவாகிக் கொண்டிருக்கிறது. மக்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். ஏனெனில் இப்போது நன்றாக ஓத்துழைக்க மறுத்தனர். இந்த ஒத்துழைப்பே அவர்கள் பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றம் அடையச்செய்யும். ஆனந்தமாக உள்ள மனிதர்கள், பிரச்சனைகளை உருவாக்குவதில்லை. துக்கமாக உள்ளவர்களே பிரச்சனைகளை உருவாக்குகின்றனர். அங்குள்ளோர் ஆனந்தமான மனிதர்கள். இவை எல்லாமே

நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அங்க நிகழும்போது, இந்தியாவில் வேறு எங்கு வேண்டுமானாலும் நிகழமுடியும். நம், திட்டமே அதுதான். யாருக்கு ஆர்வம் உள்ளதோ, இந்தக் குழுவிற்கு உதவலாம். அல்லது அவர்களே இந்தப் பணியை மேற்கொள்ளலாம்.

***

**பக்தர் :** பகவான் முக்தி என்றால் என்ன?

**ஸ்ரீகல்கி :** முக்தியைப் பற்றிய பல விதமாக விவரிக்க முடியும். புத்தர், ரமணர், ராமகிருஷ்ணர்... வெவ்வேறு விதமாகக் கூறியுள்ளனர். ஒரே விஷயத்தை விவரிக்க பல வழிகள் உள்ளன.

முதலில், உங்களுக்கு அறிவுப் பூர்வமாக முக்தி என்றால் என்னவென்று தெரிய வேண்டும். முக்தி என்றால் **'துயரத்திலிருந்து விடுதலை பெறுதல்'** என்று கூறுவதால் மட்டுமே நீங்கள் துயரத்திலிருந்து விடுதலை அடையப் போவதில்லை. ஆனாலும், ' முக்தி ' எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

அடிப்படையில், முக்தி என்றால் **'ஒரு பூஜ்யமாக மாறுவது'** என்று நான் கூறுவேன். அதாவது, முக்தி அடைவதற்கு 'மதுசூதன்' என்பவர் இல்லை! ஏனெனில் முக்தியை அடைவதற்கு அங்கு ஒருவரும் இல்லை. அங்கிருந்தவர் கரைந்து விட்டார், அழிந்துவிட்டார். ஆகையால், 'நான் முக்தி அடைந்துவிட்டேன்' என்று சொல்வது அர்த்தமற்றது! அங்கு யாரோ இருப்பதாகவும், அவரை நான் முடிவுக்கு கொண்டுவரப் போவதாகவும் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீகள்! 'நீங்கள்' அங்கு இல்லையெனில் எஞ்சியுள்ளது 'பூஜ்யம்' மட்டுமே! நீங்கள் பூஜ்யமாக மாறிவிட்டால், அதுவே சச்சிதானந்தம். **'நீங்கள்' இருக்கும் வரை, நீங்கள் ஒரு மாசுபடிந்த, தொல்லை அளிக்கும் அசுத்தமான... மனிதர். உங்களுடைய எண்ணங்கள் எவ்வளவு உயர்ந்திருந்தாலும், நீங்கள் மாசுபடிந்தவரே. 'நீங்கள்' முழுமையாகப் போய் விடவேண்டும். அதுதான் முக்தி என்பது.** நீங்கள் அதற்குத் தயாரா? 'தயார், பகவான்!' (அனைவரும் உரக்கக் கூறுகின்றனர்.)

முக்தியைப் பற்றிக் கூறும் ஒரு விதமான வழிமுறை இது. இறுதியில், நீங்கள் அதை, (முக்தியை) அனுபவிக்க வேண்டும்.

நீங்கள் ஏன் முக்தி அடைய வேண்டும்? நீங்கள் முக்தி அடையவில்லை என்றால், நீங்கள் வாழ்க்கையில் யாராக இருந்தாலும் சரி, மிகப்பெரிய பணக்காரராகவோ அதிகாரியாகவோ அல்லது மிக அழகான ஆண்/பெண்ணை மணந்தவராகவோ.... நீங்கள் என்ன செய்யப்போவதாக இருந்தாலும், துயரம் என்பது இருக்கும். உங்களுக்கு ஏதேனும் கிடைக்கவில்லை என்றால் துயரம்,அனைத்தும் கிடைத்து விட்டால்,அதைவிடப் பெரிய துயரம். உங்களுக்கு அனைத்துமே கிடைத்து விட்டால் எல்லாமே முழுமையாக அர்த்தமற்றதாகத் தெரியும். அதனால் சலிப்பு, குறிக்கோளற்ற, நோக்கமற்ற வாழ்க்கையைச் சந்திக்க நேரிடும். இதை உங்களால் கற்பனை செய்ய முடியாது. இதைத் தான் நாங்கள் **'ஜீவித்திருக்கும் துயரம்'** என்கிறோம். ஏனெனில் **'நீங்கள்' தான் அந்தத் துயரமே.** நீங்கள் துயரப்படுகிறீர்கள் என்பதல்ல. நீங்கள் எனும் எல்லைக் கோட்டிற்குள் இருக்கும் உணர்வு, முழுமையின் ஒரு பாகமாக இல்லாது, பிரிந்து தனிமையில் இருத்தல், இதுவே துயரமாகும்.

இத்துயத்திலிருந்து தப்பிக்கவே, நாம் எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடுகிறோம். செயல்களே இல்லையெனில், சமாளிக்க முடியாத அளவிற்கு துயரம் பயங்கரமாக இருக்கும்.

ஆகையினால், நீங்கள் முக்தி அடைப்போவதில்லை என்றல் துயரப்படுவீர்கள். நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருந்தாலும் அல்லது தோல்வி அடைந்திருந்தாலும், நீங்கள் துயரத்தை அனுபவிப்பீர்கள். ஆகையால் **துயரத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒரே வழி முக்தி** அடைவதே.

இரண்டாவதாக, நமக்கு உலகிலுள்ள பலவிதமான பிரச்சனைகளைப் பற்றித்தெரியும், வறுமை, சமத்துவமின்மை, ஜாதி, மதபேதங்கள், கலவரங்கள், சுற்றுப்புற சுகாதாரப் பிரச்சனைகள், பலவிதமான பிரச்சனைகள், கம்யூனிடி, ஜனநாயகப் புரட்சிகள், ஆன்மீக மற்றும் மதங்களின் புரட்சிகள் எனப் பல்வேறு புரட்சிகளும் நடந்துள்ளன. ஆனால் உலகப் பிரச்சனைகளை எதுவும் தீர்ப்பதாக இல்லை. நிலைமை மிக மோசமாகிக் கொண்டே போகின்றது. இதற்கு ஒரே வழி **மனித சமூகமே முக்தி** அடைய வேண்டும்.

ஆகையினால் உங்களுடைய தனிப்பட்ட துயரத்திலிருந்து விடுதலை பெறவும், இவ்வுலகத்தின் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு ஏற்படுத்தவும், இரண்டிற்கும், ஒரே வழி மனிதனின் முக்தியே.

எவ்வாறு முக்தி அடைவது? அதற்கு முதற்படிதான் **'அந்தர்யாமின் யக்ஞை' இதில் நீங்கள் 'அந்தர்யாமினை' அடைய வேண்டும்.**

***

**பகவான் :-** பகவான் 'நான்' என்பது மாயை என்றால், நான் யார்? என் உண்மை நிலை என்ன?

**ஸ்ரீகல்கி :-** 'நீ' இல்லவே இல்லை! இதுதான் உண்மை நிலை 'நான்' அல்லது 'நீ ' என்னும் உணர்வுகள் மற்றும், இந்த வேற்றுமை உணர்வு, அனைத்துமே ஒரு 'மாயை' தான். இவை எதுவும் உண்மையில் இல்லை. உதாரணத்திற்கு, இப்போது நீங்கள், நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அதே சமயம் நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் உள்ளீர்கள் என்ற உணர்வு உள்ளது. ஆனால் உண்மையில் நீங்கள் என்னை பார்த்துக் கொண்டும், அதே சமயம், நான் சொல்வதைக் கேட்பதில்லை, மற்றும் கேட்கும் போது, என்னைப் பார்ப்பதில்லை. ஆனால், இது மிக வேகமாக நிகழ்வதால் நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டே கேட்பது போன்ற ஒரு 'மாயை' உணர்வு ஏற்படுகிறது. இந்த இரண்டும் இந்திரியங்களும் இணைந்து செயல்படுவதால், ஒரு சினிமாப் படம் போல் உள்ளது. சினிமா தியேட்டரில், ஒரு நொடிக்கு 16 காட்சிகள் என்ற வேகத்தில் மாறுபடவில்லையெனில், ஒரு கை அசைவைக் கூடப் பார்க்க முடியாது , ப்ரொஜக்டரின் வேகத்தைக் குறைத்து விட்டால், அது ஒரு 'ஸ்லைடு' படம் போல ஆகிவிடும்! அதே போல், இங்கும், நம்முடைய இந்திரியங்கள் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக, பார்ப்பது, தொடுவது, உணர்வது, கேட்பது போன்றவை ஒரே நேரத்தில் நடப்பவை போன்ற உணர்வு ஏற்படுகிறது. இந்த 'மாயை'யே 'நான்'

'எனது' என்ற உணர்வையும் உண்டு பண்ணுகிறது. இந்த வேகத்தைக் குறைத்து விட்டால், 'நீங்கள்' அப்படியே மறைந்து விடுவீர்கள்! இதோ, ப்ரேம் குமார்ஜி இருக்கிறார். அவருடைய இந்திரியங்களின் வேகத்தை, அவர் அனுமதி கொடுத்தால், நான் குறைத்து விடுவேன். அப்போது, ப்ரேம் குமார்ஜி மறைந்து விடுவார். அவர், ' அவருடைய' என்ற உணர்வின்றி வீட்டுக்குச் செல்வார்! ஆனால், எப்போதும் போலவே தன் கடமைகளை ஆற்றுவார். சொல்லப் போனால், மிக,மிகத் திறமையுள்ளவராக இருப்பார். வேற்றுமை எனும் உணர்வு முழுமையாக மறைந்து போயிருக்கும். அங்கு எஞ்சியுள்ளது உயிர் மட்டுமே அல்லது அதை நீங்கள் சுத்த சைதன்யம் என அழைக்கலாம். எதனால் எந்தப் பொருளால் இந்த முழுமையான லோகம் உருவாகியுள்ளதோ, அதுவே அது. எல்லாவற்றிற்கும் இறுதியில் உள்ளது இந்த சைதன்யமே. இதை அனுபவிக்க மட்டுமே முடியும். நீங்கள், உங்களை எவ்வாறு பார்க்க முடியும்? சைதன்யத்தை பார்க்க வழியே இல்லை, ஏனெனில், நீங்கள் 'அது' தான் 'அதனுடைய' உண்மையான ரூபம் ஆனந்தமும் அன்பும். இது ஒரு காரணமற்ற அன்பு.

**நீங்கள் எதை 'அன்பு' என்கின்றீர்களோ, அது உண்மையான அன்பல்ல. நீங்கள் யாரிடமாவது அன்பைக் கேட்டு யாசிக்கிறீர்கள். அல்லது ஒருவர் புகழ்பெற்றவர் என்பதாலோ, பணக்காரர் அல்லது மிகச் சிறந்த மனிதர் அல்லது அவரிடமிருந்து ஏதோ தேவை என்பதாலோ, அன்பைச் செலுத்துகிறீர்கள். நீங்கள் உங்கள் மனைவி / கணவரிடம் அன்பாக இருக்கிறீர்கள்.** ஏனெனில் அது உங்களுக்கு மிகத் தேவையாக உள்ளது அவரோடு இணைந்து அவர்மேல் சார்ந்து இருப்பது - அவரைச் சொந்தம் கொண்டாடுவது - இது போன்ற அன்பைப் பற்றி நாம் இப்போது பேசவில்லை. நாம் கூறுவது **"ஒரு காரணமற்ற அன்பு"** (Causeless Love) அது உள்ளது அவ்வளவுதான். 'நான்' என்ற உணர்வு மறையும் போது, இவ்வாறு நிகழும். இது ஒரு மிகச் சுலபமான விஷயம்... இந்திரியங்களின் வேகத்தை சிறிது குறைத்தால் போதும் - இந்த லோகத்தோடு முழுமையாக ஒன்றாகிவிட்ட உணர்வு இருக்கும். இது ஒரு தெய்வீக அனுபவம் அல்ல - அதாவது குண்டலினி சக்தி சக்கரங்களின் மூலம் ஏறும்போது, ஏற்பட்டு,

அது கீழ் இறங்கியவுடன் மறைந்து விடும் - நாம் இது போன்ற அனுபவத்தைப் பற்றி பேசவில்லை. **நான் கூறுவது – மிக உயர்ந்த சைதன்யத்தின் நிலை, 24 மணி நேரமும் நிலைத்திருக்கும், மாறாதது. நீங்கள் 'அது'வாக ஆகிவிடுவீர்கள்.** நீங்கள் அங்கு இருக்க மாட்டீர்கள். முழுமையாக மறைந்து விடுவீர்கள். இது போன்ற நிலையைப் பெறுவதற்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாக ஆக வேண்டும். **உறவு முறைகளைச் சீர்செய்து கொள்வதே,** இதற்கு முக்கியத் தகுதியாகும். இது போன்ற நிலையை, உங்களுக்கு அருள்வதற்கு எனக்கு 7 நிமிடங்களே ஆகும். 'நான்', 'எனது' என்ற உணர்வின்றி, அனைத்தையும் காண்பீர்கள். இது ஒரு முழுமையான, வித்தியாசமான நிலை. உதாரணத்திற்கு, **நான் உங்களைப் பார்க்கும் போது, நீங்கள் எனக்கு வெளியில் உள்ளதுபோல் இல்லை – அனைவரும் எனது உள்ளே, வயிற்றினுள் இருப்பது போன்று உள்ளது. வேறாக என்னால், உணரவே முடியாது. இது எனக்கு இருக்கும் யதார்த்த நிலை. என் சத்தியம்.** இந்த நிலையை அடைந்த 320 பேர்களும், இது போன்று உணர்கிறார்கள். நீங்களும் இதை அனுபவிக்கலாம். எவரும் உங்களுக்கு வெளியில் இல்லை. இந்த சரீரத்தின் எல்லைக் கோடுகள், விசித்திரமாக மறைந்து விடும். இது உங்கள் 'கை' என்றோ காணமுடியாது. அனைத்துமே உங்கள் சரீரமாகிவிடும். உங்களின், ஒரு பாகம், ஆகிவிடும். அப்போதுதான் அந்த உண்மையான அன்பை உணர்வீர்கள், ஏனெனில், அது உங்களுடைய ஒரு பாகம். அந்த அன்பிற்கு காரணம் இல்லை. மனது, கடந்த காலத்திற்கு நழுவி, அதனுடைய பாதிப்பால் எதிர்காலத்தைப் பற்றிய கவலை இது போன்ற கேள்விகளுக்கே இடமில்லை. இது நிகழ்காலத்தில் இருக்கும். ஒவ்வொரு வினாடியையும், அனுபவித்தால், நீங்கள் உண்மையாக 'வாழத்' தொடங்குவீர்கள். **தற்சமயம், என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது. என்றால், நீங்கள் இருக்கின்றீர்கள் – அவ்வளவுதான். நீங்கள் உயிருடன் இருக்கின்றீகள், ஏனெனில், உங்களுக்கு இறப்பதற்கு பயம், நீங்கள் இது போன்று ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு, வேறெந்தக் காரணமும் எனக்கு புலப்படவில்லை. காலையில் கண்விழித்து, பல்துலக்கி, காலைக்கடன்களை முடித்து,**

**காலைச்சிற்றுண்டி அருந்தி,மதிய உணவைத் தயாரித்து எடுத்துக்கொண்டு,** சிலர் அலுவலகம் அல்லது சிலர் வேறு தொழிலுக்காகச் சென்று மாலையில் வீடு திரும்பி, மனைவியுடன் சண்டையிட்டு, குழந்தையுடன் சிறு மோதல்.....T.V பார்த்து.. இது போல் தானே, அர்த்தமில்லாத குறிக்கோளற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்! ஆனால் நீங்கள் வாழ்விற்கு ஓர் அர்த்தத்தைக் கற்பித்து கொள்கிறீர்கள். நான் "அந்த, சமூக சேவை செய்கிறேன், மனிதனுக்கு உதவுகிறேன்..." என, நீங்களாக உருவகித்துக் கொள்கிறீர்கள். உங்களுக்கு வேறு வழியில்லை. **ஆனால், ஆழமாக, உங்களுக்குள், துயரம் மட்டுமே உள்ளது. உங்களுக்கு வாழ்க்கையில் என்ன செய்வது என்று தெரியவில்லை. 'நான்', 'எனது'** என்ற உணர்வால் உருவாக்கப்பட்ட, இயந்திரக் கூண்டிற்குள் மாட்டிக்கொண்டு ள்ளீர்கள். பல விதமான தப்பிக்கும் வழிகளை ஏற்படுத்திக் கொண்டு, இது போன்ற வாழ்க்கையைத் தொடர்கிறீர்கள். இதில் நீங்கள் அயர்ச்சி அடையாததற்கு, என்னால் ஒரே ஒரு காரணம்தான் கூற முடியும் - **நீங்கள் இறப்பதற்கு பயப்படுகிறீர்கள்... அல்லது உங்களுக்கு நெருங்கியவர்களுக்கு நேர்ந்ததை பார்த்து பயம்... மற்றபடி உங்கள் வாழ்க்கைக்கு வேறென்ன அர்த்தம் உள்ளது?**

நீங்கள் உண்மையான ஆனந்தத்தை, பரமானந்தத்தை அனுபவித்ததில்லை. வாழ்வே அதுதான். அது இன்னும் உங்களுக்குக் கிட்டவில்லை மனிதன் எவ்வாறு, இது போன்ற வாழ்க்கையை வாழ்கிறான் என நினைத்து எனக்கு மிக வியப்பாக உள்ளது! உண்மையில் எனக்கு புதிராகவும் உள்ளது. மனிதனுக்கு 'முக்தி' அருள்வது என்பது எனக்கு பெரிய பிரச்சனையே அல்ல. என் பிரச்சனை எல்லாம், மனிதன், எவ்வாறு இது போல் வாழ்கிறான்?; இன்னும் எத்தனை தப்பிக்கும் வழிகளை அனால் கண்டு பிடிக்க முடியும் என வியக்கிறேன் - T.V கம்ப்யூட்டர், ஏதேதோ செய்கிறீர்கள், வானில் பறப்பது... இன்னும் பல... எப்படியோ வாழ்ந்தாக வேண்டும். உங்கள் துக்கத்தை சமாளிக்கிறீர்கள். இவையெல்லாம் செய்து துக்கத்திலிருந்து தப்பிகிறீர்கள். ஆனால் அடிப்படையில் அந்த வலி உள்ளே இருந்து கொண்டே உள்ளது - இவை எல்லாம் என்ன? - வாழ்வின் அர்த்தம் என்ன? - எதை நோக்கி போய்க்

கொண்டிருக்கிறோம்? - வயதாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் எதையும் சாதிக்க முடியவில்லை - இவை எல்லாவற்றின் குறிக்கோள்தான் என்ன?...

'துக்கம்' என்பதன் பொருளே இதுதான். ஆங்கிலத்தில் அதற்கு நிகரான வார்த்தை இல்லை "Suffering" எனும் வார்த்தையைத் தான் உபயோகிக்கிறோம். அது 'துக்கம்' என்பதன் உண்மையான பொருள் அல்ல. இதைத் தெளிவாக விவரிக்க இயலாது. **உங்களுக்கு இருக்கும் அந்த வலி புத்தருக்கு ஏற்பட்ட வலி– அவருக்கு வாழ்வில் அனைத்தும் இருந்தது. ஆனாலும் அந்த வலி ஏற்பட்டது 'இவையெல்லாம் எதற்கு'? என்ற கேள்வி – இதைத்தான் 'துக்கம்' என்கிறோம் – இது நீங்க வேண்டும். இதற்குத் தான் முக்தி யக்ஞை நடைபெறுகிறது. ஆனால் முதலில் அந்த வலி இருப்பதை நீங்கள் உணர வேண்டும். இதுவே முதல் தகுதி. அந்த வலியை நீங்கள் உணராமல் 'நான் என்னுடைய துக்கத்தை சமாளிக்கிறேன் நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்' எனக் கூறினால், எனக்கு உங்களிடம் எந்த வேலையும் இல்லை. அது உங்களைப் பாதித்தால் மட்டுமே, உங்களுக்கு என்னால் உதவ முடியும்.** இரண்டாவதாக, **உங்கள் உறவுமுறை பற்றியது. இது மிக மிக முக்கியம். இதற்குப் பின், நீங்கள், முக்திக்கான என் அருளை அடையத் தயாராகி விடுவீர்கள்.** அதன் பின்னர், உண்மையான அன்பு என்றால் என்ன என்பதை உணர்வீர்கள். கருணை என்றால் என்ன, உங்கள் வாழ்க்கையை மற்றவரோடு பங்கிட்டுக் கொள்வது என்பது என்ன 'அனைத்தும் ஒன்று' என்பதன் அர்த்தம் என்ன - கிரந்தங்களில் உள்ளவையெல்லாம் உங்களுக்குத் தெளிவாகி விடும். எவரும் உங்களுக்கு கற்றுத் தரத் தேவையில்லை, **நீங்களே உங்கள் குருவாகி விடுவீர்கள் உங்களால் அதைப் பார்க்க முடியும்.**

அதனால், நீங்கள் அனைவரும் இதற்குத் தயார் என நம்புகிறேன் 'ஆம் பகவான்' - அனைவரும் உரக்கக் கூறுகின்றனர், **நீங்கள் என்ன கேட்கின்றீர்கள் எனத் தெரிகின்றதல்லவா? நீங்கள் இறக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள்!** (அனைவரும் சிரிக்கின்றனர்)

***

**பக்தன்** – பகவான், மனது பலவேறு விதமாக வேலை செய்கிறது. சில சமயங்களில், சில சந்தேகங்களிலோ அல்லது ஒரு கேள்வி ரூபத்திலோ, மாட்டிக் கொள்கிறது. மனதின் இயற்கைத் தன்மைதான் என்ன?

**ஸ்ரீகல்கி** – உண்மைதான், மனது, பல விதமாக வேலை செய்கிறது. உதாரணத்திற்கு, மனம் குற்றம் சொல்லும் பாவத்தில் உள்ளபோது, நீங்கள் தொடர்ந்து யாரையாவது உங்கள் கணவர், பெற்றோர் என்று குற்றம் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். மனது, சில சமயங்களில் ' குற்ற உணர்ச்சி'யில் போய் விடும். அப்போது, தொடர்ந்து, அது தன்னைப் பற்றிய ஒரு குற்ற உணர்விலேயே இருக்கும். அடுத்து, மனம் ' சந்தேக பாவத்தில் உள்ள போது, கேள்விகள் எழுப்பிக் கொண்டே இருக்கும். இவையே மனதின் வெவ்வேறு குணாதிசயங்கள் ஆகும். மனதின், இது போன்ற பாவங்கள், இரண்டு விதமான நாடிகள் - **'இட், 'பிங்கள' எனும் நாடிகளால் தூண்டி விடப்படுகின்றன. இந்த நாடிகள், உங்களுடைய வீட்டின் வாஸ்து, நீங்கள் வசிக்கும் இடம், சூரியன் மற்றும் சந்திரனின் நிலைகள், போன்ற பலவற்றின் மீது ஆதாரப்பட்டு உள்ளது.** ஆனால் உங்களுக்கு உண்மையிலேயே உங்கள் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தோன்றினால், அதற்காக, நீங்கள் சில வகையான தியானங்கள் செய்ய வேண்டும். இதன் மூலம், இட, பிங்கள நாடிகளை கட்டுப்படுத்த முடியும். பிறகு, நம் மனது செயல்படும் விதத்தை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். இல்லையெனில் மனதைக் கட்டுப்படுத்த இயலாது, சூரியன், சந்திரன், பூமி, இவைகளின் சக்திகள் நம் 3 நாடிகள், அதாவது, 'இட்','பிங்கள' மற்றும்'சுசும்ன' நாடிகள் மூலம் பாய்ந்து, நம் மூளையின் பல பகுதிகளில் பாதிப்பை உண்டு பண்ணுகின்றன. நம் உடலில் உள்ள 7 சக்கரங்களும் கூட மூளையின் 7 பகுதிகளையே குறிக்கின்றன. இவைகள் மூலம் சக்திகள் பாய்ந்து, மூளையின் வெவ்வேறு பகுதிகளை தூண்டி விடுகின்றன. இதனால் ஒரே நாளில், உங்களுக்கு வெவ்வேறு பகுதிகளை தூண்டி விடுகின்றன. இதனால் ஒரே நாளில், உங்களுக்கு வெவ்வேறு விதமான உணர்ச்சிகள் மாறி மாறி வருகின்றன.

உண்மையில், நீங்கள் எல்லோரும், தொலை தூரத்திலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட கணிணிகளே! (Computer) உங்களை, நீங்களே கட்டுப்படுத்திக் கொள்ளும் சாதனத்தை. உங்களுக்குக் கொடுக்கவே, நாங்கள் முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம் எனக்கு உங்களைப் பார்க்கும் போது. விதவிதமான 'ப்ரோக்ரம்' செய்யப்பட்ட கம்ப்யூட்டர் போல தெரிகின்றீர்கள். அங்கிருந்துதான் உங்கள் கேள்விகளும் வருகின்றன. இந்த ப்ரோக்ராம், எங்கிருந்து செயல்படுகிறது என்பது எனக்குத் தெரியும்

நீங்கள் இயலாத நிலையில் உள்ளீர்கள். அதனால்தான் நீங்கள் இந்தத்தியானங்கள் செய்வது, மிக அவசியமாகிறது. இதனால், மூளையையும், அதன் மூலம் மனதையும் கட்டுப்படுத்த ஏதுவாகிறது.

***

**பக்தன்** ~ பகவான், கல்கி தர்மம், ஒரு மதமா?

**ஸ்ரீ கல்கி** ~ மதம் என்பது, ஒரு தனி மனிதனைச் சுற்றியோ அல்லது ஒரு தத்துவத்தைச் சுற்றியோ அல்லது ஒரு குறிக்கோளைச் சுற்றியோ ஏற்பட்டது. கிருஸ்துவ மதம், இயேசுவைச் சுற்றியும், ஜூடாயிசம், யாஹ்வெ (ஜேஹோவா) வைச் சுற்றியும், இஸ்லாமிய மதம், நபிகள் முகமதுவைச் சுற்றியும் அமைந்துள்ளது. மார்க்சியத்தை எடுத்துக் கொண்டால் அது ஒரு கொள்கையைச் சுற்றி அமைந்துள்ளது.

கல்கி தர்மா, ஒரு தனிமனிதனைச் சுற்றியோ, ஒரு போதனை, அல்லது ஒரு குறிப்பிட்ட செயல்பாடுமுறைகளைச் சுற்றியோ ஏற்பட்டது அல்ல. ஏனெனில், கல்கி தர்மத்திள்படி நீங்கள் என்னை வழிபடலாம் அல்லது ராமர், கிருஷ்ணர், ஏசு அல்லது யாரை வேண்டுமானாலும் வழிபடலாம். கேரளாவில் ஆயிரக்கணக்கான நம் கிருஸ்துவ பக்தர்கள் இருக்கிறார்கள். எனக்கு நிறைய முகமதிய பக்தர்கள் உள்ளார்கள். நியூயார்க்கில் என்னுடைய தர்மத்தை பரப்புபவர் ஒரு இரானிய முகமதியர். அவர் பெயர் அலி ரஹ்மான். அவர் ஒரு முன்னாள் இஸ்லாமியத் தீவிரவாதியாக இருந்தவர். அவர் மனைவி ஒரு உலகப்பிரசித்தி பெற்ற சு.ஃ.பி ஆன்மிகவாதி

(Sufimystic) ஒரு தனி மனிதனைச் சுற்றி இருப்பதால், அந்த மதங்களில் அல்லது, இயக்கங்களில், அந்த ஒருவரை விட்டால் உங்களைக் காப்பாற்ற யாருமே இல்லை. நீங்கள் ஜ்யூ (Jew)வாக இருந்தால்,'ஜேஹோவா' 'தான்; ஒரே கடவுள் என்று நம்பியே ஆக வேண்டும். நீங்கள் கிருஸ்துவராக இருந்தால், இயேசு, உங்கள் பாவங்களுக்காக இரத்தம் சிந்தினார் என்பதை நம்பியே தீரவேண்டும். இதை நீங்கள் நம்பாவிட்டால், உங்களுக்கு 'விடுதலை' என்பது இல்லை. இதே போல், இஸ்லாம் மதத்தில், முகமது நபிகள்தான் இறுதியில் வந்த நபிகள் என்றும் அவருடைய போதனைகளே இறுதியானது என்றும் நம்பியே ஆக வேண்டும். இல்லையெனில் உங்களுக்கு வேறு வழியே இல்லை. மார்க்சியத்தில், அதன் கொள்கையைப் பின்பற்றினால் தான் மனித குலத்தைக் காப்பாற்ற முடியும் என்று நம்ப வேண்டும்.

**கல்கி தர்மத்தில், நீங்கள் யாரை விரும்புகிறீகளோ அவரை வழிபடலாம். உங்களுக்கு அருள் வந்து சேரும். அது உங்களை, ஒரு தனி மனிதனைப் பற்றிக்கொள்ளுமாறு சொல்லவில்லை.** தர்மாவில் யக்ஞங்களின் முடிவில்,'**இந்த போதனைகள் உங்களுக்கு உதவுமானால் எடுத்துக்கொள்ளுங்கள், இல்லையெனில் விட்டு விடுங்கள்,'என்று கூறப்படுகிறது. அதனால்தான் நான் சொல்கிறேன் "கட்டுப்படுத்தும் எதுவும் என் தர்மம் ஆகாது".**

உலகில் 60 ஆயரம் கோடி மக்கள் இருந்தால், முக்தி அடைவதற்கு 60 ஆயிரம் கோடி வழிகள் உள்ளன. 60 ஆயிரம் கோடி முறைகள் 60 ஆயிரம் கோடி போதனைகள், 60 ஆயிரம் கோடி கடவுள்கள் இருக்கின்றனர். பிரச்சனை என்பதே இல்லை. உங்கள் ஹ்ருதயத்திலிருந்து வந்தால், அது வேலை செய்யும்.' அங்கிருந்து ராஜுபேட்டை கிராமத்திற்கு **100 முறை அங்கப் பிரதக்ஷணம் செய்தால், முக்தி கிடைக்கும்'என நம்பினீர்கள் என்றால், அது நடக்கும்.** நீங்கள் முக்தி அடைந்து விடுவீர்கள். ஆனால், உங்களால் அப்படி நம்ப முடியுமா? என்பதே கேள்வி. **இது போன்ற சுதந்திரத்தைப் பற்றித்தான் 'தர்மத்தில்' சொல்லப்படுகிறது. உங்கள் ஹ்ருதயம் ' உண்மை' யோடு ஒன்றியிருந்தால், எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும்.**

அதனால் தான், சில சமயம், சிலரிடம் நான் இவ்வாறு சொல்கிறேன் **'என்னுடைய போதனைகள் உங்களுக்கு உதவாமல் போகலாம். நீங்கள் சாயி பாபா, அல்லது மற்றவரிடம் செல்லுங்கள்...,** என்று. ஏனெனில் **அவர்களுக்கு அந்த மார்க்கம் பொருத்தமாக இருக்கும்.**

அதனால், கல்கி தாமம் என்பது சுதந்திரம், முழுமையான சுதந்திரம். நாம் எதுவானாலும், அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறோம். அதனால் இது ஒரு மதம் அல்ல. **மதம் அல்லாத ஒன்று உண்டென்றால் அது 'கல்கி தர்மம்' தான் என்று நான் சொல்வேன்.** இது ஒரு உண்மையான 'இந்துத்வம்'. உண்மையான இந்துமதத்தில் யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் செய்யலாம்.

'கடவுள் ஒருவரே அல்லது, கல்கி தர்மாவின் போதனைகள் தான் உங்களைக் காப்பாற்றும்' எனக் கூறுவது சரியாகாது. அது என்னை மிகவும் துக்கமாக்குகிறது. இதுவும் ஒரு மார்க்கம். இது உங்களுக்கு ஒத்தப்போனால் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களால் ஒத்துக் கொள்ள முடியாமல் போகலாம். உங்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது. இந்த சுதந்திரமே **'முக்தி' என்பது ~ எதனுடனும் பந்திக்கப்படாத நிலையே இது.**

***

**பக்தன்** ~ பகவான், உண்மையான அன்பு என்றால் என்ன?

**ஸ்ரீகல்கி** ~ நீங்கள் அனைவருமே அன்பைத்தேடி அலையும் பிச்சைக்காரர்கள் நிலைமையில் தான் இருக்கிறீர்கள். மற்றவர்கள் உங்கள் மீது அன்பு செலுத்த வெண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் மற்றவர்களுக்கு அன்பைக் கொடுப்பதில்லை. உங்களுடைய அன்பு எதிர்பார்ப்புகள் நிறைந்தது. உதாரணத்திற்கு உங்கள் கணவர், உங்களை நன்றாகக் கவனித்துக்கொண்டால், நீங்கள் அவர் மீது அன்பு செலுத்துவீர்கள். அந்தக் கணவர் குடித்துவிட்டு வந்து, உங்களை உதைத்தால் அவர் மீது அந்த அன்பு இருக்குமா? இருக்காது. அதுபோல் உங்கள் பெற்றோர்கள் உங்களிடம் நன்றாக நடந்து கொண்டால், அவர்கள்மீது அன்பு

செலுத்துவீர்கள் இல்லையென்றால், உங்களுக்கு அவர்கள் மீது அன்பு இருக்காது. உங்கள் குழந்தைகள் நன்றாகப் படித்தால், நீங்கள் அவர்கள் மீது அன்பு செலுத்துவீர்கள். நான் சமீபத்தில் ஒரு பெற்றோரைச் சந்தித்தேன். அவர்களுடைய பிள்ளை அமெரிக்காவில் Software Engineer ஆகப் பணிபுரிகிறார். அந்தப் பிள்ளையைப்பற்றிக் குறிப்பிடும் போது, அந்தப் பெற்றோர்கள் தன்பிள்ளையே 'அவர்' என்ற மரியாதையுடன் அழைப்பதை உணர்ந்தேன். ஆனால் அந்தப் பிள்ளை ஒரு ரயில் நிலையத்தில் போர்ட்டராகப் பணிபுரிந்தால், இந்த மரியாதையோ அல்லது அன்போ இருக்குமா? உங்கள் குழந்தையிடம் உள்ள உங்கள் அன்பு எத்தகையது என்று பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு மகன் வெற்றியடைந்தால்தான் தந்தைக்கு அவனிடம் அன்பு. ஒரு மனைவி அழகாக இருந்தால் தான், கணவனுக்கு அவள் மேல் அன்பு. அந்த மனைவிக்கு ஒரு அம்மையோ அல்லது கான்சரோ வந்து அவள் உருக்குலைந்து விட்டால் கணவனுக்கு மனைவிமேல் உள்ள அன்பு போய் விடுகிறது. இவையெல்லாமே பற்றுதல்தான், அன்பு அல்ல, எங்கெல்லாம் அன்புக்காகப் பிச்சையெடுக்கிறோமோ, பற்றின் காரணமாக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறோமோ, இவையெல்லாம் உண்மையான அன்பு அல்ல.

ஆனால், காரணம் இல்லாத அன்பு - அதாவது 'Causeless Love' என்று ஒன்று இருக்கிறது. அந்த அன்புக்கு காரணம் எதுவும் கிடையாது. நான் குறிப்பிடும் அன்பு அத்தகைய அன்பு தான். அத்தகைய அன்பை, நீங்கள் கண்டு பிடித்தால் மட்டுமே, நீங்கள் சத்தியலோகத்தில் நுழைய இயலும். இல்லையென்றால் நுழைய இயலாது. நீங்கள் உங்கள் மனைவியை அவள் உள்ளபடியே அவளிடம் அன்பு செலுத்த வேண்டும். அந்த அன்பின் காரணம், அவள் அழகாக இருப்பதாலோ, அல்லது செல்வந்தரின் மகளாக இருப்பதாலோ என்று இருந்தால், அது அன்பு அல்ல. காரணமற்ற அந்த அன்பு, அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கவல்லது. இந்தக் காரணமில்லதா அன்பு ஒருவரின் இயற்கையான உண்மை சுபாவமாக அமையவேண்டும். அந்தக் காரணமற்ற அன்பை நீங்கள் செயற்கையாகப் பெற்றுவிடமுடியாது. நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அதுதான் உங்கள் உண்மை சுபாவம், நீங்கள்

உங்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால், நீங்கள் எத்தகையவர் என்பது உங்களுக்கு தெளிவாகும். அதுவே உங்கள் உண்மை இயல்பு ஆகும். இதனை உணர்ந்தால் உலகத்தை வேறு கண்ணோட்டத்துடன் காண இயலும். இப்பொழுது உங்களுக்கு தெரிந்ததெல்லாம் பற்று ஒன்றுதான். கூர்ந்து பார்த்தால், உங்கள் உறவுமுறை மீது நீங்கள் வைத்திருப்பது வெறும் பற்றுதான், என்பதைத் தெளிவாக உணர்வீர்கள்.

***

**பக்தன் :** பகவான் எந்தெந்த வழிகளில் தாங்கள் எங்களுடன் தொடர்பு கொள்கிறீர்கள்? நாங்கள் எப்படி அவைகளைத் துல்லியமாக உணர்ந்து கொள்வது என்பதை தயவு செய்து கூறுங்கள்.

**ஸ்ரீகல்கி :** நான் உங்களுடன் பேசுவதன் மூலமாக பெரும்பாலும் தொடர்பு கொள்கிறேன். நான் பேசுவதை நீங்கள் கேட்க முடியும். சில சமயங்களில் காட்சிகள் மூலமாகவும், பலமான உள்உணர்வுகளின் ரூபமாகவும் தொடர்பு கொள்கிறேன். நான் தொடர்பு கொள்ளும் போதெல்லாம், உங்களுடைய ஹ்ருதயப் பகுதியில், **ஒரு நல்ல உணர்வை, ஒரு விதமான அமைதி அல்லது ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள்.** இந்த மாதிரியான உணர்வுகள் இல்லாவிட்டால், அது உங்களுடைய உள்மனது உங்களுடன் கொண்ட தொடர்பாக இருக்கக்கூடும்.

**நான் பேசும்போதெல்லாம் உங்கள் உடல் நிலையைக் கவனிப்பதற்குப் பயிற்சி செய்து பழக்கப்படுத்திக் கொண்டால், அதில் லேசான சில மாற்றங்கள் நிகழ்வதை உணர்வீர்கள். இந்த உடல் நிலை மாற்றங்களையும், நான் உள்ளே பேசுவது அல்லது தொடர்பு கொள்வதையும், இணைத்துப் பார்க்கத் தொடங்கினால், கொஞ்சம் கொஞ்சமாக, முயற்சி இன்றி என்னுடன் தொடர்பு கொள்வதில், நிபுணர் ஆகி விடுவீர்கள்.**

***



**பக்தன் :** பகவான், பொன் நகரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றித் தயை கூர்ந்து கூறுங்கள்.

**ஸ்ரீகல்கி :** பூமியின் மேல் Grid ரேகைகள் என சில காந்த ரேகைகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இவைகள் அட்க்ஷ ரேகை மற்றும் தீர்க்க ரேகைகள் போன்றவை. இந்த Grid ரேகைகளை "லேசர் ஆன்டென்னா" என்ற தனிக் கருவி மூலம் அளக்க முடியும். உங்களுடைய சக்கரங்கள் (சக்தி மையங்கள்) **ஒரு வினாடிக்கு 33 தடவை சுற்றினால் நீங்கள் ஞானோதயம்** (முக்தி நிலை) அடைவீர்கள். இந்த Grid ரேகைகளை அதிர்வடையச் செய்வதன் மூலம், சக்கரங்களை இந்த குறிப்பிட்ட வேகத்தில் சுற்ற வைக்க முடியும் என நாங்கள், இதில் நிறைய ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்துள்ளோம்.

பல இடங்களை ஸ்கேன் செய்தபின் இந்த இடத்தை, (வரதயபாளையம்) பொன் நகரத்தைக் கண்டு பிடித்துள்ளோம். சில முக்கியமான Grid ரேகைகள் இந்த இடத்திலிருந்து கிளம்புகின்றன. இங்கு தான் கோவிலைக் கட்டி இருக்கிறோம். இந்தக் கட்டிடத்தில் 8,000 பேர் தியானம் செய்ய முடியும். தொடர்ந்து, முறை வைத்துக்கொண்டு 8,000 பேர், தியானம் செய்ய ஆரம்பிக்கும் போது, தியானத்தால் உற்பத்தியான பலத்தினால் சக்திகள் எழுச்சி அடைவதால், இந்த Grid ரேகைகள், பொன் நகரத்தில் மட்டும் அல்லாது உலகெங்கும் அதிர்வடையத் துவங்கும். முறையே, இந்த Grid ரேகைகள் சக்கரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி, நம்மை வெவ்வேறு நிலைகளுக்கு எடுத்துச்செல்லும்

பூகோள நகரம் (Global city) என்று அழைக்கப்படும், அந்தப்பொன் நகரம் முற்றிலும், என்னால் அருளப்பட்ட, வாஸ்து சாஸ்திரப்படி கட்டப்பட்டுள்ளது. இதனால் மங்களகரமான சக்திகளை உள்நிறுத்தி வைக்கவும், எதிர் மறையான சக்திகளை தடுக்கவும் உதவுகிறது. இது மட்டுமன்றி, என்னுடைய அருளை ஆயிரம் மடங்காக அதிகரிக்க எனக்கு மிகச் சுலபமாகி விடும். ஏனெனில் என்னுடைய அருள் வருவதற்கு **ஒரு இடத்தினுடைய "சக்தி நிலை" (Energy Level) மிகவும் அத்தியாவசியமாகும்.**

இங்குள்ள என் நண்பர் (ஒரு பக்தரை சுட்டிக்காட்டி) பீஜிங் (Beijing)நகரில் உள்ளார் என வைத்துக் கொள்வோம். இங்கு அதிர்வலைகளை உருவாக்கும் போது, அவருக்கு பீஜிங்கில் அனுபவங்கள் ஆரம்பிக்கும். அப்போது எது நடக்க வேண்டுமோ அது நடக்கும். **உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நீங்கள் முக்தனாகி விடுவீர்கள்.** இது போல் நடக்க வேண்டியே, நாங்கள் பொன் நகரத்தைக் கட்டி இருக்கிறோம். இது முடிவடைந்ததும், **நீங்கள் எல்லோரும் அங்கு வந்து தியானம் செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.**

***

**பக்தன் :** பகவானின் பாதாரவிந்தங்களுக்கு வணக்கம் பகவான், எதுவுமே Perfect - ஆக (முழுமை), சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். இது இந்தப் பிரபஞ்சத்தின் படைப்புக்குக் கூடப் பொருந்துமா?

**ஸ்ரீகல்கி : நீங்கள் எல்லாவற்றையும், எந்த நோக்குடன் பார்க்கிறீர்களோ, அவை அதைப்போலவே அமையும். ஒரு கண்ணாடி டம்ளர் பாதி தண்ணீர் உள்ளது என்று கூறலாம். அல்லது அதையே பாதி காலியாக உள்ளது என்றும்** கூறலாம். அதேபோல், எதுவுமே பூரண ஒழுங்குடன் இல்லை என்று கூறமுடியாது. அதே சமயம், ஒவ்வொன்றும் பூரண ஒழுங்குடன் உள்ளது என்றும் கூற முடியாது. இந் யக்ஞத்தின் மூலம் (ஆனந்த யக்ஞம்), பார்ப்பது என்பதை நீங்கள் உண்மையாக அறிந்து கொண்டால், ஒவ்வொன்றும் உங்களுக்கு பூரண ஒழுங்குடன் தெரியும். எதுவுமே, சரி என்பதோ, சரியில்லை என்பதோ? உங்கள் எண்ணத்தில் தோன்றுவதுதான். எண்ணம் **உங்கள் வாழ்வைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் வரையில்தான் எதிர்மறைகள் இருக்கும். ஒழுங்கானது – ஒழுங்கற்றது, நல்லது கெட்டது, சரியானது – தவறானது என்று. ஏனெனில், இயல்பாகவே, எண்ணம் என்பது பின்னமாகும் தன்மை உடையது.**

எண்ணத்தின் அமைப்பே, ஒப்பிடுதலாகும். ஒப்பிடுதல் இல்லாமல், எந்த எண்ணமும் இருக்க முடியாது. உங்கள் மனமோ எண்ணத்தில் இருந்து விடுபட முடியாமல் உள்ளது. **எண்ணம் என்பது என்னவெனில், அது ஒரு நினைவு (ஞாபகம்) மட்டுமே. இந்த ஞாபகத்தின் தன்மையை நீங்கள் ஆராய்ந்தால், அது மற்றவைகளோடு சேருவது மட்டுமன்றி, ஒப்பிடவும் செய்கிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள். மனம் எப்பொழுதும் நேர் எதிராக உருவகப்படுத்திக் கொள்கிறது.**

அதனால் எண்ணத்தில் உள்ள சிக்கல் என்னவெனில் எப்போதும் இரண்டு விதங்களும் (நேர் - எதிர்) உள்ளன. நீங்கள் இந்த எண்ணத்தை விட்டு விலகிச் சென்றால் மட்டுமே எதையுமே, உங்களால், உள்ளது உள்ளபடி உணர்ந்து அனுபவிக்க முடியும். அந்த ஆனந்த யக்ஞமே அதைப்பற்றித்தான். நீங்கள் இந்த யக்ஞத்தில், ஆழமாகச் செல்லும் போது, உங்களில் நிறையப் பேரால், இந்த நிலைகளுக்கு உள்ளே செல்ல முடியும். அதன் பிறகு, தேவைப்படும் போது, நீங்கள் எண்ணத்தைப் பயன்படுத்துவீர்கள், மற்ற நேரங்களில் எண்ணம் என்ற ஒன்று இருக்காது. **எப்போது எண்ணத்திற்கு அவசியம் இல்லையோ, அப்போது பிரிவினை இருக்காது. மனப்போராட்டமும் இருக்காது. நேரடியாக கவனிப்பது ஒன்றே இருக்கும். பிறகு ஒவ்வொன்றும், அவைகள் உள்ளது உள்ளபடியே அருமையாக இருக்கும்.**

***

**பக்தன் :** பகவானுடன் நெருங்கிய பந்தம் வைத்துக் கொண்டு, பிரார்த்தனை செய்தும், சில சமயங்களில் எங்களுடைய பிரார்த்தனைகள் நிறைவேறுவதில்லையே? விளக்கியருளவும்.

**ஸ்ரீகல்கி :** உங்களுடைய பிரார்த்தனைகள் என்னை வந்தடைந்தும், அவை சில சமயங்களில் நிறைவேறாமல் போவதற்கு முதற் காரணம் **உங்களுடைய பிரார்த்தனையில் தெளிவு இல்லை.** உதாரணத்திற்கு ஒரு பெண் தன் திருமணத்திற்கு தனக்கு வரவேண்டிய மாப்பிளையின் உயரம், தொழில் வருமானம் போன்றவற்றைக் குறிப்பிட்டு, தெளிவாகப் பிரார்த்தனை செய்யும் போது, அதனை என்னால் சுலபமாக நிறைவேற்ற இயலும்.

இரண்டாவதாக, **நான் முன்பு பல தடவைகள் கூறியிருந்தும், நீங்கள் என்னிடம் பிரார்த்தனை செய்யும்போது ஒரு புனித உறவை ஏற்படுத்திக்கொண்டு பிரார்த்தனைச் செய்வதில்லை.** என்னை ஒரு நண்பனாகவோ அல்லது ஒரு தந்தையாகவோ பாவித்து, அந்த பந்தத்துடன் உங்கள் இயலாத நிலைமையை உணர்ந்து, பிரார்த்திக்கும் போது நான் அவற்றை நிறைவேற்றுவேன்.

உதாரணத்திற்கு, ஒரு சமயம் ஒரு சிறுவன் நேமத்தில் ஒரு யக்ஞத்தில் பங்கு பெறும் சமயம், குளிக்கும் பொழுது, குளிர் தாங்காமல், பகவான், பகவான் என்று அழைத்தான். அப்பொழுது எதுவும் நடைபெறவில்லை. தலையில் குளிர்ந்த நீர் பட்டவுடன், குளிர் தாங்காமல், அப்பா என்று பந்தத்துடன் கூவி அழைத்தவுடன், அந்தத் தண்ணீர் சுடுநீராக மாறிவிட்டது. எனவே ஒரு பந்தத்துடன் பிரார்த்தனை செய்யும்பொழுது, அந்த பிரார்த்தனை நிறைவேறுகிறது.

**மூன்றாவதாக, என்னிடம் நீங்கள் ஒரு பிரார்த்தனையைக் கொடுத்துவிட்டு, உங்கள் மனத்திற்குள்ளேயே அதனை நிறைவேற்றுவதற்காக வேறு திட்டங்களை வைத்திருந்தால்** உங்கள் பிரார்த்தனை நிறைவேற வாய்ப்பில்லை.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, **உங்கள் பிரார்த்தனை நிறைவேறுவது உறவு முறைகளைச் சீர்செய்து கொள்வதைப் பொறுத்திருக்கிறது. உங்களுடைய தாய், தந்தை, கணவன், அல்லது மனைவி இவர்களுடன் உறவு முறையைச் சீர்செய்து கொண்டால் மட்டுமே உங்களுடைய பிரார்த்தனை நிறைவேறும்.**

சிலருக்குச் சில பிரச்சனைகள் தீராமல் இருப்பதற்கு மற்றொரு காரணம் **அவர்களின் கர்மவினையைப் பொறுத்தது.** உதாரணத்திற்கு ஒருவர் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தால், அவருக்கு நோய் **நிவாரண அருள் அளிக்கும்போது, சிலருக்கு மிகுந்த பணப் பிரச்சனை தோன்றலாம். சிலருக்கு மிகுந்த பணப் பிரச்சனை இருக்கும்போது என்னால் பணம் கொடுத்து உதவ முடியும். ஆனால் கர்மாவின் பலனாக, பணப்பிரச்சனையை தீர்த்துவைத்தால் அவருக்கு நோய்வரக்கூடும்.** இதை (Management of karma) என்று சொல்வார்கள். இந்த மாறுதல்களை நான் மட்டுமே செய்ய இயலும். சிலருக்குக் குறைந்த

கர்மவினை இருக்கும்போது அதனைச் சரி செய்து அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இயலும். எனவே, **என்னுடன் ஒரு பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, உங்கள் இயலாத நிலைமையை உணர்ந்து உறவுமுறையைச் சீர் செய்து கொண்டால் உங்கள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் அதை நிறைவேற்றச் சித்தமாக இருக்கிறேன்.**

***

**பக்தன்** – பகவான், இந்த போதனைகளையும், சாதனைகளையும் தவிர முக்திப் பாதையில் செல்ல நீங்கள் சொல்லும் முக்கிய செய்தி என்ன?

**ஸ்ரீகல்கி – என்னுடைய அடிப்படை போதனை இதுவே – உங்களுக்கு சில போதனைகளும், சாதனைகளும் சொல்லிக்கொடுக்கப்பட்டாலும், எந்த போதனையோ அல்லது சாதனையோ, உங்களை "முக்தி"க்கு அழைத்துச் சொல்லாது.** அதனால்தான், நான் எல்லா சாதனைகளையும், போதனை களையும் இறுதியில் குப்பைத் தொட்டியில் போடவேண்டும் என வலியுறுத்துகிறேன். 'முக்தி' என்று வரும்போது, **இவைகள் எதுவும் உங்களுக்கு உதவாது. இவைகளால், உங்களை முக்திக்கு தயார் செய்ய முடியும். அது யாருடைய போதனையாக வேண்டுமானாலும் இருக்கலாம் – ரமண மஹரிஷி, ராமகிருஷ்ணர், புத்தர் – ஆனால்** எந்த போதனையுமே, உங்களை முக்திக்கு அழைத்துச் செல்லாது. ரமணருடைய சீடர்களோ, புத்தரின் சீடர்களோ முக்தி அடையவில்லை. ஆகையால், போதனைகள் உங்களுக்கு முக்தியை அளிக்காது. நீங்கள் பங்குபெற்ற, இந்த யக்ஞையின் மூலம், இது, உங்களுக்கு மிகத் தெளிவாகப் புரிய வேண்டும். இந்த யக்ஞையின் மூலம், முக்தியை அடைவதற்கு ஆர்வமும், சில விஷயங்களில் தெளிவும் மட்டுமே கிடைக்கும். எந்த போதனையாக இருந்தாலும், மனவியல் அல்லது வேதாந்தம் என்ற இரு பிரிவிற்குள் அடங்கிவிடும்.

இவைகளால், மனதளவில் வேண்டுமானால் மாற்றங்கள் ஏற்பட உதவி புரிய முடியும். அவ்வளவுதான். அதாவது, இந்த

அறையில் உள்ள சாமான்களை வேறு விதமாக மாற்றி வைப்பதைப் போல ஆனால், இன்னும். அவைகள் இந்த அறையில்தான் இருக்கும். உள்ளே சில விதமான அலங்காரங்கள் செய்யலாம். ஒருவிதமான சந்தோஷத்தை கொண்டு வரலாம். சில பிரச்சனைகளிலிருந்து மீளலாம். சரி பிரச்சனைகளிலிருந்து மீளலாம், சரி செய்து, மீண்டும் சீர்செய்து... சாதனைகள் உங்களை ஒரு மிக ஆழமான சைதன்ய நிலைக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் உங்கள் சைதன்யத்தின் உள்ளே ஆழமாகச் செல்லுதல் முக்தி ஆகாது. உங்கள் மனதின் வடிவமைப்பை மாற்றி அமைத்தலோ, உறவு முறைகளைச் சீர் செய்து கொள்வதோ, உலகில், நடைமுறையில் மிக வெற்றிகரமான வாழ்வு வாழ்வதோ,'முக்தி' ஆகாது. **முக்தி என்பது, முழுமையாக மனதிலிருந்து விடுதலை அடைதல். இதை எந்த போதனையாலோ சாதனையாலோ கொடுக்க முடியாது.** ஏனெனில் இது ஒரு மன இயல் வழியோ, தத்துவ வழியோ அல்லது தியான வழியோ அல்ல. இது ஒரு நரம்பியலும், உடற்கூறும் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். உங்கள் மூளையில், அடிப்படை மாற்றங்கள் ஏற்படவேண்டும். அதனால் தான் சொல்கிறேன், எந்த போதனையையும் பின்பற்றாதீர்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் ஒரு இரண்டாம் தரமான மனிதனாகி விடுவீர்கள். ஏசு கிருஸ்துவினால் மனித குலம் அனைத்தின் மேலும் அன்பு செலுத்த முடியுமா? ஏசு கிருஸ்து கூறுகின்றார். **'நீ, உன்னை நேசிப்பதைப் போலவே, உன் பக்கத்திலிருப் பவரையும் நேசி**! உங்களால் இதைச் செய்ய முடியாது. அவரால் இவ்வாறு செய்ய முடியும். ஏனெனில் அவருடைய மூளை வேறு விதமாக அமைந்திருந்தது. ஆனால் நீங்கள் அவரைப்போல பேச முயற்சித்தால் - அது முடியாத ஒன்று. ராமகிருஷ்ணர், ஆனந்தத்தின் உச்ச நிலையில் குதிக்கலாம், நடனமாடலாம்.**உங்கள் குண்டலினிசக்தி விழித்தெழுந்தா லொழிய,** உங்களால் அவ்வாறு செய்ய முடியாது. அவரைப் போல் நீங்கள் பின்பற்ற முயற்சித்தால், நீங்கள் இரண்டாம் பட்ச மனிதனாகி விடுகிறீர்கள். அவருடைய மூளையின் அமைப்பே வேறாக உள்ளது. ஒரு ரமணரால் **'நான் யார்?...! என கேட்க முடியும். நீங்கள் அதே கேள்வியைக் கேட்டால், நீங்கள் மனநல விடுதிக்குத்தான் செல்ல வேண்டி இருக்கும்**! அதனால் தான், ஒரு வகையில்

நான் போதனைகளுக்கு எதிரி. உங்களுக்குள் போராட்டம் துவங்கிவிடும். நீங்கள் ஒரு விதமாக உள்ளீர்கள், வேறு விதமாக மாறநினைப்பீர்கள் - ஒரு ஏசு கிருஸ்துவாகவோ, ஒரு ரமணராகவோ, ஒரு அரவிந்தராகவோ...இன்னும் யாராகவோ! நீங்கள் அவர்களுடைய புத்தகங்களையெல்லாம் படிக்கலாம், அவர்கள் சொல்வதையெல்லாம் செய்யலாம் - ஆனால் ஒரு அங்குலம் கூட நகர மாட்டீர்கள். சில தெளிவுகள் வேண்டுமானால் கிடைக்கலாம். உங்களுக்குள் மிக நல்ல உணர்வுடன் இருக்கலாம். மிகவும் பாதுகாப்பாக உணரலாம். இவ்வாறான பலன்கள் இருக்கலாம். ஆனால் அவைகள் உங்களை முக்திக்கு எடுத்துச் செல்லாது. பல சமயங்களில் போராட்டங்களை தூண்டிவிடக்கூடும். நீங்கள், நீங்களாகத் தான் இருக்க முடியும். எப்படி வேறொன்றாக மாற முடியும்? எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் மற்றொன்றாக எவ்வாறு மாற் முடியும்? உங்களால் முடியவே முடியாது. இந்த மாயையிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும்.

ஆகையால், நான் என்ன கூறுகிறேன், என்றால் **'நீங்கள் எவ்வாறாக உள்ளீர்களோ, அவ்வாறே ஏற்றுக் கொள்ளுங்கள்' நீங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டால், போராட்டமே இல்லை. போராட்டமே இல்லையெனில் பிராணசக்தி மிகுதியாக இருக்கும். இந்தப் பிராண சக்தியோடு நீங்கள் உங்களுக்குள் என்ன நடக்கிறது என்று பார்த்தால், உங்களுக்கு ஆனந்தம் கிட்டும். ஆகையால்,** நீங்கள் அனைவரும் வீடு திரும்பியதும், ஒரு சிறிய எறும்பின் கடியை ஏற்றுக் கொள்ளுங்கள். அந்த வலியை முழுமையாக அனுபவியுங்கள். அந்த சரீரத்தின் வலியே. ஆனந்தமாக மாறிவிடும். இதே போல்தான் **மனதின் எல்லா வலிகளும், நீங்கள் முழுமையாக அனுபவித்தால், அவை ஆனந்தமாக மாறிவிடும். அதிலிருந்து தப்பிக்கப் பார்த்தால் முடியாது.** அந்த வலியிலிருந்து தப்பிக்க நினைத்து, தற்காலிகமாக அதை அடியில் தள்ளுகின்றீர்கள். சில காலம் கழித்து அது துர்நாற்றமெடுக்கத் துவங்கிறது. பெரும்பாலோர் செய்வது இதைத்தான்! அவர்களுடைய துயரங்களை எதிர்கொள்வதில்லை. குடும்பத்தில் யாராவது இறக்கின்றார்கள், உங்கள் வேலை போய்விடுகிறது அல்லது ஏதோ ஒரு பிரச்சனை - அதன் துயரத்தை

நீங்கள் ஏற்று அனுபவிப்பதில்லை. அந்த துயரத்திலிருந்து T.V மூலமாக, சினிமா, சினேகிதர்கள் வீட்டுக்கு செல்லுதல், ஏதாவது பூஜை செய்தல்... இவ்வாறாக தப்பிக்கின்றீர்கள். **இதைத்தான் (Sorrow Management) 'துயரத்தை சமாளித்தல்'** என்கிறோம். துக்கத்திலிருந்து தப்பித்தல், ஓரளவு வரை நல்லதே. ஆனால், இதனால், நீங்கள் துயரத்திலிருந்து கண்டிப்பாக விடுபட இயலாது.

இந்த ஆனந்த யக்ஞத்திலிருந்து நீங்கள் துயரத்தை எதிர் கொள்ளக் கற்க வேண்டும். நான் கூறுவது இது போல் உள்ளது - **ஒரு புலி, இந்த அறைக்குள் பிரவேசிக்கிறது என வைத்துக் கொள்வோம். உங்களில் பெரும்பாலோர் அந்த மின் விசிறியைப் பற்றிக் கொண்டு தொங்குவீர்கள்!** நான் கூறுவது என்னவெனில் **'உண்மையான வலியே, இந்த மின்விசிறியிலிருந்து தொங்குவதுதான்'.** புலி **இங்குள்ளது. நீங்கள் அங்கு தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான் கூறுகிறேன் 'மின் விசிறியை விட்டு இறங்கி வாருங்கள். அந்தப் புலி உங்களை தின்று விடட்டும். புலி உங்களை தின்ன அனுமதித்து விட்டால், வலி போய்விடும்! வலி ஏற்படுவதற்கு அனுமதியுங்கள். புலிதான் அந்த வலி! என்ன நடக்கிறது எனப் பாருங்கள். வலி ஆனந்தமாக மாறிவிடும்.**

உங்களுக்குள் பொறாமை என்னும் உணர்ச்சி தீயாக எரிந்து கொண்டுள்ளது எனக் கொள்வோம். அந்தப் பொறாமை உணர்ச்சியே உங்களுக்கு துன்பத்தைக் கொடுக்கும். "நான் பொறாமையை விட்டொழித்து - அன்பாக கருணையாக... இருக்க முயற்சி செய்கிறேன்," என்று சொல்வதெல்லாம் வெறுமே கண்துடைப்பு - **நீங்கள் நீங்களாக இருங்கள். உங்களுக்குள் பொறாமை, வன்முறை, வெறுப்பு... எல்லாம் உள்ளது. அதனால்தான் நான் கூறுகிறேன். 'ராவணன் இறந்தே போகவில்லை. அவன் உங்களுக்குள் முழுமையாக வாழ்கிறான்!' நீங்கள் நாகரீகமான வீரப்பன்கள்! அவ்வளவுதான்.**

நான் உங்களை இதைப்போலவோ அல்லது அதைப்போலவோ இருக்கக் கூறவில்லை. நீங்கள் எவ்வாறு உள்ளீர்களோ, அவ்வாறே இருங்கள். இந்த யக்ஞத்தின் நோக்கமே அதுதான் - நீங்கள் யார் எனக் கண்டு பிடிக்க உதவும். ரமணர் கேட்டதைப்போல் 'நான் யார்' என்ற கேள்விக்கு பதில் கிடைக்கும். ஆனால் அவருடைய

கண்டுபிடிப்பு, வேறாக இருந்தது. உங்கள் கண்டுபிடிப்பு,'நீங்கள் ஒரு ராவணன்' என்பதாக இருக்கும்! உலகில் உள்ள எல்லா உபயோகமற்றவைகளும் உங்களுக்குள் இருக்கின்றன. அதுவே உங்கள் கண்டுபிடிப்பாக இருக்கும். இதற்கு வெகு காலம் ஆகாது. ஆனால் மக்கள் இதை விரும்புவதில்லை. உங்களுக்கு, உங்களைப் பற்றிய மிக நல்லதொரு அபிப்ராயத்தையே விரும்புகிறீர்கள். எல்லாம் நன்றாக மூடி மறைக்கப்பட்டுள்ளது. உள்ளே தோண்டிப் பார்த்தால் வெறும் குப்பைக்கூளம்தான் இருக்கும், இந்தக் 'குப்பையை எதிர்கொள்ளுங்கள்'. அது உள்ளது. ஏற்றுக் கொள்ளுங்கள். அதை விட்டு நீங்கள் எவ்வாறு ஓட முடியும்? சந்தேகமில்லாமல் இது மிகத், துன்பத்தைக் கொடுக்கும். இறுதியாக அந்தத் துன்பத்தை அப்படியே அனுபவியுங்கள். அப்போது என்ன ஆச்சரியம்! திடீரென நீங்கள் அங்கு ஆனந்தம் இருப்பதை உணர்வீர்கள். எங்கு ஆனந்தம் உள்ளதோ, அங்கு தோஷங்கள் இருப்பதில்லை. ஒரு சந்தோஷமான மனிதனால், மற்றவருக்கு துன்பத்தை ஏற்படுத்த முடியாது. துக்கமாக உள்ள மனைவி கணவனுக்கும், கணவன் மனைவிக்கும் சந்தோஷமில்லாத குழந்தைகள், தன் பெற்றோருக்கும், சந்தோஷமில்லாத மனிதர்கள் துக்கத்தை பரப்புகிறார்கள். ஆனந்தமாக உள்ளவர்களால் துன்பத்தை ஏற்படுத்த முடியாது. மனிதர்கள் ஆனந்தமாக இருந்தால் எந்தத் தவறுகளும் அவர்களால் செய்ய முடியாது, ஆனந்தமற்றவர்களே, ஏதேனும் பிரச்சனைகளில் மாட்டிக் கொள்கிறார்கள், இறுதியில் திருடர்களாகவோ, குற்றவாளிகளாகவோ, கொள்ளைக் காரர்களாகவோ... மாறுகிறார்கள். ஆகையால், அடிப்படைத் தேவையாக சிறிதேனும் சந்தோஷம் இருத்தல் வேண்டும். இந்த சந்தோஷம், உங்களை நீங்கள் எதிர்கொள்ளும் போது தான் கிடைக்கும்.

நீங்கள் எப்போதும் 'எனக்கு அந்த மனிதரைக்கண்டால் பயம், இவரைக் கண்டால் பயம்' எனப் பேசுகிறீர்கள். அது உண்மையல்ல. அடிப்படையில், உங்களுக்கு, உங்களைக் கண்டாலே பயம்! உங்கள் மேல் உள்ள பயம் போய்விட்டால்,

அனைவரிடமும் உள்ள பயம் போய்விடும். வீரப்பனையும் சேர்த்து! ஒரு புத்தர் இங்கிருந்தால், அவரால் நேராக சென்று வீரப்பனோடு பேசமுடியும், அங்குலிமாலிடம் பேசியதைப்போல்... ஏனெனில் அவருக்கு பயமே கிடையாது. உங்களைக் கண்டு நீங்கள் பயப்படுகிறீர்கள். உங்களை நீங்கள் நேசிப்பதில்லை. ஆனால் நீங்கள் (அவரிடம் உள்ள)என்னுடைய பயத்திலிருந்து வெளிவரவேண்டும், அவரை நேசிக்க வேண்டும் என சொல்கிறீர்கள். உங்களை நீங்கள் நேசிக்கவில்லை இதுதான் நிலைமை.

ஆகையால், உங்களுக்குள் நீங்கள் செல்ல செல்ல, நீங்கள் எவ்வளவு பயங்கரமானவர் என்று கண்டுபிடிப்பீர்கள். அதை ஏற்றுக்கொள்ளுங்கள். அதை ஏற்றுக்கொள்ள தொடங்கியதுமே, உங்களை நேசிக்கத் தொடங்குவீர்கள். பிறகு, ஒரு அபரிமிதமான ஆனந்தத்தை உணர்வீர்கள். **21 நாட்கள் பயிற்சி செய்தால், இந்நிலையை அடையமுடியும். இது மிகச் சுலபமான ஒன்று கடினமாக இருந்தால் நான் அதைப்பற்றிப் பேசமாட்டேன். உங்களால் என்ன முடியுமோ, அதைத்தான் சொல்வேன். 21 நாட்கள் பயிற்சிக்குப் பிறகு,** அது மூச்சுவிடுவதைப்போல், ஆகிவிடும், மிக இயற்கையாக, வெகு சுலபமாக உங்களுக்குள் ஆழமாகச் சென்று, கண்டு பிடித்து, ஏற்றுக்கொண்டு, உங்களை நேசித்து, துன்பத்தை ஆனந்தமாக மாற்ற இயலும். நீங்கள் ஒரு ஆனந்தமான மனிதனாகி விடுவீர்கள். இவ்வாறு செய்தால் உங்கள் குடும்ப வாழ்க்கை பிரமாதமாக இருக்கும்.

மனைவிக்கு, கணவனைப் பார்த்த அடுத்த கணமே ஆனந்தமாக இருக்கும். இனி அவனைத் தொந்தரவு செய்யமாட்டீர்கள். உங்களுடைய கணவர்கள் சரியான நேரத்திற்கு வீடு திரும்புவார்கள். அவர் வேறெங்கும் சுற்ற மாட்டார்! ஏனெனில் அவருக்கு உங்களைப் பார்த்தாலே ஆனந்தமாக உள்ளது. உங்கள் வீடுகள் கோவில்களாக மாறிவிடும். இப்போதுதான் உண்மையில் நீங்கள் முக்திக்கு தயாராகி விட்டீர்கள் எனக் கொள்ளலாம்.

***

**பக்தன்** ~ பகவான், மனமாற்றம் அடைவதற்கு அருள் தேவை என்று ஏன் கூறுகிறீர்கள்?

**ஸ்ரீகல்கி** ~ நான் கூறும் மனமாற்றம் என்பது, சில மனோதத்துவ நிபுணர்களோ, அல்லது ஆன்மீகவாதிகளோ கூறும். சாதாரண மாற்றம் அல்ல. **நான் கூறும் மனமாற்றம் ஒரு முழுமையான ஞானோதயம் (Enlightment) அல்லது ஜீவன் முக்தி.**

நான் கூறும் ஜீவன் முக்தியின் அர்த்தம் என்னவெனில், நீங்கள் எல்லாவற்றையும் பார்க்கும் விதம், தொடும் விதம் எல்லாமே மாறிவிடும். இது போல் நடப்பதற்கு, உங்களுடைய இடது பக்க மூளைப் பகுதியில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதற்கு என்னுடைய அருள் மிகவும் அவசியம். நீங்கள் 'ஜீவன் முக்தி' பெற்று விட்டீர்கள் என்றால் உங்களுடைய இந்திரியங்கள், மிக வித்தியாசமாக வேலை செய்யத் துவங்கும். தற்சமயம் உங்களுக்கு எவ்வாறு உள்ளது எனில், நீங்கள் நான் சொல்வதைக் கேட்கும் பொழுது நீங்கள் ஒரேசமயத்தில் என்னைப் பார்த்துக் கொண்டு இருப்பது போலவும், கேட்டுக்கொண்டும் இருப்பது போலவும் தோன்றுகிறது. இது ஒரு மாயை நீங்கள். கேட்டுக்கொண்டு இருக்கும் போது, நீங்கள் என்னைப் பார்ப்பதில்லை. நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது, கேட்பதில்லை. ஆனால் இவ்விரண்டும் மிக வேகமாக நடந்து கொண்டிருப்பதால், உங்களுக்கு இவ்விரண்டும் ஒருங்கே நடப்பதாகத் தோன்றுகிறது. இந்த உணர்வே 'நான்' (SELF) என்னும் உணர்வைத் தோற்றுவிக்கிறது.

இந்திரியங்களின் வேகம் குறையும் போது, நீங்கள் பார்க்கும்போது, 'பார்ப்பது' மாத்திரமும், கேட்கும்போது 'கேட்பது' மட்டும் நடக்கும். இது ஒரு மனிதனுக்கு கிடைத்தற்கரிய அனுபவமாக இருக்கும். இதுவே 'ஞானோதயம்' அல்லது 'முக்தி' எனப்படுவது. ஒவ்வொரு இந்திரிய நுகர்ச்சியும் ஆனந்தமாக இருக்கும்.

***தற்சமயம், நீங்கள் வாழவில்லை, நீங்கள் (ஜீவித்து) இருக்கிறீர்கள், அவ்வளவுதான்.*** உண்மையாக வாழ வேண்டுமானால், வாழ்வை அனுபவிக்க வேண்டுமானால், இந்திரியங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். அவைகள் யதார்த்தத்தை, உள்ளது உள்ளபடி அனுபவிக்க வேண்டும்.

அதாவது, இந்திரியங்களின் வேகம் குறைந்ததும். 'நான்' என்ற உணர்வு போய்விடும். 'நான்' என்ற உணர்வு போன பின்பு, மனதின் இடையூறு இருப்பதில்லை.

எண்ணங்களின் குறிக்கீடு இல்லை. அப்போது, நீங்கள் ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கும் பொழுது, தண்ணீரை அப்படியே அனுபவித்துக் குடிப்பீர்கள் உங்களுக்கு அந்த அனுபவம் எப்படி இருக்கும் என்று முன் நிர்ணயம் எதுவும் இருக்காது. நடக்கும்போது அனுபவித்து நடப்பீர்கள் இந்த அனுபவத்தைப் பற்றிய முன் அபிப்ராயம் எதுவும் இருக்காது. அனுபவிக்கப்போகும் அந்த ஆனந்த அனுபவமும் முன்னமேயே தெரியாது, இந்த ஆனந்தம் ஒரு 'காரணமில்லாத ஆனந்தம்'. இந்த ஆனந்தத்திற்கு காரணம் இல்லை. உங்களுக்கு தெரிந்த ஆனந்தம் எல்லாமே ஒரு காரணத்துடன் கூடியதுதான். உங்களிடம் பணம் இருந்தால், நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்கள். உங்கள் பெயர், அங்கீகாரம், கிடைத்தால், நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்கள். உங்களுக்கு அழகான மனைவி, புத்திசாலியான மகன் போன்றவை இருந்தால், அதனால் சந்தோஷமாக இருக்கிறீர்கள். ஆனால் நான் சொல்வது 'காரணமில்லாத ஆனந்தம்' (Causeless joy) எவ்விதமான போதனைகளாலோ, வேதங்களினாலோ, தனிப்பட்ட முறைகளாலோ, அல்லது மனோதத்துவங்களாலோ இந்த நிலையை அடைய முடியாது. இவையெல்லாம் உங்களுக்குத் தெளிவைக் கொடுக்கலாம். ஆனால் முக்தியை அளிக்க முடியாது.

அந்த 'ஆனந்த யக்ஞம்', உங்களை இதற்குத் தயார் செய்வதற்குத்தான் நடைபெறுகிறது. இந்தத் 'தயார்' செய்து கொள்வது என்பது என்ன? **நீங்கள் உங்கள் ஹ்ருதயத்தில் அன்பைக் கண்டு பிடிக்க வேண்டும். அதாவது , உறவு முறைகளைச் சீரபடுத்திக் கொள்ள வேண்டும்.** நீங்கள் எல்லோரும், வீடு திரும்பியது, உங்கள் உறவுமுறைகள் மீது கவனம் செலுத்துங்கள், உங்கள் பெற்றோர்கள் மனைவிமார்கள், கணவன்மார்கள், சிநேகிதர்கள், இவர்களைப் பற்றி எடை போடுவதை முதலில் நிறுத்துங்கள். ஏனெனில் அங்கு எடை போடுவதற்கு ஒன்றும் இல்லை. மற்றவரைக் குறை சொல்லுதல் மற்றும் குற்றம்

கண்டுபிடித்தல் எனும் பழக்கத்தை நிறுத்துங்கள். எவரும், எந்த ஒரு விஷயத்திற்கும் முழுமையாக பொறுப்பாளி ஆக முடியாது, ஏனெனில், ஒருவரின் நடத்தைக்கு கோடிக்கணக்கான காரணங்கள் உள்ளன. யார் மீது தவறு என்பதைப் புரிந்து கொள்ள உங்களுக்கு வழியே இல்லை. துரதிர்ஷ்டவசமாக, நீங்கள் புரிந்து கொண்டு விட்டதாக எண்ணிக் கொண்டு, மனிதர்களை மாற்ற முயற்சி செய்கிறீர்கள். இது நீங்கள் விளையாடிக்கொண்டிருக்கும் ஒரு விளையாட்டு! நீங்கள் மனிதர்களை 'அனுபவிக்க' வேண்டும். அவர்களை எந்த விதமான உள் நிர்ணயமும், குழப்பமும் இல்லாமல் அவர்கள் எவ்வாறு இருக்கின்றார்களோ, அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டும். இது போல் நடந்து விட்டால் போதும். உங்கள் ஹ்ருதயம் மலரத் தொடங்கும். மேலும், நீங்கள் முக்தி நிலையை அடைய, என்னுடைய அருளைப் பெறத் தயாராகி விடுவீர்கள், பிறகு, முழு உலகமும், வித்யாசமாய்த் தெரியும். இருப்பவை எல்லாம் ஆனந்தமயமாக மாறிவிடும். 'நான்' என்பது முழுமையாகக் கரைந்து விடும். 'நான்' என்பது தான் நீங்கள் சுமக்கும் சுமை (ஒரு கழுதையைப் போல). இந்தப் பெரிய சுமையை எப்போதும் சுமக்கும் உங்களைப் பார்க்கும் போதெல்லாம், உங்கள் துக்கத்தை, விரக்தியை, கோபத்தை, இன்னும் எல்லாவற்றையும் நான் அனுபவிக்கிறேன். நான் இங்கு சுற்றுலாவிற்காக (Picnic) வரவில்லை. ஒரு முக்கியமான வேலையைச் செய்ய இங்கு வந்துள்ளேன். உங்களைச் செய்ய இங்கு வந்துள்ளேன். உங்களைச் சுமையிலிருந்து விடுதலை செய்வதே என்னுடைய கனவாகும். நீங்கள் உங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டிய இன்னொன்று என்னவெனில்,'நீங்கள் உங்களுக்கு உண்மையாக இருக்க'(Self Integrity )தற்சமயம், உங்களுக்கு வாழ்க்கை எவ்வாறு அழகானது என்பதைப் பற்றிய 'ஐடியா' வே இல்லை. முக்தி பெற்ற பின், இந்த உலகம் எவ்வளவு அழகானது என்பதைப் பார்ப்பீர்கள்.

***

**பக்தன்** ~ பகவான், எங்களுடைய உறவு முறைகளில் அன்பைக் கண்டு பிடிக்க முயற்சி செய்கிறோம் - ஆனால்...

**ஸ்ரீகல்கி** ~ (சிரிக்கிறார்) - நீங்கள் கற்பனை செய்வது போல், அது அவ்வளவு கடினம் அல்ல. முக்கியமாக "உங்களுக்குள் அன்பு இல்லை என்னும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டால் 'அன்பு', தானாகப் பெருகத் துவங்கும். உங்களால் அன்பாக இருக்க'முயற்சி' செய்ய முடியாது. அது நடக்கவே நடக்காது. உங்களுக்கு அன்பைப் பற்றி என்ன தெரியும்? உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் பொறாமை, தன்னலம், கோபம், வெறுப்பு, அன்பின்மை. உங்கள் உண்மை நிலை இது தான். நீங்கள் ஒரு மகாத்மா காந்தியாகவோ, ஒரு சூர்தாஸராகவோ அல்லது ஒரு கபீர் தாஸராகவோ 'ஆக' முடியாது. நீங்கள் "நீங்களாகத்தான்" இருக்க முடியும், அல்லவா?

நீங்கள் இதை ஒப்புக் கொள்ள வேண்டும். இதைப் பற்றிய விழிப்புணர்ச்சி வேண்டும். அப்போது அற்புதம் நடக்கும். "**அதுவாக**" **ஆவதற்கு முயற்சி செய்வதால், அது நடக்கவே நடக்காது. நீங்கள் 'முயற்சி' செய்து கொண்டே இருக்கிறீர்கள், இல்லையா, ஆனால், ஒரு துளியும் மாற முடியவில்லை. நீங்கள் ஆரம்பத்தில் எங்கிருந்தீர்களோ, அங்கேயே நிற்கின்றீர்கள். அதனால், வேறெதைப் போலவும் மாறுவதற்கு முயற்சி செய்யாதீர்கள்.** நீங்கள் எவ்வாறு உள்ளீர்களோ, அவ்வாறே இருங்கள். உங்கள் ஹ்ருதயத்தில் இருக்கும் பயங்கரமான உண்மைகளைப் 'பாருங்கள்' உங்களைக் காண யாராவது வந்தால், நீங்கள் புன்னகைத்தவாறே அவரை வரவேற்கின்றீர்கள். ஆனால் உள்ளே உண்மை வேறாக உள்ளது. 'இப்போது' இவர் ஏன் வந்தார்?' **எனக் கேட்கிறது, ஆனால் நீங்கள் ஒரு அழகான முகமூடியை அணிந்து கொள்கிறீர்கள்.**

"உண்மை" என்பது, எங்கோ, பின்னால் தள்ளப்படுகிறது. நீங்கள் ஒவ்வொருவரும், ஒரு மிகத் தடியான முகமூடியை அணிந்து கொண்டுள்ளீர்கள். என் முன்னாலேயே, முகமூடி அணியும் பக்தர்களைக் கூட எனக்குத் தெரியும். நான் அதைப் பொருட்படுத்துவதில்லை. அந்த முகமூடியைக் கழற்றி, நான் ஏன் அவர்களுக்கு, அந்தப் பெரிய துன்பத்தைக் கொடுக்க வேண்டும்?

முகமூடி இருக்கிறது. அவ்வளவுதான். சமூகம், படிப்பு, நாகரீகம் இவைகளுக்காக, மற்றும் பிழைப்பதற்கு ஒரே வழி - நம்மால், ஒன்றும் செய்ய இயலாது. அதனால், முகமூடி வருகிறது, கணவனுக்கும் அவனுடைய முகமூடி, வளர ஆரம்பிக்க, இந்த முகமூடிகள் உறவு கொள்ள ஆரம்பிக்கின்றன. உண்மையான சொரூபங்கள் உள்ளே ஒளிந்து கொள்கின்றன. அந்த உறவில் சந்தோஷம் என்பது போய் விடுகிறது. இவ்வாறு தான், உங்கள் ஹ்ருதயங்கள் மூடப்படுகின்றன.

நாங்கள், சொல்வதெல்லாம், என்னவென்றால், உங்களுக்கு 'முகமூடி' உள்ளது என்பதை உணருங்கள். நீங்கள் விளையாடிக்கொண்டிருக்கும் விளையாடிக்கொண்டிருக்கும் விளையாட்டுகளை உணருங்கள். இதை மட்டும் செய்யுங்கள். அவ்வளவுதான். நான் உங்களை ஒரு சன்னியாசியாகவோ, முனிவராகவோ, ஆகச் சொல்லவில்லை, நீங்கள் மிகவும் பயங்கரமானவர்கள், இல்லையா? (சிரிக்கிறார்) "ஆம் நான் பயங்கரமானவன் தான்" எனும் அந்த விழிப்புணர்ச்சியை கட்டிப்பிடியுங்கள். உங்களை நேசியுங்கள். பெரிய அற்புதம் நிகழ்வதைப் பார்ப்பீர்கள். அன்பைக் கண்டு பிடித்து விடுவீர்கள்,"

***

**பக்தன்** ~ பகவான், அனைவரும் உங்களிடம் அன்பு செலுத்துகிறார்கள், ஆனால் ஒரு சில எதிர்பார்ப்புகளோடு ' பகவான் இவைகளை நமக்குத் தருவார்' என்று உண்மையான அன்பாக இது மாற வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்?

***ஸ்ரீ கல்கி*** ~ உங்களில் பெரும்பாலோர், என்னிடம் பிரார்த்தனை செய்கிறீர்கள், என்னை வேண்டுகிறீர்கள், என்னோடு வியாபாரம் செய்கிறீர்கள், பரவாயில்லை. என்னைப் பெருத்தவரை அதனால் ஒன்றுமில்லை. நான் யாரையும் எடை போடுவதில்லை. புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் வேறு என்ன செய்ய முடியும்? நிர்க்கதியாய் இருக்கிறீர்கள். உங்களுடைய மகனுக்கு கல்லூரியில் அட்மிஷன்

வேண்டும். உங்கள் மனைவியின் உடல் நிலை முன்னேற வேண்டும். அதனால் என்னிடம் பிரார்த்தனை செய்கிறீர்கள். நீங்கள், உண்மையாக என்னிடம் அன்பு செலுத்தவில்லை. ஆனால் உங்களுக்கு என் உதவி தேவையாக உள்ளது.. நான் இதைப்பொருட்படுத்தவில்லை. ஆனால், அது உண்மையான அன்பாக மாறவேண்டுமானால், நீங்கள் முதலில் உங்களை நேசிக்கத் துவங்க வேண்டும்.

உங்களில் பெரும்பாலோர், உங்களை நேசிப்பதில்லை, உங்கள் முகத்தை நேசிப்பதில்லை. உங்கள் சரீரம், உங்களிடம் உள்ள பல விஷயங்களை நீங்கள் நேசிப்பதில்லை. அடிக்கடி, உங்களை நீங்கள் வெறுக்கிறீர்கள். உங்களை நீங்களே கடிந்து கொள்கிறீர்கள். உங்களுக்குள்ளே போய்ப் பாருங்கள். இதைக் கண்டுபிடிப்பது பெரிய விஷயமில்லை. இது ஒரு சாதாரண உண்மை. 'அதாவது, நீங்கள் உங்களை நேசிப்பதில்லை'. உங்களை நீங்கள் நேசித்தால் மட்டுமே என்னையும் உங்களால் நேசிக்க முடியும்.

ஏசு கிருஸ்து கூறினார் 'உங்கள் பக்கத்து வீட்டுக் காரரையும். உங்களைப்போல் நேசியுங்கள்' என்று. நான் அதைவிடச் சுலபமாக 'உன்னை நேசி' (Love Thyself) என்று கூறுகின்றேன். நீங்கள் அவ்வாறு செய்தால், மற்றவை எல்லாம் தானாக நடக்கும்.

நீங்கள் வீடு திரும்பியதும், இந்தப் போதனைகளைப் பயன்படுத்தி, உங்களை நீங்களே நேசிக்க வேண்டும். பிரயாணம், இங்கு முடிவடைகிறது. இதுவே முதல் படியும், கடைசிப் படியுமாகும். மற்றவை எல்லாம் தானாக நடக்கும். இது ஒரு நுழைவுச் சீட்டு வாங்குவதைப் போல. நீங்கள் ஒரு விமானப் பயணச்சீட்டு வாங்குகிறீர்கள். பிறகு அதைப்பற்றிக் கவலைப்பட ஒன்றும் இல்லை, அல்லவா? விமானம் உங்களை, நீங்கள் நேசிக்கத் தொடங்கிவிட்டால், எல்லாம் அதோடு முடிந்து விட்டது. இதன் பிறகு, ஆன்மீக வளர்ச்சி எல்லாம், தானாக நடைபெறும்.

***

**பக்தன் :** கடவுள் ஒருவரே என்றால், நாம் ஹோமம் செய்யும் போது, பல கடவுள்களை அழைக்கிறோமோ, ஏன் பகவான்?

**ஸ்ரீகல்கி :** கடவுள் என்பவர் ஒருவர்தான். ஹோமத்தின் போது, நீங்கள் அழைப்பது கடவுள் அல்ல. நீங்கள் பல்வேறு தேவர்களை அழைக்கின்றீர்கள். நம்முடைய சந்நியாசிகள் ஹோமம் செய்யும் போது. என்ன நடக்கிறது என்பதை உங்களில் பெரும்பாலோரால் காண முடியும். நீங்கள் ஆஹுதிகள் கொடுக்கக் கொடுக்க, அவைகள் உயர் நிலையிலுள்ள தேவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதை நீங்கள் உங்கள் கண்களை திறந்தவாறே காண முடியும். அவர்கள் கடவுள் அல்ல, ஆனால் மிகச் சக்தி வாய்ந்த தேவர்கள். ஹோமம் செய்யும்போது. தீர்த்தத்தை வடகிழக்கில் விடும் போது, அக்னி தேவன் எழுந்தருளுகிறார். இது போன்று சில முறைகள் உள்ளன. உங்களுடைய மூன்றாம் கண் திறந்திருந்தால், இவைகள் நடப்பதை உங்களால் நிதர்சனமாக காணமுடியும்.

## விடுதலை

**மனத்திலிருந்து விடுதலை**

இது மனமே இல்லாத நிலையல்ல. மனம் என்பது, நம்பிக்கைகள், நோக்கங்கள், சிந்தனைகள், சமுதாயக் கட்டுப்பாடுகள், பாதிப்புகள், பிள்ளைப்பிராய முடிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த மனதே நமது விருப்புகளுக்கு உட்படாது; நமது வாழ்வைக் கட்டுப் படுத்துகிறது; ஆகவே நாம் முடிவையும் எடுக்க முடியவில்லை; இந்த மனதின் வட்டத்திற்கு வெளியில் எதையும் சிந்திக்க முடியவில்லை. ஆகவே, நாம் நமது சொந்தச் சிறையிலேயே அடைப்பட்டு விடுகிறோம். மனதிலிருந்து விடுதலை என்றால், மேலே கூறப்பட்டவைகளின் கட்டுப்பாட்டில் இனியும் நாம் இல்லை; மாறாக நாமே அவற்றைக் கட்டுப் படுத்துகிறோம். இந்த விடுதலை மிகப்பெரியதொரு சுதந்திரத்திற்கு இட்டுச் செல்லும். எடுத்துக்காட்டாக, நமது

நண்பர்களிடத்தில், உறவினரிடத்தில், மனைவியிடத்தில் நாம் ஏன் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறோம் என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நமது நடத்தை நமது கட்டுப்பாட்டிற்குள் இல்லை. நாம் இயலாதநிலையில் உள்ளோம். நமது இத்தகைய நடத்தைகளைப் பற்றிய நமது இயலாத உணர்விற்கான பலவேறு நிகழ்ச்சிகள் உள்ளன. இவையாவும் நமத கட்டுப்பாடற்ற மனதினால் ஏற்றபட்டவையே. மனதின் பிடியிலிருந்து நீங்கள் விடுதலையடைந்த உடனேயே உங்களது மகிழ்ச்சி வேறு விதமானதொரு பண்பைக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

**ஞானத்திலிருந்து விடுதலை**

ஞானத்திலிருந்து விடுதலை என்பது, சிந்தனையளவில் மட்டுமே உள்ள, அனுபவ பூர்வமாகக் கிடைக்காத ஞானத்திலிருந்து வெளிவருதல் என்பதாகும். குவிந்துள்ள ஞானத்தின் அனுபவமே நம்மிடம் இல்லை. இது நமது சொந்த அனுபவமாக ஆகும்வரை, இத்தகைய ஞானத்தின் குவியல் என்பது நமது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாகவே ஆகிவிடும். ஆகவே, அனைத்த கற்றலுமே, கல்லாதது ஆகிவிடுகின்றது. நாம் ஞானத்திலேயே அடைபட்டுவிடக்கூடாது; ஆனால் அதனை அனுபவிப்பது நோக்கியே நமது குறிக்கோள் இருக்க வேண்டும். இதுவே,' உண்மையான கண்டுபிடித்தல்' ஆகும். நமது ஆன்மீகப் பயணத்திற்கு, நமக்குத் தேவை: பகவானின் அருள் நமக்குத் துணை செய்யத் திறந்த மனத்துடன் இருப்பதே. நமது ஞானம் அனுபவமாக ஆகாவிட்டால், அது நமது அகம்பாவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கு உரமாக அமைந்தது, நமது ஆன்மீக வளர்ச்சியைத் தாமதப்படுத்தும். **ஒரு நல்ல ஞானியென்பவர், அனைத்து மக்களைக் காட்டிலும் மிகவும் பணிவானவராக இருப்பாவர்.**

**கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை**

நமது ஆன்ம - உடல் - மன வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பலவேறு கட்டுப்பாடுகளிலிருந்தும் கிடைக்கும் விடுதலையகும். இந்த விடுதலை, நமது மனதின் நிபந்தனைகளினால் கட்டுப்படாத உலகக் குடிமகனாகிவிடுகின்ற ஒரு மாபெரும் எல்லைப்

பரம்பைத் தருகிறது. இது, நாம் ஒரு குடும்பத்தைமட்டும் சார்ந்துள்ளவர்கள் அல்ல; இந்த மனிதகுலக்குடும்பத்திற்கே உரியவர்கள் என்று நம்மை எண்ண வைக்கும். இந்த விடுதலை, இதயத்தின் மலர்ச்சிக்கு உறுதுணையாகவும் ஆகிறது.

**சமுதாயத்திலிருந்து விடுதலை**

நாம் அனைவருமே நிச்சயமாக நம்மை மகிழ்ச்சியடையச் செய்யும் வாழ்க்கையை நடத்த விரும்புகிறோம்; அதே சமயம், இது நிச்சயமாக மற்றவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்யும். **(மகிழ்ச்சியான மனிதன், மற்றவர்களை மகிழ்ச்சியடையச் செய்கிறான்.)** நாம் அனைவரும் சாப்பிட விரும்புகிறோம்; ஏனெனில் நாம் சாப்பிட விரும்புகின்றோம். நாம் சிரிக்க விரும்புகிறோம்; ஏனெனில் இது நமக்கு இயல்பாக வருகிறது. நாம் நன்றாக உடை அணிய விரும்புகிறோம்; ஏனெனில் நாம் நன்றாகத் தோற்றமளிக்க எண்ணுகிறோம். நம்மைப் பிறர் பாராட்டுவார்கள் என்பதற்காக அல்ல. நாம் பிறருக்கு உதவ விரும்புகிறோம். ஏனெனில் நாம் நன்றாகத் தோற்றமளிக்க எண்ணுகிறோம். நம்மைப் பிறர் பாராட்டுவார்கள் என்பதற்காக அல்ல. நாம் பிறருக்கு உதவ விரும்புகிறோம். ஏனென்றால் இது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆக, நாம் செய்யும் அனைத்துச் செயல்களும் நமது மகிழ்ச்சியாகவே செய்யப்படுகின்றன. இந்தச் சமுதாயத்தின் அனைத்து நிபந்தனைகளிலிருந்தும் வெளிவராவிட்டால் (சமுதாயத்திட மிருந்தே விடுதலை அல்ல), நாம் அவற்றிற்கு அடிமைகளாகிவிடுவோம்; இதனை நம்மால் வெளிக்காட்டிக் கொள்ள முடிவதில்லை. நமது வாழ்வு, நமது கொள்கைகளை விட்டுக் கொடுத்துப் போகிற ஒரு போலியான வாழ்வாகவே இருக்கும் சமுதாய நிபந்தனைகளிலிருந்து வெளிப்பட்டுவிட்டால், ஒரு சிறந்த உலகத்தினை உருவாக்க நமது இதயம் தங்குதடையின்றி தன்னை வெளிப்படுத்த இயலும். இன்று, நல்ல காரியங்களைச் செய்யக்கூடி பயப்படுகிறோம்; ஏனென்றால், சமுதாயத்தில் **நமது பெயருக்குப் பாதகம் வந்து விடுமோ என்ற பயத்தினால்தான். இத்தகையதொரு வாழ்க்கை ஒரு முடிவுக்கு வரும். நமக்குச் சரியானதென்று நாம் எண்ணுவதை நாம் செய்தாக வேண்டும்.**

**வேலைச் சுமையிலிருந்து விடுதலை**

வேலையிலிருந்து விடுதலை என்பது வேலையிலிருந்தே விடுதலை என்பதல்ல. இது வேலைச் சுமையிலிருந்து விடுதலையாகும். நமக்கு விடுதலை கிடைத்துவிட்டால், நமக்குச் சரியானதொரு மன அமைப்பு கிடைத்துவிடும். இந்த மனம், அனைத்துப் போராட்டங்கள், விருப்புவெறுப்புகள், கட்டுப்பாடுகள் போன்ற பலவற்றிலிருந்தும் தனிப்பட்டு, **விருப்பத்துடன் வேலையைச் செய்வதற்கு வேண்டிய பிராண சக்தியை பெற்று விடுவோம்.** இந்த விடுதலைக்குப் பிறகு, நாம் செய்யும் எச்செயலிலும் மகிழ்ச்சியே இருக்கும், எடுத்துக்காட்டாக, நாம் எந்தவொரு வேலையைப் பற்றிச் சிந்தித்தாலும், அந்த வேலையைச் செய்வதற்கு முன்பே, அந்த வேலையின் சுமையை நாம் பெறுவதில்லை. ஆகவே, நாம் எதனைச் செய்தாலும், நாம் முழுமனதுடன் ஈடுபடுவோம்; எனவே அது முழுமை கொண்டிருக்கும்.

**அகம்பாவத்திலிருந்து விடுதலை**

அகம்பாவத்திலிருந்து நாம் விடுதலை அடைந்த நிலையே இது ஆகும். அகம்பாவம் ஆறு குணங்களை உடையது. அவையாவன: **நானே சரி, நீதான் தவறு, ஆதிக்கம் செய்தல்; ஆதிக்கப்படுத்தப்படுவதற்கு மறுத்தல், மறைத்தல், பிழைப்பு. இத்தகைய குணங்கள் இல்லாதிருப்பதே அகம்பாவத்திலிருந்து விடுதலையாகும்; இந்த குணங்கள் எல்லா உறவு முறைகளிலும் குறுக்கிட்டுக் கெடுத்துவிடும். இத்தகைய குணங்களே கர்மாவின் தொடர்ச்சிக்குப் பொறுப்பாகும். நாம் அகங்காரத்தோடு இருந்தால், வாழ்க்கையின் பாடங்களைப் படிக்கிற நிலையில் நமது மனது இருக்காது.**

**அகம்பாவத்திலிருந்து விடுதலையே நமது ஆன்மீகப் பயணத்தின் முதல்படியாகும். இத்தகைய விடுதலைக்குப்பின் வெளித்தோன்றும் பணிவும், நன்றியும், சரணாகதியும் இங்கே அடிப்படை குணங்களாக இருக்கும்.**

## அவதாரம் பக்தபோதனாவின் கதை

ஸ்ரீநாத்தும் போதனாவும் மிகவும் நெருங்கிய உறவினர்கள் ஸ்ரீநாத் அரசவைக் கவிஞர் மிகவும் பெரிய செல்வந்தர். போதனாவோ பக்தகவி கோவிலில் பாடுவர் மிகவும் ஏழை இதனால் ஸ்ரீநாத் போதனாவைப் பார்த்து அடிக்கடி கேலி செய்வார். மேலும் அவர் நான் அரசரைப் புகழ்ந்து செல்வந்தன் ஆகி விட்டேன் நீயோ பகவானைப்பாடி ஏழையாக இருக்கின்றாய். நீ பகவான் விட்டு அரசனிடம் வந்துவிடு ''என்று கூறுவார்.

மேலும் ஒரு நாள் ஸ்ரீநாத் போதனாவைப்பார்த்து ''உன் பகவானுக்கு சக்தி இல்லையா? அவர் மேலோகத்திலிருந்தே பக்தர்களைக் காப்பற்றக் கூடாதா? ஏன் பூலோகத்திற்கு இறங்கி வருகின்றார் மற்ற உயர் ஆன்மாக்களை அனுப்பி வைக்கக் கூடாதா? அவரே தான் வரவேண்டுமா? அப்படி அவரிடம் சக்தி இருந்தால் அவரே அனைத்து புகழையும் பெறவேண்டும் என்ற சுயநலத்துடன் இருக்கின்றாரா? எனவே நீ சொல்லும் கடவுள் பொய் அவர் இல்லை முடிந்தால் நீ எனக்கு நிரூபித்து காட்டு'' என்று வாக்குவாதம் செய்தார்.

அதற்குப் பிறகு மறுநாள் போதனா ஸ்ரீநாத் வீட்டிற்குசென்று அவர் வீட்டின் கிணற்றில் பெரிய கல்லை தூக்கி போட்டார். அச்சமயம் ஸ்ரீநாத் போதனாவிடம் பதட்டத்துடன் என்ன ஆயிற்று என்று கேட்டார். அப்போது போதனா ''உன் குழந்தை விளையாடும் போது கிணற்றில் தவறி விழுந்த விட்டது என்று கூறினார். உடனே ஸ்ரீ நாத் கிணற்றில் குதித்து குழந்தையை தேடினார். ஆனால் குழந்தையை கண்டு பிடிக்க முடியவில்லை.

அதைப்பார்த்து கொண்டிருந்த போதனா ஸ்ரீநாத்தைப் பார்த்து 'நண்பா' கிணற்றில் குழந்தை விழவில்லை. நான் பொய் சொன்னேன். உன் குழந்தை கிணற்றில் விழுந்துவிட்டது என்ற

செய்தியைக் கேட்ட அடுத்த வினாடியே நீ கிணற்றில் குதித்து விட்டாய் உனக்கு பல சேவகர்கள் இருக்கும் போது நீ ஏன் குதித்தாய்? காரணம் என்ன? என் குழந்தைக்கு ஆபத்து என்றால் கண் பார்த்துக்கொண்டா இருப்பேன்?'' என்று கேட்டார். அதுபோன்று தான் கருணைகடலான என் பகவானும் இப்பூமியில் இருக்கும் அனைத்து உயிர்களையும் நேசிக்கின்றார்.

தன் படைப்பிற்கு துயரம் ஏற்படும் போது நேரடியாக தோன்றி காப்பாற்றுகின்றார் - என்று கூறினார்.

இதைக் கேட்ட ஸ்ரீ நாத்திற்கு பகவானின் கருணை புரிந்தது. பகவானின் மேல் அன்பு தோன்றியது. அவர் அன்று முதல் மனிதனின் வாழ்வை ஆனந்த மயமாக்கும் பகவானின் புகழ்பாட ஆரம்பித்தார்.

அதே போன்று தான் அம்மாபகவானும் நம்முடைய குரல் கேட்டு நம்மைக் காப்பாற்ற இப்பூமியில் தோன்றியுள்ளனர். அம்மாபகவான் புதிய கடவுள் அல்ல. நாம் இத்தனை வருடம் பூஜித்து ஆராதனை செய்து வந்த அதே கடவுள் தான் நம் பிரார்த்தனையைக் கேட்டு காப்பாற்ற வந்திருக்கிறார்.

கடவுள் ஒருவரே அவருக்கு பல ரூபங்கள் உண்டு பல பெயர்கள் உண்டு. பலவிதமான வழிபாட்டு முறைகள் உண்டு நாம் எதை விரும்புகிறோமோ அதை பின்பற்றலாம். கடவுளை வழிபடுவது எந்த நேரடி அனுபவமும் இல்லாததால் ஒரு உயிரற்ற சம்பிரதாயம் ஆகிவிட்டது. நம்வாழ்க்கை மாற கடவுளின் அருள் அவசியம் என்று உணர்ந்தால் அந்த அருள் நம்மை வந்து சேரும்

நாமும் நம் வாழ்க்கையில் மாற்றம் வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை செய்வோம்.

## பிரார்த்தனை

எந்தப்பூஜையிலும் பிரார்த்தனை சமயம் மிகமுக்கிய மான பகுதியாகும். அம்மாபகவான் அருளால் உங்கள் ஆசைகள் நிறைவேறவும் பிரச்சனைகளிற்கு தீர்வு காணவும் பிரார்த்தனை செய்யவும். பிரார்த்தனை சமயத்தின் போது நான்கு முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தும் போது நம் வாழ்க்கையில் அற்புதம் அல்லது மாற்றம் நிகழ்வதைக் காணலாம்.

(பிரார்த்தனையால் நடந்த அற்புதம் அனுபவமா அனுபவித்தவர்கள் தங்கள் அனுபவத்தைக் கூறலாம்)

(1) **தெளிவு** - நீங்கள் எதை நாடுகின்றீர்களோ அதில் தெளிவு வேண்டும். தெளிவு என்பது ஹிருதேயம் சம்பந்தப்பட்டது. மனது சம்பந்தப்பட்டது அல்ல. யோசித்தால் தெளிவு பிறக்காது. நிறைவேறாத ஆசைகள் அல்லது தீர்வுகாணமுடியாத பிரச்சனைகள் நம்முள் புதைந்து கிடக்கலாம். அவைகளுள் இந்தக் குறிப்பிட்டஓன்று நடந்தால் உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று ஹிருதயம் உணரும் போது அது நிறைவேறும். அந்த ஓரு விசயத்தைப்பற்றி சிந்திக்கும் போது உங்கள் மனதில் ஏதோ ஓரு தடுமாற்றம், அல்லது இதற்கு நான் தகுதியானவனா என்று மனம் குழம்பியும் ஒரு சலிப்பு நிலையும் உருவானால் அது நிறைவேறுவது கடினம்

இப்போது நீங்கள் பிரார்த்தனை செய்யும் போது உங்கள் எண்ணங்கள் மட்டும் போதாது. அல்லது நீங்கள் பேசும் வார்த்தைகள் மட்டும் போதாது அல்லது நீங்கள் உருவாகப்படுத்துதல் மட்டும் போதாது அதில் உங்கள் உணர்வு கலந்த பாவம் இருக்கவேண்டும். பாவத்துடன் கூடிய பிரார்த்தனை உடன் நிறைவேறும் **''நான் அதற்கு முழுமையாகத் தகுதியானவன்'' என்ற நம்பிக்கை வரும்போது ''பாவம்'' இயல்பாகவே வரும்.**

நீங்கள் மானசீகப் படம் போட்டுப் பார்க்கலாம் அல்லது உங்கள் தேவைகள் நிறைவேறுவதை இங்கேயே இப்பொழுதே நிறைவேறுவதாக உருவகப்படுத்திப் பார்க்கவேண்டும். உங்கள் எண்ணம் செயல்வடிவமாவதை உணர்வோடு பார்க்கவேண்டும்.

அந்தவிசயம் செயல்வடிவமாகும் போது **உங்கள் ஹிருதயத்தில் எவ்வளவு ஆனந்தத்தை உணர்கிறீர்களோ அதையும் உணர்வு பூர்வமாக அனுபவிக்கவேண்டும்.**

**பந்தம் :- அம்மாபகவானிடம் பந்தத்துடன் (பயமில்லாத பக்தி) உணர்வுப் பூர்வமாகத் தொடர்பு வேண்டும். எவ்வளவுமுடியுமோ அவ்வளவு நெருக்கம் அம்மாபகவானிடம் உணரவேண்டும். தந்தையாகவே,தாயாகவோ, நண்பனாகவோ, குருவாகவோ அல்லது நம் இதயம் உணர்த்தும் பாவத்தில் இருக்கவேண்டும்.**

அம்மாபகவானுடனான பந்தமானது நான்கு நிலைகளைக் கொண்டது.

(i) **நம்பிக்கையிலிருந்து வரும்பந்தம்**

உங்களைச் சுற்றியுள்ளோருடைய வாழ்வில் அம்மாபகவான் அருளால் நிகழும் அற்புதங்களைப் பற்றிக் கேட்பதன் மூலமாகவும், பார்ப்பதன் மூலமாகவும் அம்மாபகவான் மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டு உங்களுடைய பிரச்சனைகளிற்காகப் பிரார்த்தணை செய்வீர்கள், இது நம்பிக்கையால் ஏற்படும் பந்தம்.

(ii) **திடநம்பிக்கையினால் ஏற்பட்டபந்தம்.** உங்களுடைய பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து உங்கள் வாழ்க்கையில் அம்மாபகவான் செய்யும் அற்புதத்தால், உங்களுக்கு அம்மாபகவானிடத்தில் உள்ள நம்பிக்கை திடநம்பிக்கையாக மாறுகிறது. இந்நிலையில் நீங்கள் அம்மாபகவானிடத்தில் ஒரு நெருக்கம் ஏற்பட்டிருப்பதை உணரலாம்.

(iii) **கண்டுபிடிப்பினால் ஏற்படும் பந்தம் :-** உங்களுடைய வாழ்க்கையிலும் பிறருடைய வாழ்க்கையிலும் ஏற்படும் அற்புதங்களுக்கு தாங்கள் ஒரு சாட்சியாகத்திகழும் போது நீங்கள் உங்கள் அம்மாபகவானைக் கண்டுபிடிக்க ஆரம்பிப்பீர்கள் அது கடவுளாகவோ - விண்ணுலகத் தந்தையாகவோ, தெய்வீகம் நிரம்பிய தாயாகவே அல்லது உன்னதமான ஒரு நண்பனாகவோ இருக்கலாம். இந்நிலையில் தாங்கள் அம்மாபகவானுடன் மிக நெருக்கமாக உள்ளீர்கள் என்பதை உணரமுடியும்.

(iv) **முக்தி அடைந்த பிறகு அல்லது கடவுளை உணர்ந்த பிறகு ஏற்படும் பந்தம் :-** உங்களின் சைதன்ய நிலை உயர்ந்து சம்பூரண ஜீவன் முக்தி அடைந்தவுடன் அம்மாபகவானின் பந்தமே முடிவானது என்பதை உணருவோம். மேலும் அவர்களே நம் வாழ்வை வழிநடத்திச் செல்கிறார்கள் என்பதை உணரும்போது நம்மை பரிபூரணமாக ஆக்கிரமித்து ''**ஸவர்ண கவசம்**'' அளிக்கிறார்கள்

நீங்கள் எந்த நிலையில் உள்ளீர்கள் என்பதை உணர்ந்த பிறகு அடுத்த நிலைகளுக்கு அதாவது **அவர்களுடன் ஒரு புனிதபந்தம் ஏற்படும் நிலைக்கு எடுத்து செல்லப் பிரார்த்தனை செய்ய வேண்டும் அம்மாபகவானுடன் ஏற்படும் பந்தமே வாழ்க்கையின் முடிவான குறிக்கோளாகும்.**

**இயலாத நிலை:-**

சிறு வயது முதல் நம் வாழ்க்கையை ஆராயும் போது. நாம் சாதிக்க எடுத்த முயற்சிகள் அனைத்துமே வெற்றியாக முடியவில்லை என்று தெளிவாகக் காணலாம். நம் முயற்சிகளுக்கு தெய்வீக அருளும், அனுக்ரஹமும் இருந்தாலே வெற்றி கட்டாயம் கிட்டும் என்பது தெளிவாக விளங்கும்.

(அருள் - அசாத்தியம் என்று நினைத்ததை சாத்தியமாக்கும் அனுக்கிரஹம்:- முடியாது என்றிருந்ததை முடித்துக்கொடுக்கும்)

நாம் நம் முயற்சியால் எதுவும் செய்ய முடியாது. கடவுளின் அருளும், அனுக்கிரஹமும் இருந்தால் தான் முடியும் என்ற சத்தியத்தை உணரும்போது, இயலாத நிலைக்குச் செல்கிறோம்.

''**நீ இயலாத நிலைக்குச் சென்று என் அருளை நாடும் பொழுது நான் உனக்கு அங்கேயே அப்பொழுதே உதவி புரிவேன்**'' என்பது பகவான் வாக்கு - பொதுவாக மனிதன் ''இயலாதநிலைக்குச் செல்லாமல் போராட்ட நிலைக்குச் செல்கிறான். வெளி வாழ்க்கையில் முயற்சிசெய்து உள்வாழ்க்கையில் அருளை நாடுவதே ''**இயலாத நிலை**'' - வெளி வாழ்க்கையில் முயற்சி செய்து கொண்டு உள்வாழ்க்கையில் தடுமாற்றத்துடன் இருப்பதே **போராட்டநிலை.**

**நன்றி :-** **நன்றி என்பது ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்படுத்தும் மிக உயர்ந்த வெளிப்பாடு அது சைதன்ய நிலையில் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது**" என்று பகவான் கூறுகின்றார். இதுவரையில் நம்வாழ்க்கையில் நடந்தவற்றிற்கு நீங்கள் நன்றி உணர்வு கொண்டு அருளை நாடுங்கள். அந்த அருளை நாடுவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? எவ்வளவுக்கெவ்வளவு ***சத்கர்மா*** (நல்ல செயல்கள்) செய்யமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சேவையும் புண்ணியமும் செய்யுங்கள் அதுவே இப்பிரபஞ்சத்தின் காயங்களைக் காப்பற்றக்கூடிய செயற்பாடாகும், - **ஸ்ரீபகவான்**

**சேவை :-** ''மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது நாம் என்றோ அறிந்த விசயம். ஒவ்வொரு கடவுளர்க்கும் ஓவ்வொரு பிரசாதம் பிடிக்கும் - பிள்ளையாருக்கு -மோதகம், முருகனுக்கு - காவடி, ஹனுமானுக்கு - நெய் உருண்டை, வைரவரிற்கு வடைமாலை - இப்படிமாக நாம் அறிந்தவரை எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் நம் அன்பு அம்மாபகவானிற்கு பிடித்த பிரசாதம் துயரத்தில் வாழும் மக்களை அத்துயரத்தில் இருந்து வெளியேறுவதற்கு எம்மால் எவ்வளவு தூரம் உதவமுடியுமோ அந்த அளவிற்கு நீ செய்யும் சேவையே எங்களிற்கு பிடித்தமான பிரசாதம் என்பர்.

பக்தனை பகவான் பாதத்தில் வைத்திருப்பார், சேவகனை தன் இதயத்திலேயே சுமப்பார் - என்பது பூஜ்ஜ ஸ்ரீ விமலகீர்த்தி ஆச்சார்ஜி அவர்கள் 2003ம் ஆண்டு நேமத்தில் ஆற்றிய உரையில் ஒரு சிறுபகுதி ஆகும்.

எனவே நாமும் அத்தகைய சேவை செய்வோம் என பகவானுடன் **ஒப்பந்தப் பிரார்த்தனை** செய்துகொள்வோம்.

## சேவை செய்பவர்கள் கொடுத்து

உண்மையிலேயே நாம் முக்தியடைய விழைய வேண்டுமா? நான் எந்தப் பக்கம் போனாலும் கடைசியில் கடலில் போய்ச் சேர்ந்து விடுவேன்" என அந்த நதி, முக்தி நிலையை அடையத் தீவிரமாக இருந்தவரைப் பார்த்துக்கேட்டது.

நாமெல்லாம் எப்படியும் கடலை அடையும் நதியைப் போன்றவர்களா? இல்லையென்றால் எப்படிக் கரை சேர்வது?

பகவானை நேரில் தரிசித்த ஒரு தீவிர பக்தர்,நாங்கள் எதற்காக புண்ணியங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்? அது இல்லாமலேயே எங்களது பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதா? உங்கள் அருள் மூலமாக மட்டும்? பகவான் மிகுந்த சிரத்தையுடன் அவரைப் பார்த்து ''எனது அருள் எப்பொழுதுமே உங்களுக்கு இருக்கின்றது. ஆனால் அதனுடன் நிங்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மனித இனமே நிறைய கெட்ட கர்மாவை சேர்த்துக் கொண்டுவிட்டது. அதனால் நீங்கள் நிறைய புண்ணியம் சேர்த்துக்கொண்டால் மட்டுமே எனது அருளுடன் உங்களால் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஒரு மனிதனின் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளுக்குப் பல காரணங்கள் உண்டு. அந்த நிகழ்ச்சிகள் நமது கட்டுப்பாட்டில் இல்லை. உதாரணத்திற்கு, ஒரு இளைஞனுக்கு ஒரு வேலையில் சேர்வதற்கான எல்லாத் தகுதியும் இருக்கிறது; கல்வித்தகுதி, போதுமான அனுபவம், மேலும் பலமான சிபாரிசு... ஆனாலும் அவனுக்கு வெற்றி கிட்டவில்லை. எங்கே தவறு நேர்ந்தது? நேர்காணலில் அவனுக்கு ஏற்பட்ட தோல்வி க்கு பல காரணங்கள் இருக்க முடியும் நேர்காணல் செய்தவருக்கு கடுமையான வயிற்றுவலி இருந்திருக்கலாம் அல்லது இவன் அளித்த பதில்களை அவர் காதில் வாங்காமல் இருந்திருக்கலாம். அல்லது இவனது முகம் அவரது எதிரியை நினைவுபடுத்தி இருக்கலாம். அல்லது இவன் அளித்த பதில்களை அவர் காதில் வாங்காமல் இருந்திருக்கலாம்.

மனித இனமே ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு உயிரினம். ஒருவரது வாழ்வில் ஏற்படும் நிகழ்ச்சி ஏதோ ஒரு வகையில் மற்றவர்களை பாதிக்கிறது. **இன்றைய தினம் இந்த இனத்தை இணைப்பது அறியாமையே.**

மது குடியைக் கெடுக்கும் என்று மிக நன்றாக உணர்ந்தபோதும் ஒரு குடிகாரன் குடியை நிறுத்துவதில்லை. தங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகள் குழந்தைகளை பாதிக்கும் என்பதை பெற்றோர் நன்கு உணர்ந்திருந்தாலும் அவர்கள் தங்களுக்குள் சண்டைபோடுவதைத் தவிர்ப்பதில்லை. இந்த உலகத்தில் கடும் போட்டி நிலவுகிறது என்று உணரும் **பல இளைஞர்கள் கடுமையாக உழைப்பதற்குப் பதிலாக சமுதாயத்தின் சீரழிவிற்கு பலியாகிறார்கள்**. இன்று நாம் அனைவருமே அறியாமை என்னும் இந்தச் சிலந்தி வலையில் சிக்கியுள்ளோம்.

எந்தநேரமும் வானம் இடிந்து தன் தலையில் விழலாம் என்று ஒரு சிறுவன் பயந்து கொண்டிருந்தான். அதனால் அவன் எப்பொழுதும் வீட்டிற்குள்ளே அடைபட்டு கிடந்தான். ஒரு நாள் வீட்டிலிருப்பதும் ஆபத்து என்று பயப்பட ஆரம்பித்தான். அதனால் வீட்டை விட்டு ஓடி ஒரு கானகத்தை அடைந்தான். அங்குள்ள அடர்த்தியான மரங்கள் தன்னை காப்பாற்றும் என்று நம்பினான். அந்த கானகத்தில் ஒரு புத்தபிக்குவை சந்தித்தான். தூண்களே இல்லாத அந்த வானம் எந்த நேரத்திலும் நம்மீது விழலாம் அதைப் பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்படவில்லையா? என்று வினவினான்? இல்லை என்று அந்த பிக்கு பதில் அளித்தார். எப்படி இந்த வானம் விழாமல் இருக்கும் என்று வினவிய அந்தச் சிறுவனிடம் நீ சென்று அந்த ஊரில் பிச்சை எடுத்து வா ஆனால் ஒரு நிபந்தனை அதிகார தோரனையில்தான் பிச்சை கேட்க வேண்டும் என்று சொல்லி அந்த சிறுவனை அனுப்பி வைத்தார். அந்த சிறுவனும் வீடு வீடாக சென்று அதிகார பிச்சை கேட்டான். எல்லோரும் அவனை விரட்டியடித்தார்கள் விசித்திரமாக ஒரே ஒரு வீட்டில் இருந்த பெண்மணி மட்டும் குழந்தைக்கு உணவளித்துக் கொண்டு இருந்ததால் தாமதமாகிவிட்டது. மன்னித்துக்கொள்ளுங்கள் என்று பணிந்து கூறியவாறு

உணவளித்தாள். அந்த சிறுவன் காட்டிற்குத் திரும்பி சென்று பிக்குவிடம் நடந்ததை கூறினான். தம்பி இது போன்ற பெண்களால் தான் வானம் இடிந்து விழாமல் இருக்கிறது. இவர்கள்தான் கண்ணுக்கு தெரியாத தூண்கள். அந்த சிறுவன் சந்தோஷமாக,மன அமைதியுடன் புத்த பிக்குவிற்கு நன்றி சொல்லிவிட்டு வீடு திரும்பினான் இந்த உலகத்திற்கு இது போன்ற பெண்மணிகள் தேவைப்படுகிறார்கள். இன்றைய தினம் இந்த முழுமையான **மனித சைதன்யம் உடலாலும், உள்ளத்தாலும், உணர்வுகளாலும் துயரத்தை அனுபவித்து வருகிறது இதற்கு முன்பு எப்பொழுதுமே மனிதகுலம் இது போன்றதொரு துயரத்தை அனுபவித்ததில்லை இன்றைய மனிதனின் தேவை எல்லாம் விடுதலை எல்லா விதமான துயரங்களிலிருந்து விடுதலை ~ இந்த விடுதலையானது முக்தி நிலையில் மட்டுமே அடையப்பெறும்.**

ஸ்ரீஅம்மா, ஸ்ரீபகவான் நோக்கமானது இந்த உலகத்தில் ஞானிகள் மற்றும் அறிஞர்கள் போன்ற மக்களை கொண்ட புதியதொரு உலகத்தை உருவாக்குவதே ஆகும். காரணமற்ற அன்பு மற்றும் எல்லையில்லா ஆனந்த நிலையில்இருக்க விரும்பும் ஒரு 64000 பேர் இருந்தால் மனித குலத்தின் மொத்த சைதன்யத்தையும் பகவான் இந்நிலைக்கு மாற்றிவிடுவார். யாரெல்லாம் துயரமற்ற ஒரு புதியதோர் உலகை உருவாக்க முக்தியை நாடி வருகிறார்களோ அவர்கள் எல்லா பகவானின் அருளுடன் சுலபமாக தொடர்பு கொள்வார்கள்

**"சேவை செய்யும்பொழுது உனக்குத்தகுதி பிறக்கிறது மற்றவர்களுக்கு சேவை செய்யும்பொழுது ஆனந்தம் பிறக்கின்றது உனக்காக நீ உழைக்கும் பொழுது இன்பம் பிறக்கிறது"**

**இந்தப் படைப்பின் அஸ்திவாரம் தியாகம். உனது பிரச்சனைகள் மறையவேண்டுமென்றால் நீ மற்றவர்களுக்கு உதவி செய் புண்ணியம் சேரும்.**

**ஸ்ரீ பகவான்**

## சத்கர்மா

வெகுகாலத்திற்கு முன்பு கோசல நாட்டில் உத்தவா, சங்கா என்ற இரு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் வீர சாகத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருந்ததால், இருவரும் வேட்டையாடி வர முடிவு செய்தனர். வேட்டையாடச் சென்றவர்கள் மான் ஒன்றினை அங்கே பார்த்து அதை வேட்டையாடத் துரத்திச் சென்றனர். காட்டின் உட்பகுதிக்குள் சென்றதால் திரும்பிவரும் வழி அவர்களுக்குத் தெரியவில்லை. வழியைத் தேடி அலையும்பேது அங்கே ஒரு சந்நியாசியின் ஆசிரமம் இருப்பதைக் கண்டனர். அச்சந்நியாசி வருங்காலத்தைப் பற்றி முன் கூட்டியே சொல்லக் கூடிய பிரசித்தி பெற்றவர் என்பதையறிந்து, அவரைத் தங்களுடைய எதிர் காலத்தைப் பற்றிச் சொல்லுமாறு கேட்டனர். முதலில் சொல்ல விருப்பமில்லாத நிலையில், அவர்களின் வற்புறுத்தலால் சந்நியாசி தன் கண்களை மூடிச் சிறிது யோசித்தார். பிறகு பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிறகு சங்கலா கோசல நாட்டு மன்னன் ஆவான் என்றும், ஒரு வருடத்திற்குள் உத்தவா திடீரென்று இறந்து விடுவான் என்றும் சந்நியாசி கூறினார். இதனால் வீட்டிற்குத் திரும்பும் போது சங்கா மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டும், உத்தவா மிகவும் வருத்தமாகவும் இருந்தனர்.

**தனது குறுகிய வாழ்க்கைக் காலத்தில் தன் கிராமத்தில் சேவை செய்து வாழ வேண்டும் என்று உத்தவா முடிவு செய்தான். ஆனால் சங்கா தன்னை வருங்கால அரசன் என்று நினைத்துக் கொண்டு கிராம மக்களை அதிகாரம் செய்து துன்புறுத்தினான்.** பதினொரு மாதங்களுக்குப் பிறகு தனது அரண்மனையைக் கட்டுவதற்காக ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தன்னுடன் வருமாறு உத்தவாவிடம் கூறினான். இருவரும் நல்ல இடத்தைத் தேடி அலைந்தபோது சங்காவின் காலில் ஒரு கல் இடறியது. அந்தக் கல்லை அகற்றியபோது, அங்கே நிறையத் தங்கமும், விலையுயர்ந்த கற்களும் நிறைந்த ஒரு பானை புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அந்தப் பானையை எடுக்க முயற்சி செய்தபோது,

அவர்களைக் கொல்ல ஒரு கொள்ளைக்காரன் கையில் கத்தியுடன் வந்தான். சங்கா கிடைத்த செல்வம் நிறைந்த பானையோடு ஓடி விட்டான். உத்தவாவோ கொள்ளைக் காரனோடு சண்டையிட்டு அவனைச் சிறைப் பிடித்தான். சங்காவோ தனக்குக் கிடைத்த செல்வத்தை அனுபவித்து வாழ்ந்தான். ஆனால் சண்டையால் ஏற்பட்ட காயங்கள் ஆறியவுடன் மீண்டும் கிராம சேவையில் ஈடுபட்டான்.

பன்னிரெண்டு மாதங்கள் கழிந்தன. **ஆனால் சங்கா அரசனாகவில்லை. உத்தவாவும் இறக்கவில்லை.** சந்நியாசியின் வார்த்தைகள் பலிக்காததால் கிராம மக்கள் குழம்பினர் எனவே ஆச்சிரமத்திற்கு சென்று இதைப் பற்றிக் கேட்டனர். சந்நியா சியோ தன் கண்களைச் சற்றே மூடி யோசித்தார். பிறகு அவர் சொன்னார்,''**சங்காவுக்கு அரசன் ஆவதற்கான நல்ல விதி இருந்தது. ஆனால் அவனுடைய மோசமான நடவடிக்கையால் ராஜ்யத்திற்குப் பதிலாக செல்வம் நிறைந்த பானை மட்டுமே கிடைத்தது. உத்தவாவிற்கு இளம் வயதில் இறக்க வேண்டும் என்ற கெட்ட விதி இருந்தும் அவன் சேவையால் பலத்த காயத்தோடு தப்பிவிட்டான்**'' என்று கூறினார்.

கர்மா என்பது ஒருவனைத் தண்டிப்பதில்லை; ஆனால் அதனை ஒரு கருணை மிக்க ஆசிரியர் என்றே கூறலாம். ஒருவரது வாழ்வினைப் பாதிக்கும் கர்மா பல இருப்பதாக வேதங்கள் செல்லுகின்றன. அவை ஒரு **தனி மனிதனின் கர்மா, குடும்ப கர்மா, ஜாதிக் கர்மா, நாட்டின் கர்மா, மனித இனத்தின் கர்மா பூமிக்கர்மா** எனப் பலவகைப்படும். ஒவ்வொரு கர்மாவையும் வெளிப்புறக் கர்மா, மன அளவிலான கர்மா, ஆன்மிக கர்மா என்றும் விரிக்கலாம். கர்மாவை கெட்ட, நல்ல கர்மாவாகவும் வகைப்படுத்தலாம். நமது ஒவ்வொரு சொல்லும், எண்ணமும், செயலுமே நமது வாழ்வின் கர்மாவாக மாறுகிறது. உடலானது உணரும் திறன் பெற்றிருப்பதால், இந்தச் சக்திகளால் அது உடனே பாதிக்கப்படுகிறது.

**கர்மா என்பது நிலையானதில்லை கர்மா என்பது ஒரு ஓட்டம். நமது கடந்த காலச் செயல்களின் அடிப்படையில் நமது வாழ்க்கை உறுதியாக திட்டமிடப்படுவதில்லை.**

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் தேர்ந்தெடுக்கும் உரிமை நம்முடைய கையில்தான் உள்ளது. நாம் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்து நம் வாழ்க்கை அமைகின்றது. இதுவே பகவான் போதிக்கும் கர்மயோகத்தின் அடிப்படை ஆகிறது.

நாம் நினைக்கின்ற, சொல்கின்ற, செய்கின்ற ஒவ்வொரு செயலும் கர்மா என்கின்ற வங்கிக்குச் செல்கிறது. நாம் நல்ல செயல்களைச் செய்யச் செய்ய நல்ல கர்மாவாக அமைகிறது. கெட்ட செயலைச் செய்தால் நல்லவற்றை இழந்து விடுகின்றோம். **நல்ல கர்மா நம் கணக்கில் இருந்தால் நல்ல காரியங்கள் நடக்கின்றன. நல்ல கர்மா இருப்பில் இல்லையென்றால் கஷ்டப்பட வேண்டியநிலை உருவாகிறது.**

உடல்நிலை சரியில்லாமல் இருப்பதற்கான காரணங்கள் பல உண்டு. சென்ற பிறவியில் செய்த கெட்ட செயல் இந்தப் பிறவியில் நமக்கு நோயாகத் தொல்லை கொடுக்கலாம். ஒருவர் தீராத தலைவலியால் அவதிக்குள்ளானார். அவருக்கு பகவான் அவரது முற்பிறவியைக் காட்டினார். அதில் அம்மனிதர் தன் நண்பர்களுடன் விவாதிப்பதையும், கோபத்தில் தன் நண்பரை ஒரு இரும்புத்தடியால் தாக்கியதையும் பார்த்தார். அந்த நண்பரோ தலையில் காயம் ஏற்பட்டதால் அவதியுற்றார் என்பதனையும் அறிந்தார். இதனால் அம்மனிதர் தன் நண்பரிடம் மன்னிப்புக் கேட்க, பகவான் ஆசியால் தலைவலியிலிருந்து நிவாரணம் பெற்றார்.

**மிகவும் மோசமான உணர்வுகளால் கூட நோய் வரலாம். பொறாமையால், கல்லீரல் நோய் வரலாம், வெறுப்பால் புற்றுநோய் வரலாம், பயத்தால் வயிற்றில் புண்ணும் கோபத்தால் இருதய நோயும் வரலாம்.**

எந்த ஒரு உணர்ச்சியையும் முழுமையாக அனுபவிக்கும்போது அதுவே சந்தோஷமாக மாறுகிறது. துன்பத்தையே இன்பமாக மாற்றும் கலையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் ''வாழ்வது எப்படி'' என்ற கலை நம்மை விட்டு தீய எண்ணங்கள் மறைந்தவுடன் நோயும் குணமாகி விடுகிறது.

சிறுவயதிலே அல்லது வளர்ந்த பிறகோ மனம் புண்பட்டதால் செய்த சில தீர்மானங்கள் கூட நோய்க்கு காரணமாகலாம். புற்றுநோயால் அவதியுற்ற ஒரு பெண்ணுக்கு பகவான் அவளது நோய்க்கு அவளே காரணம் என்பதைக் காட்டினார். தனது கணவராலும், பிள்ளைகளாலும் மன வேதனைப்பட்ட அப்பெண் தனக்கு உடல்நிலை சரியில்லை என்றாலோ அல்லது தான் இறந்தாலோ தான் அவர்கள் தன்னை மதிப்பார்கள் என்று அடிக்கடி நினைத்தார். **நாம் எது நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிவிடுகிறோம்.** அதனாலேயே அப்பெண் புற்றுநோயால் அவதியுற்றார்.

ஆனால் தங்களது கடந்தகால வாழ்க்கையைப் பார்க்க முடியாதவர்கள் அல்லது ஒரு சிந்தனை ஓட்டமில்லாதவர்கள் என்ன செய்வது? என்ற கேள்வி எழலாம். **ஒவ்வொருவரும் தான் செய்யும் சேவை நல்ல கர்மாவை உருவாக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் தகுந்த சேவையைச் செய்ய வேண்டும் என்று ஸ்ரீ ஸ்ரீ பகவான் கூறுகின்றார்.**

ஒரு பணக்காரரின் மகன் கண்ணில் ஒரு கோளாறு ஏற்பட்டுச் சில மணி நேரங்களில் கண் பார்வையை இழக்கும் நிலைக்கு வந்து விட்டார். அப்பணக்காரர் பகவானின் பக்தராக இருந்ததால் பகவானின் தத்துவத்தை உணர்ந்திருந்தார். எனவே நூறு நோயாளிகளுக்கு இலவசக் கண் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். தன்னுடைய நல்ல கர்மாவைத் தன் மகனுக்கு மாற்றும்படி பகவானிடம் வேண்டிக்கொண்டார். சில நேரங்களில் அவருடைய மகனுக்குத் திரும்பக் கண் பார்வை கிடைத்தது.

எனவேதான் கடவுளின் அருள் ஒன்றுதான் நோய் குணமாவதற்குச் சிறந்த பயனுள்ள வழி என்பதற்கு இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சான்றாக அமைகின்றன. "**மருத்துவர் காயத்திற்கு மருந்துதான் போடுவார்; ஆனால் கடவுள்தான் காயத்தைக் குணப்படுத்துகிறார்**" என்பது பழமொழி. மனிதன் துன்பத்தின் பிடியில் சிக்கித் தவித்துக் கடவுளைத் தேடும் போது, கடவுள் எப்போதும் அம்மனிதருக்கு உதவி செய்யத் தயாராக உள்ளார். அம்மாவும், பகவானும் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்திலும் தங்களுடன் இருந்து தங்களுக்கு

வழிகாட்டியும் உதவி செய்தும், நோயைக் குணப்படுத்தியும் வருகிறார்கள் என்றும், வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் நிறைந்துள்ளது என்றும், அம்மா பகவானின் ஒவ்வொரு பக்தர்களும் உறுதிப்படுத்துகின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் அற்புதங்கள் தினந்தோறும் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன.

**புண்ணியம் :-** நின்று நிலைத்தும் பயன்தரக் கூடியசெயல்களே புண்ணியமாகும்

இன்று நாம் பார்க்கும் இடம், பார்க்காத இடம் அனைத்துமே மாசடைந்து வருகிறதே எதனால். இறைவன் படைத்த பூமியில் வேலியைப் போட்டான் மனிதன். என்று மனிதன் கடவுளின் சொத்தை தன் உடமையாக்கினானோ அன்றே இந்தப் பிரபஞ்சம் தனது செயற்பாட்டை தொடங்கியது. அனுபவிக்கவே உரிமைபெற்ற மனிதன் அனைத்தையும் அழிவிற்கு இட்டுச்செல்லும் செயற்பாட்டைப் பார்த்து பஞ்சபூதங்களும் பார்த்துக்கொண்டா இருக்கும்? இன்று பூமி தன் சுவாசத்தையே இழந்து கொண்டிக்கின்றதே எதனால் சற்றே சிந்தித்துப்பாருங்கள் - இன்று இந்தப்பூமியை வாழவதற்கு தகுதியில்லாத இடமாக மாற்றியது யார்? எந்தக் கேள்விக்குப் பின்னாலும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருந்து நானும் ஒரு காரணம். என்று ஒரு பதில் ஓங்கி ஒலிப்பதை நாம் அறியாமல் இல்லை. ஆனாலும் நாம் அடுத்தவனைக் குறை கூறுவதிலேயே ரொம்பக் கவனமாக இருக்கின்றோம் சற்றே சிந்தியுங்கள் இன்று உலகில் **வறுமை மேலோங்குகின்றது. புதுபுதுநோய்கள், அபாயகரமான கட்டிகள், பூகம்பம், சுனாமி, காடுகளில் தீ,கொடூரமான மழை, சூறாவளி ...** அப்பப்பா பஞ்சபூதங்களும் சமநிலையைப்பாதுகாக்க படாதபாடு படுகின்றனவே. எதனால்? ஓசோனில் ஓட்டை, பூமி 80% வீதமான நீரில் 20% வீதமானது நீரே பாவனைக்கு ஏற்றதாக இருந்தது இன்று 2% மாகக் குறைந்தது எதனால்? மனிதனின் அறிவின் போக்கில் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தேடிய மனிதன் வாழ்வதற்கு எதையுமே தேடிவைக்கத் தவறியதே என்பதை யாராவது உணருகிறோமா.

தானமும் தவமும் தங்குவதற்கு என்னவேண்டும்?
சீரான மழைவேண்டும். ஔவையார் அழகாகக் கூறியுள்ளார்

**வரப்புயர நீர் உயரும்**

**நீர்உயர நெல் உயரும்**

**நெல் உயர குடியுயரும்**

**குடி உயரக் கோண் உயர்வார்** - என்று

இதற்கு என்ன வேண்டும் பூமியில் மரங்கள் வேண்டும் மரங்களே பூமியின் சுவாச உறுப்பாகும் அதுவே காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிட்டு பூமிக்கே சுவாசத்தை வழங்குகின்றதல்ல வா.தியாகத்தின் சின்னமல்லவா. அத்தகைய மரங்களை அழிப்பதில் மனிதன் காட்டிவரும் வேகம், ஒரு மரத்தை உருவாக்குவதில் (இயற்கையைக் காப்பாற்றுவதில்) காட்டுக்கிறானா? தனது புத்தி என்கின்ற சிறிய பாத்திரத்தைக் கொண்டு இப்பிரபஞ்சம் என்கின்ற சமுத்திரத்தை அளக்கின்றானே முடியுமா? சொல்லிக்கொண்டு போனால் சொல்லிக்கொண்டே போகலாம். இன்று நாம் அனுபவிப்பதெல்லாம் பூமிக்கர்மா - மனிதனால் சேர்க்கப்பட்ட கர்மாவே பூகம்பம், வெள்ளம், சூறாவளி எல்லாம் கர்மா தான். அப்போ நாம் இக் கர்மாவில் இருந்து விமோசனம் அடைய முடியாதா என்கின்ற ஒரு கேள்வி மெதுவாக உங்கள் இதயத்தில் எழுகின்றதல்லவா...?

உங்கள் கண்களை மூடி பகவானிடம் கையேந்துங்கள் அவர் உங்களிற்கு வழிகாட்டுவார். உங்களிற்கு ஏதாவது ஞாபகம் வருகின்றதா? நவராத்திரி பூஜையில் கர்மவிமோசன பூஜையின் போது எல்லோரையும் ஒரு மட்டைத்தேங்காய் கொண்டுவரச்சொன்னது... அங்கே உங்கள் கர்மாக்களை எல்லாம் அந்த மட்டைத்தேங்காய்குள் மாற்றிவிடும்படி பிரார்த்தனை செய்யச்சொன்னது... அதன்பின் அவற்றை கடலிலோ நீர் நிலைகளிலோ போடச் சென்னது ஓ! நண்பர்களே இப்போ சிந்தித்துப்பாருங்கள், பகவான் எவ்வளவு சாதுரியமாக எங்கள் கர்மாக்களை சத்கர்மாவாக மாற்றுவதற்கு வழி அமைத்துக் காட்டியிருக்கின்றார். என்பதை நினைத்து அவரிற்கு நன்றி கூறுங்கள்.

ஆம் அந்தமட்டைத் தேங்காய் எங்கோ போய் முளைத்து யார் யாருக்கோ பயன் கொடுக்கப்போகிறதே அது ஒரு மிகப் பெரிய சத்கர்மா அல்லவா?

சிந்தித்துப்பாருங்கள் எதற்காக மட்டைத் தேங்காயை பகவான் தேர்ந்தெடுத்தார் - நன்றிக்கு உதாரணம் தென்னையல்லவா

**" நன்றி ஒருவருக்கு செய்தக்கால்**
**அந்நன்றி என்று தருங்கொல்**
**என வேண்டா.... நின்றுவளர் தெங்கு**
**தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்"**

ஔவையாரின் அமுதமொழிகளை சற்றே நினைவு கூறுங்கள். தியாகத்திற்கும் சேவைக்கும் தென்னை உதாரணம் அல்லவா.

அன்பு நண்பர்களே.

நாமும் நன்றியுடன் சேவை செய்வோம்.**உதவி செய்தவரின் கரத்தையே ஓங்கிவெட்டும் காலம் ~ இது**

**உன்சேவையை மனிதவடிவினர் மறந்தாலும் தெய்வம் மறக்காது. பகவத்சேவை செய்வோம், மறப்பது மனித குணம் நன்றியுடன் அருள்கொடுப்பது தெய்வகுணம். இதை உணர்ந்து நன்றி என்ற சொல்லிற்கு செயல்வடிவம் கொடுப்போம்.**

''மரம் வளர்ப்போம் மண்வளம் காப்போம்
ஒரு துளி மழைத்துளி உங்கள் மழலையின் உயிர்த்துளி"
(வரதையாணயத்தில் நாம் காணும் வாசகங்கள்.)

நன்றி உணர்வால் உங்கள் ஹிருதயம் மலரும் ஹிருதயம் மலர்ந்தால் அம்மாபகவானின் அருள் பலமடங்காக உங்களை வந்துசேரும் அங்கே **அம்மாபகவான் அந்தர்யாமினாய் இருந்து எந்நேரமும் உங்களை வழிநடத்துவர் என்பதில் ஐயமில்லை.**

# கர்மா

மனிதனை உலுக்குகின்ற பேய் எல்லாம் ஒட்டுமொத்த மனிதனின் கர்மாதான். ஒரு தனிமனிதனுடையதாக இருந்தாலும் சரி அனைத்தும் மக்களுடையதாக இருந்தாலும் நம் வாழ்க்கையில் மனிதஜாதியர் கர்மா நமது உடலை எப்படிப் பாதிக்கின்றது என்று பார்ப்போம். இந்தப்பூமி உயிர் உண்டு என்பதை எல்லோரும் நன்கு அறிவோம் தன்னுடைய தட்ப வெட்ப நிலையைக் தக்கவைத்துக்கொள்ளும் எல்லாவற்றிற்கும் உயிர் உண்டு என்று கூறலாம். எப்போது உடலின் உட்பாகங்கள் பழுதடைகின்றதோ அப்போது அதன் உயிர் பிரிகின்றது. நம் பூமியிலும் இதை நாம் கவணிக்கலாம் காற்று மாசடைகின்றது. கடல்நீரிலும். ஆற்று நீரிலும் எண்ணெய் வேதியர் பொருட்கள் கலந்துள்ளன. நிலம் மாசுபடுகின்றது. ஓசோன் வாயுமண்டலம் பழுதடைந்துள்ளது. புற ஊதாக் கதிர்கள் வாயுமண்டலம் பழுதடைந்துள்ளது. புறஊதாக் கதிர்கள் வாயுமண்டலத்தை அடைவதால் ஆரோக்கியம் கெடுகிறது தெற்கு வடக்கு மண்டலங்களில் மணி உருவாகு தால் கடல் மட்டம் அதிகரிக்கும் அபாயம் நடந்துகொண்டிருக்கின்றது.

இது மாத்திரமா ஓவ்வொரு கணமும் மனித செயற்பாடுகள் இந்தப்பூமியை வாழத் தகுதியில்லாத இடமாக மாற்றுவதிலேயே குறியாக இருக்கின்றது

தொழில் ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ள பல நாடுகளில் இப்போது புற்றுநோய் பெருகிக்கொண்டு வருகின்றது. 56 மில்லியன் இறப்புக் (2000ம்)கணக்கீட்டில் 12% மக்கள் அபாய மிக்க கட்டிக்களால் இறந்தவர்கள் இறப்புவீதத்தின் 1/4 பாகம் புற்றுநோயால் இருக்கின்றனர் ஏன் இந்த அவல நிலை. கர்மாவின் அடிப்படையில் பார்த்தால் நாம் மரங்களை அளிப்பதன் மூலம் அணுக்களின் வளர்ச்சிகளைக் குறைந்து விடுகின்றோம். ஆனால் அந்த செல்கள் மனித உடம்பில் புற்றுநோயாக வளர்கின்றது. ஒரு ஒட்டுண்ணியாக அது வளர்ந்த இடத்தையே அழித்துவிடுகின்றது. இது ஒரு விந்தையான செயற்பாடு அல்லவா இறைவன் படைத்த உலகையும் உயிரினங்களையும் இந்த

மனிதனின் புத்தி ஆள்வதால் வந்த வினைகள் ஒன்றா இரண்டா. புத்தி என்றிற ஒரு சிறிய மந்திரம் ஆத்மா என்கின்ற சமுத்திரத்தை மாற்றப்பாக்கின்றது. முடியுமா. எப்போ ஆத்மா வைக்கொண்டு (இறைவன்) புத்தியை நிறைக்கின்றோமோ அங்கோதான் தீர்வுகிடைக்கும்.

இந்த கர்மசக்கரத்திற்கு முடிவே இல்லையா என்று மீண்டும் ஒரு கேள்வி பயத்தோடு எழுகின்றதா?

கர்மாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு கர்மாவின் விதிமுறைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். எந்த உயிரினத்தை எடுத்துக்கொண்டாலும் அதன் கோட்பாட்டை ஒரு செயல் நிறைவேற்றுவதன் பொருட்டு கொடுத்தல் - உதவி செய்தால் - நண்றியுடன் செயற்படுதல் என்ற முக்கோண நிலையிலேயே செயல்படுகின்றது.

நம் இதயத்தை மலரச் செய்வதற்கான சூழ்ச்சிதான் கர்மா, இதனுடைய வழியும் கருணை தான் ஒருவரைத் தண்டிப்பதும் இல்லை மாறாக கற்றுத் தருகின்றது. அனுபவங்கள் மூலம் கற்றுத் கொள்ளத்தூண்டுகிறது.

எப்போது கர்மா கற்றுத் தரும் பாடங்களைப் புரிந்து கெள்கிறோமோ அப்போ கர்மா சூழ்ச்சி செய்யும் அவசியம் இல்லாமல் போய்விடுகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக எதையும் நாம் அனுபவிப்பதற்கு இறைவனில் அருள் வேண்டும். அந்த அருள் வந்து சேருவதற்கு திறவுகோலாக அமைவது நம் இதயமலர்ச்சி தான் இந்த இதயம் மலர்வதற்கான வழிகளைத் தான் கர்மா நமக்கு சுற்றுத் தருகின்றது. இதயம் மலர்வதற்கான செய்யக்கூடிய செயல் வடிவம் தான் சேவை - நன்றிப்புணர்வு, புண்ணியம். என்பன பகவான் கூறுவார் ''பக்தன் பாதத்திலும் சேவகன் ஹிருதயத்திலும் அமர்வான்'' என்றும் இறைசேவை (மக்களுக்கு) செய்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள் ஏனென்றால் இறைவன் யாரிடமும் கடன்வைத்திருக்கமாட்டார் பல மடங்காகத் திருப்பிக்கொடுத்து விடுவார். இதுவே கர்மாவின் விதியும் ஆகும். நாம் எதை விதைக்கின்றோமோ அதை பலமடங்காக அறுவடை செய்வோம் நாம் பிரச்சனைகளிற்காக போராடுவதை விட இந்தப்பிரச்சனை

வருவதற்கு நான் எவ்வளவு காரணமாக இருந்திருக்கின்றேன் என்று பார்ப்பதே விழிப்புணர்ச்சி ஆகும். **விழிப்புணர்ச்சியே விடுதலையாகும்.**

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஆற்றக்கூடிய மிகப்பெரிய சேவை ஒன்று உள்ளது. **அதுவே அம்மாபகவானின் குறிக்கோளைத் தியானம் பண்ணுவது,** இந்நிலை இப்பிரபஞ்சம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் மிகப் பெரிய சுபமுகூர்த்தத்தில் நீங்களும் ஒரு தோரணமாகிவிடுவீர்கள்.

இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு **நல்லதை செய்யுங்கள் நல்லது நல்லதையே கொடுக்கும்.**

இறைவன் பூமியில் அவதாரம் மேற்கொள்வது இரு நோக்கங்களுக்காவாகும்.

**1) உணர்த்துவதற்கு, 2) விடுவிப்பதற்கு,** அவர் மனித குலத்தைப்பல உதாரணங்கள் மூலம் உணர வைக்கிறார் தீவிரமான ஆன்மீக பரிசோதனைகள் மூலம் அவர்களிடத்து கொண்டு சென்று தனது ஆன்மீக பூரணத்துவத்தை அவர்களிடத்தும் பதிய வைக்கிறார். அந்த இடத்தில் ஒரு பேருண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும் அதாவது தனது பிறப்பிலே எல்லாவற்றையும் கடந்த பரம்பொருளாக இருப்பதாலேயே இதன் முழுமைக்கு மீண்டுமொரு ஆன்மீகப்பயிற்சி தேவை இல்லை என்பதாகும் எனினும் மனிதகுலத்திற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டும் வகையில் அவர் மீண்டும் பலவிதமான ஆன்மீகக் கோட்பாடுகளில் ஈடுபட்டு முழு பூரணத்துவத்தை பதிய வைக்கிறார். ஒரு தாய்ப்பறவை தனக்குப் பசியில்லாத போதும் தானியத்தைத் தேடியலைந்து கொத்தி அதனை விழுங்குவது போல் பாவனை செய்வதெல்லாம் தன் வாரிசுகளிற்கெல்லாம் கற்றக்கொடுக்கும் செயல்பாட்டைப் போலவே, மானிடர்கள் பூரணத்துவத்தை எய்தவேண்டும் என்றால் எப்படியெல்லாம் ஆன்மீகப்பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்கும் நோக்கில்தான் அவதார புருஷர்களும் தங்களை ஆட்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆண்டவனின் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களை கரைசேர்த்து அவர்களைப் பூரணத்துவம் பெற அவதாரபுருஷர்கள் உதவிசெய்கிறார்கள்."

"மரணத்தை எண்ணிக் கலங்கிடும் உனக்கு பிறர்
மரணத்தின் தன்மை சொல்வேன்
மானிடர் ஆன்மா மரணம் எய்தாது ~ அது
மறுபடி பிறந்திருக்கும்.
புண்ணியம் இதுவென்று உலகம் சொன்னால்
அந்தப் புண்ணியம் கண்ணுக்கே.
போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும்
போகட்டும் கண்ணனுக்கே
உன் பாவங்களை நினைத்து வருந்தாதே
அவற்றிலிருந்து நான் உன்னைக் கரைசேர்ப்பேன்"
~ ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா ~

## ஆனந்தமான வாழ்விற்கான மார்க்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை நாம் கூறிக்கொண்டே வருகின்றோம். ஆனாலும் நோய்கள் எம்மை விட்டுப்போனதா என்று பார்த்தால் இல்லை...

எனவே இந்த ஆனந்தமான வாழ்விற்கு தடைகளாக உள்ளது என்ன என்று சற்றே பார்ப்போம்.

சீரற்ற உணவு × சீரற்ற உணர்வு = நோய்

ஆதிகால மனிதன் இயல்பாகவே முத்தனாகவே இருந்தான் அவனது உடம்பானது இப்பிரபஞ்சத்தில் இருந்தே சக்தியைப் பெற்றுக்கொள்ளும் தன்மையைப் பெற்றிருந்தது அவனுடைய தினசரி வாழ்க்கைமுறையே ஒரு தியானமாக இருந்தது. இயல்பாகவே அவனுடைய சக்கரங்கள் மலர்ந்த நிலையில் இருந்தன. அவனது உணவுப் பழக்கவழக்கங்கள் யாவுமே அவன உயிர்வாழ்விற்காக மட்டுமே இருந்தன. ஒரு நாளில் ஒருமுறை மாத்திரம் அதுவும் சூரியனால் பதப்படுத்தப்பட்ட உணவுவகைகளையே உண்டு வந்தனர் ஆனால் காலப்போக்கில் சீரற்ற உணவுப் பழக்கவழக்கங்களால் துன்பம் நிறைந்தவர்களாக

இப்பிரபஞ்சத்தில் உள்ள சக்தியை உள்ளெடுக்க முடியாதவர் களாகவும் அதாவது சக்கரங்களும் சக்திப்பாதைகளும் தடைப்பட்டதால் பிராணசக்தியை இயல்பாகப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றோம்.

இந்த அவல வாழ்க்கையின் காரணம்தான் என்ன? ஆனந்தமான வாழ்விற்கான முதல்படி உணவு இந்த உணவு உடம்பிற்கு முற்றாக தன் சக்தியை கொடுக்கவேண்டும் என்றால் அதற்கென மூன்று காலங்கள் ஆயுர்வேதத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

i) உணவு உட்கொள்ளும் காலம் மு.ப காலை 11 மணி - பி.ப மாலை 2.00
ii) செரிமானம் அடையும் காலம் - பி.ப 2 மணி - இரவு 12 மணிவரை
iii) நச்சுப் பொருட்கள் வெளியேறும் காலம் - ந. இ 12.00 மு.ப காலை 11 மணி அவை மாத்திரம்

அல்லாமல் நல்உணர்வுகளுடன் சமைக்கப்படும் உணவு நல்உணர்வுகளைத்தூண்டும்.

(உ+ம்... அம்மா சமைக்கும் உணவு)

இறைவனின் படைப்பிலே பின்னிப்பிணைந்துள்ள மூன்று வித குணங்கள் சத்வம் - ரஜஸ் - தமஸ் பிறப்பிலேயே எம்முடன் இருப்பது வாதம் - பித்தம் - கபம் இவற்றின் சமநிலை மாற்றங்களும் எமக்கு நோய்களாக வெளிப்படுகின்றன ஆதிமனிதர்களிற்கும் நோய்கள் இருந்தன ஆனால் அவன் நோய் நிவாரணத்திற்கு இயற்கையையும் இறைவனையுமே நம்பியிருந்தான் அவனுடைய பிரார்த்தனை முறைகள் சரணாகதித் தத்துவத்திலேயே இருந்தால் அவனுடைய பிரார்த்தனைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டன.

# இன்றைய மனிதனின் நிலை

இன்றைய மனிதனின் உள்உணர்வுகளில் ஏற்படும் வன்முறைப் போராட்டங்கள் தான்நோய்க்குக் காரணம் ஆகின்றது. இது வெளியுலக யுத்தமோ போராட்டமோ இல்லை. மனித மனதின் ஆள்மனதில் பதிந்துள்ள நிர்ணயங்கள், ஏக்கங்கள், பயம்... இப்படி எத்தனையோ

ஆரோக்கியமற்ற நிலை என்பது உடலிலோ, மனதிலோ, வாழ்க்கையிலோ, உணர்விலோ அல்லது ஆண்மீகத்திலோ உள்ள தடைகள் தான் ஆரோக்கியமற்ற நிலைக்குக் காரணமாகின்றது துன்பத்தில் இருந்து நாம் எடுக்கும் முயற்சிகள் மீண்டும் எமக்கு துன்பத்தையே கொடுப்பதும் நோய்க்கு ஒரு காரணம் ஆகின்றது. அதாவது சாக்கடைக்குள் வீழ்ந்த நாம் மற்றவர்களையும் சாக்கடைக்குள் வீழ்த்துவது போல் ஆகின்றது.

இப்படியே நாம் மாறி மாறிப் புலம்பிக்கொண்டிருக்கின் றோமே தவிர இந்த இருளைப்பற்றிய விழிப்புணர்ச்சி எம்மிடம் இல்லாதிருந்ததே நமது துயரத்தின் காரணம் என்பதை உணரத் தவறிவிட்டோம்.

ஆனால் துக்கம் என்கின்ற கொடிய நஞ்சின் பிடியில் சிக்கித் தவிக்கும் மனிதர்களிற்கு பகவான் காட்டும் பாதை மிகமிக எளிமையான மார்க்கமாகும்.

ஆம் துக்கமும் துயரமும் வெளியில் இல்லை எல்லாமே உன் எண்ணத்தில் தான் உண்டு என்கின்ற உன்னத ஞானத்தை அனுபவமாக்கி அந்த அனுபவமே உனக்கு விடுதலை அளிக்கும் என்கின்ற உயர்சத்தியத்தை அனுபவிக்கவைக்கின்றார். ''நாம் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கும் வரையில் மனிதப் பிரச்சனைகளிற்கு நிரந்தரத் தீர்வு எதுவும் கிடையாது என்று ஸ்ரீ பகவான் திருவாய் மலர்ந்துள்ளார்.

நோய்க்கு நோய்க்கிருமி காரணமில்லை அதுவெறும் வெளிக்காரணிதான் அந்த நோய்க்கிருமி தாக்கும் அளவிற்கு உள்ளுக்குள் ஏதோ குறை இருக்கின்றது. நாம் அந்த ஆழமான காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டோமானால் 80% மாற்றத்தை அனுபவிக்கலாம்

# மன அழுத்தம்

மன அழுத்தம் என்பது உடலால் செய்யும் வேலைகளால் ஏற்படுவது அன்று. நாம் வாழ்க்கையை அணுகும் முறை யால் வருகின்றது. தியானங்களால் மட்டும் மனஅழுத்தங்களில் இருந்து வெளிவரமுடியாது. எப்போ எங்கள் உறவுமுறைகளில் அன்பையும் நட்பையும் அனுபவிக்கின்றோமோ அப்போதான் மன அழுத்தங்களில் இருந்து விடுபடலாம். நோய் அல்லது ஆரோக்கிய மற்ற நிலை எம்மை அளிப்பதற்காக வருவ தில்லை - எம்மை வாழ வைப்பதற்காகவே அவை வெளிப்படுகின்றன.

சிக்கல்கள் என்பது நம் எண்ணங்களில் ஒரு மாற்றம் தேவை என்பதைக் காட்டுகின்றது. உங்களுக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டால் அதை உங்களால் பார்க்கமுடியுமா? வாழ்க்கையில் தியானம் என்பதே நம் வாழ்க்கையின் மோசமான பகுதிகளைப் பார்த்தல்தான் - அதுவே மன அழுத்தத்தில் இருந்து விடுதலை பெறச் சிறந்த வழியும் ஆகும்.

மனஅழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கான சில வழிமுறைகளை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தல் மிகப்பெரிய மாற்றத்தைத் தரும் என்று அனுபவித்தவர்கள் அறியத்தரு கின்றனர்.

அவையாவன i) சீரான சுவாசப்பயிற்சி
ii) சீரான உடற்பயிற்சி
iii) சீரான உணவுப்பழக்கங்கள்
iv) சீரான ஓய்வு
v) சீரான உறக்கம்
vi) சீரான தியானப்பயிற்சி
vii) சீரான அரவணைப்பு என்பவையாகும்.

# யக்ஞம் என்பது என்ன?

ஒரு தெய்வத்தைக் குறித்து நெய், நைவேத்தியம், மலர் போன்றவற்றை அக்கினியில் சமர்ப்பிப்பது வேள்வியாகும்.

அது போலவே பிரபஞ்சமாகிய அக்கினியில் நமது வாழ்க்கையைச் சமர்ப்பித்து வாழும்படி இந்து மதம் அறிவுரை கூறுகின்றது

இந்தக் கருத்தை இங்கு சற்று விளக்கமாகப் பார்க்கலாம். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஓர் அங்கமாக இருக்கின்றோம். இந்தப் பிரபஞ்சத்தில் நாம் வாழ வேண்டுமானால், நாம் பிரபஞ்சத்திலிருந்து எதை எடுக்கிறோமோ அதைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும் - இது இயற்கை வகுத்திருக்கும் ஒரு நியதி.

உணவு, தண்ணீர் ஆக்சிஜன் முதலியவற்றை நாம் பிரபஞ்சத்திலிருந்து பெறுகிறோம்; பிறகு கார்பன்டை ஆக்சைடு, கழிவுப் பொருட்கள் என்று அதைப் பிரபஞ்சத்திற்குத் திருப்பிக் கொடுக்கிறோம்.

இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் சிலவற்றைப் பிரபஞ்சத்திலிருந்து நாம் எடுக்கிறோம்; சிலவற்றைப் பிறகு பிரபஞ்சத்திற்குத் திருப்பிக் கொடுக்கிறோம்.

நமக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே உள்ள இந்தக் கொடுக்கல் வாங்கல் சரியாக நடைபெறாத போது உடல் நோய்க்கு உட்படுகிறது; **கொடுக்கல் ~ வாங்கல் முழுவதும் தடைப்படும்போது உடல் மரணத்தைத் தழுவுகிறது.**

எனவே உணவு, உடை, அறிவு என்று நாம் பிரபஞ்சத்திலிருந்து பெற்றவற்றை மீண்டும் பிரபஞ்சத்திற்கே நாம் அர்ப்பணித்துவிட வேண்டும். அவற்றை நாமாகக் **கொடுக்காவிட்டால் பிறகு நம்மை அடித்து, நம்மிடமிருந்து**

**பலவந்தமாக இயற்கையே அவற்றைத் திருப்பி வாங்கிக் கொள்ளும். இயற்கை அதற்காகக் கையாள்கின்ற வழிகளில் ஒன்றுதான் நோய்.**

இவ்வாறு, நாம் பெற்றதைச் சமூதாயத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்கான ஒரு வழிதான் **சேவை.**

இந்து மத நூல்கள் பின்வரும் ஐந்துவிதமான சேவைகளை, அதாவது யக்ஞங்களைக் கூறுகின்றன:

| | | |
|---|---|---|
| 1. தேவயக்ஞம் | - | இறைவனுக்குச் செய்யும் பூஜை முதலியவை. |
| 2. ரிஷியக்ஞம் | - | சாஸ்திரங்களைப் படி த்தல்; மற்றவர்களுக்கும் கற்பித்தல். |
| 3. பித்ருயக்ஞம் | - | முன்னோர்களுக்குத் தர்ப்பணம் முதலான காரியங்களைச் செய்தல். |
| 4. நரயக்ஞம் | - | பிற மனிதர்களுக்குத் தொண்டு செய்தல். |
| 5. பூதயக்ஞம் | - | பிற உயிர்களுக்கு உதவுதல். |

" இந்த ஐந்து மகா யக்ஞங்களைத் தொடர்ந்து செய்வதன் மூலம் மனிதன் தெய்வமாகிறான் " என்று மனு தர்மசாஸ்திரம் கூறுகிறது.

# வரயக்ஞம்

நமது பழம் பெருமை வாய்ந்த புராதன வேத மரபின் சாரமே யக்ஞங்களும், யாகங்களும். ''யக்'' என்றால் வழிபாடு அல்லது நிவேதனம். ரிஷிகளும் ஞானிகளும் யக்ஞைகள் மூலமாக கடவுளுடன் தொடர்பு கொண்டனர். பூமியில் அமைதியும், சுபீஷத்தையும் கொடுக்கக்கூடியது. யக்ஞங்களே என்று அறிந்திருந்தனர். பகவத்கீதையிலும் யக்ஞத்தின் சிறப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. கலியுகத்தில் இறங்கி வந்த கடவுள் முதலில் மனிதனை, அன்றாடப் பிரச்சனைகளிலிருந்து விடுவிக்கவும் அவனுடைய வாழ்க்கையை ஆனந்தமாக யக்ஞத்தை ஏற்படுத்தித் தேவையான வரங்களை வழங்குகின்றார்.

**அனுமனுக்கு இதயத்தில் ஸ்ரீராமன் போல், ஸ்ரீராகவேந்திரருக்கு இதயத்தில் மூல ராமர் இருப்பதுபோல் நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் இருக்கிறார். ஆனால் நாம் கோபம், வெறுப்பு, பொறாமை, குறைகூறுதல்,பிறர்மீது குற்றம் காணுதல்,காமம், போன்ற குப்பைகளால் நம் கடவுளை மூடி மறைத்து வைத்திருக்கிறோம்.**

வரயக்ஞைகளில் அந்தக் குப்பைகள் பகவானின் சீடர்கள் கூறும் வழி முறைகளால் நீக்கப்படுகின்றன. கடவுள் இதயத்தில் இருப்பதை வரயக்ஞையில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் காண முடியும். இழந்துவிட்ட கடவுளின் தொடர்பு கிடைக்கிறது. கடவுளிடம் ஒரு நெருங்கிய பந்தம் ஏற்படுகிறது. ஆன்மீகப் படிகளில் ஏற வழி காட்டப்படுகிறது. **நாம் துன்பப்படுவது ஏன்? நமக்கு மட்டும் ஏன் இந்தக் கஷ்டம்?** போன்ற கேள்விகளுக்கான விடைகளைக் கடவுளின் அருளினால் அறிகின்றனர். ஒரு குழந்தை வளர்வதையோ, ஒரு பூ மலர்வதையோ, பனி சூரிய ஒளி பட்டவுடன் மறைவதையோ நம்மால் காணமுடியாது. ஆனால் அந்த நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. நாம் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே நிகழ்ந்து விடுகிறது. அதுபோல்தான் வரயக்ஞைகளில் கலந்து கொண்டால் நம்மை அறியாமலேயே நாம் நம் கஷ்டங்களிலிருந்து விடுபட்டிருப்பதை உணரலாம். பல நல்ல மாற்றங்கள் நிகழ்வதை அனுபவிக்கலாம் குடும்பத்தில் ஒற்றுமை, பிரச்சனைகளுக்கு கர்ம விமோசனத்தால் தீர்வு மன அமைதி போன்றவை - நாம் கேட்கும் வரத்தையும் பகவான் பிரசாதிக்கிறார். நம் வாழ்க்கை மலரும் அந்த மணம் குடும்பம் முழுவதையும் அலங்கரிக்கும். பாலைவனமாகி பாழ்பட்ட வாழ்க்கை சோலை வனமாவதைக் காணலாம், அனுபவிக்கலாம்.

# தெய்வீக ஹோமங்களும் யாகங்களும்

நாம் இன்று ஒரு 'சங்கம யுகத்தில்' உள்ளோம். அதாவது. கலியுகத் (Ironage) திலிருந்து சத்திய யுகத்திற்கு (Goldenage) மாறிக் கொண்டிருக்கிறோம். இது போன்று மாறும் காலங்களில் எல்லாத்துறைகளிலும் எதிர்பாராத நிகழ்ச்சிகளும், திருப்பங்களும் நிகழக்கூடும். எதிர்மறையான சக்திகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள, தெய்வத்தின் அருள், மிக அவசியமாகிறது. தெய்வ அருளைப் பெறுவதற்கு ஹோமங்களும், யாகங்களும், காலங்காலமாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் வழிகளில், மிகச் சிறந்த ஒன்றாகும். இத்தகைய ஹோமங்களின்போது புனித அக்னியின் மூலம் பல்வேறு தெய்வங்களைப் போற்றுகிறோம். ஒரே பரம்பொருளோடு தொடர்பு கொள்ள மிகச் சக்திவாய்ந்த வழியாக, ஹோமங்கள் உள்ளன. ஹோம குண்டத்தின் வடிவம், மந்திரங்களின் சரியான உச்சாடனம், ஹோம அதிபதிக்கு பொருத்தமான ஆஹுதிகள், மொத்தத்தில் ஹோமத்தின் விதிமுறைகள், இவைகளும் ஹோமத்தில் மிக முக்கியப்பங்கை வகிக்கின்றன. யாகங்கள் கூட்டாகவும், தனிக் குடும்பத்திற் காகவும், தனிப்பட்ட அல்லது சமுதாய பிரச்சனைகளுக்காகவும் நடத்தப்படுகின்றன. ஹோமங்களின் முக்கியமான தத்துவம் என்னவெனில் ***நாம் அக்னிக்கு ஆஹுதியாய் அளிப்பவை, பன்மடங்கு நமக்கு திரும்ப வரும்.***

***ஹோமங்களின் ஐந்து முக்கிய பாகங்கள் அக்னி, மந்திரங்கள், ஆஹுதிகள், சங்கல்பங்கள், மற்றும் சிரத்தை,*** இந்த ஹோமங்களில் வளர்க்கப்படும் அக்னி சாதாரண நெருப்பு அல்ல. உலகின் பெரும்பாலான மதங்களில் வழிபாடுகளில் அக்னி ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. அக்னி தேவன், மற்ற தெய்வங்களின் தூதர் போலவும், அவர்களுடைய வாய் போலவும் செயல்படுகின்றார். மனிதனுக்கு, மற்ற தெய்வங்களோடு தொடர்பு கொண்டு பேச வேண்டுமானால், அவன் அதை அக்னியின் மூலம் செய்கின்றான். மற்ற தெய்வங்களுக்கு உணவும் அக்னி மூலமே கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மந்திர உச்சாடனையின் சக்தியும்

அக்னியின் சத்வகுணத்தை அதிகரிக்கச் செய்கிறது. நம் உடலிலும், சுற்றுப் புறத்திலும் உள்ள எதிர்மறையான சக்திகள் நீங்கி, நல்ல தெய்வீக சக்திகள் நிரம்பும், மனிதனின் சைதன்யத்திற்கும், தெய்வீக சைதன்யத்திற்கும், அக்னி ஒரு பாலம் போல் அமைகிறது. ரூபமுள்ள, மற்றம் ரூபமற்ற உலகங்களுக்கு இடையில் தொடர்பை ஏற்படுத்துவதால், அக்னி தேவனை, ஒரு தூதுவர் எனலாம். நாம் ஆஹுதியாய் அளிப்பவைகளை, அந்தந்த தேவதைகளுக்கு தக்கவாறு, அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மாற்றும் சக்தி அக்னிக்கு உள்ளது.

***

## ஹோமங்களும் அவற்றின் பயன்களும்



1. அவஹந்தி ஹோமம்
   * விவசாயத்தில் நல்ல மகசூல்
   * பொருளாதார முன்னேற்றம்.
   * ஆன்மீக வளர்ச்சி

2. வித்யா ஹோமம்
   * கல்வியில் மேன்மையைத் தரும்.
   * புத்திகூர்மையும் ஞானமும் விருத்தியடையும்
   * ஒருமுக சிந்தனையும், நினைவாற்றலும் வளரும்
   * உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்கும்.
   * தொழில் முன்னேற்றம் காண பல யுக்திகளைப் பெறலாம்

3. லஷ்மி ஹோமம்
   * இந்தக் ஹோமத்தில் வழங்கப்படும் யந்திரம், ஐஸ்வர்யம் அடையத் தடையாக இருக்கும் எதிர்மறை சக்திகள், சாபங்களை நீக்கி, செல்வ விருத்திக்கு வழிவகுக்கும்.
   * சர்வ மங்களங்களையும், மேன்மையையும் தரக்கூடிய ஹோம அதிபதியை சந்தோஷப்படுத்தும்.
   * பதினாறு செல்வங்களை அடையவும் நீண்ட நாட்கள் வராதிருந்த செல்வங்கள் வந்து சேரவும் - துணை புரியும்.

4. மங்கள சமஸ்கரண/புருஷசுக்த ஹோமம்
   * குடும்பத்தில் குழந்தை பாக்கியம் கொடுக்கும்.
   * இந்த ஹோமம் மகாவிஷ்ணுவுக்கு அர்ப்பணம் செய்யப்படுகின்றது.
   * நம் அனைத்து செயல்களிலும் வெற்றியை கொடுக்கும்.
   * நமக்கு பரிபூரண விடுதலை கிடைக்கும்.

5. கனகதாரா ஹோமம்
   * ஸ்தோத்திரம், ஒரு பரம ஏழையை செல்வந்தனாக்க வல்லது
   * செல்வமும் வளமும் உண்டாகும்.
   * ஒரு மனிதனின் வெற்றிக்கு மூல காரணம்ாக இருக்கும் அவனது அந்தர்முக, வெளிப்புற குணாதிசயங்களை அடையாளம் கண்டு, அவற்றின் ஒரு நல்ல திசையில் மாற்றிடவும் வல்லது.

6. ஐஸ்வர்ய ஹோமம்
   * மகா லக்ஷ்மியை அழைத்து, அவர் ஆசியைப் பெறுவது, இந்த ஹோமத்தின் நோக்கம்.
   * செல்வத்திற்கும், வளமான வாழ்விற்காகவும் செய்யப்படுகிறது.
   * புகழ், வாகனங்கள், மனோ வலிமை, தெய்வீக மற்றும் ஆன்மீக வலிமை போன்ற பலன்களைக் கொடுக்க வல்லது.

7. பகவத்கடாஷ ஹோமம்
   * குடும்பத்தில் உள்ளீவர்களின் ஷேமத்திற்காகவும் செய்யப்படும் ஹோமம் இது.
   * இந்த ஹோமத்தினை, பிரதி தினமும் தொடர்ந்து செய்வது நல்லது.
   * இந்த ஹோமம் அம்மா, ஸ்ரீ கல்கியின் பரிபூரண ஆசீர்வாதத்தினைப் பெற்றுத்தரும்.

8. மிருத்தியஞ்ச ஹோமம்
   * பிறந்த தினத்தன்று செய்யப்படுகிறது.
   * சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்யப்படும் இந்த ஹோமம், அகால மரணத்தைத் தவிர்க்கும்.
   * ஆயுட்காலம் விருத்தியடையச் செய்யும் ஹோமம் இது.
   * நீண்டநாட்களாகத் தொடரும் வியாதிகளைக் குணப்படுத்தி, ஆரோக்கியமான வாழ்வினை,இந்த ஹோமத்தின் பலனாகப்பெறலாம்

9. ஆயுஷ்ய ஹோமம்
   * குழந்தையின் முதலாவது பிறந்த தினத்தன்று,நீண்ட ஆயுளுக்காகச் செய்யும் ஹோமம் இது.
   * குழந்தைக்கு தொடர் தேக உபாதைகள் இருந்தால், இந்த ஹோமத்தின் மூலம்,குழந்தைக்கு நல்ல தேக ஆரோக்கியம் கிடைக்கும்.
   * குழந்தையின் ஜன்ம நட்ஷத்திரத்தன்று இந்த ஹோமம் செய்யப்படுகிறது.
   * திதி,வாரம், நட்ஷத்திரம் இவற்றினால் ஏற்படக் கூடிய தீய விளைவுகளை இந்த ஹோமம் செய்வதன் மூலம் நீக்கலாம்.
   * பல மருத்துவ பரிசோதனைகளாலும், மருந்தினாலும் நிர்ணயம் செய்து கொள்ள முடியாமல் இருக்கும் வியாதிகளையும் இந்த ஹோமம் குணப்படுத்தும்
   * ஒவ்வொருமாதமும் கூட இந்த ஹோமத்தினை செய்து வரலாம்.

10. தன்வந்திரி ஹோமம்
   * மருத்துவ பரிசோதனைகளால் நிர்ணயிக்க முடியாத வியாதிகளைக் குணப்படுத்தும்.
   * நீண்ட நாளாக அனுபவிக்கும் நோயினால் ஏற்படும் வாட்டம் விலகி விடுதலை அளிக்கும்.
   * இந்த ஹோமத்தின் முடிவில் ஒரு தனிப்பட்ட நோய் நிவாரண மந்திரம் மூலம் அருள் பெற, அனைவருக்கும் நோய் நிவாரண அனுக்கிரஹம் வழங்கப்படும்.

11. மஹா கணபதி ஹோமம்

* உடல் மனம், ஆன்மிக அம்சங்களில் உள்ள தடைகள் நீங்கி வாழ்வில் வெற்றி கிடைக்கும்.
* பொருளாதாரம்,படிப்பு,ஆரோக்கியம் போன்ற அம்சங்களில் உள்ள தடைகள் நீங்கி, விக்னேஸ்வரரின் அனுக்கிரஹம் நமக்குக் கிடைக்கும்.
* மற்ற ஹோமங்களை ஆரம்பிப்பதற்கு முன்பு கணபதி ஹோமம் செய்யப்படுகிறது.
* குடும்ப ஒற்றுமை ஏற்படும். சகல காரியங்களும் கைகூடும்.

12. கிருத்யாபரிஹரண ஹோமம்

* செய்வினை விளைவுகளிலிருந்து விடுதலை பெற.
* குடும்பப் பரம்பரையாக வந்த சாபங்களிலிருந்து விடுதலைபெற
* செய்வினைக்கான மூலகாரணத்தை அழித்தல்.
* எதிர்காலத்தில் செய்வினைகளிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ளவும் இந்த ஹோமம் உதவும்

13. துர்கா ஹோமம்

* எதிர்மறையான சக்திகளிலிருந்து விடுதலை பெற
* விரோத சக்திகளிலிருந்து நாம் பெற்ற துன்பம் நீங்க.
* விஷம்,திருட்டு போன்றவற்றால் நமக்கு ஏற்பட்ட துன்பம் இந்த ஹோமம் செய்வதால் நீங்கும்.
* உடல்,செல்வம்,அந்தஸ்து,நீண்ட ஆயுள், தேகபலம் ஆகியவை கிடைக்கும்.
* பயம்,ஆபத்து,கிரகதோஷங்கள் இந்த ஹோமம் செய்தால் நீங்கும்

14. காயத்ரி ஹோமம்

* எதிர்மறையான கர்ம வினைகளிலிருந்தும், பூர்வ ஜென்ம கர்மங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கும்.
* திடீரென காரணமறியாமல் ஏற்படும் தன ஆரோக்கிய பாதிப்புகளுக்கு காரணமான கர்ம பந்தங்களிலிருந்து விடுதலை அளிக்கும்.
* உறவுமுறைகள் சீரடைய உதவி புரியும்.
* சமுதாயப் பிரச்சனைகளிலிருந்து நம்மைக்காத்து நிற்கும்.
* உயர்ந்த இலட்சியத்தை அடைய உதவி புரியும்
* நமது வாழ்வை நடத்தும் எதிர்மறையான விதியினை முடிவுக்குக் கொண்டு வரும்.

15. சஷ்டியப்தபூர்த்தி ஹோமம்

* 60ம் ஆண்டு நிறைவில் கிரஹதோஷங்களினால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள இந்த ஹோமம் செய்யப்படுகிறது.
* தம்பதியரின் எண்ணங்கள் சங்கமிக்க உதவும்
* தம்பதியர் வாழ்வின் உயர்குறிக்கோளான இறைவனுடன் ஒன்றுபடுவதற்கு, இந்த ஹோமம் வழிவகுக்கும்.

16. ருத்ர ஹோமம்

* எதிர்மறை சக்திகள் விலகி, வெற்றி கைகூட இந்த ஹோமம் செய்யப்படுகிறது.
* வெற்றிக்கு மூலமான ருத்ர தெய்வத்தினை மகிழ்வித்து, புனித சக்திகளைப் பெற.
* ஒவ்வொரு சிவராத்திரியன்றும் இந்தஹோமம் செய்யலாம்.
* இந்த ஹோமத்தினால், அந்தர்முக மற்றும் வெளியுலக வாழ்வில் அமைதி கிடைக்கும்.

17. சுதர்ஷன ஹோமம்

* இந்த ஹோமத்தில் பயன்படுத்தப்படும் உலோகத்தினாலான யந்திரம் எதிர்மறை கந்திகளை துரத்தி வெளியேற்றி, தெய்வீக புனித சக்திகளை நமக்கு கொண்டு வரும்.
* ஒரு புனித காரியத்தை துவக்க.
* ஜாதக குறைபாடுகள் நீங்க, தீய சக்திகள் விலக.
* தீர்க்க முடியாத வியாதிகள்,மற்றும் விரோத சக்திகளிலிருந்து வரும் துன்பங்கள் சுதர்ஷன பகவானின் துணையுடன் நீங்க.
* முன்னோர்களின் இறுதிச் சடங்குகளை,சரிவரச் செய்யாததினால், கீழ்தலை முறைகளுக்கு ஏற்படும் துன்பத்தை குறைக்கும்.
* எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும், பிரச்சனைகளையும் விலக்க, இந்த ஹோமம் உதவும்

18. வருண ஹோமம்

* மழை வேண்டி ஹோமம்
* வருண தேவரை வேண்டி, அவர் ஆசியுடன்,தீய சக்தியினால் மழை பெய்யாமல் இருக்கும் இடத்தில், அத்தீய சக்தியை விரட்டி மழைபெய்யச் செய்ய இந்த ஹோமம் பெரிதும் உதவும்.

19. மஹாதேவி ஹோமம்

* தகுந்த துணையைப் பெற்று திருமணம் செய்து கொள்
* பார்வதிதேவியை வேண்டி, திருமணத்திற்கான தடைகள் நீங்கிட.

20. மாணவ கல்யாண ஹோமம்

* மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காக.
* ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது சமுதாயம் முன்னேற்றம் அடைய இந்த ஹோமம் செய்யலாம்.
* மனிதனின் உடலின் முக்கிய பாகங்களை ஊக்குவித்து, அதன் மூலம் அவன் வெளியுலக வாழ்வு முன்னேற்றம் அடைய

21. வாஸ்து ஹோமம்

* வீடுகள், கடைகள் மற்ற வர்த்தக தொழில் நிறுவனங்களில் வாஸ்து தோஷம் நீங்கிட
* வாஸ்து புருஷனை, நமக்கு தேவையானவற்றை அருளும்படி வேண்டிக்கொள்
* மண வாழ்க்கையில் ஒற்றுமையின்மை,தொழிலில் நஷ்டம், வாஸ்துதோஷத்தினால் ஏற்பட்ட குடும்ப பிரச்சனைகள் நீங்கிடவும. இந்த ஹோமம் பெரிதும் உதவும்.

22. அக்னி ஹோத்ர ஹோமம்

* உடல்,மனம், ஆன்மா சுத்தம் அடைய இந்த ஹோமம் செய்யலாம்.
* மற்ற ஹோமங்களின் துவக்கத்தில் இந்த ஹோமம் செய்யப்படுகிறது.
* முறைப்படி தினமும் இதனைச் சடங்காக செய்யலாம். ஒரு குறிப்பிட்ட இடத்தில், சுற்றுப்புறத்தை ஹோமம் புனிதமாக்கும்

23. சீமந்த ஹோமம்

* கருவுற்ற 7ம் மாதம், குழந்தையின் நன்மைக்காகவும், எதிர்காலத்திற்காகவும் இந்த ஹோமம் செய்யப்படுகிறது.
* பிறக்கப்போகும் குழந்தைக்கு மஹா லஷ்மியின் அருள் கிடைக்கும்.
* சுகப்பிரசவமாக குழந்தை பிறக்கவும் இந்த ஹோமம் செய்யப்படுகிறது.

24. புண்ணியாஹ வசன ஹோமம்

* பிறந்த குழந்தையின் நாமகரண விழாவில் செய்ய்ப்படும் இந்த ஹோமம், குழந்தைக்கு ஆன்மீக சக்தி வளர்ந்திட உதவுகிறது.
* குழந்தையின் தேக ஆரோக்கியம் மற்ற அனைத்து சுபிட்ஷங்களும் கிடைக்க
* பிறந்த குழந்தை அதன் வாழ்வின் குறிக்கோளை அடையவும், இந்த ஹோமம் செய்யப்படுகிறது.

25. சாந்தி ஹோமம்

* பித்ருக்கள் சாந்தி அடையவும், நம்மைச்சுற்றியும் நமக்குள்ளும் அமைதி தோன்றிட
* 70 வயது நிரம்புகையில் இந்த ஹோமம் செய்யப்படுகின்றது.
* மனித வாழ்க்கையில், அல்லது வாழும் இடத்தில் ஏற்பட்ட விபத்தினால் உண்டான பாதிப்புக்கள் நீங்கிட இந்த ஹோமம் உதவும்.
* உறவு முறையில் அமைதி ஏற்படவும், ஒரு நிலத்தில் உள்ள ஸ்தல கர்மா நீங்கிடவும் இந்த ஹோமம் செய்யப்படுகின்றது.

26. உபநயன ஹோமம்

* புனித நூல் மாற்றும் சடங்கில் செய்யப்படும் இந்த ஹோமம், சிறுவனின் ஆன்மீக வளர்ச்சிக்கு, அவனைத் தயார் செய்யும்.
* சிறுவனுக்கு மனதிடம், நம்பிக்கை,தேகபலம் பெருகி, உலக வாழ்வினை எதிர்கொள்ள உதவிடும்.
* பரம்பொருளுடன் தொடர்பு கொள்ளவும் தெய்வீக அனுக்கிரஹம் பெறவும் உதவும்

27. விவாஹ ஹோமம்

* திருமணச்சடங்கில் செய்யப்படும் இந்த ஹோமம்
* மண வாழ்க்கையில் துன்பங்கள் வந்தால் அவற்றை எதிர்கொண்டு வெற்றிபெறவும் உதவும்.
* மணமக்களை பரஸ்பரம் ஒருவருக்கொருவர் முக்திநிலை அடைய உதவிக்கொள்வதும் இந்த ஹோமத்தின் நோக்கமாக அமைகிறது.

## 'நமஸ்தே' என்னும் நம்முடைய பழமையான வரவேற்கும் முறையின் முக்கியத்துவம் என்ன?

'என்னுள் இருக்கும் கடவுள், உனக்குள் இருக்கும் கடவுளை வரவேற்கிறார். என்னுள் இருக்கும் ஜீவன் உன்னுள் இருக்கும் ஜீவனைச் சந்திக்கிறது.


நம் முன்னோர்களின் வழக்கமான 'நமஸ்தே' கூறும் முறைக்குக் கணக்கற்ற அர்த்தங்கள் உள்ளன.

சாதாரணமாக, 'நமஸ்தே' என்பது ஒருவரை ஒருவர் இதயப்பூர்வமாகப் பணிவோடு வரவேற்கும் ஒருமுறை.

நமஸ்தே என்னும் பதம் சமஸ்க்ருத பாஷையில் 'நம' மற்றும் 'தே' என்னும் இரண்டு பதங்களின் சேர்க்கையாகும். 'தே' என்றால் 'நீங்கள்', 'நம' என்றால் 'வளைதல்' அதர்வது, ஒருவர் மற்றவரிடம் முழுமையான பணிவோடு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுதலைக் குறிக்கின்றது.

'நம என்னும் பதத்தை இரண்டாகப் பிரிக்காம், 'ந' மற்றும் 'ம' 'ந' என்பது 'என்னுடையது' என்பதைக் குறிக்கின்றது. இதன் முழுமையான பொருள் 'என்னுடையது அல்ல' என்பதாகும். **இதனுடைய உட்கருத்து தனி மனிதனின் ஆத்மாவானது முழுமையாக அந்த பரமாத்மாவிற்கே சொந்தமானது. உண்மையில், தனக்கென்று சொந்தம் கொண்டாடுவதற்கு எதுவுமே இல்லை.** ஆகையால் நமஸ்தே என்பது 'நான்' என்பதையும் அதனுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அகங்காரத்தையும் தள்ளியே ஆக வேண்டும் என்பதைக் குறிக்கிறது. **'நம'வில் இருக்கும் 'ம' என்னும் பதம் இறப்பை (ஆன்மீகமாக) குறிக்கின்றது. இதை 'இல்லை' (ந~ம) எனக் கூறும்போது அது இறப்பற்ற நிலையைக் குறிக்கின்றது.**

'நமஸ்தே' என்பது உடல், மனம் மற்றும் வார்த்தைகளால் என மூன்று விதமாக வெளிப்படுகிறது. மனதால் செய்யும்போது, அது கீழ்க்கண்டவற்றைத் தெரிவிக்கின்றது; **'என்னுள் இருக்கும் கடவுள், உனக்குள் இருக்கும் கடவுளை வரவேற்கிறார்.** என்னுள் இருக்கும் ஜீவன் உன்னுள் இருக்கும் ஜீவனைச் சந்திக்கிறது. அதாவது, அனைத்திலும் உள்ள சமத்துவத்தை உணர்கிறது. அணைத்திலும் உள்ள புனிதத் தன்மையை மதிக்கின்றது.





உடலால், நமஸ்தே கூறும்போது, அதன் பொருள் மிகவும் ஆழமாகிறது. முதன்மையாக, 'நமஸ்தே' என்று சரியாக, செய்ய வேண்டுமானால், நாம் **இடது கையிலுள்ள ஐந்து விரல்களையும், வலது கையிலுள்ள ஐந்து விரல்களையும் சீராக இணைக்க வேண்டும்.** நம் உலக வாழ்க்கையின் முழுமையான அர்த்ததையே இந்த சாதாரணமான செயல் உள்ளடக்கி வைத்துள்ளது. **இடது கையிலுள்ள ஐந்து விரல்களும், ஐந்து விதமான கர்மேந்திரியங்களைக் குறிக்கிறது. மற்றும் வலது கையிலுள்ள ஐந்து விரல்களும் ஞானேந்திரியங்களைக் குறிக்கிறது.** நம்முடைய கர்மா அல்லது செயல் சீராக, சரியான ஞானத்தால் நடத்தப்படவேண்டும். நம்முடைய எண்ணமும் செயலும் நன்கு அமைய உதவ வேண்டும் என உணர்த்துகிறது.

'நமஸ்தே' என்னும் பதத்தின் உட்காருத்தைப் பார்க்கும்போது நம்முடைய வாழ்க்கையில் அது தொடாத பாகமே இல்லை எனலாம்.

**கைகள் ஒன்றோடொன்று சேரும்போது. நம் மூளையின் வலது மற்றும் இடது பாகத்திலுள்ள அரைகோளத்தை** (Hemisphere) **சீராக இயங்கச் செய்கிறது ஞானம் மலர்வதற்கும் முக்தி நிலை அடைதற்கும் உதவகிறது.**

மிகச் சாதாரண நிலையிலிருந்து பார்க்கும்போது, நமஸ்தே என்பது **ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது செய்யும் சமூகப் பரிமாற்றமே.** ஒருவர் மற்றவரை புரிந்து கொண்டதைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், அவர்களைக் கண்டதில் உள்ள ஆனந்தத்தையும் தெரிவிக்கின்றது இந்த சுமூகமான ஆரம்பம். ஒரு நல்ல ஆரோக்கியமான உறவுமுறைக்கு வழிவகுக்கின்றது. 'நமஸ்தே' என்பதை வாழ்த்தாகக் கூறும்போது, நல்லவிதமான உணர்வுகளையும், எண்ணங்களையும் தெரிவிக்கும். ஒரு சொல்லாகவும், செயலாகவும் அமைகிறது. மனித சமூகத்தில், இது ஒரு சமூகரீதியான, உணர்வு ரீதியான, மற்றும் ஆன்மீகரீதியான தொடர்பை ஏற்படுத்தும் ஒரு நல்ல சாதனமாக உள்ளது **'நமஸ்தே' என்று கூறி இரு கைகள் சேரும்போது, மனிதர்கள் தங்களுக்கு இடையே உள்ள பேதங்களை விடுத்து உடனடியாக, எல்லாவிதமான நாகரிகத்தைச் சேர்ந்த மக்களும், அனைவருக்கும் பொதுவான ஒரு நிலையை அடைவார்கள் எனக்கூறப்படுகின்றது**

## பூஜ்ய ஸ்ரீவிமலகீர்த்தி ஆச்சாரியாரின் செய்தி

நமஸ்தே,

அம்மா பகவான் சரணம்,

பகவான் பலமுறை அவதாரங்கள் எடுத்து பூலோகம் வந்த சமயங்களில், ஒவ்வொரு முறையும் அப்போதைய மனிதனின் தேவைக்கு ஏற்ப வெவ்வேறு விதமான மாறுபட்ட போதனைகளைக் கொடுத்து வந்துள்ளார். மனிதனின் முன்னேற்றத்திற்கு தேவையான கருத்துக்களை தற்சமயம் கொடுத்து வருகிறார். அதனால் தான் இப்போது மனிதன் அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு வாழ முடிகிறது. மனிதன் தன் பிரச்சனைகளில் இருந்து, வெளிவர பல வழிகள் இருந்தும், மனிதனால் தன் நிலைமையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. **நாம் கணக்கற்ற பூஜைகள், ஹோமங்கள் செய்திருக்கிறோம். ஆனால் இன்று நாம் செய்யும் ஹோமத்தில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. பகவான் நினைக்கிறார் – இந்தக் காலத்தில் மனிதனைக் காப்பாற்ற வேண்டும் என்றால் ஹோமம் தேவை. எத்தனையோ வழிகளைக் கடைப்பிடித்தும், மனிதனின் பிரச்சனைகள் அப்படியே உள்ளன. பல புத்தகங்கள் படித்தோம் – உபதேசங்கள் கேட்டோம் – கோபத்தை அடக்க நினைத்தோம்.** ஆனால் எதிலும் பலன் இல்லை. மனிதனின் பிரச்சனை எதில் அடங்கி இருக்கிறது? நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கைக்கு சுருக்கமாக வழிகாட்டுகிறார். **இந்த ஜென்மம் எடுத்து, அதில் நாம் ஒரு குருடனாக, ஒரு ஏழையாக, ஒரு செல்வந்தனாக, ஒரு பக்தனாகப் பிறப்பதற்கு ஒரு புனித காரணம் இருக்கிறது. இந்தப் பிறவியை நீங்கள் தான் தேர்ந்தெடுத்தீர்கள். அந்தப் புனிதக் காரணத்தை நிறைவேற்றத்தான் இந்தப் பிறவியை எடுக்கின்றோம்.** மறுபிறவி நமக்கு இருக்கிறதா, இல்லையா என்பது நம் கையில் தான் உள்ளது. இன்று மனிதன் படும் துன்பம், ஒரு தனி மனிதன் பிரச்சனையாகத் தோன்றி, பிறகு

அது குடும்பத்திற்கு, நாட்டிற்கு, பிறகு இந்த உலகத்திற்கே அதே பிரச்சனை உருவெடுக்கிறது. **எல்லா சண்டைகளுக்கும் காரணம் அன்பின்மைதான். அன்பு எவருக்கும் இருதயத்தில் இல்லை. அதனால் எல்லோரும் இந்தச் சண்டையை நிறுத்த** Dlplomatic Relationship **என்ற ஒரு வழியை** சொல்கிறார்கள். நம்மிடம் அன்பு இல்லாமல், ஹ்ருதயம் உள்ளே காய்ந்து போனதால், நாம் அன்பு உள்ளவர்கள் போல நடிக்கின்றோம். இதனால் உடல் பாதிப்பு, ஏற்படுகிறது. (Immune System) எதிர்ப்பு சக்தி குறைகிறது. மனதில் உள்ள குழப்பமே உடல் வியாதியாக மாறுகிறது. ஆகவே **எல்லாவற்றிற்கும் அடிப்படையான காரணம், அன்பு இல்லை என்பது தான்.**

அம்மா, பகவான் அருள்வேண்டி இந்த ஹோமம் செய்வதன் காரணம், என்னவென்றால், இத்தனை ஜென்மங்கள் எடுத்த மனிதன், **தன் அனைத்து பிறவிகளிலும் செல்வத்தை தேடுகிறானே தவிர, ஒரு பிறவியிலாவது மனிதனை தான் நேசிக்க முயற்சிப்பதில்லை.** மற்றவர்கள் மன்னிக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப்பதில்லை. நாம் எல்லோரும் அன்பிற்காகத்தான் ஏங்குகின்றோம். **அன்பான வாழ்க்கை** (Life of love) **வாழ்க்கையே அன்பு** (love of life) **இதற்காகத் தான் இருதயத்தில் ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.** நம் ஒவ்வொரு செயலும் அன்பில்லாத மனநிலையிலிருந்து ஊற்றெடுக்கிறது அதனால் (EVERY ACTION SPRINGS FROM THAT LACK OF LOVE) நம் ஒவ்வொரு செயலும், முழுமையற்றதாக உள்ளது. இதே கதைதான் எத்தனையோ ஜென்மங்களாக, பகவான் கூறுகிறார், உங்கள் அனைவருக்கும் வயது பல ஆயிரங்கள் இருக்கலாம். நீங்கள் அனைவரும் மிக மிக வயதானவர்கள். காலம் மாறிவிட்டது என்று கூறுகிறோம். ஆனால் காலம் மாறவில்லை. **நேற்றுவரை கிழவனாக இருந்தவன், இறந்துபோய் இன்று மழலையாக வந்திருக்கின்றான். அப்போது மனது எப்படியிருக்கும்? கிழவனுடைய மனது தானே? காலம் எங்கே மாற்றம் அடைந்தது?**

இன்றைக்கு இந்த ஹோமத்தில், நாம் அம்மா பகவானிடம், அன்பிற்காக பிரார்த்தனை செய்வோம். எவ்வளவு காலம் தான் நாம் ஒருவருக்கொருவர் சண்டை போடப் போகிறோம்? எவ்வளவு காலம்தான் பிச்சை எடுக்கப்போகிறோம், வாழ்வு முழுவதும், பிச்சை எடுத்துக்கொண்டே இருக்க வேண்டுமா? பகவான் வெளிப்படையாகவே கூறிவிட்டார், நாம் இப்படியே இருந்தால் நீண்ட நாட்கள் வாழ முடியாது என்று, **அதனால் நமக்கு ஒரே வழி நம் உறவுமுறையைச் சீரபடுத்திக் கொள்வதே.** இன்றைக்கு ஹோமத்தில், அம்மா பகவானிடம் அனுக்கிரஹம் பெறுவோம். யாரெல்லாம், ஆத்மார்த்தமாக வாழ்க்கை மாறவேண்டும், புதுமையான வாழ்க்கை தொடங்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ இன்றைக்கு இந்த ஹோமத்தில் தொடங்குங்கள். இந்த ஹோமத்தில் நாம் என்னென்ன செய்கிறோமோ, அது ஆயிரம் மடங்கு நம்மை வந்துசேரும். We are directly tapping the other realms of this Universe. அதுதான் ஹோமத்தின் நோக்கம், இன்று நாம் ஒரு சங்கல்பம் எடுத்துக் கொள்வோம். அம்மா பகவானிடம், நம் உறவுமுறையை சீர்படுத்த பிரார்த்தனை செய்வோம். இந்நாள் நம் வாழ்க்கைக்கு மிக முக்கியமான நாள்.

**"நான் என்ன வேண்டுமானாலும் செய்கின்றேன். ஆனால் நீங்கள் ஒன்றே ஒன்று செய்து கொடுங்கள். குறைந்த பட்சம் மாற வேண்டும் என்ற ஆசையாவது வைத்துக்கொள்ளுங்கள். மாறாவிட்டாலும் பரவாயில்லை மாற வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி வரவேண்டும்" என்று பகவான் கூறுகிறார்.** அடுத்த ஜென்மம் வேண்டாம் என்றால் நான் சொன்னதை நிறைவேற்றுங்கள். Pray to discover love in your heart. இப்படிச் செய்தீர்களேயானால் இங்கிருந்து போகும் போதே அன்பு பொழியும், ஒருவரை ஒருவர் காணும் போதே அன்பை உணர்வீர்கள். You create the reality outside. அன்பைக் கொடுத்து அன்பை பெறுவோம்.

# ஸ்ரீ பகவதிபகவான் மூலமந்திர ஹோமம்

**ஹோமங்களின் முக்கியத்துவம்:**

பண்டைய குறியேடுகள், அந்த ஒரே சிருஷ்டிகர்த்தா மற்றும் ஆயிரக்கணக்கான தெய்வங்கள் அல்லது தெய்வீக சக்திகளைப் பற்றிப் பேசுகின்றன.புனிதத் தன்மை வாய்ந்த அக்னியை உபாசிக்கும் ஹோமங்களின் மூலம், பல தெய்வங்களை அழைத்து நமக்குத் தேவையான வரங்களை அளிக்குமாறு கோருகின்றோம். இந்த ஹோமங்களைத் துல்லியமாகச் செய்யும்பொழுது நமது சைதன்ய நிலை உயருகின்றது. இதுவே நம் வாழ்க்கையில் அதிசயிக்கத்தக்க மாற்றங்களை அளிக்கும் சக்தியைத் தருகிறது.

வாழ்க்கையின் இன்பம் - துன்பம், ஏற்றுக்கொள்ளுதல் - மறுத்தல், சரியான - தவறான கண்ணோட்டம், அன்பு - வெறுப்பு, ஒரு முனைப்படுத்துதல் - சிந்தனை சிதறுதல், ஒருமை உணர்வு - வேறுபடுத்திப்பார்த்தால் - இவை எல்லாமே, சைதன்ய நிலையைப் பொறுத்து இருக்கின்றது என்று சோதனையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. புராதன வழிமுறையில், நமது சைதன்ய நிலையை உயர்த்திக் கொள்ள, பலவிதமான வழிபாட்டு முறைகள் உதவி புரிந்தன.

அவையாவன :

* ஹோமங்கள்
* நாம ஜெபம்
* விரதங்கள்
* பூஜைகள்
* பக்திசங்கீர்த்தனங்கள்
* அபிஷேகங்கள்
* மற்றும் முடிவாக, தீட்சை

இவைகளில் எளிதானது, மற்றும் புகழ் வாய்ந்தது **ஹோமங்களாகும். ஹோமங்கள்** மூலம் நம்மால், கடவுள் அல்லது கருணை, காருண்யம் மற்றும் உயிர்த்திருக்கும் அந்தத் தெய்வீக சைதன்யத்துடன், ஒரு புனிதத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடிகின்றது. இந்தப் புனித உறவு நம்முடைய சைதன்ய நிலையை உயர்த்தி, நம்முடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு கொடுக்கின்றது. ஹோமத்தின் முடிவில், வழிபாடுகளி சிகரமான,

தீட்சை என்பது வழங்கப்படும். நம்முள் உறையும் கடவுளுடன் தொடர்பு கொள்ளவும், அனுபவப்பூர்வமாக உணர்ந்து கொள்ளவும், தவிர நம் இஷ்ட தெய்வம் அல்லது சொந்தக் கடவுளைப் பலரும் காணவும், இந்த தீட்சை உதவி புரியும். நம்முடைய அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கை, உண்மையான கடவுள் அனுபவமாக மாறுகிறது.

பரம சைதன்யத்துடன், புனித உறவு என்ற வரப்பிரசாதத்தைப் பெற்றிருக்கும் ஸ்ரீ அம்மா பகவானின் பக்தர்கள் இந்தத் தெய்வீக மூல மந்திர ஹோமத்தைச் செய்கிறார்கள்.

**மூலமந்திர ஹோமத்தின் பயன்கள்:**

* ஐஸ்வர்யம் மற்றும் சுபிட்சம்.
* வியாபாரம் பெருகும் சூழ்நிலையை உருவாக்கும்.
* ஐஸ்வர்யம் வருவதற்கான தடைகள் மற்றும் சாபங்களை நீக்கி, செல்வச்செழிப்பு உண்டாக்கும்.
* உடல் ஆரோக்கியம் பெறும்
* திருமணத்தடை நீங்குதல்.
* திருமண வாழ்வின் உறவுமுறை பலப்படுதல், மற்றும் குழந்தை பாக்கியம்.
* கிரஹ நிலை சரி செய்து, அதன் மூலம் நம் மனம், உடல் ஆன்மா மேன்மையுற வழி வகுத்தல்
* கிரஹ நிலை கோளாறுகளின் தடைகள் நீங்குதல்.
* ஞாபக சக்தியும் கவனமும் மேம்படுதல்.
* மறைந்திருக்கும் திறமை வெளிப்படுதல்.
* உயர்கல்வி வாய்ப்பு.
* வளமான வாழ்வு மற்றும் உடல் நலம் அடையக் கேடு விளைவிக்கும் தீய சக்திகள் விலகுதல்.
* முற்பிறவிப் பயன் மற்றும் கர்மாவிலிருந்து விடுதலை.
* இதுவரை நம் வாழ்வை நிர்ணயம் செய்த, எதிர்மறை அமைப்புகள் முடிவுக்கு வருதல்
* உறவுமுறை சீர் பெறுதல்.

**மூலமந்திரத்தின் விசேக்ஷம்**

ஷத்ருச் சைக மந்த்ரம்

சகல முபனிஷத் வாக்ய சம்பூஜ்ய மந்த்ரம்

ஸம் சாரோதார மந்த்ரம்

ஸமுபசித் தமஸங்க நிர்யாண மந்த்ரம்
ஸர்வைஷ்வர்யக மந்த்ரம்
வ்யஸனபுஜேக ஸந்தாஷ்ட ஸந்த்ராண மந்த்ரம்
விஸ்வே ஸ்ரீ பகவத் மந்த்ரம்
ஜபஜப சதம் ஜன்மஸாபல்ய மந்த்ரம்

**அர்த்தம்:** எல்லாவிதமான துரதிஷ்டங்களை அழித்து, உபநிஷத்துக்களின் சத்தியங்களை அரவணைக்க வல்லது இந்த மந்திரம். நம் லௌகீக பிரச்சனைகளிலிருந்து விடுதலை மற்றும் நாம் இதுநாள்வரை சேர்த்து வைத்த 'பாவங்'களிலிருந்து விமோசனம் அளிக்கிறது. ஐஸ்வர்யம் மற்றும் வளம் பொழிய வல்லது. துக்கம் என்னும் இருளைநீக்கி. நம் வாழ்வில் இன்பம் என்னும் ஒளியை அளிக்க வல்லது. ஜனன - மரண சக்கரத்திலிருந்து விடுதலை அளித்து ஆதி அந்தமில்லாத ஆனந்தத்தை அளிக்க வல்லது.

**மனிதனின் இன்றைய நிலை:** அருளை நாட, நாம் பல வழிமுறைகளை முயற்சி செய்தோம். நாம் தியானம் செய்ய முயல்கிறோம். ஆனால் நம் மனதின் எண்ண ஓட்டங்களைத் தடுக்க முடியாமல், சோர்ந்து போகிறோம். பக்தி மார்க்கத்தில் செல்ல முயற்சி செய்து அதில் நமக்கு பாவமும் தேவையான நம்பிக்கையும் இல்லாததை உணர்கிறோம். ஏதாவது செய்து கடவுணை அடைய விரும்புகின்றோம். அது என்ன வழி?

**தீர்வு: "கடவுளின் நாமம் சொல்லுவதே, அவரை அடைய சுலபமா வழி"** என்பதும் நம் முன்னோர் வாக்கு. உங்களால், தியானம் செய்யவோ அல்லது பஜனைகள் செய்யவோ முடியவில்லை என்றாலும் நீங்கள் இந்த மந்திர உச்சாடனம் செய்யலாம்.

**"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா**
**ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ:"**

இன்று இந்த சக்தி வாய்ந்த மந்திரம் பல்வேறு நம்பிக்கைகளைக் கடைப்பிடிக்கும் மனிதர்களால் உலகம் எங்கும் ஜெபிக்கப்படுகிறது. **இது ஒரு குறிப்பிட்ட கடவுளுக்கு சொந்தமானது அல்ல : இது அந்த கடவுளின் குணாதிசயங்களை விவரிக்கிறது.** கடவுளிடம் தொலைபேசியில் பேசுவதற்கு இணையானது இந்த மந்திரம் சொல்வது. இது அம்மா பகவானுடன் தொடர்பு கொள்ள வைத்து அவர்களின் அருளை நாட வைக்கிறது.

# துளசி

உலகளந்த பெருமானாகிய ஸ்ரீமத் நாராயணனுக்கு மிகவும் உகந்தது துளசி. இந்தத் துளசியானது சர்வரோக நிவாரணியும் ஆகும். துளசிச் செடி வீட்டில் இருந்தாலும் அதனை வழிபாடு செய்தாலும் நமது உடலுக்கும் மனதிற்கும் ஆரோக்கியம் வளர்கின்றது என்பது ஆராச்சியாளர் கண்ட உண்மை. விஷ ஜெந்துக்கள் கூட வீட்டை அண்டாது. துளசிக்கு குங்குமப் பொட்டிட்டு வழிபடுவதால் நம் இல்லத்தினுள் எதிர்மறையான சக்திகள் அண்டாது. திருமாலுக்குப் பிரியமான துளசிச்செடியை வளர்ப்பதாலும் பூஜிப்பதாலும் துளசி என்ற திருநாமத்தை ஜபிப்பதாலும் எல்லா விதமான செல்வச் சிறப்புகளும் மனஅமைதியும் லஷ்மி நாராயணன் திருவருளால் பெருகும்.

முன்னொரு காலத்தில் சங்க சூடன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் பல அருந்தவங்கள் புரிந்து பெற்ற வரபலத்தால் பல கொடுமைகள் செய்துவந்தான். அவனது கொடுமைகளைத் தாங்கமுடியாத மண்ணவரும் விண்ணவரும் செய்வதறியாது மும்மூர்த்திகளிடம் சென்று முறையிட்டனர். கோபமடைந்த மும்மூர்த்திகளிற்கும் சங்கசூடனுக்குமிடையில் கடும் யுத்தம் நடந்தது. ஆனாலும் சங்கசூடனை யாராலும் வெல்லமுடியவில்லை. காரணம் அவனது கடும் தவத்தின் பயனாகப் பெற்றுத்தன் கழுத்தில் அணிந்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ண கவசமாகும். அக்கவசம் அவனைக் காப்பாற்றும் என்று அறிந்தனர்.

சங்கு சூடானின் மனைவி (துளசி) மகாபதிவிரதை, அவளது கற்பின் திறன் அவள் கணவனுக்கு அரணாக விளங்கியது. துளசியின் கற்பின் திறனை உணர்ந்த பரந்தாமன் கற்பினுக்கு அரனாகவிளங்கும் துளசியை ஸ்தோத்தரிப்பதை தவிர வேறு வழியே இல்லை என்று உணர்ந்து துளசியை தோத்தரித்தார்:

வைகுந்த வாசனே தன்னை துதித்ததை எண்ணி துளசி தன்னை மறந்தாள் நெஞ்சம் நெகிழ்ந்தாள்; மிகவும் மகிழ்ந்தாள்; அன்பைப் பொழிந்தாள்; அவரை வாயாரப் புகழ்ந்தாள்; ஆடினாள்; பாடினாள்; அக மகிழ்ந்தாள்; கற்புக் கனலாக நின்ற அவளை நாராயணன் ஆதரவுடன் நோக்கினார். ''வேண்டிய வரங்களைக் கேள்'' என்றார். அதற்கு துளசி, **மீண்டும் பிறவாவரமும் பிறந்தால் நாராயணரை மறவா மனமும், கேட்டு ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பாதங்களில் பணிந்தாள்.** அவளது உயிர் மஹாவிஷ்ணுவின் பாதங்களில் ஒளிவடிவாய் சென்றடைந்தது. அவளது உடல் **கண்டகி** எனும் நதியாக மாறியது. அவளது கேசம் ***துளசிச்செடியாகித்துளசி*** வடிவமானது. ஸ்ரீமஹாவிஷ்ணு அந்தத் துளசியை மாலையாக்கி **துளவத்தாமனாகக்** காட்சியளிப்பவரானர். மனைவியைப் பிரிந்த சங்குசூடன் சக்தியற்றவனானான். **அவனது கர்மவினையே அவனது அழிவிற்கு வழிவகுத்தது.**

ஸ்ரீதேவியின் ஓர் அங்கம் பூவுலகில் தம் மக்களின் உடற்பிணி, உள்ளப்பிணி, ஆகிய பிணிகளைப் போக்கிப் பேரின்ப வாழ்வளிக்க எடுத்த வடிவமே ஸ்ரீ துளசி. ***ஸ்ரீ மஹாலஷ்மியே இந்தத் துளசிச் செடியாய் மாறி ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கு மிகவும் விருப்பமுள்ள மலராக விளங்குகிறாள்.*** துளசி இல்லாத பூஜையை ஸ்ரீமத்நாராயணர் ஏற்றுக் கொள்வதில்லை. ''**திருத்துழாய்**'' என்ற பெயரில் பெருமாள் கோயில்களில் சிறந்த பூஜைப் பொருளாக விளங்குவதும் இந்தத் துளசியே. துளசி உள்ள இடத்திலே நாராயணர் எப்போதும் வாசம் செய்கிறார். நாராயணர் எங்கு இருக்கிறாரோ அங்கே மஹாலஷ்மியும் வாசம் செய்கிறாள் என்பது நாம் அறிந்த உண்மை.

**துளசியால் மஹாவிஷ்ணுவைப் பூஜிப்பவர்கள் 1000 பாற்குடங்களால் அபிஷேகம் செய்த மன மகிழ்ச்சியை ஸ்ரீ மஹாவிஷ்ணு அடைகிறார் என்பது நம்பிக்கை. அந்திய காலத்தில் துளசி தீர்த்தம் உட்கொண்டால் பிறவி நீங்கி வைகுண்டபதவி அடைவர் என்பதும் நம்பிக்கை. துளசியினால் ஸ்ரீ மஹாதேவனையும் அர்ச்சிக்கலாம். ஏனெனில் அவர் சங்கர நாராயணராகவும் இருக்கிறார்.**

இத்தகைய மகிமைவாய்ந்த ஸ்ரீ துளசியை நம் வீடுகளில் மாடம் அமைத்து பக்தி சிரத்தையுடன் பூஜித்தால் இகபரசுகம் பெறுவர். கன்னிப்பெண்கள் பூஜித்தால் நல்ல கணவனைப் பெறுவார்கள். சுமங்கலிகள் பூஜித்தால் தீர்க்க சுமங்கலியாகவும், சகல சௌபாக்கியங்களையும் பெறுவார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்ரீ துளசி மாதாவின் புகழும் பெருமைகளையும் சொல்பவர்களும் கேட்பவர்களும், நினைப்பவர்களும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அருளும் ஆசியும் கிட்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஸ்ரீ துளசியை வணங்குவோர்க்கு எல்லா ஞானங்களும் உண்டாகும். அளவற்ற செல்வம் உண்டாகும். ஒரு **அசுவமேத யாகம்** செய்து முடித்த பலனையும் அடையலாம்.

துளசி இலையின் நுணியில் நான்முகனும், அடியில் சங்கரனும், மத்தியில் நாராயணனும், வசிக்கிறார்கள். (துர்கா, லஷ்மி, சரஸ்வதியும் அவர்களுடன் வாசம் செய்கிறார்கள்.)

**பன்னிரண்டு ஆதித்யர்கள், பதினொரு ருத்திரர்கள், எட்டு வசுக்கள், அசுவனி தேவர்கள் இருவர் வசிக்கின்றனர். துளசி இலையின் ஜலம் கங்கைக்கு நிகரானது. துளசிக்கு 'ப்ருதா' என்றும் ஒரு பெயர் உண்டு. ப்ருதா என்பதற்கு சேவை என்றும் ஒரு பொருள் உண்டு.**

சமஸ்கிருத பாஷையில் ''துலானாய நாஸ்தி அதைவதுளசி'' எனப்படும். அதாவது அதனுடைய குணங்கள் எதனுடனும் ஒப்பிடமுடியாதது என்பது பொருள். ஒருமுறை பூஜையில் உபயோகப்படுத்திய பின்னரும் மறுபடி அதைக்கழுவி உபயோகப்படுத்தக்கூடிய ஒரேபொருள் துளசி. தன்னைத்தானே சுத்தீகரிக்கும் தன்மை கொண்டது. மஹாவிஷ்னுவின் பாதங்களில் சேவை செய்யும் பதிவிரதையான தேவிதான் துளசி என புராணங்கள் கூறுகின்றன.

துளசிக்கு ஹரிப்பிரியா விஷ்ணுபிரியா என்ற பெயரும் உண்டு துளசி தளம் (இலை) கலந்த தீர்த்தத்தைப் பருகுபவர்களுக்கு உடல், உளம் நலம் பெறும் தீயசக்திகள்

அண்டாது. துளசி இலைகளைப் பறிப்பதற்கு முன் அதை வணங்கி கீழ்வரும் ஸ்லோகத்தை சொல்வது நன்று.

''விருந்தாயை துளசீ தேவியை,
பிரியாயை கேசவஸ்ய ச
கேசவார்த்தே சினோமி த்வாம
வரதா பவ ஸ்ர்வதா''

பொருள் : (திருமாலுக்கு உகந்த துளசியே உன்னை நமஸ்காரம் செய்கிறேன் கேசவனை ஆராதிக்க உன்னைத் தொழுகிறேன். எனக்கு அருள் வழங்குவாயாக.)

பிருந்தா, பிருந்தாவினீ, விஸ்வபூஜிதா விஸ்வ பவானி
புஸ்ப ஸாரா, நந்தினி, துளஸீ, கிருஷ்ணா ஜீவன்
ஏகக் நாமஸ்டகஞ் சைவ ஸ்தோத்திரம் நாமார்த்ர
ஸம்யுதம்ய படேத
தாஞ்சஸ்ம் பூஜய ஸோர்ஸ்வதேம பலம் ஸபேத!

இம் மந்திரத்தில் வரும் எட்டு நாமங்களும் காரணப் பெயர்களாகையால் அதை மனனம் செய்வோரும் துளசி மணிமாலை அணிந்தவர்களும், துளசிநீரை அருந்துபவர்களும் சகல சௌபாக்கியங்களும் பெறுவர் என்பதும் உண்மை.

''யன்மூலே சர்வதிர் ஹானி
யன்அக்ரே சர்வதேவதா
யன் மத்யே சர்வவே தாஸ்ச
துளசீ தம் நமாம்யஹம்''

பொருள் : யாருடைய கீழ்பாகத்தில் எல்லாபுனித ஸ்தலங்களும் உள்ளனவோ யாருடைய மேல் பகுதியில் எல்லா தேவர்களும் வசிக்கின்றனரோ யாருடைய நடுப்பகுதியில் வேதங்கள் உறைகின்றனவோ அந்தத் துளசியை நான் தலை வணங்கு கின்றேன்.

# பாதுகா பூஜை

## தேவையான பொருட்கள்

பன்னீர் - 1/2 போ
மஞ்சள் - 100 கிராம்
சந்தனம் - 100 கிராம்
குங்குமம் - 100 கிராம்
துளசி - ஓருபிடி
அறுகம்புல்

பால் - தேவைக்கு ஏற்ப
தயிர் - 1கப்
தேன் - சிறிதளவு, 100*ml*
நெய் - சிறிதளவு, 100*ml*
இளநீர் - 1

**பழரசத்திற்கு**

மாதுளம்பழம்
தோடம்பழம்
திராட்சைப்பழம்
மாம்பழம்
எலுமிச்சம்பழம்

**பஞ்சாமிர்தம்**

மாம்பழம்
பலாப்பழம்
வ்ாழைப்பழம்
மாதுளம்பழம்
விளாம்பழம்

**உலர்ந்தபழங்கள்**

முந்திரி
திராட்சை
பாதாம்
பிஸ்தா
அச்சுவெல்லம்(சக்கரை)
பேரீச்சை
கற்கண்டு

**பஞ்சபூக்கள்**

தாமரை
மல்லிகை
செவ்வரத்தை
செவ்வந்தி
ரோஸ்

விபூதி
சந்தனம்
குங்குமம்
அட்சதை
தேங்காய்

பூமாலை
பட்டு
கற்பூரம்
நெய்
வெற்றிலை

பஞ்சுத்திரி
சாம்பிராணி
தீப்பெட்டி
பழம்
பாக்கு

ஆராத்தி :- கற்பூரஆரத்தி
ஏகஆரத்தி
பஞ்ச ஆரத்தி
மங்கள ஆரத்தி தெட்சனை - (விரும்பியது)

குறிப்பு :- (இங்கு குறிப்பிடப்பட்ட அபிஷேகப்பொருட்களும் பாத்திரங்களும் பிரசாதங்களும் உங்கள் வசதிக்கு ஏற்ப செய்யலாம்)

(i) அட்சதை :- வெள்ளைப்பச்சை அரிசி (தேவைக்கு ஏற்ப)யுடன் சிறிதளவு நெய் + மஞ்சள்தூள் கலந்து வைத்துக் கொள்ளவும்.

(ii) அபிஷேகத் தீர்த்தங்கள் வீடுகளிற்கு எடுத்துச் செல்ல விருப்புவர்கள் அதற்குரிய Bag or Bottle வைத்திருக்கவேண்டும் துளசிதீர்த்தம் தனியே கொண்டு செல்லவேண்டும்.

## தேவையான பொருட்கள்

1. (i) பாணி வட்டம் (அபிஷேகத்தீர்த்தங்கள் வழிந்தோடத்தக்கதாக அமைக்கப்பட்ட தட்டம் அல்லது அதற்கு ஏற்றமாதிரி ஒரு தட்டம்)

2. பெரிய தாம்பாளம்
(பாதுகைகள் வைப்பதற்கு அர்ச்சனை செய்வதற்கு)

3. தட்டம் (Tray - 4. பஞ்சபழங்கள், உலர்ந்த பழங்கள் பூமாலை பட்டு, கற்கண்டு, வெல்லம் - போன்றவை வைப்பதற்கு)

4. தட்டு - 5 பஞ்ச பூக்கள் வைப்பதற்கு (உங்கள் வசதிக்கு ஏற்ப)

5. செம்பு - 8 (ஜலம் - பன்னீர், மஞ்சள்நீர், சந்தன நீர், குங்கும நீர், துளசி தீர்த்தம், தயிர் - பால்)

6. சிறிய ரம்ளர் - (தேன், நெய்)

7. ரம்ளர் - 5 பழரசங்கள் வைப்பதற்கு

8. பெரிய பாத்திரம் - சுத்தமான வாளி அல்லது பாத்திரம் - 3

9. சங்கு அல்லது செம்பு - அபிஷேகம் செய்வதற்கு
பாதுகைகள் வைப்பதற்கு ஏற்ற மாதிரி பீடம் (ஸ்ரீல்)
வெள்ளைத்துணி - 2 (விரிப்பு)
வெள்ளை ரவல் - 2 (பாதுகைகள் துடைப்பதற்கு)
மஞ்சளில் பிடித்த பிள்ளையார் அல்லது பிள்ளையார் சிலை

**பூஜை :-**

1) பக்தர்களை வரவேற்றல், அறிமுகம்

2) பாதுகைகளை பூஜை மண்டபத்திற்கு பவித்திரத்துடன் எடுத்து வருதல்வேண்டும். மண்டபத்தின் வாயிலில் வைத்து பாதுகைகளிற்கு ஆரத்தி எடுக்கவேண்டும். பக்தர்கள் எழுந்து நின்று சிரசின் மேல் கைகள் கூப்பி மூலமந்திரம் ஜெபம் செய்தல் வேண்டும்.

பாதுகை தாங்கி வரும் பக்தர் ஸ்ரீமூர்த்திமுன் வந்ததும் வலம் சுழியாத தன்னைத் தானே ஆத்ம பிரதட்சணம் செய்து பின் பாதுகைகள் பீடத்தில் வைக்கப்பட வேண்டும் பாதுகைகள் பக்தர்களை நோக்கியவாறு இருக்கவேண்டும்.

3) கற்பூர ஆரத்தி (மூலமந்திரம்) மூன்று முறை

4) அனைவரும் நமஸ்காரம் செய்த பின் தத்தமது இடத்தில் அமர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

5) **ஆன்மீக உரை**

ஆன்மீக உரையில் சேர்க்கப்பட வேண்டிய விசயங்கள் :-

(i) நாமும் நம்முன்னோர்களும் இதுவரை செய்த பூஜைகள், அபிஷேகங்கள், தர்மங்கள், சத்கர்மாக்கள் ஆகியவற்றின் புண்ணிய பலனால் இந்த விசேஷபூஜையில் கலந்துகொள்ளும்பாக்கியம் நமக்குக் கிடைத்துள்ளது.

(ii) நாம் எத்தகைய பூஜை செய்தாலும் அவை அனைத்தும் ஐஸ்வர்யத்தினுள்ளே அடங்கும் ஐஸ்வர்யம் என்றால் செல்வம் மட்டுமல்ல நம் வாழ்க்கையில் ஒவ்வொரு வினாடியும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் சீரான தேவைகள் அனைத்தும் ஐஸ்வர்யத்தினுள் அடங்கும் அதில் ஏதோ ஒன்றை வேண்டி ஒருவர் பிரார்த்தனை செய்யலாம். நாம் தேடும் செல்வத்தின் திறவுகோலே பிரார்த்தனை தான்.

(iii) பெற்றோரை மதித்து நடத்தல், மன்னித்தல், மன்னிப்புக்கேட்டல், மற்றவர்களிற்கு மனக்காயங்கள் ஏற்படாதவாறு நடத்தல், உறவு முறைகளின் முக்கியத்துவம், முன்னோரின் ஆசீர்வாதங்களின் முக்கியத்துவம் என்பவை பற்றி எடுத்துரைக்கவும்.

முடிந்தால் உதாரணத்திற்கு கதைகள் மூலம் விளக்கலாம் - அல்லது உங்கள் வாழ்விலோ அல்லது மற்றவர்களின் வாழ்விலோ (அவர்களின் அனுமதியுடன்) நடந்த சம்பங்கள் மாற்றங்கள் பற்றி கூறலாம்.

(iv) பாதுகை அபிஷேகம் என்பது சுயமாக அம்மா பகவானுடைய பாதங்களிற்கு அபிஷேகம் செய்வதற்கு சமமாகும்.

திரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரானின் பாதங்கள் அயோத்தியை அரசாண்டதை நாம் புராணங்களின் மூலம் அறிந்ததுண்டு ஆனால் அதையே இன்று நம் வாழ்வில் அனுபவமாகக் காண்கின்றோமே! எத்துணை புண்ணியம் நாம் செய்திருக்கவேண்டும்?. என்று சிந்தித்துப்பாருங்கள். அம்மா பகவானின் பாதுகைகளிற்கு நாம்

அபிஷேகம் செய்யும் போது **அம்மாபகவானின் அருள் வெள்ளமென எம்மை வந்து சேரும். அருள் என்பது உங்கள் வாழ்வில் அசாத்தியம் என்று நினைத்தவைகளை சாத்தியமாக்கிக்கொடுப்பதே ஆகும்.**

**நீங்கள் அம்மாபகவானின் அனுக்கிரகத்தை கேட்கும்போது உங்கள் வாழ்வில் முடியாது என்பதை முடித்துக் கொடுப்பதே ஆகும்.**

(v) கர்மா - சத்கர்மா பற்றிக் கூறவும்

(vi) நீங்கள் செய்யும் அபிஷேகத்தின் பலனால் அம்மாபகவானின்பாதங்களை உங்கள் வீடுகளில் ப்ரத்யட்சமாகக் காணலாம்.

தேவாதிதேவர்களால் பூஜிக்கப்பட்ட அத்தெய்வீக பாதங்களிற்கு நாமும் பூஜை செய்வது நம்முடைய பூர்வஜென்ம பலனே ஆகும்.

(ரோஹினின் நட்சத்திரத்தில் பாதுகா அபிஷேகம் செய்வது விஷேசமாகும்)

பக்தர்கள் கண்களை மூடி இருகரம் ஏந்தி
அம்மா பகவானின் பரமசைத்தன்யம் நம்முள் வரவேண்டும் என்று கேட்டுப்பிராத்தணை செய்யவும்.

(V) **ஆனந்த பஜன்**

(பாதுகைகளின்அற்புதங்களைக் கூறும் பஜனும் பாடலாம்)

**விநாயகர் பூஜை** (விளக்கம்).

## அபிஷேகம்

பாதுகைகள் பாணிவட்டத்தில் வைக்கவும் அபிசேகத் திரவியங்கள் ஏந்துவதற்கான பாத்திரம் வைக்கவும்.

ஒவ்வொரு அபிஷேகத்தின் பின்பும் பூவைத்து தீபம் காட்ட வேண்டும்.

பின் பூக்களை எடுத்துவிட்டு பாதுகைகளை நீரினால் கழுவவேண்டும்

| அபிஷேகப்பொருள் | பலன் | மந்திரம் |
|---|---|---|
| (i) நீர் | அமைதி | த்துவமேவமாதாச்ச... |
| (ii) மஞ்சள்நீர் | தீயசக்திகளை விலக்குதல் | துர்க்கா காயத்ரி |
| (iii) சந்தனநீர் | மேலானபதவி குளிர்ச்சி | நாராயணகாயத்திரி |
| (iv) குங்குமநீர் | ஐஸ்வர்யம் | சர்வமங்கள மாங்கல்யே. |

பாதுகைகளில் இருந்து குங்குமம் சந்தனம் எடுத்து ஸ்ரீமூர்த்திக்கு இடவும் பின்பக்தர்களிற்கும் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| (v) துளசிதீர்த்தம் | சர்வரோகநிவாரணம் | துளசிகாயத்திரி சேவைபாக்கியம் |

துளசி தீர்த்தம் தனியே எடுத்து ஸ்ரீமூர்த்திக்கு முன் வைக்கவும். பிரார்த்தனை :- செம்பில் உள்ள தீர்த்தம் சர்வரோக நிவாரண தீர்த்தமாக மாறவேண்டும்.

| | | |
|---|---|---|
| இளநீர் | - ஆன்மீகபலம் | குருமந்திரம் |
| தியாகம் | - நல்ல பதவி | |
| பால் | - ஆயுள்விருத்தி | மூலமந்திரம் 3 முறை பஞ்சஆராத்தி |
| தயிர் | - புத்திரபாக்கியம் | சீதாகாயத்திரி |
| பழரசங்கள் | - எமபயநிவர்த்தி | மிருத்துஞ்சய மந்திரம் |
| பஞ்சாமிர்தம் | - ஐஸ்வர்யம் | அம்மா காயத்திரி |
| பன்னீர் | - சந்தோசம் | பகவான்காயத்திரி |

**அம்மா காயத்திரி**

**ஓம்ஶ்ரீ கல்கிபத்னீச்ச வித்மஹே**
**பக்த ஹிருதயவிஹாரின்யைதீமஹி**
**தந்நோ அநுக்ரகப்ப்ரஷோதயாத்.**

**பகவான் காயத்திரி**

**ஓம்ஶ்ரீ கல்கீஸ்வராய வித்மஹே**
**பக்த பராதீனாய தீமஹி**
**தந்நோ முக்திப் ப்ரஷோதயாத்...**

பால், பஞ்சாமிர்தம்,இளநீர் பூஜைமுடிவில் பக்தர்களிற்கு பிரசாதமாக் கொடுக்கலாம்.

பாதுகைகளை நண்கு கழுவித்துடைத்து ஒரு தாம்பளத்தில் பட்டுவிரித்து மலர்கள்தூவி அதன்மேல் வைக்கப்பட வேண்டும்.

(i) தூபம் காட்டவும்
(ii)விபூதி - சந்தனம் - குங்குமம் - வைக்கவும்
(iii)அட்சதை - தூவவும்
(iv) பட்டுசாற்றி பூமாலை சூட்டவும்

**பிரார்த்தனை நேரம்**

(தெளிவு - பந்தம் - இயலாதநிலை - நன்றியுணர்வு என்வற்றை கருத்திற் கொள்ளவும்)
தனி ஒருவர் பிரார்த்தனை.
கூட்டுப் பிராத்தனை - செய்யவும்

**புஸ்பாஞ்சலிம் சமர்ப்பயாமி**

ஆகாஷாத் பதிதம் தோயம் யதா கச்சதி சாகரம் /
சர்வ தேவ நமஸ்காரம் பகவந்தம் ப்ரதிகச்சதி //
ஓம் நானாவித பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி /

(அட்சதை, குங்குமம், பூக்கள், நாணயங்கள் கொண்டும் அர்ச்சனை செய்யலாம்)

தனி ஒருவரோ கூட்டாகவோ, குடும்பமாகவோ அர்ச்சனை செய்யலாம்.

பூஜைகளிலோ, அம்மா பகவான் தரிஷணத்திலோ குடும்பமாகப் பங்கு பற்றும் போது அம்மா பகவானின் அருள் வெள்ள மெனக்கிடைக்கும் (அன்றைய பூஜையின் நோக்கம் எதுவோ அதற்கு ஏற்ப மந்திரங்கள் சொல்லலாம்.)

பொது - மூலமந்திரம் 108 முறை
ஐஸ்வர்யம் - மகாலஷ்சுமி அஸ்டோத்திரம்
ஆரோக்கியம் - தன்வந்தரி அஸ்டோத்திரம்
குடும்பசேமம் - ஸ்ரீ கல்கி அஸ்டோத்திரம்
நன்றி - அம்மா சதாநாமாவளி
கல்வி - சரஸ்வதி அஸ்டோத்திரம்

**தூபம் ஆக்ராபயாமி**

ஓம் காரம் பிந்து ஸம்யுக்தம் நித்யம் த்யாயந்தி யோகிநஹ/
காமதம் மோஷதம் சைவ ஓம் காராய நமோ நமஹ.

**தீபம் தர்ஷயாமி** (நெய் தீபம் ஏற்றவும்)

ஓம் அநேக ஜன்ம ஸம்ப்ராப்த கர்ம பந்தந விதாஹினே
ஆத்ம க்ஞானாக்னிதானேன தஸ்மை ஸ்ரீ பகவதே நமஹ //

**நைவேத்தியம் தாம்பூலம் ஸமர்ப்பயாமி**

ஓம் பூர் புவஸ்ஸுவஹ தத்ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோநஹ ப்ரோசோதயாத்
ஓம் தேவ ஸவித ப்ரஸுவஸந்யம்(ருதம்)த்வத்தேநா
பரிஷிஞ்சாமி அம்ருதம் பவது அம்ருதோபஸ்தரணமஸி //

ஓம் ப்ராணாய ஸ்வாஹா// ஓம் அபானாய ஸ்வாஹா//
ஓம் வ்யானாய ஸ்வாஹா// ஓம் உதானாய ஸ்வாஹா//
ஓம் ஸமாநாய ஸ்வாஹா// ஓம் ப்ரஹ்மண்யே ஸ்வாஹா//

(நைவேத்தியம் மூன்றுமுறை பூவால் நீர் தெளித்து பூப்போடவும். நைவேத்தியத்தட்டை சிறிது அசைத்துவிடவும்.)

ஓம் பூர் புவஸ்வக தஸ்ஸ விதுர்வ ரேன்யம்
பர்கோ தேவஸ்யதீமதி
தியோ யோநஹப் பிரஷேதயாத்.

ஓம் ஸ்ரீ பகவதி ஸமேத ஸ்ரீபகவதே நமஹ
ஓம் ஸ்ரீ மஹகணபதி யேநமஹ
ஓம் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணாய நமஹ

நாரிகேல பழம் கதலி பழம் நூதனபழம்
பஞ்ஞாமிர்தம் மஹாநைவேத்தியம் நிவேதயாமி

மத்யமத்ய அம்ருதோபானியம் ஸ்மர்பயாமி
அம்ருதா பிதாரணமஸி
ஓம் பூர் புவஸ்வஹ
கற்பூர நீராஞ்சனம் தர்ஷயாமி
நமஸ்காரம் ஸமர்ப்பயாமி

வாழி
நன்றி பஜன்
பஞ்ச ஆரத்தி
சரணாகதி
சாந்தி மந்திரம்
முக்தி தீட்சை, நோய் நிவாரண தீட்சை கொடுக்கலாம்.

## அபிஷேகப் பொருட்களும் அவற்றின் பயன்களும்

| | |
|---|---|
| ஜலம் | - சாந்தி, அமைதி |
| மாம்பழம் | - வெற்றி |
| பஞ்ஞாமிர்தம் | - 16 வகை செல்வங்கள் |
| இளநீர் | - உயர்ந்தபதவி, ஆன்மீக பலம், |
| விபூதி | - நன்மை |
| சந்தனம் | - இறைவனோடு இரண்டறக்கலத்தல் குளிர்ச்சி மேலானபதவி. |
| குங்குமம் | - லக்சுமிகடாச்சம் |
| பன்னீர் | - சந்தோஷம் |
| பால் | - ஆயுள்விருத்தி |
| நெய் | - மோட்சம் |
| எள்எண்ணெய் | - விஷஜ்ரநிவர்த்தி |
| எலுமிச்சம்பழம் | - எமபயநிவர்த்தி |
| வாழைப்பழம் | - பயிர் விருத்தி |
| தயிர் | - புத்திரபாக்கியம் |

| | |
|---|---|
| தேன் | - நல்லகாரியம் கலைவாணியின் அருள் |
| வெல்லம் | - துக்க நிவர்த்தி |
| சர்க்கரை | - சத்துரு நிவர்த்தி |
| சாதம் | - சகலநன்மை |
| கரும்புச்சாறு(கற்கண்டு) | - ஆரோக்கியம் |
| வஸ்திரம் | - வறுமையைப் போக்கும் |
| மாதுளம்பழம் | - மகாலக்சுமிக்கு உகந்தது. |
| துளசி | - நாராயணருக்கு பிரியமானது. சர்வரோக நிவாரணம், சேவைபாக்கியம் |

(அறுகம்புல், வில்வம், துளசி, தாமரைப்பூ, நவதானியம், நவரத்தினம்,, செந்தூரம், போன்றவற்றாலும் அர்ச்சனை செய்யலாம்)

## வெற்றியின் திறவுகோல்

இன்று இளைஞர்களுக்கு இருக்கும் பெரும் பிரச்சனை என்ன? எந்த விஷயத்திலுமே ஒரு குறிக்கோள் இல்லை. அப்படி குறிக்கோள் இருந்தால் அதை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுப்பதை தள்ளிப்போடுகின்றோம் ... Concentration இல்லை.

படிக்கும் மாணவர்களுக்கு என்ன பிரச்சனை? படிக்கமுடிவதில்லை அப்படியே படிக்க உட்கார்ந்தால் அதில் சரியாக கவனம் இருப்பதில்லை. அப்படியே படித்தாலும் அது சீக்கிரம் மறந்துவிடுகின்றது. படிக்கும் மாணவர்கள் முக்கியமாக 3 விடயங்களில் கவனம் கொள்ள வேண்டும்.

i) Right Vision - குறிக்கோள்

ii)Discorering Swadharma - சுதர்மாவை கண்டுபிடித்தல்

iii) Meditation - Dhyanam (தியானம்)

i) **குறிக்கோள்**

தோமஸ்அல்வாஎடிசனை எடுத்துக்கொண்டோ மானால் பள்ளிப் பருவத்தில் மிகவும் குழப்படித்தன மாக இருந்தார். ஆனால் மின்குமிழைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தளராமல் இருந்தார் அவரது முயற்சியில் தோல்வியடையும் போதெல்லாம் அவருடைய தாயார் "Don't Worry one day you would show Light to the world" கவலைப்படாதே ஓருநாள் நீ உலகிற்கு வெளிச்சத்தைக் காட்டுவாய் - என்று கூறி ஊக்கமளிப்பார். இறுதியில் பலவருடங்களுக்குப்பின் அவர் மின்குமிழைக் கண்டு பிடித்தார். அப்போது அவரைக் கேட்டபோது அவர் சிரித்த படியே எனது கண்டுபிடிப்பு " 99% கடினஉழைப்பு, 1% தான் கண்டுபிடிப்பு"என்று கூறினார்.

ஏன் இந்த 1% inspiration வேறு எவருக்கும் ஏற்படவில்லை? ஏன் மின்குமிழை எடிசனால் மட்டுமே கண்டுபிடிக்க முடிந்தது? சத்தியாக்கிரகத்தை ஏன் காந்தியால் மட்டுமே கடைப்பிடிக்க முடிந்தது? அவ்வேளையில் இருந்த மற்றய சுதந்திரப் போராட்ட வீரர்களால் ஏன் இதை செய்ய முடியாது போனது? ஈர்ப்பு விசையை ஏன் நியூட்டனால் மட்டுமே கண்டுபிடிக்க முடிந்தது? பல இலட்சம் மக்களில் ஏன் ஒரு சிலருக்கு மட்டுமே இந்த breakthroughs கிடைத்தது? ஏன் எல்லோராலும் முடியவில்லை? ஏன் ஓருசிலரின் பெயர் மாத்திரமே சரித்திரத்தில் நிலைத்திருக்கின்றது?

ஸ்ரீ அம்மாபகவான் கூறுகிறார்கள் "a great individual is one who has a vision" எவனொருவன் குறிக்கோளுடன் வாழ்கின்றானோ அவனே முழுமையடைகின்றான். அது எந்த Field இல் வேண்டுமானாலும் இருக்கட்டும். Science, Sports, arts,medicine or mathamatics எவனொருவன் குறிக்கோளுடன் பிரார்த்தனை செய்கின்றானோ அவனுடைய வாழ்க்கையில் அவை சத்தியமாகும். பிரார்த்தனைகள் இலகுவில் நிறைவேறும். அருள் வெள்ளம்போல் அவன் வாழ்க்கையில் வரும்.

நம் வாழ்க்கையில் இந்தக் குறிக்கோளை எப்படி ஏற்படுத்திக்கொள்வது? மாணவர்களைப் பொருத்தவரையில் எமது Parents படும் கஷ்டத்தை, நமது நாட்டில் படித்தவர்களின் நிலையையும் படிக்காதவர்கள் படும் கஷ்டத்தையும்

உணர்ந்தாலே குறிக்கோள் ஏற்படும். இப்போதெல்லாம் படித்தவர்களே மிகக் குறைவான சம்பளம்தான் வாங்குகின்றார்கள். படித்தவர்களுக்கே இந்தநிலைமை யென்றால் உங்கள் நிலமை என்ன? எப்போது நாம் எம்மைத்தேடி வரப்போகும் அபாயத்தை உணர்கிறோமோ, அப்போதே எமக்கு குறிக்கோள் ஏற்பட்டுவிடும்) இதை விளக்க ஒரு கதை

ஒருசமயம் காட்டில் ஒருவர் வாழ்ந்து வந்தார். அப்போ ஓரு காண்டா மிருகம் அவரைத் துரத்தத் தொடங்கியது. எவ்வளவு தூரம் ஓடியும் அவரால் தப்பிக்க முடியவில்லை. ஓடி ஓடி அவர் காட்டின் ஒரு மூலைக்கே வந்துவிட்டாராம். அங்கு ஓரு 6 அடி சுவர் இருந்தது. அவர் யோசிக்க ஆரம்பித்தார்... ஒன்றில் 6 அடி சுவரைத்தாண்டிக் குதித்து உயிர் பிழைக்க வேண்டும்... இல்லை, அந்தக் காண்டா மிருகத்திடம் சிக்கி உயிரை விட வேண்டும். அவர் உயிர்பிழைத்தே ஆகவேண்டுமென நினைத்து ''கடவுளே என்னைக் காப்பாற்று'' என்று வேண்டிக்கொண்டு ஓடிவந்த வேகத்தில் அந்த 6 அடி சுவரைத் தாண்டிக் குதித்துவிட்டார். காண்டாமிருகம் அங்கேயே தங்கிவிட்டது, அவர் உயிர் பிழைத்துக்கொண்டார்.

அதாவது என்ன சொல்ல வருகின்றோமென்றால் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் உள்ள சவால்களைப் புரிந்து கொண்டால் **If you know the Challenges in your Life ...** உங்களால் ஒருகுறிக்கோளை ஏற்படுத்தி வாழமுடியும்.

"Idle man is a devils' workshop" என்பார்கள்... அதாவது மனது ஒருவிதமான எண்ண ஓட்டங்களுக்குப் பழகிவிட்டால் மற்றவைகளை அது புறக்கணிக்கும், எதிர்க்கும், தள்ளிப் போடும். **தள்ளிப்போடுதலைப்பற்றி ஸ்ரீ பகவான் கூறுகின்றார்**

i) **தள்ளிப்போடுதல் என்பது நம்மைநாமே ஏமாற்றிக் கொள்வதின் உச்சக்கட்டம்.**

ii) **தள்ளிப்போடுதலென்பது மனது தன் பாதுகாப்பிற்காக செய்யும் மற்றொரு தந்திரம்**

iii) **தள்ளிப்போடுதல் என்பது சுதந்திரத்தை நிரந்தரமாக மறுத்தல்**

iv) **தள்ளிப்போடுதல் என்பது ஒரு வியாதி! ஜாக்கிரதை!**

**ஸ்ரீபகவான் கூறுகின்றார்** "Now or Never"**எதைத் தொடங்க வேண்டுமென்றாலும் இப்போதே செய், இல்லையென்றால் எப்போதும் இல்லை. உங்கள் மனது உங்களுக்குப் புரியவேண்டும்... இல்லையென்றால் அது உங்களையே அழித்துவிடும்.**

இப்போது நாம் குறிக்கோள் உள்ள மனிதனுக்கு, குறிக்கோள் அற்றவனுக்குமிடையான வித்தியாசத்தைப் பார்ப்போம்.

**ஸ்ரீ பகவான் கூறுகின்றார் :-**

i) **குறிக்கோள் இல்லாதவனின் வாழ்க்கை** motivation, evergy இல்லாமலிருக்கும். வாழ்க்கையை வெறுமையானதாக, அர்த்தமற்றதாக ஒவ்வொரு நாளையும் நடுத்தரமானதாகக் கழிப்பார்கள். ஆனால் குறிக்கோள் உடையவனோ, Forcused ஆக இருப்பான். எதை, எதற்காக எப்படிச் செய்கின்றான் என்பது அவனுக்குத் தெரியும். வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கும். life will be organized நிறைய சக்தி இருக்கும்.

ii) குறிக்கோள் இல்லாதவன் பயம், துயரத்திற்கு அடிமையாக இருப்பான். வாழ்வில் ஏற்படும் தடைகளை உடைத்து சாதிப்பது, நல்ல உறவுமுறைகளை மேம்படுத்துவது கஷ்டமாக இருக்கும்.

ஆனால் குறிக்கோள் உள்ளவனின் வாழ்வில் இயற்கையாகவே முன்னேற்றம் இருக்கும். வாழ்வில் பூரண திருப்தி இருக்கும். ஆக்கபூர்வமாகவும், புத்திக்கூர்மை உள்ளவனாகவும் இருப்பான். மக்கள் இயல்பாகவே அவருடன் சேர்வார்கள். அவர் மேல் நம்பிக்கையுடையவர்களாகவும். இருப்பார்கள்.

iii) குறிக்கோள் அற்றவர்கள் சவால்களை சந்திக்கப் பயப்படுவார்கள். தடைகளைக் கானும்போது தாம் தோல்வியடைந்துவிடுவோமோ?

என்று எண்ணிப் பயப்படுவார்கள். ஆனால் குறிக்கோள் உள்ள மனிதனோ தம் வாழ்வில் தடைகள் ஏற்படும் போதெல்லாம் அவற்றை ஒரு சந்தர்ப்பமாகவே கருதுவார்கள்.

iv) குறிக்கோள் உடையவனின் வாழ்க்கையானது கடவுளினால் வழிநடத்தப்படும். அருள் அவனுடைய வாழ்க்கையில் நிறைந்திருக்கும். He will be protected and guided by the divine.

ஆகவே நாம் எமது வாழ்வில் குறிக்கோளை ஏற்படுத்திக் கொண்டு எப்படியும் வாழலாமென்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழவேண்டும்.

இரண்டுவிதமான குறிக்கோள்கள் உள்ளன.

i) **ஹ்ருதயத்திலிருந்து வருவது.**
ii) **மனத்திலிருந்து வருவது.**

ஹ்ருதயத்திலிருந்து வரும் ஆசைகள் கட்டாயம் நிறைவேறும், மனத்திலிருந்து எழும் ஆசைகள் நிறைவேறுவது கஷ்டம் நாமும் கடவுளும் ஒன்றாக கைகோர்த்து செல்ல வேண்டும். குழப்பமாக இருந்தால், தீர்மானமெடுக்க முடியவில்லையென்றால் "**எனக்கு சரியானதை தேர்தெடுத்துக் கொடுங்கள்**" என்று அவரைக் கேட்கலாம். நாம் முயற்சி யெடுத்தால் இறையருள் நிச்சயம் கிடைக்கும்.

நாம் வெற்றிபெற வேண்டுமென்றால் புத்தி, வாய்ப்பு, ஆண்டவனின் கிருபை இவையனைத்தும் சேர்ந்து இருக்கவேண்டும்.

நாம் வாழ்வில் வெற்றியடைய வேண்டு மென்றால் ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்வதற்கு எமது ஹ்ருதயத்தின் ஆசையைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது நமது ஸ்வதர்மாவைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ii) **Swadharma சுதர்மா**

**Discorering your swadharma**

படிப்புத்தான் முக்கியம் என்றாலும் படிப்புத்தான் எல்லாமே என்று நினைக்க வேண்டாம். படிப்பு வரவில்லை என்றால்கூட உங்களுக்கென்று ஒருதனித்தன்மை இருக்கும். அதைக்கண்டு பிடித்தால் கூட வாழ்வில் முன்னேறமுடியும் புகழின் உச்சியில்இருக்கும் Sachin tendulkar MA.Ph.d படித்துப் புகழடையவில்லை அவருக்குள்ளே இருக்கும் விளையாட்டுத் திறமையால் அவர் புகழடைந்தார். Edison இவர் பள்ளியில் திறமையற்றவர் என்று பெயர்வாங்கியவர். ஒருமுறை இரண்டுமுறை அல்ல 1001முறை அவருடைய கண்டுபிடிப்பில் தோற்றவர். ஆனால் அவரால் தான் இன்று உலகமே ஒளிவீசுகின்றது.

இன்று இசைத்துறையில் உலகின் கவனத்தையே தன்பால் ஈர்த்திருக்கும் A.R. ரகுமானின் வெற்றிக்கு காரணம் சிறு வயதிலேயே அவருக்கு இசையின் மேல் இருந்த அவரது ஹ்ருதயத்தின் ஆசையே ஆகும்

இந்த உலகத்தில் அனைவருமே ஒரேமாதிரி இருப்பதில்லை ஆனால் அனைவருக்கும் தனித்தன்னை இருக்கின்றது. ''There is No equality in this creation but, there is unqeness"

இதைப் புரியவைக்க ஓருசிறிய கதை உண்டு. ஒரு ஊரில் ஒரு ஜமீந்தார் வாழ்ந்து வந்தார். அவர்பெரும் தனவந்தர் என்பதால் அவரிடம் ஊர்மக்கள் தான தர்மங்கள் கேட்டுப்பிழைத்து வந்தனர். அதே கிராமத்தில் மரத்தடியில் ஒரு துறவி வாழ்ந்து வந்தார். அனைவரும் அவரைக் குருவாக ஏற்று அவரைக்கும்பிட்டுச்சென்றனர். இது அந்த ஜமீந்தாருக்கு பிடிக்கவில்லை. ''ஊர்மக்கள் என்னிடம் பணம் வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆனால் எனக்கு அந்த அளவு மதிப்போ

மரியாதையோ கொடுக்காமல் அவரை மட்டும் மதிக்கிறார்கள்'' என்று அவருக்குப் பொறாமை மற்றும். தாழ்வு மனப்பான்மை.

அதனால் ஒருநாள் ஜமீந்தார் துறவியிடம் சென்று''ஏன்யா, கட்டிக்கிறதுக்கு இன்னொருதுணி கூட இல்லாத பிச்சைக்காரன் நீ, ஆனால் இந்த ஊர்மக்கள் என்னைவிட உன்னையே அதிகமாகப் போற்றிப் பாடுறாங்க, அப்படி உன்னிடம் என்ன உள்ளது? என்ன நீ செய்கிறாய், கொஞ்சம் சொல்லு'' என்றார் துறவி சிரித்தபடியே ''ஐயா என்னுடன் 5 நிமிடம் வரமுடியமா?''என்று கேட்க ஜமீந்தாரும் சரி என்றார்.

துறவி ஜமீந்தாரை ஒரு ஓரமாக கூட்டிச்சென்றார். அங்கே ஒரு மலை தெரிந்தது. ஜமீந்தாரைப் பார்த்து ''அது என்ன?'' என்று கேட்டார்.''பார்த்தா தெரியவில்லையா? மலை'' என்று எரிச்சலுடன் கூறினார். துறவி சிரித்தபடி மாலை நேரத்தில் அப்படியே தகதகவென மின்னும் சூரியனைக் காட்டி அது என்ன என்ற கேட்டார். ஜமீந்தாருக்கு கோபம் கோபமாய் வந்தது அடக்கிக்கொண்டு ''இதுவும் தெரியலை? சூரியன் மறையுது. என்ன இப்போ?'' என்று எரிந்து விழுந்தார். துறவி அமைதியாக ''இதோ பாருங்கள் அந்தசூரியன் தகதகவென்று மின்னுகிறது அந்தமலை பச்சைப்பசேலென்று பட்டுக்கம்பளம் விரித்ததுபோல் இருக்கு. சூரியன் ஒரு அழகென்றால் மலை ஒரு அழகு. சூரியன் எப்போதாவது ''நான் அந்த மலைபோல் பெரிதாக தெரியமுடியவில்லையே'' என்று கவலைப்பட்டிருக்கா இல்லை மலைதான் '' நான் சூரியன் போல் உலகம் முழுவதும் தெரியமுடியவில்லையே'' என்று கவலைப் பட்டிருக்கா?'' அது ஒரு அழகென்றால் ''இது அதைவிடஅழகு'' இரண்டு:ம் இரண்டு Variely என்றதும் ஜமீந்தாருக்கு ஞானம் பிறந்தது. '' ஆஹா நான் நீர் என்றால் நீங்கள் நெருப்பு நான் ரோஜா என்றால் நீங்கள் மல்லிகை நான் நீங்களாக முடியாது நீங்கள் நானாக முடியாது'' என்று ஆனந்தக் கண்ணீரோடு அந்தத் துறவியின் காலில் விழுந்தார்.

அதாவது நம்மில் பலர் துறவியாகவும், ஜமீந்தாராகவும் இருக்கின்றோம். நாம் இவ்வுலகில் வாழ, பிரகாசிக்க நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவன் ஒரு தனித்தன்மையைக் கொடுத்திருக்கின்றார். படிக்காதவர்கள் எல்லாம் மோசம் என்பது எங்களுடைய கருத்து (Concept) ஆனால் தெய்வத்தின் பார்வையில் அப்படிக் கிடையாது. எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ''ஸ்வதர்மா'' இருக்கிறது. அதாவது எங்கள் ஒவ்வொருருக்கும் இந்த உலகத்தில் ஒரு பணி இருக்கின்றது. அதை அறிந்து நிறை வேற்றினால் நாம் முன்னேற்றமடை வோம் you will become great.

iii ) **Dhyana** (தியானம்)

அடுத்ததாக படிப்பிற்கு முக்கியமானது ஞாபகசக்தி. நமது உடலில் ஏழு சக்கரங்கள் இருக்கின்றது. இதில் ஆறாவது சக்கரம் அக்ஞேயசக்கரம். நம் நெற்றிப்பொட்டில், புருவமத்தியில் இது இருக்கின்றது. அங்கேதான் ஞாபகசக்திக்குத் தேவையான Pitutary glands சுரக்கின்றது. அந்தச்சுரப்பி நன்றாக சுரக்கவில்லை என்றால் கூட ஒரு மாணவனுக்கு படிப்பில் ஈடுபாடு வராது படித்தாலும் ஞாபகம் இருக்காது. **தினமும் காலையும், மாலையும் 7 மணிக்கு இந்தத் தியானம்** செய்து வந்தால் ஞாபகசக்தி அதிகரிக்கும் படிப்பும் நன்றாக வரும்.

மேலும் நாம் ஒரு விடயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு தான் படித்தாலும், கடின உழைப்பு இருந்தாலும், முயற்சி செய்தாலும், **தெய்வத்தின் அருள்** இல்லையென்றால் நாம் எதுவுமே செய்யமுடியாது. தெய்வத்தின் அருள் வேண்டுமென்றால் பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் மதிப்புத்தர வேண்டும். அப்போதே தெய்வத்தின் அருள் முழுமையாக எம்மை வந்தடையும்.

**புத்தி + வாய்ப்பு +ஆண்டவனின் அருள் +முயற்சி ~ வெற்றி** - Success. " What is the secret of success? The Secret of Success is to

make everyone Successful" நாம் வெற்றிபெற வேண்டும் என்றால் நம்முடன் இருக்கும் மற்றவர்களையும் வெற்றிபெறச்செய்ய வேண்டும். நாம் மட்டுமே வெற்றிபெற வேண்டுமென்று நினைத்தால் கீழே விழும் முதல் ஆள் நாமாகத்தான் இருப்போம். எப்போ அந்த நான் என்ற உணர்வு வெளியேறுகிறதோ அப்போதே எமக்கு வெற்றியின் கதவு திறக்கப்பட்டுவிடும். மனிதனின் உண்மையான தன்மை என்ன தெரியுமா? மற்றவர்களுக்காக வாழ்வது. Live For Others. மற்றவர்களையும் Motivate பண்ணுங்கள். எப்போதும் சுயநலம் பொதுநலமாக மாறுகிறதோ...Individulistic approach will become collective approach. அப்போது அனைத்து மனிதர்களுமே வெற்றியாளராகி விடுவார்கள்.

We are Limited Human beings வாழ்க்கையில் முன்னேற முயற்சி மட்டுமே போதாது இறை அருளும் முக்கியமாகும். அம்மாபகவானின் அருளைப்பெற நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிரார்த்தனை என்பது மனதின் ஆழத்திலிருந்துவரும் நியாயமான கோரிக்கையாக இருக்கவேண்டும்.

Life is not a riddle to be solved, but it is a mystery to be lived. வாழ்க்கை என்பது கண்டுபிடிக்க வேண்டிய புதிர் அல்ல. அது வாழவேண்டிய புரிந்துகொள்ள முடியாத மர்மமான ஒன்றாகும் முயற்சியே மூலதனம் - வெற்றியை தியானியுங்கள் வெற்றி நிச்சயம்.

நட்புடன் நன்றி

# ஸ்ரீபகவான் சரிதம்

ஆந்திரப் பொன்னகர் வாழும் நம் தெய்வமாம்
கல்கி பகவானின் சரித்திரம் கேளுங்கள்,
ஸ்ரீகல்கி பகவானின் சரிதம் இதுதனை
சொல்லி எழுதினாலும் எழுதியதைக் கேட்டாலும்
கேட்டுப்பாடினாலும் பாடியதைக் கேட்டாலும்
தொட்டதெல்லாம் துலங்கும் பொன்னாகும் வியாபாரம்
தோன்றிடும் சௌபாக்கியம் வாழ்க்கையிலே
கஷ்டமொன்றும் இனி வராது கண்போலே
அம்மா பகவானும் பார்க்கையிலே

தர்மங்கள் பூமியில் தடைப்பட்ட போதெல்லாம்
அதர்மம் மேலோங்கும் அக்கிரமம் நடக்கும்
பூமியெங்கும் துக்கம் புல்லாய் முளைத்திடும் – 2

கெட்டதை தண்டித்து நல்லதை காத்திட்டு
தர்மஸம்ஸ்தாபனம் செய்ய வந்தார்
கலியினில் தர்மத்தை நிலைநாட்ட வேண்டியே
ஸ்ரீமன் நாராயணன் இறங்கி வந்தார்

ஆப்தபாந்தவனாம் அனாதரட்சகன்
காருண்யமூர்த்தியாம் கருணைக்கடலான
ஸ்ரீகல்கி அவதாரம் புவியில் வந்ததம்மா
ஸ்ரீகல்கி அவதாரம் புவியில் வந்ததம்மா
கண்ணில்லாக் குருடர்க்கு கண்பார்வை தந்தவர்
ஊமைக்குப் பேச்சையும் தந்தாராம்மா
வேண்டும் வரம் தரும் வேதனை தீர்த்திடும்
தெய்வமாய் பூமியில் வந்தாரம்மா

(ஆந்திரப் பொன்னகர்...)

கிருதயுகத்திலே நரசிம்மமானவர்
த்ரேதா யுகத்திலே ராமனாய் வாழ்ந்தவர்
த்வாபர யுகத்தில் கண்ண பரமாத்மா – 2
த்வாபர யுகத்தில் கண்ண பரமாத்மா

ஒவ்வொரு யுகமும் ஒவ்வொரு விதமாய்
மக்களைக் காக்க ஸ்ரீஹரி வந்தார்
ஒப்பில்லா தெய்வமாய் கல்கி பகவானாய்
பத்மாவதியுடன் கலியில் வந்தார்.

(ஆந்திரப் பொன்னகர்...)

கிருதா யுகத்திலே இரண்யகசிபுவாய்
திரேதா யுகத்திலே இராவணேஸ்வரணாய்
துவாபர யுகத்தில் கௌரவர் எதிரி
துவாபர யுகத்தில் கௌரவர் எதிரி – 2

ஓவ்வொரு யுகமும் ஓவ்வொரு அரக்கன்
தர்மத்தைத் தாக்கியே அழித்து வந்தான்
ஓவ்வொரு யுகமும் ஓவ்வொரு அவதாரம்
தர்ம ஸம்ஸ்தாபனம் செய்துவந்தார்.

(ஆந்திரப் பொன்னகர்...)

திரேதா யுகத்தினை இராவணன் கெடுக்க
துவாபர யுகத்தை கௌரவர் கெடுக்க
கலியினில் மானிட மனமே அரக்கனாம்
கலியினில் மானிட மனமே அரக்கனாம்

அந்நாளில் துஷ்டரை சம்ஹாரம் செய்தவன்
அவதாரமாய் வந்து பிறந்தாரம்மா
இந்நாளில் மானிட எண்ணங்கள் திருத்தி
முக்திக்கு வழி செய்து வைத்தாரம்மா

அந்நாளில்....

பாரததேசத்தில் புண்ணிய பூமியாம்
தமிழ்நாடு என்றொரு தென்மானிலத்திலே
ஆட்காடு மாவட்டம் குடியாத்தம் பக்கத்தில்
ஆட்காடு மாவட்டம் குடியாத்தம் பக்கத்தில் – 2

நத்தம் எனும் சிறு கிராமத்திலே வந்து
அவதரிப்பேன் நான் என்று சொன்னார்
பத்தினி தெய்வமாம் வைதர்பி அம்மைக்கு
பாலகனாகிட சங்கல்ப்பித்தார்.

(ஆந்திரப் பொன்னகர்...)

பூஜை புனஸ்காரம் விரதங்கள் பல கொண்டு
பரம பக்தரான பகவானின் தாஸர்கள்
வைதர்பி வரதராஜுலு புண்ணிய தம்பதிகள்
வைதர்பி வரதராஜுலு புண்ணிய தம்பதிகள் – 2

ஒருநாள் மாலை நேரம் ஒன்றாகக்கோயிலில்
உட்கார்ந்து தெய்வத்தை வேண்டிக் கொண்டார்
பெருமானின் தீர்த்தப் பிரசாதத்தை பெற்றதும்
இல்லத்தில் இரவொன்றில் உறங்கிப் போனார்

(பெருமானின் தீர்த்தம்...)

நித்திரையில் ஆழ்ந்த தெய்வத் தம்பதிகள்
திவ்யமயமான ஒளி ஒன்று கண்டனர்.
ஸ்ரீஹரி தான் என்று அறிந்து வணங்கினார்
ஸ்ரீஹரி தான் என்று அறிந்து வணங்கினார் – 2

அழகான குழந்தையின் வடிவம்தாங்கி வந்து
அம்மாவின் மடிமேலே ஏறியதாம்
ஆனந்தம் மேலிட்டு தம்பதிகள் எழ
ஆவலோ உள்ளத்தில் மீறியதாம்

கனவில்வந்த திருக் காட்சியைக் கண்டவர்
கனவா நனவா என்று கவலையும் கொண்டனர்
சித்தாந்தி ஒருவரிடம் விளக்கங்கள் கேட்டனர்
சித்தாந்தி ஒருவரிடம் விளக்கங்கள் கேட்டனர் – 2

நீகண்ட கனவெல்லாம் நிஜமாகிப் போகுமே
நிச்சயம் ஒருவருடம் காத்திரு என்றார்
தானுண்ட வாயினில் தரணியைக் காட்டினான்
தாமோதரன் வந்த பிறப்பானென்றான்.

(தானுண்ட வாயினில்...2)

சித்தாந்தி சொன்னதை சிரத்தையுடன் கேட்ட
தம்பதி இருவரும் அவர்பாதம் பணிந்து
ஆனந்தம் கொண்டார்கள் ஆசியும் பெற்றார்கள்

(ஆனந்தம் கொண்டனர்..2)

வைதர்பி கர்ப்பத்தில் சிப்பிக்குள் முத்துப்போல்
வையம் அளந்தவன் வளர்ந்து வந்தான் – 2
பையனோ வயிற்றுக்குள் பாதத்தால் உதைத்து
அன்னைக்கு ஆனந்தம் பெற்றுத்தந்தான் – 2

எத்தனையோ புண்ணியம் செய்ததன் பலனாய்
நத்தம் எனும் நல்ல கிராமத்தில் வாழ்ந்த
தெய்வத் தம்பதியர் வரதராஜுலு வைதர்பி
தெய்வத் தம்பதியர் வரதராஜுலு வைதர்பி – 2

பக்தியுடன் பல ஆலயங்கள் சென்று
பகவானை வேண்டியே தவமிருந்தாம்
சத்யயுகம் தன்னை ஸ்தாபனம் செய்திடும்
வித்தொன்றை திருவயிற்றில் தாங்கிநின்றார்.

ஆஹா ஆஹா என்று அகிலங்கள் கொண்டாட
அற்புதம் அதிசயம் ஆனந்தம் கூத்தாட
பொன்னிற ஜோதியோ பூமியில் புகுந்ததாம்
பொன்னிற ஜோதியோ பூமியில் புகுந்ததாம் – 2

ஆயிரம் தொள்ளாயிரம் நாற்பத்தொம்பதாம்
ஆண்டு மார்ச்சு ஏழாம் நாளினிலே
சோம வார தினம் ரோஹினி நட்சத்திரம்
ஏற்றம் கொடுக்கும் நன் நேரத்திலே – 2
(ஆந்திரப் பொன்னகர்...)

தெய்வக் குழந்தையாய் பாலன் பிறந்தானாம்
தேடிவந்து பிறந்து பூலோகம் சிறந்ததால்
விஜயகுமார் என்று பெயரிட்டு அழைத்தாரோ
விஜயகுமார் என்று பெயரிட்டு அழைத்தாரோ

பொன்னை உருக்கியே போட்டு வைத்ததுபோல்
பொலிவோடு பகவானும் காட்சிதாந்தார் – 2
அன்னை வைதர்பியின் மடிமேல் குழந்தையாய்
அகிலம் பதினான்கு ஆழவந்தான் – 2

முப்பத்து முக்கோடி தேவர்கள் பூச்சொரிய
மும்மூர்த்தி மூவரும் முன்னின்று வாழ்த்திட
அற்புதங்கள் செய்து ஆழவந்தார் கல்கி
அற்புதங்கள் செய்து ஆழவந்தார் கல்கி – 2

கண்மூடித் தனமாக கட்டுப்படாதவன்
கலிபுருஷன் இது கேட்டுக் கலங்கிப்போனான்
கருமேக இடிகேட்ட கருநாகம் போலாகி
காலம் முடிந்ததாய் கருதலானான் – 2

தங்கத் தாமரைமேல் சூரியன் அமர்ந்ததாம்
தளிர் அல்லி மலர்மேலே திங்கள் மிதந்ததோ
எத்தனை எத்தனை எத்தனை அழகு
எத்தனை எத்தனை எத்தனை அழகு – 2

புண்ணிய பூமியிலே பாலகன் பிறந்ததும்
பூமி ஆகாசங்கள் அதிர்ந்ததம்மா
கோயில் மணி எல்லாம் தானே ஒலித்ததாம்
குயிலெல்லாம் கூவித் திரிந்ததம்மா

ஆயிரம் சூரியன் அவனிக்கு வந்ததோ
ஆழ்கடல் முத்தெல்லாம் அழகள்ளித் தந்ததோ
தெய்வக் குழந்தையை தேடி மக்கள்வர
தெய்வக் குழந்தையை தேடி மக்கள்வர – 2

ஒளியாகப் பூமிக்கு வழிகாட்டப் போகின்றான்
உந்தன் பிள்ளையம்மா என்றனராம் – 2
ஊர் ஊராய் ஒரு சேர இரவும் பகலும் வந்து
ஒன்றாகத் தெய்வத்தைக் கண்டனராம் – 2

பிள்ளை பிறந்ததால் பேறு கிடைத்ததால்
கொள்ளை இன்பமொன்று கூடிப்புகுந்ததால்
தம்பதிகள் தான தருமங்கள் செய்தனர்
தம்பதிகள் தான தருமங்கள் செய்தனர் – 2

அன்னதானத்துடன் ஆடைதானங்களை
ஆங்காங்கே ஏழைக்கு செய்தனராம்
பிள்ளை முகம் கண்டு போக மறுத்தவர்
இல்லை ஒரு குறை என்றனராம்

பிள்ளை இல்லாதோர்க்கு பேறுகிடைத்ததாம்
முத்தம் தந்தவர்க்கு முத்தொன்று பிறந்ததாம்
தூக்கி விளையாட துக்கம் பறந்ததாம் – 2

சித்திரம் போல்வந்து இத்தரை பிறந்த
இரத்தினக் குவியல் முகவதனம்
சத்திய யுகத்தை ஸ்தாபனம் செய்திட
பக்திதான் நமக்கு மூலதனம் (சத்திய)

பிள்ளை பிறந்த அக்காலம் முதற்கொண்டு
கூடவே நடந்த அற்புதம் பல உண்டு
தெய்வம் என்று சொல்ல இது ஒன்று போதுமே
தெய்வம் என்று சொல்ல இது ஒன்று போதுமே

தூங்கிய பாலனை தோள்விட்டு இறக்கினாள்
தோட்டப் பக்கம் சென்றாள் அன்னை அவள்
பன்னிரண்டு தலைப் பாம்பொன்று பாங்குடன்
படமெடுத்துக் காத்தது கண்ணில்பட

நாகம் ஒன்று வந்து நம்பியைக் காத்ததை
தேகம் சிலிர்த்திட நேரினில் கண்டவள்
ஆஹா என்ன இது அற்புதம் என்றாளாம்
ஆஹா என்ன இது அற்புதம் என்றாளாம் – 2

அம்மா வியந்ததைக் கண்ட அக் குழந்தை
ஆனந்தப் புன்னகை செய்தானம்மா
ஐந்து மாதத்திலே தவழாமல் நடந்தானாம்
ஆடி ஓடிச்செல்ல முனைந்தானம்மா –2

பிள்ளைகள் எல்லோரும் கூடி விளையாட
கொள்ளை மகிழ்ச்சியோ குடிகொண்டு கூத்தாட
தெய்வம் நீ நாங்கள் உன் பக்தர்கள் என்றார்கள் – 2

சின்ன வயதினிலே மின்னலைப் போன்றவன்
கண்ணனாய் கடவுளாய் ஆக்கப் பட்டான்
பின்னர் நடப்பதை முன்னம் உணர்த்தவே
பிள்ளை விளையாட்டில் ஈடுபட்டான் – 2
(ஆந்திரப் பொன்னகர்...2)

பிள்ளை விளையாட்டில் தெய்வமாய் ஆனவர்
பக்தர்கள் தொழுதிடும் பரம்பொருள் போலவன்
மெல்லச் சிரிப்புடனே பக்கதரைக் கேட்டான் – 2

உங்கள் கோரிக்கைகள் என்ன என்னவென்று
ஒவ்வொன்றாய் என்னிடம் சொல்லிடுங்கள் – 2
ஒவ்வொரு பக்தரும் கேட்டதைத் தருவேன்
உங்கள் கவலைகள் தள்ளிடுங்கள் – 2

பக்தர் கேட்டதெல்லாம் பரிவோடு நிறைவேற்றி
இன்னும் கோரிக்கைகள் ஏதேனும் கேளுங்கள்
என்று சொன்னதுமே எல்லோர்க்கும் ஆனந்தம் – 2

பள்ளியில் தந்ததோர் வீட்டுப்பாடம் தன்னை
பாடம் செய்ய நான் மறந்தேன் என்றான்
பள்ளி ஆசிரியர் தண்டனை தராமல்
பார்த்துக்கொள் தெய்வமே என்றழுதான் – 2

மறுநாள் பள்ளிக்கூடம் சென்ற பாலகனை
ஒன்றும் சொல்லாமலே உட்காரு நீ என்றார்
மற்றவர்க்காசிரியர் தண்டனை தந்தார் – 2

தனக்கேதும் தண்டனை தராமல் போனதை
கண்ட பிள்ளை அவன் வியந்தானம்மா
விளையாட்டாய் லீலைகள் செய்திடும் பகவானை
தெய்வம்தான் வந்தது என்றானம்மா – 2
(ஆந்திரப் பொன்னகர்...2)

ஒருநாள் நத்தம் உறவினர் வந்தனர்
பெருமானின் பக்தர்கள் உரையாடி மகிழ்ந்தனர்
சின்னக் குழந்தையோ தந்தை மடிமேலே – 2

பெரியவன் ஆனதும் என்ன செய்வாயென்று
பெற்றோர் எதிரினில் கேட்டுவைத்தார்
அறியாமை போக்குவேன் அகிலத்தை துக்கங்கள்
அணுகாது மோட்சம்தான் என்றுரைத்தார் – 2

முன்னம் ஒருநாளில் பிள்ளை முன்னேசெல்ல
கண்ணன் திருக்கோயில் காலாற நடந்தனர்
அன்னையும் தந்தையும் ஆலயம் சுற்றினர் – 2

ஆலயம் சுற்றிய அன்னையும் தந்தையும்
அன்புப்பிள்ளை மெல்லச் சிரிக்கக் கண்டார்
ஆலயம் சுற்றாதது ஏனென்று கேட்டிட
என்னை நான் எப்படி சுற்ற என்றான்

சின்னப் பிராயத்திலே சீரோடு வேதாந்தம்
பேசும் சிறுவனை பெற்றவர் வியந்து
பள்ளிப் பாடங்களை கற்றுத்தரவேண்டி
பள்ளி பாடங்களை கற்றுத்தரவேண்டி – 2

பாடங்கள் கற்பிக்க ஏற்பாடு செய்தனர்
பகவானை யாரென்று அறியாமலாம்
ஒன்றென்றால் பத்தெண்ணும் பாலகன் அறிவை
உணராமல் அனுப்பினர் தெரியாமலாம் – 2

(ஆந்திர பொன்னகர்)

கற்க வந்தவனோ கற்பிக்க வந்தானோ
அற்புதங்கள் காட்டி ஆளப்பிறந்தனோ – 2
பள்ளிக் கூடமெங்கும் பகவான் பற்றிப் பேச்சாம் – 2

வானத்து நட்சத்திரம் எவ்வளவு என்றால்
விரலாலே எண்ணிய கூறிடுவான் – 2
வாழும் வழிதனை மாணவர்க்குக் காட்டி
ஏழையைக் கல்வியில் தேற்றிடுவான் – 2

அம்மா உந்தன் பிள்ளை அறிவுக்கெல்லாம் எல்லை
என்று ஆசிரியர் எடுத்துச் சொன்னதெல்லாம்
வைதர்பி வயிற்றில் பாலை வார்த்ததாம் – 2

பெற்றவர் மகிழ பிள்ளை படித்தானாம்
கற்றவித்தைக்கொரு கணக்கில்லையே – 2
உற்ற நண்பர்க்கவன் உதவிகள் செய்தனன்
ஊர்மெச்சப் பிறந்தது உன் பிள்ளையே – 2

சூர்ய பந்தை நோக்கி சுற்றுமாம் கிரகங்கள்
காந்த திசைநோக்கி பற்றுமாம் இரும்பு
பகவான் செல்லுமிடம் மாணவர் சென்றார்கள் – 2

போன இடம் தேடிப் பேனா பிடித்த
நல் மாணவர் எல்லாம் தேடிவந்தார்
ஆன உதவிகள் அன்போடு செய்தாராம்
அறிவோடு ஆங்கிலம் சொல்லித்தந்தார் –2

(ஆந்திரப் பொன்னகர்...2)

மெல்ல வளர்ந்தனன் மேனிசிவந்தவன்
பிள்ளையைப் பெற்றவர் உள்ளம் உவந்தனர்
கல்யாண வயதினை கல்கி அடைந்தாராம் – 2

அழகான லக்ஷ்மியை மருமகள் ஆக்கிட
அம்மாவும் அப்பாவும் காத்திருந்தார் – 2
அங்கும் இங்கும் சொல்லி ஏற்றமகள்வர
தங்கள் மகனுடன் காத்தருந்தார் – 2

கல்கி பகவான் கதை இதுபோல சென்றதாம்
அம்மாவின் சரிதமே ஆனந்தம் கொண்டதாம்
ஆந்திர மானிலம் நெல்லூர் ஜில்லாவிலே – 2

பென்சிலம்மா சின்ன வெங்கையா தம்பதி
பேரும் புகழுடன் வாழ்ந்து வந்தார்
தான தருமங்களை செய்து பலரிற்கு
தன்னால் முடிந்ததை செய்திருந்தார்

ஆயிரம் தொள்ளாயிரம் ஐம்பத்து நாலிலே
ஆகஸ்ட் பதினைந்து ஆதிவாரதினம்
அம்மா சதயத்தில் அவதாரம் செய்தாளாம் – 2

அம்மா களை பெற்ற அம்மாவாய் பிறந்தாளாம்
அவனியே ஒளிவெள்ளம் ஆனதம்மா – 2
அழகான நிலவொன்று ஆந்திரத்து மண்ணில்
தவழ்ந்தோடும் நிலை உண்டானதம்மா – 2
(ஆந்திரப் பொன்னகர்...2)

பாற்கடல் பிறந்தவள் பாம்பணை அமர்ந்தவள்
பாக்கிய லக்ஷ்மியாய் பாரெல்லம் திகழ்ந்தவள்
பென்சலம்மா வயிற்றில் பெண்ணாகப் பிறந்தாளாம் – 2

ஆழ்கடல் முத்துப்போல் அம்மா சிரித்ததால்
பத்மாவதி என்ற பெயரை வைத்தார் – 2
ஊரெல்லாம் கண்டதும் உல்லாசமாய் செல்ல
ஒயிலாளோ நவரத்தினம் போல் சிரித்தாள் – 2

ஸ்ரீதேவி பிறந்ததை தெரிந்து கொண்டவர்கள்
தேடித்தேடிவந்து தரிசனம் செய்தனர்
குச்சம்மா என்றனர் செல்லமாய் தேவியை – 2

தோளிலும் மார்பிலும் தூக்கி அலைந்தனர்
தொட்டு முத்தமிட்டு ஆனந்தமாய் – 2
ஆளாக்கி ஆண்டவர் ஹரியை மணப்பேன்நான்
அம்மா சொன்னாள் அன்று சூட்சுமமாய் – 2

பூஜை புணஸ்காரம் விரத நியமங்கள்
பக்குவமாய் செய்து பத்மாவதி தேவி
பகவான் வரவெதிர் பார்த்திருந்தாளாம் – 2

பக்தியில் நீ செய்யும் பூஜைக்குப் பலனாக
பகவானே மணவாளன் ஆவானம்மா
பத்மாவதி தேவி பார்த்துக்கொள் ஒருநாள்
கைப்பிடித்துக்கொண்டு போவானம்மா –2
(ஆந்திரப் பொன்னகர்...2)

சுபயோக சுபதினம் சின்ன வெங்கையாவின்
கண்ணில் பட்டவராம் கல்யாணப்பிள்ளையே
ஸ்ரீமன் நாராயணன் போலக் காட்சிமந்தார் – (2)

பகவானின் தேஜஸை பார்த்தமாத்திரமே
பத்மாவதிக்கேற்ற பிள்ளை என்றார்
பணிவோடு பகவானின் பெற்றவரைக் கண்டு
கல்யாண நாளதை முடிவுசெய்தார் – 2

ஊரெல்லாம் ஆனந்தம் உட்சாகப் பேரின்பம்
பாரெல்லாம் பண்டிகை பரவசம் சந்தோஷம்
அம்மா பகவான் திருக் கல்யாண உற்சவம் – 2

மாவிலை தோரணம் வாழைப் பந்தலிட்டு
மண்ணாளும் மாதவர் கல்யாணமாம்
பூவாலே தேவர்கள் பூமாரி பெய்தார்கள்
பூமி எங்கும் எங்கும் வைபோகமாம்

நாதஸ்வரம் மேளம் நாட்டியக் கச்சேரி
ஆடை அணிகலன் அலங்காரங்கள் உண்டு
கல்யாண வைபோகம் கண்கோடி போதாது

கிராமம் கிராமமாக மக்கள் திரண்டனர்
கல்யாணத்தை வாழ்த்தி சென்றனராம்
நேமம் நத்தம் சங்கம் நெஞ்சாரப் புகழ்ந்து
நிறைவாகத் தலை வாளை இலை விருத்தாம்

சத்தியயுகம் எனும் ஸவர்ணயுகம் தனை
ஸ்தாபனம் செய்யவே சங்கல்ப்பம் கொண்டவர்
பத்மாவதியுடன் பகவானாய் வந்தார்

அழகான வரதயபாளைய மலைமேலே
அம்மாவும் பகவானும் சேர்ந்திருந்தார் – 2
இதமான தமிழாலே இன்னிசை நாம் பாட
அடியார்க்கு இன்பங்கள் தந்திருந்தார் – 2

புண்ணியம் குறைந்து பாவங்கள் பெருகி
பூமி எங்கும் அதர்மம் ஓங்கிட
எங்கும் ஆனந்தமே இல்லாமல் போச்சு – 2

எத்தனை துன்பங்கள் என்னென்ன கஷ்டங்கள்
எங்கும் நிம்மதியே இல்லை அம்மா
அத்தனையும் தீர்க்க அவதாரம்போல் வந்து
அன்புசெய்யும் தெய்வம் வேண்டுமம்மா –2

மக்கள் படும்துன்பம் மாளாத கூக்குரல்
அத்தனையும் கேட்ட அம்மா – பகவானே
இது என்ன கொடுமை என்றாளாம் – 2

கண்ணீருடன் அம்மா கல்கியாய் வந்திட்ட
பகவானின் பாதத்தை பற்றி நின்றாள்
கண்ணில் படுகின்ற மக்களின் துன்பத்தை
ஆனந்தம் ஆக்கிட வேண்டி நின்றாள்

(ஆந்திரப் பொன்னகர்...2)

அம்மா பத்மாவதியே அன்போடு கேட்டதால்
அவதாரம் எடுத்து ஆணையும் தந்ததால்
கல்கிதன் உள்ளத்தில் சங்கல்ப்பம் கொண்டார் - 2

பக்தியைப்பரப்பி பக்தரைத் திரட்டி
பாரில் அதர்மத்தை போக்க வந்தார்
முக்தி ஒன்றுதானே துக்கம் போக வழி
மூலப்பரப்பிரம்மம் மார்க்கம் சொன்னார் - 2

சென்ற யுகங்களில் அரக்கர் வந்ததுபோல்
இந்தக் கலிநாளில் மனித மனமெனும்
மாபெரும் அரக்கன் தர்மத்தை அழித்தான் - 2

தர்மம் குலைந்தது தரணி அதிர்ந்தது
அதர்மம் மேலோங்கி வளர்ந்தம்மா
கருநாள் முதற்கொண்டு கல்லறை வரைக்கும்
கஷ்டமே வாழ்க்கையில் கண்டதம்மா - 2

கலியென்றால் யாவருக்கும் கட்டுப்படாதவன்
கல்கியாய் வந்த நான் கட்டுப்படுத்துவேன்
கவலை வேண்டாம் யாரும் கலங்காதிருப்பீர்கள் - 2

வெள்ளை மனம்கொண்ட பக்தர் உள்ளங்களை
வெள்ளைக் குதிரையாய் ஆக்கிக் கொள்வேன்
வெல்ல தர்மமெனும் கேடயம் கைக்கொண்டு
சத்திய வாளை நான் தாங்கிடுவேன் - 2

பகவான் சொன்னபடி பக்தர்கள் வாழ்நாளிலே
பட்டதுன்பம் எல்லாம் பனிபோலே பொய்விடும்
தொட்டதெல்லாம் துலங்கும் தொடங்குமே நல்வாழக்கை - 2

சிரத்தை பக்தி ஞானம் வைராக்கியம் நான்கையும்
சிந்தையுள் வைத்திங்கே வாழ்ந்திடுங்கள்
முக்தி நிலைதானே வாழ்க்கையின் அர்த்தமாம்
முன்னேறும் வழிவந்து சேர்ந்திடுங்கள் - 2

பகவான் அம்மாவுக்கு பரிவோடு சொல்லிய
பதிலைக் கேட்டவுடன் பத்மாவதி அம்மை
ஆனந்தம் பொங்கிடக் கைகூப்பி நின்றாள் - 2

தானும் உடன்வந்து தர்மத்தை காத்திட
தன்னால் முடிந்ததை செய்வேன் என்றாள்
தேனுடன் பால்வந்து சேர்ந்தது போலாச்சாம்
நேமத்தில் தெய்வமாய் காட்சி தந்தார் - 2

பாற்கடல் மீதினில் பன்னகசயணமாம்
யாவருக்கும் வரம்தரும் கருணாசாகரமாம்
நாரணன் பூமிக்கு அவதாரமாய் வந்தான் - 2

புவியெங்கும் ஒளியோடு வழிகாட்ட வந்தாராம்
அவதாரம் கல்கியாய் ஆனாரம்மா
கவியாலே தமிழ்பாடி காணத்துடித்த எம்
கண்கண்ட மெய்வமாகிப் போனாரம்மா - 2

ஆந்திரப் பொன்னகர் வாழும் நம் தெய்வமாம்...
ஆந்திரப் பொன்னகர் வாழும் நம் தெய்வமாம்
கல்கி பகவானின் சரித்தரம் கேளுங்கள்

ஸ்ரீகல்கி பகவானின் சரிதம் இதுதான்
சொல்லி எழுதினாலும் எழுதியதைக் கேட்டாலும்
கேட்டுப்பாடினாலும் பாடியதைக் கேட்டாலும்

தொட்டதெல்லாம் துலங்கும் பொன்னாகும் வியாபாரம்
தோன்றிடும் சௌபாக்கியம் வாழ்க்கையிலே
கஷ்டமொன்றும் இனி வாராது - கண்போலே
அம்மா பகவானும் பார்க்கையிலே - 2

(ஆந்திரப் பொன்னகர்...2)

# பகவான் கவசம்

பணிவோர்க்கு பாதக் கமலம் கிடைக்கும்
நினைப்போர்க்கு நீள்வினை நீங்கும் – தினமும்
அகத்துள் நினைந்து நீ வந்தனை செய்ய
ஸ்ரீஸ்ரீபகவான் புரிவார் அருள்

மனஇருள் மாயை நீக்கிட வந்த
ஸ்ரீஸ்ரீபகவான் ஈஸ்வராய நமஹ
பகவான் கல்கி ரூபாய நமஹ ஸ்ரீஸ்ரீபகவான்
பரப்பிரம்ஹ புருஷோத்தம பரமாத்மனே நமஹ.

1. சத்திய வடிவம் ஸ்ரீஸ்ரீபகவான்
அவரைத் தொழுதால் நீங்கிடும் பாவம்
உத்தமன் உந்தன் உயரிய நாமம்
சிந்தையில் நிறைந்தால் வந்திடும் க்ஷேமம்

2. கண்களில் தோன்றும் கருணையின் வரவால்
பண்களில் தோன்றும் பல்சுவை நாதம்
பகவத் நாமம் பாரினில் வேதம்
நித்தமும் பணிந்தால் மனதினில் கீதம்

3. இருவினை அகல மும்மலம் களைய
இனிதருள் புரிய பகவானைத் தொழுதோம்
மனதில் தோன்றும் மாயைகள் மறைய
பகவான் உந்தன் பதமலர் தொழுதோம்

4. நாற்பொருள் கண்டு நல்லறம் கொண்டு
நானிலம் போற்ற நல்லடி தொழுதோம்
சிந்தையின் நிறைவே சீரிய வாழ்வே
செவ்வடி பணிந்தோம் சித்தூர் தேவே.

5. வருக வருக அருள்மிகு பகவான்
தருக தருக திருவடி தருக
விலக விலக பாவங்கள் விலக
நிலவ நிலவ நின்புகழ் நிலவ.

6. சத்திய லோக தெய்வமே வருக
நித்தமும் பணிந்தோம் அருளவே வருக
கலியுகம் காக்கும் கர்த்தனே வருக
கல்கி அவதார கண்ணனே வருக.

7. பகவத் தர்மா படைத்தவா வருக
ஜெகத்தினில் தீமைகள் தீர்க்கவே வருக
பக்தர்கள் கோடி நாமத்தைப் பாடி
சன்னிதி வந்தோம் சரணங்கள் பாடி

8. அனைவரும் மகிழ ஐயா வருக
அழகிய வடிவே அன்புடன் வருக
சிரஞ்சீவி வாழ்வே சக்தியைத் தருக
சிரமத்தைப் போக்க சீக்கிரம் வருக.

9. அன்பின் வழியில் என்னைக் காக்க
என்முன் வருக நல்வழி தருக
என்குலம் காத்திட இவ்விடம் வருக
கலைமகள் அருளுடை அன்பரே வருக.

10. கீதையை உரைத்த கண்ணனும் நீயே
ஓமுடன் சேர்ந்த ஜோதியும் நீயே
முக்கண் முதல்வன் சிவனும் நீயே
மூவுலகாளும் சக்தியும் நீயே

11. நல்வழி போற்றும் நான்மறை காக்க
நானிலந் தன்னில் நன்மைகள் புரிய
வேதத்தை மீட்ட வேதப் பொருளாய்
**மச்சாவ தாரம் முதல் வடிவாகும்.**

12. மேருவை உயர்த்த மேன்மையான வடிவாய்
**கூர்ம வதாரம் இரண்டாம் எடுத்தாய்**
ஆழியில் அமிழ்ந்த பூமியை மீட்ட
**வராகவ தாரம் மூன்றாம் எடுத்தாய்.**

13. இரண்யன் அகந்தை அழித்திட வந்தாய்
பிரகலாதன் உரு நீயே தந்தாய்
**நரசிம்ம வடிவா கிடவே நின்றாய்**
அவதாரம் நான்காய் வந்தே கொன்றாய்

14. மாபலி மன்னன் ஆணவம் நீங்க
**அவதாரம் வாமன ரூபம் ஐந்தாய்**
நிறைகுணம் **பரசு ராமனாய் உதித்து**
**அறநெறி அவதாரம் ஆறாய் நின்றாய்.**

15. பண்பின் உறைவிடம் **ராமனாய் வந்தே**
**அன்பின் அவதாரம் ஏழாய் உதித்தாய்**
**பலராமன் உரு எட்டாய் வந்தாய்**
**கிருஷ்ணா நீயே ஒன்பதாய் நின்றாய்.**

16. போதியின் நிழலில் **புத்தரும்** நீரே
சிலுவைப் பேரொளி **இயேசுவும்** நீரே
சக்தியின் ரூபமே **சங்கரர்** நீரே
குர்ஆன் அருளிய **நபிகளும்** நீரே

17. தன்குடிப் பிறப்பின் பெருமையை மறந்து
தன்மனப் போக்கினில் காமத்தில் உழன்று
வாழ்வின் உண்மை நிலையை உணர்த்தி
சோதனை தந்து ஞானத்தைத் திறந்து

18. ராமனின் உருவாய் நேரிடை வந்தாய்
துளசி தாசரின் வாழ்வில் மலர்ந்தாய்
ராம மானஸ சரிதம் தந்தாய்
லோகம் செழிக்க பகவான் நின்றாய்.

19. சாதி சமயம் பிரிவினைப் போக்க
வேதப் பொருளே வழியை தெளிந்தாய்
ஒன்றே இறைவன் என்பதை உணர
முகம்மது கபீராய் பூமியில் தந்தாய்

20. ராமனும் ரஹீமும் ஒன்றே என்றாய்
வேதமும் குர்ரானும் நன்றே மொழிந்தாய்
பஜனைகள் பாடி நாமம் சொல்ல
வைகுண்ட பதமுண்டு வழிதனைச் சொன்னாய்.

21. பண்டரி புரத்தில் அவதரித் தவராம்
நன்மகன் நாம தேவனாய் வந்து
பாண்டு ரங்கனின் திருவருள் அடைய
பாக்கியம் தந்த பகவான் நீயே

22. ஆனந் தீநகர் அமரர் ஆன
ஞானேசு வரர்க்கு அறிவொளி தந்தாய்
பிரம்ம ஞானத்தின் தெளிவைச் சொன்னாய்
பரமனாய் பகவான் நெஞ்சில் நின்றாய்

23. வேமன்ன புரி அழகிய ஊரில்
பேராய் ரகுநாதன் நாமமும் கொண்டு
செல்வம் ஒன்றே பெரிதாய்க் கொண்டு
கர்வம் ஓங்க வாழ்ந்து வந்தனனே.

24. பொன்னும் பொருளும் நிலைப்பது இல்லை
என்பதைச் சொல்லித் தூய்மைப் படுத்த
புரந்தரி மூலம் ஞானத்தைத் தந்து
புரந்தர தாசராய் ஆக்கிட வைத்தாய்.

25. இசைஉரு வான இறைவனும் நீயே
இசைதரும் நாதத்தில் இன்னருள் புரிய
திருவை யாற்றில் தியாக ராஜர்
உருவைத் தந்து உயிராய் நின்றாய்.

26. பக்தியின் வெள்ளம் கரைபுரண் டோட
சங்கீதத்தில் சரித்திரம் தந்தாய்
கீர்த்தனை அனைத்திலும் கீர்த்தியாய் நின்றாய்
கீதத்தில் பகவான் நாதமாய் நின்றாய்

27. கோபன்னா எனும் திருப்பெயர் கொண்டு
ராமன் நாமத்தை ஓதிடச் செய்தாய்
பெருமானே உன்திரு வருள் தந்தாய்
ராமனாய் வந்து தரிசனம் தந்தாய்.

28. கண்ணனை நினைந்து பஜனைகள் பாடி
என்றும் உன்திரு நாமம் சொல்லும்
மீரா வாழ்வில் பேரருள் தந்தாய்
பேறாய் நின்ற கண்ணனும் நீயே

29. எல்லா மதங்களும் ஒன்றென மொழிய
எல்லா மக்களும் தம்முடன் இணைய
வள்ளலாய் அருட்பெருஞ் ஜோதியைத் தந்தாய்
வையகம் காக்க பகவான் வந்தாய்.

30. அத்வைத பிரமம் அருவமம் நீரே
பக்திப் பொருளே ஈஸ்வரர் நீரே
சகுன பிரம்ம ஈஸ்வரர் நீரே
வேதமும் காணா மூலப் பொருளே.

31. சைவம் தழைக்க சிவனாய் வந்து
நாயன் மாருக்கு நல்லருள் தந்தாய்
திருமாலே உன் மகிமைகள் சொல்ல
ஆழ்வார்க் கருளி பிரபந்தங்கள் அளித்தாய்

32. ராமகிருஷ்ண பரம ஹம்சர்க்கு அருள
அரோபிந்தோ புகழ் பாரினில் பரவ
பகவான் அருள்மழை பொழிந்தவர் நீரே
ஜெகத்தினில் உதிக்கச் செய்தவர் நீரே

33. எத்தனை பிறவிகள் இத்தரை மீது
அத்தனை உயிர்கள் வாழ்ந்திட எடுத்தாய்
இப்புவி மாந்தர் நினைந்திட மறந்தார்
கலியுகம் காக்க கல்கியாய் பிறந்தாய்.

34. படபட படவென மேகங்கள் முழங்க
டகடக டகவென எழுந்தன ஓசை
வெண்பனி மேலே செங்கதிர் உதயம்
வெண்பரி மேலே கல்கியின் வடிவம்

35. தர்மத்தைக் காக்கும் தண்மதி வரவால்
அழிந்தது பாவம் விளைந்தது லாபம்
சடசட சடவென சரிந்தது சாபம்
மடமட மடவென மாய்ந்தது மாயம்.

36. **கழிந்தன வினைகள் களித்தன கண்கள்**
**கல்கியின் வரவால் மகிழ்ந்தன மனங்கள்**
**கலியினைத் தீர்க்கும் கலியுக வரதன்**
**கவலைகள் மாய்க்கும் பரிமேல் அழகன்.**

37. தீவினை அணுகா திடமிகு அகமும்
அளிமிகப் பொங்கும் அன்புறு மொழியும்
நிலையென நினைக்கும் நின்னடி துணையென
மலையென நின்றோம் மாணடி பணிந்தோம்

38. செந்தமிழ் பாடும் என்செந் நாவால்
சிந்துகள் பாடி உன்னடி தொழவே
கண்கள் இரண்டும் கல்கியை நோக்க
செவிகள் இரண்டும் சிறப்பினைக் கேட்க

39. **கைகள் இரண்டும் உன்பதம் பணிய**
**கால்கள் இரண்டும் தர்மத்தைப் பரப்ப**
**வாய்மொழி பகவான் திருப்புகழ் பாட**
**ஈஸ்வரா உன்துணை வேண்டியே பணிந்தோம்.**

40. கண்ணொளி இல்லார்க்குக் கண்ணாய் நின்றாய்
புண்ணாம் ரணங்களைப் பொழுதில் களைந்தாய்
ஊமையின் வாய்தனைப் பேசிட வைத்தாய்
தேவையைத் தொண்டர்க்குப் பெருக்கிடத் தந்தாய்.

41. கண்மலர் திறந்தால் கவலைகள் போகும்
உன்திரு வடிதொழ விதிகளும் மாறும்
பில்லி சூனியம் பொடியாய் ஆகும்
எல்லா நோய்களும் உன்னால் ஆறும்

42. எங்கும் உன்திரு சன்னிதி கண்டோம்
எங்கும் பக்தர்கள் பெருகிடக் கண்டோம்
தங்கும் இதயத் தாமரை உருவே
எங்கும் ஈஸ்வர பகவான் குருவே

43. வேண்டுவோர் வேண்டும் வரங்களைத் தருவாய்
சம்பூர்ண அவதார காட்சியைத் தருவாய்
அண்டிய யாவரையும் அன்பொடு காப்பாய்
ஆண்டவா ஈஸ்வரா உன்னுடன் சேர்ப்பாய்

44. ஆதியும் அந்தமும் இல்லாத தவரே
மூலப் பொருளே ஊழியைக் காக்க
காலம் வந்தது கண்முன் வந்தாய்
காட்சியைத் தந்து கல்கியாய் நின்றாய்

45. பக்தர்கள் பஜனை பாடியே நாளும்
துன்பம் நீங்க உன்னை நினைந்தும்
ஆடியும் பாடியும் மகிழ்ந்திங்கு வேண்ட
வேண்டிய வரம் தரும் ஸ்ரீஸ்ரீபகவான்

46. மேவிய வடிவுறும் ஈஸ்வரா போற்றி
தேவர்கள் தலைவா ஈஸ்வரா போற்றி
கருணை மழையே காப்பாய் போற்றி
விரைவினில் தரிசனம் தருவாய் போற்றி

47. நின்இணை யடிகள் போற்றி போற்றி
நின்திரு நாமம் போற்றி போற்றி
நின்திரு பகவத் சங்கம் போற்றி
ஸ்ரீஸ்ரீபகவான் ஈஸ்வரா போற்றி

48. எல்லாம் நீயே சரணம் சரணம்
கல்கியின் வடிவே சரணம் சரணம்
பகவான் ஈஸ்வரா சரணம் சரணம்
ஸ்ரீஸ்ரீபகவான் ஈஸ்வரா சரணம்

49. பகவான் நின்புகழ் போற்றி போற்றி
ஜெகமிது காக்க வந்தாய் போற்றி
திருவடி சரணம் அடைந்தோம் போற்றி
பகவத் தர்மா படைத்தவா போற்றி

50. பாரினில் தர்மம் ஓங்கவே போற்றி
துயரினைத் தீர்க்கும் ஈஸ்வராபோற்றி
பகவத் தர்மா தழைக்கவே போற்றி
ஸ்ரீஸ்ரீபகவான் ஈஸ்வரா போற்றி.

(பகவானின் பொற்பாதங்களுக்கு எங்களின் காணிக்கை)

# கல்கி புகழ் மாலை

(ஆதிசங்கரர் அருளிய முருகன் புஜங்கப் பாமாலையைத் தழுவியது)

**காப்பு**

ஒப்பிலி யாள்வரக்கோன் உள்கமழும் முன்மகவாய்ச்
செப்பில் அருள்திறந்தால் செம்பொன் உலகாக்கத்
தாமரையா ளோடு தரைவந்த வெல்குமரன்
தாமரைத்தாள் கொண்டோம் தலை.

ஒப்பிலி – வைதர்பி வரக்கோன் – வரதராசன்
தாமரையாள் – பத்மாவதி வெல்குமரன் – பகவான்

## தீராத இடர்தீரும்

இளமைக் குன்றா இளையோன் துயர்செய்
இருவினை தீய்க்கும் எரியாவான்.
வளமை முன்றா வள்ளல் மறையாள்
மலரும் மணத்தால் மகிழ்வாவான்.
களமை நேமம் ஞாலத் துறவாய்க்
கடுகும் படியுள் ஒளியாவான்
உளவாய் எனக்க நலமும் திருவும்
உதவும் மங்கல முழுதலே.

## புலமை ஏற்படும்

எழுத்தும் தருவான் சொல்விளக்கும்
இலக்கியம் கூறும் பொருள்தொகுப்பான்
வழுத்தும் நாவின் வளத்தீஞ்சொல்
வாய்க்கும் இலக்கணச் சீர்உரைப்பான்
உழுத்தும் மனவால் அறிவு ஒளி
உய்க்கவுள் ளமர்ந்துற வாகிடுவான்.
பழுத்தும் சுவைத்தும் எனைவைப்பான்
பக்கம் கண்டேன் பகல்கண்டேன்.

வால் அறிவு – வாலம் ஞானம்
பகல் – கதிரவன்

### திருவடிப்பேறு கிட்டும்

பரிவெண்மீ திவிர்ந்து வாள் எஃகம் தாங்கிப்
பரிவால் நெஞ்சமரும் மெய்யான்
உரியோராய் உள்ளம் உவப்பாரை தாங்கி
உறுதுணை யாகும் கையான்
எரிவாயில் நிற்பார் அருள்வாயில் கற்பார்
எனஈயும் நேய விழியான்
கருவாயில் வந்ததும் காத்திடும் செல்வக்
கல்கி பதம்பணிகுவோம்

எரிவாய் –நாகம்.

### பிறவிப் பிணிதீரும்

நேமம் வந்தே அடிபணிந் திடுவார்
நேரம் காலம் தப்பாது
க்ாமம் பொய்யும் களவும் புலையும்
கடலை உணர்ந்தே களிக்கின்றார்.
சேமம் தருமோர் திருவடிப் புணையைச்
சேர்ந்தே இருவினை கடக்கின்றார்.
ஏமம் தருபொன் னுலகில் ஒளியாய்
இருப்பவன் இணையடி தொழுதாரே.

### துன்பம் போகும்

கடலின் அலைபோல் நிலையும் அழிந்து
மனமும் கசந்துயர்
உடலும் சுமந்து படலும் முடியா
உயிரும் நலிந்துநலம்
கெடலும் உறவும் நட்பும் பகையாய்க்
கிளர்ந்தில் வாழ்க்கையினை
விடவும் நினைந்தார் விழுமந் தருவிழி
விலகா வினைமுதலே

**வீடுபேற்றுப் பயன் கிட்டும்**

பிறவித் துன்பம் உணர்ந்தே நேமப்
பேர்புகழ் நாடிவரின்
இறைவித் துணையாய் இருப்பவன் இருதாள்
அமுதச் சுவை தருவான்
மறவித் துன்பம் நொடியும் நினைத்தே
மாழ்கும் மனக்குறளி
அறவித் திடுமோர் அறங்கூறவையன்
அருளும் சுடர்விடுமே

குறளி – மயக்கம்

**பாவம் நீங்கும்**

தீயினும் கொடிதாம் வினைநீங் கிடவே
தேசுறும் கடல்புணையாய்த்
தாயினும் மடிதா லாட்டிடும் இறைவன்.
தங்கிவாழ் துறக்கமிதில்
நாயினும் கீழாய் நலிவுறு வாரும்
நாடிட இருள்அறுத்துக்
காயினும் கசப்பினும் நோய்மிடி அகற்றும்
கழல்தாள் கவிமனமே.

துறக்கம் – சொர்கம்

**மனம் அமைதி பெறும்**

முல்லையும் குறிஞ்சியும் தாமரை தாழையும்
முகிழ்க்கும் தேன்மலர்தார்
புல்லிய தோள்இணை கமழ்ந்து புலரும்
பொன்னொளிர் மஞ்சமதில்
எல்லியும் நிலவும் சங்குசக் கரமும்
எழிலுற உறவாட
சல்லியம் முழங்க நல்லியல் வாணன்
தாள்மணம் தண்ணிடுமே.

### புகலிடம் கிட்டும்

தண்முகத் தாமரை கதிர்ஒளி தாவியே
தாள்செய் குமுதம் தழல் பரவும்.
உண்முகம் மலர்மணம் உவர்ந்திடும் பேரழ
குலவிடும் காந்தமும் உயிர்கவரும்.
பண்ணொடு தாளம் பரவி உலகெலாம்
பயிலநெறி யாவும் பொதுநெறியாய்க்
கண்ணொடு கண்ணும் பொருந்தலில் புகலிடக்
கைகொடும் செப்பற் கரும்பொருளே.

### அக இருள் நீங்கும்

கண்செவி மூக்குவாய் ஐம்புல ணங்கள்
கடிவிலாக் குதிரைகள் பாய
மண்அனல் நீர்வளி வெளிபூ தங்கள்
மாட்சியை அறிகிலா நோயர்
விண்ணுள் பொன்னுல காளும்மெய் வேந்தன்
விழலெனும் உயிர்கொடு நேயன்
தண்ணுலாத் தம்பதம் தழுவிய தால்நலம்
தழுவ மனஇருள் தகரும்.

### துன்பம் விலகும்

பரமஆசியர் முன்செல மக்கள்
படைநடை கொள்ள நினைத்தபடி
வரமும் தருகும் தினைத்துணை யாகும்
வள்ளலும் துணையுடன் வந்தமர்ந்தே
உரமும் திறமும் ஒருங்கிணை பெற்றோர்
உடன்பிறப் பாளர் பிறங்கடையும்
திருவும் வளமும் பெருகும் படிசெயும்
தேவ தேவனைப் போற்றுவமே.

பிறங்கடை - வாரிசு



### கடைக்கண் அருள்கிட்டும்

ஓரறி முதலாம் உலகுயிர்கள்
ஒன்றெனும் பத்திமை அருளுகின்ற
பேரறி பிழம்பே வள்ளைசெவி
பிறங்கும் வழிமலர்ப் பேரன்பூர்
காரறி வானம் கவிழ்நிலத்தார்
கனிக்குலை மொய்க்கும் களிவண்டார்
யாரறி வார்நின் மெய்க்கீர்த்தி
யாவையும் அல்லையும் நீயன்றோ.
பேரன்பூர் – பெரம்பூர்.

### விருப்பம் நிறைவேறும்

அறம்பொருள் இன்பம் வீடென்னும்
அருமறைப் பொருளாய் நிலைத்தின்று
துறவியில் லறத்துத் தொடங் கென்னும்
தூய நட்பும் செயல் அன்பும்
உறவில் மன்னிப் புளதாகி
உலகம் புரக்கும் நின்சென்னி
கறங்கும் தொண்மணி கவலையறும்
காலம் கைமனம் கமழ்வோனே
தொண்மணி – நவமணி

### பகைஅச்சம் நீங்கும்

அன்னம் இணைந்த மென் இருக்கை
அம்மை யுடனே எழுந்தருளி
பின்னும் ஓரா யிரமாண்டுப்
பிறங்கும் அகண்ட சுடர்மேவி
முன்னம் தோன்றிய மதமொன்றாய்
முரணும் மனங்கள் தாமொன்றாய்
மன்னும் மங்கல உடைபூண்டாய்
மாழ்கும் நெஞ்சமும் மலர்வோனே.

### மகிழ்ச்சி ஏற்படும்

வருக மக்காள் அருகெனவே
மகிழும் மலர்க்கை மலர்ந்தேதேன்
தருகும் நெஞ்சத் தாமரையில்
தவழும் உறவும் நட்பாகப்
பெருகும் அன்பில் பிழைபொறுத்தும்
பேணும் பெற்றோர் தம்வழுத்தும்
உருகும் அடியார் உளம்பூக்கும்
உவகை யூற்றே உணர்ந்தோமே.

### வினைதீரும்

திரும ழிசைத்திரு வள்ளூரும்
திருப்பெரும் புத்தார் திருநின்றூர்
பெருமான் நின்றாய் இடையாகப்
பேசும் புகழ் செய் நேமத்தில்
உருவாய் அருவாய் உடற்குயிராய்
உலவும் திருவே காமமுதல்
கருவாய் வந்தே வினைதீர்க்கும்
கண்ணிய மேவாழ் கண்ணமுதே.

### மாசறு காட்சி கிடைக்கும்

கஞ்சத் தனமும் மிகுகளிப்பும்
காம வெறியும் சினத்தீயும்
மிஞ்சும் தன்முனைப் பகங்காரம்
மிகவே இழியும் தன்மானம்
அஞ்சும் படியே வாழ்தலுறும்
அடியார் தம்மையும் அரவணைக்கும்
செஞ்சொல் லியத்தின் பொன்னுலகே
சீர்மைக் காட்சி தருகுகவே.

செஞ்சொல்லியம் – மகாவாக்கியம்

**சாதல் அச்சம் நீங்கும்**

நாளும் கோளும் நலம்செய்யும்
நம்பற் குரியான் நடுவிருக்க
வாளும் தீயும் உறுப்பறுக்கும்
வகையும் எண்ணி மாழ்கிடுவார்
தோளும் நலியும் துயர்பிறர்க்குச்
செய்யும் சுமையால் இவை என்னோ.
மூளும் அன்பும் மன்னிப்பும்
முகிழ்த்தால் இறப்பும் பேரின்பே.

**அடைக்கலம் கிடைக்கும்**

உலகம் முதலாய் வாலறிவாய்
உவப்பார் உள்ளம் சேர்கதிராய்
நிலவும் வெறுப்பும் விருப்பிலதாய்
நீள்வினை சேரா நெருப்புளதாய்
உலவும் ஐம்பொறி ஒழுங்குளதாய்
உண்மை அறம் அருள் புணையுளதாய்
இலகும் குணமும் திருவுளதாய்
இருப்பன் இணையடி இணைவோமே.

**கவலைதீரும்**

மீன்முதல் தோற்றம் மிளிர்ந்துயரம்
மேலாம் திருவடிப் புணைபற்ற
வான் முதலான பரத்தந்தை
வால்ஒளி யான திருமேனி
தேன்அமு தீந்து துயர்தீர்க்கும்
தெய்வம் ஒன்றாய்ப் பலவாகி
நான்என தென்னும் அழுக்கறுக்கும்
நாயகன் உளவால் நலிவேதே.

**மனநோய் நீங்கும்**

கண்கள் தீயன பார்த்தறியும்
காதுகள் கொடியன கேட்டறியும்
புண்கள் வாய்ச்சொல் தானறியும்
புரட்டுகள் உடலும் செய்தறியும்
எண்ணம் சொல்செயல் யாவும்பொய்
இருப்பன வறியும் துன்பதுயர்
மண்ணுள் தள்ளும் முன்காக்கும்
மறையே நின்னைத் தொழுதேமே.

**உடல்நோய் தீரும்**

முன்னோர் பழிபல வினையாலும்
மூளும் ஈத குறிமூலம்
தன்னோர் பில்லா ஊதைபித்தம்
தழைக்கும்.கோழை செய்வினையும்
மின்னோர் பூட்டும் பருவத்தால்
மிளிரும் நஞ்சும் வானிலையும்
பின்னே விளைக்கும் அகப்புறநோய்
பெயரும் கண்ணொளி பெய்திடினே.

ஈதகுறி – எயிட்சு (AIDS)
ஊதை – வாதம் கோழை – சிலேத்துமம்

**அடைக்கலப் பயன்கிட்டும்**

விழிகள் கல்கி தனைக் காண்க
விரிந்த புகழைச் செவிகேட்க
மொழிகள் இசையும் வாய்மொய்க்க
முளறிப் பாதம் கையணைக்க
வழிகள் அறியாத் துயர்கொண்டார்
மனம்போல் வரம்பெற் றுய்திடவே
பிழியும் அருளன் மணம்நுகர்வார்
பேறடைந் தார்பயன் பெற்றாரே.

## வரம் தரும் வள்ளல்

காடசிக் கெளிதாய்க் கனியுரையும்
கடமைக் குயர்வாய் எதிர்நின்று
மாட்சிக் குரித்தாய் மனநலத்தில்
மலர்ந்து யாவரும் ஒன்றாக
மீட்சி தந்து மேன்மையருள்
மிதக்கும் படிசெய் வரம்நல்கி
ஆட்சி புரியும் அறத்தலைவன்
அவனை யன்றி ஆருளரே.

## குடும்பம் இன்புறும்

பெற்றோர் பிறந்தார் மனைமக்கள்
பெருங்கிழ மையர் சுற்றத்தார்
உற்றார் உறவினர் ஒன்றாகி
உள்ளத் தன்பில் தான்மேவிக்
கற்றார் கல்லார் உடன்கூடிக்
கவிந்தோம் நின்றன் திருவடியே
பெற்றோம் இன்பப் பெருவாழ்வு
பேரருள் நினைந்தோம் பெருந்தேவே.

## நஞ்சு முறியும் நோய் அகலும்

உணவில் உறவில் உடனுறையும்
உடையில் செலவில் நச்சுயிர்கள்
குணமில் பழக்க வழக்கங்கள்
கொள்ளை பெருநோய் ஈளைபுற்று
பிணியும் மூப்பும் இனிமைதரப்
பிழையும் குற்றமும் இருவினையும்
கணமும் தரியா தெமைக்காக்கும்
கண்ணிய மேநற் காவலனே

### குற்றம் குறை தீரும்

குற்றம் குறைகள் செய்தமனம்
குறுகி வருந்தி உனையழைக்கும்
பெற்றம் வருவான் துயர் எண்ணிப்
பெரிதும் கவன்றே உனையடையும்
அற்றம் இல்லா இன்பத்திற்
கழைக்கும் நின்னருள் கலந்திட்டோம்.
செற்றம் தவிர்த்தோம் எமையாழும்
தெளிந்தோம் தெளிதேன் தேவரிரே.

பெற்றம் வருவான் – எமன்

### பேரின்பப் பெருமிதம்

இறைவன் உணர்மா மரத்துக்கும்
இவரும் வெண்பரி வாளுக்கும்
மறைவான் உதிரும் சொல்லுக்கும்
மட்டில் இன்ப அருளுக்கும்
துறைவன் அமர்நே மத்திற்கும்
தொல்லுல களத்திருத் தாளுக்கும்
நிறைதேன் பிலிற்றும் செயலுக்கும்
நெஞ்சார் வணக்கம் வணக்கமதே.

### வெற்றி கூறுவோம்

பேரின்பத் தலைவனுக்கு வெற்றி கூறுவோம்
பெருஞ்சோதி நாயகர்க்கு வெற்றி கூறுவோம்
கார்மின்னும் வான்புகழ்க்கு வெற்றி கூறுவோம்
கவலைகள் தீர்ப்பவர்க்கு வெற்றி கூறுவோம்
ஏர்மரைக்கை இணையருக்கு வெற்றி கூறுவோம்
இணையிலாத வரத்தார்க்கு வெற்றி கூறுவோம்
சீர்மன்னும் படையருக்கு வெற்றி கூறுவோம்
தென்தமிழ்நா டேற்றவர்க்கு வெற்றி கூறுவோம்

மரை –தாமரை –பத்மாவதி அன்னை

**வாழ்த்து**

யாவரே யாயினும் பத்தியுடன்
யாவுமாம் கல்கி புகழ்மாலை
தாவியே கற்று மணங்கனிந்தால்
தகுபொருள் புகழும் வாழ்நாளும்
மேவியே மனைவி மக்களுடன்

மிகுநல வாழ்வில் தான் மகிழ்ந்தே
பூவிரி சோலை நேமத்தான்
பொன்னுல கடைதல் மும்மையதே.
மும்மை – உண்மை வாய்மை மெய்ம்மை

(முற்றும்)

## சொல்லத்தகுமாகுமா?

சொல்லத்தகுமாகுமா? பகவானின்
அந்தர்யாமின் அளிக்கும் ஆனந்த அனுபவத்தைச்
(சொல்லத்)

அல்லல் ஒழித்தன்புடன் அரவணைக்கும்
இதய பகவானின் அருமை பெருமைகளைச்
(சொல்ல)

திரிமூர்த்தி ஸ்வரூபனின் ஆன்மாலயத்து
சந்நிதி முன்னிருகை சென்னிமேல் கூப்பிக்கொண்டு
அன்னை தந்தையும் நீயே கல்கி என
நெஞ்சம் உருகிப் பாட நிலவும் நிம்மதியினைச்
(சொல்ல)

# திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்,
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா; உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னொடும் பிரிவு இன்றி
ஆயிரம் பல்லாண்டு;
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு;
வடிவார் சோதி வலத்து உறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு;
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி
திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒன்றுண்டு நின்று
குடிகுடி ஆட்சி செய்கின்றோம்;
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்
தோளும் பொழி குருதி
பாயச் சுழற்றிய ஆழி வல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.

ஸ்ரீ பெரியாழ்வார் (திருமொழி)

**பண் : சீகாமரம் தாளம் : இடைபொத்து**

பொலிக! பொலிக! பொலிக!
போயிற்று வல் உயிர்ச் சாபம்;
நலியும் நரகமும் நைந்த;
நமனுக்கு இங்கு யாது ஒன்றும் இல்லை;
கலியும் கெடும்; கண்டுகொண்மின்;
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து, இசை பாடி,
ஆடி, உழிதரக் கண்டோம்.

கண்டோம், கண்டோம், கண்டோம்;
கண்ணுக்கு இனியன கண்டோம்;
தொண்டீர்! எல்லீரும் வாரீர்;
தொழுது தொழுது நின்று ஆர்த்தும்
வண்டு ஆர் தண் அம் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண் - தாள் பாடி நின்று, ஆடி
பரந்து திரிகின்றனவே.

- ஸ்ரீ நம்மாழ்வார் (திருவாய்மொழி)

**ராகம் : நீலாம்பரி தாளம் : சுத்தாங்கம்**

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே; ஆயர் தம்
கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிரயான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.

# சுப்ரபாதம்

அருள்ளொளியில் இருள் நீக்கும் ஆதவனோ எழுகின்றான்
அதிகாலை தெய்வீகம் பூங்குயிலின் பூபாளம்...
அருளொளியில் இருள்... 2
பொய்கை தனை மெய்தழுவி பூம்பற்றால் துயில் நீக்கி
புல் இனங்கள் பனி உதறி பூக்களையும் நீராட்ட 2
கதிரவனின் கதிரொளியால் கதி கொடுக்கும் பகவானே....!
கருணை மிகு திருமதியாய் அருள் கொடுக்கும் பகவதியே...!
கரு அறையின் கனி அமுதே இறை அருளின் உறைவிடமே...!
கல்கியே பகவானே திருப்பள்ளி எழுந்தருள்வாய் 2
(அருள்ளொளியில்...)

ஆவினத்தின் கழுத்து மணி அழகழகாய் ஒலி எழுப்ப
ஆங்கிருக்கும் பூங்குருவி அவ் இசையை தான் ரசிக்க 2
பூவினத்தின் பூவிதழில் பூம்பனிகள் மின்னலிட
ஆ...ஆ...ஆ... 2
பூமகளின் புண்ணியத்தில் பூத்த விதை பாத்திருக்க 2
நாவினிக்கப் பாடுதற்கு நற்புலவர் காத்திருக்க
நான்குதிசை பக்தர்களும் சன்னிதியில் கண்பதிக்க 2
கரு அறையின் கனியமுதே இறை அருளின் உறைவிடமே
கல்கியே பகவானே திருப்பள்ளி எழுந்தருள்வாய்...
கல்கியே பகவானே திருப்பள்ளி எழுந்தருள்வாய்...
(அருள்ளொளியில்...)

## அன்ட சராசரம்

அன்ட சராசரம் நடந்தநற் பாதம்
ஆண்டியும் அரசனும் சேவிக்கும் பாதம்
பண்டிதன் பாவலர் பணிந்திடும் பாதம்
அன்னை பத்மாவதி திருமலர் பாதம் 2

கானகம் நடந்த ஸ்ரீராமனின் பாதம்
பின் தொடர்ந்தே வந்த சீதையின் பாதம்
வானரம் ரிஷிமுனி வணங்கிய பாதம்
அன்னை பத்மாவதி திருமலர் பாதம்
(அன்ட சராசரம்)

கோகுல கிருஸ்னனின் குழலிசை நாதம்
கேட்டதும் மயங்கியே ஆடிய பாதம்
சத்தியபாமா ருக்மினி பாதம்
அன்னை பத்மாவதி திருமலர் பாதம்
(அன்ட சராசரம்)

சங்கரர் முன் செல்ல பின் வந்த பாதம்
சலங்கைகள் யதி சொல்ல நடந்தனற் பாதம்
தங்கிய இடந்தன்னில் எழுந்தது பீடம்
பீடத்தின் மீதினில் அம்மா பாதம்
(அன்ட சராசரம்)

சிவனுடன் தாண்டவம் ஆடிய பாதம்
மகிசாசூரனை வதம் செய்த பாதம்
நிலையென நினைக்கும் பொன்னருள் பாதம்
அன்னை பத்மாவதி திருமலர் பாதம்
(அன்ட சராசரம்)

# திருப்பாதங்கள் தாங்கிய பாதுகைக்கு அபிஷேகம்

ஓம் சச்சித்தானந்தப் பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்ம
ஸ்ரீபகவதி பத்மாவதி சமேத ஸ்ரீகல்கி பகவதே நமஹ!

திருப்பாதங்கள் தாங்கிய பாதுகைக்கு அபிஷேகம்
பாபவிமோசனம், கர்ம விமோசனம் – சர்வலோக
தாய்தந்தையின் பாதுகை அபிஷேகம்
இதயத்துள் இறைவன் கல்கி பாதாபிஷேகம்
ஸ்ரீபத்மாவதி பாத மங்களாபிஷேகம்
வரப்பிரசாதம் மோக்ஷ் ப்ரதானம்
பகவான் பகவதி பாதுகை அபிஷேகம்
பக்தரின் கண்கள் காணும் தரிசாணபிஷேகம்
சிருஷ்டித்த கைகள் கோர்த்து சேவாபிஷேகம்
உரைக்கின்ற குரலினால் கீர்த்தனாபிஷேகம்
உருகிய உள்ளத்தின் உணர்வாபிஷேகம்
சகல ஜீவன்களுள் சூக்ஷ்மாபிஷேகம்
அனைத்துயிர்கள் செய்யும் ஆத்மாபிஷேகம்
விண்ணும் மண்ணும் ஆடும் ஆனந்த அபிஷேகம்
உயிர்கள் அனைத்தின் ப்ராணாபிஷேகம்
பரமாத்மன் கல்கி பாத பவித்ராபிஷேகம்
புவிமனம் நறுமணாமாக சுகந்தாபிஷேகம்
புண்ணியங்கள் யாவும் ஊற்றெடுக்கும் தீர்த்தாபிஷேகம்
ஆதி அந்தம் நின்ற பாத ஆபரணாபிஷேகம்
அருட்பெருஞ்ஜோதி பாத ஆர்த்தியாபிஷேகம்
புன்னகைக் குணாளன் பாத புஷ்பாபிஷேகம்

சப்தங்கள் அனைத்தினால் மந்திராபிஷேகம்
ஸ்வர்ணயுகம் தொடங்கும் பாத ஸ்வர்ணாபிஷேகம்
அனைத்துயிரின் பசி போக்கும் அமிர்தாபிஷேகம்
இனிதே பகவான் பாதுகை பாலாபிஷேகம்
உதயமாகும் கதிரவனின் சூர்யாபிஷேகம்
குளுமை கொண்ட சந்திரனின் சந்திராபிஷேகம்
புண்யம் தந்த புருஷோத்தம பாத பக்தியாபிஷேகம்
நா இனிதே ஒன்றிய நாமஸ்மரணாபிஷேகம்

ஓம் சச்சிதானந்தனே நமஹ
ஓம் சத்யலோகவாசனே நமஹ
ஓம் ஹ்ருதய நிவாசனே நமஹ
ஓம் பத்மபதியே நமஹ
ஓம் பக்த பராதீனனே நமஹ
ஓம் பரப்பிரம்மனே நமஹ
ஓம் புருஷோத்தமனே நமஹ
ஓம் பக்தவத்ஸலனே நமஹ
ஓம் சூத்ரதாரியே நமஹ
ஓம் கல்கி அவதாரனே நமஹ

விஸ்வமெல்லாம் தாங்கிய பாத விஸ்வாபிஷேகம்
ஞானமெல்லாம் உனதென்று ஞானாபிஷேகம்
வித்தைக்கெல்லாம் தந்தை பாத வித்யாபிஷேகம்
கலி வீழ்த்திய கல்கிக்கு வீராபிஷேகம்
மூலப் பரம்பொருள் பாத மூலாபிஷேகம்
முதலும் முடிவும் அறிந்தோர்க்கு ப்ரேமாபிஷேகம்!

# திருப்பாதங்களே திருப்பாதங்களே

திருப்பாதங்களே திருப்பாதங்களே
திருப்பாதங்களே கல்கி திருப்பாதங்களே
திருப்பாதங்களே திருப்பாதங்களே
திருப்பாதங்களே அம்மா திருப்பாதங்களே

கஷ்டமெல்லாம் தீர்க்குதய்யா திருப்பாதங்களே
கலியுகத்தை முடிக்க வந்த திருப்பாதங்களே
கண்டவுடன் ஆனந்தம் காண்பதெல்லாம் பேரின்பம்
கர்மவினையைக் கரைத்துவிடும் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

ஆணவத்தை அழிக்குதய்யா திருப்பாதங்களே
அனுக்கிரஹத்தின் வடிவமையா திருப்பாதங்களே
சத்யயுகம் படைத்திடும் சத்ய தர்மம் காத்திடும்
சர்வலோகம் ஆள்வது திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

பக்தி ஞானம் அழிக்குதய்யா திருப்பாதங்களே
பற்றறுக்க வைக்குதய்யா திருப்பாதங்களே
ப்ராணசக்தி பெருக்கிடும் ஜென்ம பலன் அளித்திடும்
கடவுளர்கள் காண ஏங்கும் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

உருகும் உள்ளம் சேருமிடம் திருப்பாதங்களே
அருள் வெள்ளம் தொடங்குமிடம் திருப்பாதங்களே
தெளிவு பொலிவு அளித்திடும் பிணியும் நலிவும் நீக்கிடும்
பரம கருணை பொங்குமிடம் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

பாவமெல்லாம் போக்கிவிடும் திருப்பாதங்களே
புவிமாற்ற புறப்பட்டதே திருப்பாதங்களே
மின்னலாக விரைந்திடும் இன்னல் தீர்த்துக் காத்திடும்
இன்பமெல்லாம் அளிக்குதய்யா திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

முனிவரெல்லாம் வணங்குவது திருப்பாதங்களே
முயற்சி கொண்டு அடைய முடியா திருப்பாதங்களே
பக்தர்களின் இருப்பிடம் முக்தர்களின் முடிவிடம்
சக்தி வெள்ளம் ஊற்றெடுக்கும் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

உலகைக் காக்க வந்ததய்யா திருப்பாதங்களே
உள்ளங்களை மாற்றுதய்யா திருப்பாதங்களே
ஊழ்வினையை ஒழித்திடும் தாழ்வினையை அழித்திடும்
தரணி ஆள வந்ததய்யா திருப்பாதங்களே.
(திருப்பாதங்களே)

வேதங்கள் போற்றுவது திருப்பாதங்களே
வேற்றுமையை வேரறுக்கும் திருப்பாதங்களே
பரவசத்தில் ஆழ்த்திடும் பரம அன்பு சூழ்ந்திடும்
சிருஷ்டியாகவும் பணியுமிடம் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

இயற்கை யெல்லாம் இயக்குவது திருப்பாதங்களே
இணைந்து நடனம் புரியவந்தது திருப்பாதங்களே
இதயத்திலே நின்றிடும் இன்னல் எல்லாம் தீர்த்திடும்
இரண்டறவே ஒன்றுமிடம் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

# பரம்பொருளின் நேர்த்தியான

பரம்பொருளின் நேர்த்தியான கல்கி மையம் தன்னிலே
பத்தாமவதாரரின் பாதுகைகள் கண்டீரோ?
பரப்ரம்ம கல்கி இன்று பரிவுடனே புவியில் வந்தார்
புருஷோத்தமன் பரந்தாமன் பாதுகைகள் கண்டீரோ? (பரம்)

கலியுகத்தை முடித்து வைக்கும் காலதேவனாக வந்த
கல்கியின் பாதுகைகள் காண இங்கு வந்தீரோ?
கரம் குவித்துச் சிரம்தாழ்த்தி வணங்கி நின்றால் நாமுமே
கருணையோடு அருளினையே வாரி வழங்கும் தெய்வமே
(பரம்)

ராமச்சந்திர மூர்த்தியின் பாதுகைகள் தன்னையே
சிரம்மேல் தாங்கி நடந்து சென்றான் பரதமாமன்னனும்
வாசுதேவ கிருஷ்ணனின் பாதங்களில் வணங்கி நின்று
சாரதியாய் ஆக்கிக் கொண்டான் த்வாபரத்தில் பார்த்தனும்
(பரம்)

கருணையே வடிவமான கல்கியின் திருப்பாதங்கள்
காலமெல்லாம் காத்து நிற்கும் கனிவுடனே நம்மையே
இந்த யுகத்தின் சத்தியமாய் அவதரித்த கல்கியின்
பாதுகைகள் வணங்கி நின்றால் ஆனந்தம்தான் என்றுமே
(பரம்)

ஒவ்வொருவர் இதயத்திலும் உறைந்து நிற்கும் கல்கியை
உணர்ந்துவிட்டால் பேரானந்தம் நாள் முழுவதும் என்றென்றும்
பக்த பராதீனனும் பாரினையே காக்க வந்தார் - அவர்
திருவடியைக் காண்கின்ற பாக்யம்தான் பெற்றீரோ?
(பரம்)

## உன்பாதம் சரணடைந்தேன் கல்கி ஐயனே

உன்பாதம் சரணடைந்தேன் கல்கி ஐயனே
எனை ஏற்றுக் கொண்டு அருளவேண்டும் கல்கி ஐயனே!
உளமார வேண்டி நின்றேன் கல்கி ஐயனே! என்தன்
ஊழ்வினையை மாய்க்க வேண்டும் கல்கி ஐயனே!
(உன் பதம்)

பெண்ணாசை பொன்னாசை கொண்டதினாலே
பெரும்பாவம் என் மனத்தில் சேர்த்துவைத்தேனே!
உண்மையான அன்புதனை மறந்து விட்டேனே – உன்னை
நொடியேனும் நான் நினைக்கத் தவறிவிட்டேனே!
வாழவில்லையே கல்கி, நான் வாழவில்லையே!
மனத்தினிலே என்றும் எனக்குச் சாந்தியில்லையே!
(உன் பதம்)

மாயையிலே சிக்கியதால் உனை இழந்தேனே!
ஒரு கல்போலே மிருகம் போலே கிடந்துவிட்டேனே!
சீரான உறவு முறை மறைந்துபோனதே!
வாழ்க்கை முன்னேற்றம் காணாமல் தள்ளாடுதே!
கருணை வேண்டுமே கல்கி உன் கருணை வேண்டுமே!
காலமெல்லாம் தந்தையாகக் காக்க வேண்டுமே!
(உன் பதம்)

இஜ்ஜென்மத் தோல்வியெல்லாம் முன்ஜென்ம வினையாலே
இஜ்ஜென்மத் தீச் செயல்களும் சேர்ந்ததினாலே
மாளாத துன்பம் துயரம் வாட்டுகின்றதே!
.வாழ்வு முன்னேற்றம் காணாமல் தள்ளாடுதே!
காணச் செய்தாயே ஒப்பந்தம் காணச் செய்தாயே!
நம் ஒப்பந்தத்தின் குறைகளையே நீக்கிடுவாயே
(உன் பதம்)

பேராசையாலே விளைந்ததெல்லாம் கடன் தொல்லையே
பெண்ணின்ஈர்ப்பு எனக்குச்சேர்த்ததெல்லாம் கொடிய வியாதியே
யாவையுமே உன்னிடம் நான் கேட்டுப் பெற்றதே
இதனை உணர்த்தி விட்டாய் கல்கி உன் கருணையினாலே
வேண்டும் கல்கியே அருள் வேண்டும் கல்கியே!
உன் அழகு ரூபம் என்தனுள்ளே வேண்டும் கல்கியே!
(உன் பதம்)

சிந்தையிலே எண்ணமெல்லாம் சீர்கெட்டதாலே
எதிர்மறையாம் எண்ணங்கள் தொடர்வதினாலே
வாழ்க்கையிலே வெற்றியெல்லாம் நழுவிப் போகுதே!
நல் எண்ணங்களை நாயகனே! தந்திடுவாயே
கருணை வேண்டும் கல்கி உன் கருணை வேண்டுமே
காலமெல்லாம் தந்தையாகக் காக்க வேண்டுமே
(உன் பதம்)

இந்த ஈன வாழ்க்கை என்னாலே தாங்கமுடியவில்லையே
அன்பு காட்டி வாழ்க்கைப் பாதை மாற்றிடுவாயே!
வெற்றிப்பாதை நீ எனக்குக் காட்டிடுவாயே
நம் ஒப்பந்தத்திலுள்ள குறைகள் போக்கிடுவாயே
நம் ஒப்பந்தத்திலுள்ள குறைகள் போக்கிடுவாயே
நம் ஒப்பந்தத்திலுள்ள குறைகள் போக்கிடுவாயே
(உன் பதம்)

## விண்ணும் மண்ணும் கிடுகிடுக்க

விண்ணும் மண்ணும் கிடுகிக்க
வேண்டும் வரம் நமக்களிக்க
சிங்காரரூபமிட்டு ஜகம்புகழ ஓடி வரார்
கல்கி நாமம் சொல்வோம் – நாம்
பஜனை கோஷம் செய்வோம்

(கல்கி நாமம்)

மத்தளங்கள் கொட்டி வர
மங்கள இசை சேர்ந்து வர
மன்னாதி மன்னனவன் வெண்பரிமேல் பவனிவர
அவனிக்கெல்லாம் க்ஷேமம்
அவன் அமர்ந்த இடம் நேமம்

(கல்கி நாமம்)

அகமதை அழித்துவிட்டார்
ஆணவத்தைப் பேக்கிவிட்டார்
அருள்தனைப் பாய்ச்சிவிட்டு ஆனந்தமாய்ச் சிரித்து நிற்கும்
அழகு முகம் பாரு – அந்த
கல்கி நாமம் பாடு

(கல்கி நாமம்)

பாவங்களைப் போக்கி விட்டார்
பந்தபாசம் உணர்த்திவிட்டார்
மனிதகுலம் செழித்திடவே மனிதராக அவதரித்தார்
பாராளும் தேவன் – அவன்
பாசமிகு ஈசன்

(கல்கி நாமம்)

துன்பமில்லை துயரமில்லை
தோன்றிடும் அமைதிநிலை
துள்ளித்துள்ளி ஆடிவரும் தூயவனின் அன்புமழை
மந்தஹாஸ ரூபன் – அவன்
முக்திதரும் தேவன்

(கல்கி நாமம்)

# கல்கி பகவதி பொற்பாதங்கள்

கல்கி பகவதி பொற்பாதங்கள் பணிந்தேன்
பெண்களின் குறை கேளம்மா
புவிதனில் பெண்களாய்ப் பிறந்துவிட்டோம் அதை
பெற்றோரும் வெறுத்தனர் பாரம்மா...

(கல்கி)

நடந்திட்ட திருமணத்தில் நிறைவையே காணவில்லை
எதிர்ப்பார்ப்புடனே ஏங்கித் தவித்தேனே
ஏமாற்றமடைந்து நான் கடமையாய் நடத்தும்
தாம்பத்ய வாழ்வில் உண்மை அன்பு இல்லை

(கல்கி)

வேலைக்குச் செல்லும் பெண்தான் வேண்டும் என்று மணந்தும்
எந்தச் சுதந்திரமும் தருவதில்லை ஆண்கள்
சந்தேகம் என்ற நோயால் பீடித்து
என் வாழ்வை நரகம் ஆக்குகின்றாரே!

(கல்கி)

குடித்து விட்டே வரும் கணவன்மார்கள்
தினமும் தருவது அடியும் உதையும்தான்
அவமரியாதையுடன் அதிகார வெறி கண்டு
அடங்கும் நரக வாழ்க்கை தேவைதானோ?

(கல்கி)

ஒவ்வொரு ஆணின் பின்னும் இயங்கும் சக்தி
பெண்கள்தான் என்பதை உணராமலே இன்று
மாதர்கள் தம்மை இழிவு செய்கின்ற
மடமையை இன்னும் நீ பொறுத்திருப்பாயா?

(கல்கி)

பிறந்த வீட்டிற்குச் செலவு செய்வதற்கு
உரிமை இல்லை என்று தினம் சண்டை இடுகின்றார்
அவரது தேவை என் உடலும் பணமும்தான்
இந்த அவல வாழ்க்கை இன்னும் ஏன் கல்கி?

(கல்கி)

சுதந்திரம் இல்லாத அடிமைகள் நாங்களே
சுயமரியாதை இழந்திட்ட நிலையிலே
முற்பிறவியில் செய்த பாவம்தான் காரணம்
உணர்ந்தே உன்னிடம் ஓடி வந்தோமே

(கல்கி)

தோஷங்கள் நீக்கி எங்களை விடுவித்து
நிம்மதியான வாழ்வை நீ தந்திடுவாய்
உன் அன்பு மட்டுமே எம் வாழ்வின் மருந்தாகும்
தஞ்சமடைந்தோம் காத்தருள்வாய் அம்மா

(கல்கி)

# உன் பாதம் பணிந்திடுவோம்

உன் பாதம் பணிந்திடுவோம் கல்கி தேவனே – உன்னை
அனுதினமும் போற்றிடுவோம் அன்பு தெய்வமே
கண்ணெதிரில் இறங்கி வந்த இறைவனும் நீயே – அந்த
விண்ணிலுள்ள தேவர்களின் தேவனும் நீயே

(உன் பாதம்)

அன்பினால் அகிலத்தையே ஆள வந்தாய் – இந்த
மண்ணில் பல மதத்தினரை ஒன்று சேர்த்தாய்
உன்னில் அவர்தம் கடவுளரைக் காண வைத்தாய்
அனைவரையும் வஞ்சம் மறந்து இணைய வைத்தாய்

(உன் பாதம்)

எண் மதத்தினர் ஏற்றிடும் ஓர் எளிய தர்மம்
எண்ணில்லா மகிமை கொண்ட இனிய தர்மம்
உலகம் பலகாலம் எதிர்நோக்கிய தர்மம்
இவ்வருகையிலே கருணையுடன் உவந்தளித்தாயே

(உன் பாதம்)

# ஆனந்த சாகரா

ஆனந்த சாகரா ஸ்ரீபகவான் ஈஸ்வரா
ஜெய்ஜெய் நேமம் நிபாலா ஸ்ரீசத்ய லோக தேவா
நந்த பகவான் ஆனந்த பகவான்
அம்மதோ ராவா பத்மம்மதோ ராவா

(ஆனந்த)

தந்தனானா பலா தந்தனானா
தந்தனானா பலா தந்தனானா
ப்ரம்மஸ்வரூபா பரப்ரம்ம ஸ்வரூபா
சச்சிதானந்தா ஓ புண்யபுருஷராவா

(ஆனந்த)

நிரதமுநேனு ஸ்மரியிந்துனு நின்னு
தேவாதிதேவா ஓ திவ்ய புருஷா ராவா
கல்கி பகவான் ஓ கல்கி பகவான்
அம்மதோ ராவா பத்மம்மதோ ராவா

பாரமந்த நீதையா பாக்யமந்த நாதையா
திகதிக்கு நீவேனய்யா ஸ்ரீ பகவான் ஈஷ்வரா
பவபந்த நாசகா ஸ்ரீ பகவான் ஈஷ்வரா
அம்மதோ ராவா பத்மம்மதோ ராவா

(ஆனந்த)

மருவலேமு நின்னய்யா விடிச்சி போலேமு நின்னய்யா
அதி நீ ப்ரேமையா ஸ்ரீ பகவான் ஈஸ்வரா

## You are the sunshine in the morning light

You are the sunshine in the morning light
You are the twinkle in the twilight star
You are the mirror in the moonlit sea
You are the glitter in the sunlit sand
You are the colours in the rainbow sky
You are the sparkle in the golden age
You are the splash in the autumn rain
You are the seed of the sprouting bean
You are the joy in the jumping child
You are the fire in the flaming torch
You are the power in the peaceful heart
You are the life in the living lot
You are the song in the singing soul
You are the beauty in the blossom time
You are the brightness in the beacon Light
You are the love in the loveless land
You are the thunder in the roaring sky
You are the light in the lightning streak
You are the kindnees in the gentleness
You are the feather in the flying bird
You are the whistle in the gentle wind
You are the chill in the autumn breeze
You are the white in the falling snow
You are the rage in the rushing river
You are the beat in the music band
You are the rhyme in the rhythmic tune
You are the wind in the vocal cord
You are the breath in the breathing heart
You are the glow in the gleaming face
You are the green in the open grass
You are the red in the silky rose
You are the blue in the sunbathed sky
You are the the god of the goled age.

## I see the Lord in everthing

Rain drops keep falling on my head
I see the Lord in the freshness that I feel
Sunshine keeps shining on my face
I see the Lord in the warmth that it gives
Cold wind keeps blowing when I walk
I see the Lord in the chillness that I feel
Thunder keeps roaring in my ears
I see the Lord in the shiver that I get
White snow keeps falling on my feet
I see the Lord in the numbness that I sense
Clear stream keeps flowing through my legs
I see the Lord in the gentle push that it gives
Waves keep calling me up the shore
I see the Lord in the tingle in my toes
Green grass keeps brushing through my feet
I see the Lord in the touch that I feel
Small rocks keep poking through the feet
I see the Lord in the brick that it gives.

## Oh Lord! Please take take me home

So many times I've been asking
So many times I've been pleading
So many times I've been begging
So many times I've been waiting
Why you are not still Coming?

So many days I've been weeping
So many months I've been aching
So many ways I've been hurting
So many nights I've been waking
Why you are not still Coming?

So many way I've been praying
So many days I've been searching
So many times I've been hoping
So many months I've been suffering
Why you are not still healing?

So many hand you've been holding
So many hearts you've been touching
So many people you've been calling
So many days I've been longing
Why you are not still taking?

So many prayers I've been saying
So many times I've been coming
So little faith I've been having
So little trust I've been holding
Why you are not still changing?

Oh Lord! Please take take me home.

# சுயநலம்

கேள்வி : பகவான், நாங்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் சுயநலம்தான். அப்படியிருக்க, சத்கர்மாவை எப்படி நாங்கள் சம்பாதிப்பது?

ஸ்ரீ பகவான் : முழுச் சுயநலத்துடனேயே நீங்கள் மக்களுக்கு உதவி செய்து சத்கர்மா சம்பாதிக்கலாம். **நீங்கள் புண்ணியம் சம்பாதிக்கத்தான் மற்றவர்களுக்கு உதவி செய்கிறீர்கள் என்று தெளிவாக உணர்ந்தே செய்யலாம். சுயநலமற்றவராக இருக்க வேண்டியது இல்லை.** ஒரு வேளை உங்கள் கண்பார்வை மிகவும் மோசமாக இருந்தால், ஒரு கண் மருத்துவமனைக்குச் சென்று, தேவையுள்ளவர்க்கு மருத்துவச் செலவிற்கு பணம் கொடுக்கலாம் அல்லது அங்கே ஏதேனும் சேவை செய்யலாம். உங்கள் கண் பார்வை சீராக வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இதைச் செய்தால் உங்கள் கண் பார்வையில் முன்னேற்றம் தெரியும். இவ்விதமாகத்தான் கர்மா வேலை செய்கிறது. **'நான்' என்ற உணர்ச்சி உள்ளவரை சுயநலமான முறையில் தான் உங்களால் நடந்து கொள்ளமுடியும். தயவு செய்து, சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். நாங்கள் உங்களை சுயநலத்திலிருந்து விடுதலை அடையும்படி கூறவில்லை. 'சுயநலம்' உள்ளது என்பதைப் பற்றி விழிப்புணர்வோடு இருக்கும்படி மட்டுமே கூறுகிறோம். 'அக'த்திலிருந்து விடுதலை அளிக்க வேண்டியது என் வேலை. உங்களால் அதைச் செய்ய முடியாது.**

# வியக்கின்றேன் இறைவா

சாஷாத் பரப்பிரம்மமான என் அருமை குருதேவனுக்கு,

என் மிகப் பணிவான வணக்கங்கள். என்னை, உங்கள் தாஸனாய், சேவகனாய் ஏற்றுக் கொண்ட, உங்கள் கருணையை நினைந்து, நினைந்து நெகிழ்ந்து மகிழ்ந்து கொண்டே இருக்கின்றேன். ஒவ்வொருவர் வாழ்விலும், ஒரு கட்டத்தில், ஒரு குருவைத் தேடி அலைவார்களாம். குருவும், பொருத்தமான சிஷ்யனின் வருகைக்காக ஏங்கிக் காத்திருப்பாராம். ஸ்ரீ ராம கிருஷ்ணர், விவேகானந்தருக்காகக் காத்திருந்ததைப் போல... எங்கோ, படித்த நினைவு, குருவின் மகிமை பற்றியும், குருபக்தியைப் பற்றியும் ஏதுமே அறியாத இந்தப் பாமரனை, நீங்கள் சேவகனாய் ஏற்ற உங்கள் தயாள குணத்தை எவ்வாறு வர்ணிப்பதென்றே தெரியாது திகைக்கின்றேன். திக்கற்று, வாழ்வில் தவிப்பவர்க்கு, உங்கள் பாதாரவிந்தங்களை வந்தடையும் வழிகாட்டியாய் இருக்குமாறு பணித்தீர்கள். நீங்கள், என்னுள் இருந்து ஒவ்வொரு ஷணமும் என்னை வழிகாட்டுவதை உணர்கிறேன். என்னை ஒரு கருவியாக்கி மக்களின் துயர் தீர்க்கும் விந்தையைக் கண்டு வியக்கிறேன். மக்கள், சில சமயங்களில், இதை நீங்கள் செய்யும் அற்புதம் எனப் புரியாமல், எனக்கு மரியாதை செலுத்தும் போது, சிறிது சங்கடமாக இருந்தாலும், என் அகம் மலர்ந்து, சிறிது ஆணவம் தலை தூக்கத்தான் செய்கிறது! என் உள்ளம் சொல்கிறது "**நீ வெறும் பூஜ்யம் தான்**" என்று. ***மின்சாரக் கம்பியில் மின்சார சக்தி பாயாவிடில் அது வெறும் கம்பிதான். அந்தக் கம்பி என்னால் தான் விளக்கு எரிகிறது. மின் விசிறி சுற்றுகிறது. எனப் பெருமைப்பட்டுக் கொண்டால்.... என்ன முட்டாள்தனம்!*** 'நான் செய்கிறேன்' என்ற ஆணவம் இன்னும் எனக்கு உள்ளதே. ஆனாலும் மனது ஏற்றுக்கொள்ள மறுக்கிறதே!

**ஆனாலும்...**

**என்னைச் சேவகனாய் ஏற்ற உங்கள் கருணையை என்ன சொல்ல?**

என்னைச் சில பணிகள் செய்யுமாறு கட்டளை இட்டீர்கள். மனது உடனே எடை போட்டது. ஒப்பிட்டது, காரணங்களை ஆராயத் தொடங்கியது. இதை ஏன் செய்ய வேண்டும், எதற்கு இவ்வாறு செய்ய வேண்டும், என ஆயிரம் கேள்விகள் எழுந்தது. ஆதி சங்கரனின் சீடரான பத்மபாதரின் கதையை ஞாபகப்படுத்தினீர்கள்.

ஆதிசங்கரர், கங்கைக் கரையில், சிஷ்யர்களுக்கு வேதாந்தப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். மறுகரையில் 'சனந்தர்' என்ற சிஷ்யர் இருக்கிறார். அவரைச் சைகை காட்டித் தம் அருகே அழைக்கிறார் ஆச்சார்யர். குருவின் ஆக்ஞையே குறியாக உள்ள அந்தச் சீடர் உடனே குருவை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார்! குரு பக்தியில் மூழ்கியிருக்கும் அந்தச் சீடருக்கு 'குரு அழைக்கிறார், அவரிடம் செல்ல வேண்டும்' என்பது ஒன்றுதான் நினைவில் உள்ளது. நதி குறுக்கிடுகிறதே என்ற ஸ்மரணையே இன்றி நீரோட்டத்தின் மேல் நடக்கிறார்! மற்ற சிஷ்யர்கள் பிரமித்தவாறு பார்க்கின்றனர். இதென்ன விந்தை! நீர் மேல் அவர் எப்படி நடக்கிறார்? இல்லை, நீர் மீது நடக்கவில்லை. அவர் அடியை வைக்கும் ஒவ்வோர் இடத்திலும் பகவான் ஒரு (தாமரையை) பத்மத்தை மலரச் செய்து அவரைத் தாங்குகிறார்! குரு பக்தியின் மகிமையைப் புரியவைக்க இறைவன் நடத்திய நாடகமல்லவா இது! குருவும் அகமகிழ்ந்து சனந்தரை ''பத்மபாதர்'' என வாழ்த்துகிறார்.

**குருவின் வார்த்தைகளைத் தெய்வ வாக்காக மதித்து, முழுச் சரணாகதியோடு, ஒரு மனதுடன், ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்விகளில்லாமல் செயல்பட்டால், தாமரை மலரால் உன்னைத் தாங்குவேன் என்னும் செய்தியை உலகிற்கு 'பத்மபாதர்' மூலம் எவ்வளவு அழகாகக் காட்டினீர்கள்? இன்னும் அது போன்ற சரணாகதியும், பக்தியும் ஏற்படவில்லையே. தெய்வத்தையே இந்த மனது ஆயிரம் கேள்விகள் கேட்கின்றதே!**

**ஆனாலும்....**

**என்னைச் சேகவனாய் ஏற்ற உங்கள் பொறுமையை என்ன சொல்ல?**

மக்கள் சேவை, மகேசன் சேவை என்பன போன்ற பழமொழிகள் தெரிந்தாலும், மற்றொரு சேவகன் என்னை ஏவினால், அந்த அதிகார வார்த்தைகளுக்குப் பணிய மறுக்கின்றதே. மனது காயப்படுகிறது. இறைவன் இப்பணியை செய்யும் பாக்கியத்தைத் தருகிறான் எனப் புரிந்து செயல்பட மறுக்கின்றது. 'இவருக்குக் கொடுத்த பணியை எனிடம் தள்ளிவிடப் பார்க்கிறார்! இவர் யார் என்னை அதிகாரம் செய்ய எனப் பொருமுகிறது. இது 'நம் பணி' என்ற பரந்த மனப்பான்மை இல்லையே. அவரை அதிகாரத் தோரணையோடு பேசச் செய்வதே நீங்களல்லவா? **பணியமறுக்கும், என் ஆணவத்தை படம் பிடித்துக் காட்டவே அவர் அவ்வாறு ஏகுகிறார் எனப் புரிந்தாலும், அவர் மேல் இந்த மனது கோபம் கொள்கிறதே!**

**ஆனாலும்...**

**என்னை தாஸனாய், சேவகனாய் ஏற்ற உங்கள் அன்பை என்னவென்பது?**

குருதேவனே, நீங்கள் அமைதியே உருவாய், அனைத்துச் செயல்களின் பின்னணியில் உள்ளீர்கள். **ஆனால் நானோ, கடுகனவைச் செய்துவிட்டு (இதையும் நானே செய்வேன்) அதை அனைவரும் அங்கீகரிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.** மற்ற சேவகனை நீங்கள் வாயாரப் புகழும்போது, சந்தோஷப்படுவதற்குப் பதில் (அதைப் போல் வெளியில் நடித்தாலும!) மனம் பொறாமை கொள்கிறது. 'நான் உயிரைக் கொடுத்து உழைக்கின்றேன். இவர் என்ன பெரிதாய்ச் சாதித்து விட்டார் என்னைவிட?" அவரிடம் சென்று, அவர் செய்த பணியில், ஏற்பட்ட ஒரு சிறு குற்றத்தைச் சுட்டிக் காட்டியபின் மனம் சிறிது சமாதானம் அடைகிறது! பொறாமை தலை தூக்குகிறது, **புகழ்ச்சிக்கும், அங்கீகாரத்திற்கும் மனம் ஏங்குகிறதே!**

ஆனாலும்...

**என்னைச் சேவகனாய் ஏற்ற உங்கள் பரம கிருபையை என்னவென்பது?**

எனக்குள் ஏதோ குற்ற பாவமோ, தாழ்வு மனப்பான்மையோ அல்லது அன்புக்காக ஏக்கமோ இருக்க வேண்டும். நன்றாகத் தெரிந்த ஒரு நண்பன் என்னைக் கண்டும் காணாததுபோல் செல்வதாக நினைக்கிறேன். மற்றவர்களிடம் அவன் சகஜமாகப் பழகுவது போலவும் என்னைப் பார்த்ததும் விலகிச் செல்வது போலவும் தோன்றுகிறது. அவனுக்குப் பெரிய இடத்து சகவாசங்கள் கிடைத்தவுடன் என்னை அலட்சியம் செய்வது போல் தோன்றுகிறது. மனது காயப்படுகிறது. நானே என்னை கவனிக்கவில்லை என மனதுள் போராடிக் கொண்டிருக்கிறேன். அவனுக்கு எத்தனையோ கவலைகள்; எண்ணங்கள் இருக்கலாம். அல்லது அவன் அவ்வாறு நடந்து கொள்வதே நான் என்னைப் பார்த்துக் கொள்ளத்தான் எனப் புரிந்தாலும், பார்க்க மறுக்கிறேன்! **மற்றவர்களை அவர்கள் ஸ்திதியில் இருந்து பார்க்கத் தவறுகிறேன்.**

ஆனாலும்....

**என்னைச் சேவகனாய் ஏற்றுக் கொண்ட உங்கள் வாத்சல்யத்தை என்ன சொல்ல?**

ஒன்று மட்டும் புரிகிறது. சர்வ வல்லமை படைத்த உமக்கு. இந்தச் சிறு பணிகள் ஒரு பொருட்டே அல்ல! நீங்கள் நினைத்தால், இவ்வுலகை ஒரு ஷணத்தில் மாற்ற இயலும்.

இப்படியிருக்க, நான் ஏதோ உங்களுக்கு பெரிய 'சேவை' செய்வதாகச் சொல்லிக் கொண்ட திரிகிறேன்! என்ன வினோதம், ஆனால் எப்படியோ, ஒன்றை உணர முடிகின்றது. **என்னுள் இருக்கும், ஆணவத்தை, பொறாமையை, பயத்தை, எடை போடும் குணத்தை, சுயநலத்தை, எதிர்பார்ப்புக்களை, கோபத்தை, வெறுப்பைப் பார்க்க முடிகின்றது. மற்றவரிடம் அல்லவா இவைகளை நான் இது நாள்வரை பார்த்துக் கொண்டிருந்தேன்!**

**நீங்கள் பரம புத்திமானாகத்தான் இருக்க வேண்டும்! என்னைச் 'சேவகன்' எனக் குளிரச் செய்து, எனக்கு, நானே 'நன்மை' செய்து கொள்ளுமாறு செய்கின்றீர்! நான் மலர வேண்டும். என் ஹருதயம் விசாலமாக வேண்டும் என்பதற்காக நீங்கள் அருளியுள்ள மாபெரும் பாக்கியம் என் கர்ம வினையை மாற்றி 'சத் கர்மா'வைச் சேர்த்துக் கொள்ள நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் மகத்தான சந்தர்ப்பம்தான், இந் சேவா பாக்கியம் என்பது புரிகின்றது.**

''எல்லாவிதமான செல்வங்களையும் ஒருவன் பெற்றிருப்பினும், குருவின் பாதாரவிந்தங்களில் மனதைப் பிணைக்கும் பேற்றிற்கு அவை ஈடாகுமா?'' எனக் குரு அஷ்டகத்தில் ஆதி சங்கரர் கூறுகிறார்.

இந்த மாபெரும் செல்வதை (இதைச் செல்வம் எனக் கூடப் புரிந்து கொள்ள முடியாத) எப்படி வாங்கிக் கொள்வதென்றே தெரியாமல் பிரமித்து, நின்கின்றேன்.

**ஆனாலும்....**

**என்னைச் சேவகனாய் ஏற்ற பரம தயாளனே உங்கள் மகா கருணைக்கு நிகரேது?**

குருதேவனே,

ஸ்ரீராமனுடைய, பக்தன் ஹனுமானைப் போல், வினயத்தைத் தந்தருள்வாய் என்ற ஒரே பிரார்த்தனையுடன், என்றென்றும் உங்கள் பாதார விந்தங்களைப் பற்றி நிற்கும்,

**உங்கள் சேவகன்.** ஆதாரம் கிருபா தர்ஷன்

# கணமேனும் பிரியாத வரம் வேண்டும்

கணமேனும் பிரியாத வரம் வேண்டும் - உன்னை
கணமேனும் பிரியாத வரம் வேண்டும் - (2)
தாயாக நான் உன்னை தாலாட்டல் வேண்டும்
சேயாக நீ மடியில் தூங்கிடல் வேண்டும் (2)
கணமேனும் பிரியாத வரம் வேண்டும் - உன்னை
கணமேனும் பிரியாத வரம் வேண்டும் - (2)
கூவி அழைத்தவுடன் நீ வரல் வேண்டும்
தாவி நான் உன்னை அணைத்தல் வேண்டும் (2)
நெஞ்சம் குளிர அமுதூட்ட வேண்டும்
கொஞ்சும் மலர் சிரிப்பை காணல் வேண்டும்
நெஞ்சம் குளிர அமுதூட்ட வேண்டும்
கொஞ்சும் மலர்ச்சிரிப்பை நான் காண வேண்டும்
கணமேனும் பிரியாத வரம் வேண்டும்
கணமேனும் பிரியாத வரம் வேண்டும் (2)
பகவானே...... அம்மா..... உன்னை
கணமேனும் பிரியாத வரம் வேண்டும்
அருளாலே என் வாழ்வு மலர்ந்திட வேண்டும் என்றும்
இதயத்தில் நிறைவாக இருந்திட வேண்டும்
பாத கமலத்தில் சரணடைந்தேனே - பக...வானே
அம்மா... ப.....க....வா....னே...... அ....ம்மா.
கணமேனும் பிரியாத வரம் வேண்டும்

# அம்மா பகவான் நாமம்

அம்மா பகவான் நாமம் சொல்லும் உனக்கு
கவலைகள் ஏன் நெஞ்சே - உன்னைக்
காப்பவர் அவரே எதனையும் கருதிவீணில் அஞ்சேல்
என்றும் - அம்மா பகவான் நாமம் சொல்லும்...
விண்ணளந்தமாயன் அந்த வேதம்புகல் தூயன்
மண்ணையுண்ட மாயன் தன்னை மதிப்பவர் சகாயன்
என்றும் - அம்மா பகவான் நாமம் சொல்லும்...
தன்னையே சரண் அடைந்து தஞ்சம் உந்தன் பாதமென்று
எண்ணி அவன் புகழ்பாடி ஏத்துகின்ற அடியவர்க்கு
அன்னையும் தந்தையுமாய் அறிவுதரும் ஆசானாய்
அன்பான நண்பனுமாய் அந்தர்யாமினாய்
உன்னுள் உறைந்திருக்கும் அம்மா பகவான்
துணை இருக்க கவலைகள் ஏன் நெஞ்சே

பக்த பராதீரன் பார்புகழும் தேவன்
அன்னை பத்மாவதி மணம் மகிழ் மணாளன்
கேட்ட வரம் அருளும் வைதர்பி மைந்தன் அவன்
என்றும் உன்னுடன் இருக்க கவலைகள் ஏன் நெஞ்சே.....
என்றும் - அம்மா பகவான் நாமம் சொல்லும்...

# ஆவிர்பாவம் காணவேண்டும்
## (ஆயர்பாடி மாளிகையில் மெட்டு)

ஆவிர்பாவம் காணவேண்டும், ஆண்டவனே உன்னையிங்கு
ஆவலோடு அழைத்திடுவேன் வாராயோ? - நீயும்
மேவி எந்தன் பாவங்களை போக்கிடுவாய் கல்கியாக
மேதினில் யாருமில்லை வாராயோ?
மேதினில் யாருமில்லை வாராயோ?

(ஆவிர்பாவம்)

பாவிஎன்னை காத்திடவே உலகில் இன்று அவதரித்தாய்
பாதம்தனை கண்டுகொண்டேன் வாராயோ? - இன்று
கூவி உன்னை அழைத்திடுவேன் கல்கிரூபம் காணவேண்டி
காட்சிதந்து என்னையிங்கு காணாயோ?
காட்சிதந்து என்னையிங்கு காணாயோ?

(ஆவிர்பாவம்)

கலியுகத்தில் உன்னைப்போல தெய்வம் வேறு இல்லையப்பா
கலங்குகின்றேன் கவலைகளைத் தீராயோ? - என்
மலையளவு பாவங்களைத் தீர்த்துவைத்த கல்கி நீயும்
மானிடராய் அவதரித்து வந்தாயே?
மானிடராய் அவதரித்து வந்தாயே?

(ஆவிர்பாவம்)

கருணையுள்ள கடவுள் நீயே; காத்துநிற்கும் தெய்வம் நீயே
கந்தனாக, இயேசுவாக வாழ்ந்தாயே! - புவி
ஒருவனுக்கு ஒருத்தி என்று உணர்த்திடவே எங்களிடை
ஒப்பில்லாத ராமனாக வாழ்ந்தாயே!
ஒப்பில்லாத ராமனாக வாழ்ந்தாயே!

(ஆவிர்பாவம்)

கீதை தந்த கண்ணன் இன்று கல்கியாக வந்து நின்று
கோலங்களைக் காட்டி வைத்தாய் கண்டோமே! -அட
பாதை என்றால் பாதையிது கல்கிதர்ம பாதையிது
பாவங்களைப் போக்கிவிடும் என்றாயே!
பாவங்களைப் போக்கிவிடும் என்றாயே!

(ஆவிர்பாவம்)

# ஆனந்த நாட்டியம்

ஆனந்த நாட்டியம்
நீலா மோகனம்
கல்கி நர்த்தனம்
ஜோதி தாண்டவம்
பக்தி புஷ்கரம்
பாப நாசனம்
பாத சேவிதம்
மோட்ச லக்ஷணம்

(ஆனந்த)

சிதறிவிடும் சிந்தனைகள்
திறந்துவிடும் இதய வாசல்
தோன்றிவிடும் கல்கி தரிசனம்

(ஆனந்த)

மாறிவிடும் ஜென்ம விதிகள்
கருகிவிடும் கர்ம வினைகள்
உலகம் முழுதும் கல்கி தர்மம்

(ஆனந்த)

கல்கி ரூபன் கருணை இது
கால தேவன் ஆணை இது
மலர்ந்து விட்டது சத்திய யுகம்

(ஆனந்த)

உலகம் உண்மை உணர்ந்து விட்டது
லோக பலம் பெருகி விட்டது
இல்லம் எல்லாம் கல்கி ஆஸ்ரமம்

(ஆனந்த)

# அருளாலே உலகாளும் அம்மா பகவான்

அருளாலே உலகாளும் அம்மா பகவான்
எமைக்காக்க இறங்கி வந்த அம்மா பகவான்
தாளாத என் துன்பம் தாங்கிக் கொண்டாய்
நானே தான் அனைத்தும் எனக்காட்டுகின்றாய்
(அருளாலே)

நாலுவகை வேதங்கள் நாயகனும் நீயே
நாடி நின்ற பேருக்குத் தந்தையும் நீயே
தேடுகின்ற கண்களுக்குத் தெய்வமும் நீயே
வாடுகின்ற நெஞ்சுக்குத் கதியும் நீயே
(அருளாலே)

கண்களில் கருணைவெள்ளம் பெருகிடவே காண்பாய்
கைகளை நீட்டியே. வாவென்று அழைப்பாய்
தன்னையே தந்தவர்க்குத் தானாகி நிற்பாய்
தனி முதலே அருள் நிதியே பரம்பொருளே சரணம்
(அருளாலே)

நோயுற்ற பேருக்குத் தாயாக வருவாய்
நிதியற்ற பேருக்குத் நிதிகளை தருவாய்
விதியென்று கதியாக நீ தோன்றி நிற்பாய்
நின் அருள் வேண்டி நின்றோம் பகவானே வருவாய்
(அருளாலே)

# கல்கி என்ற நாமம்

கல்கி என்ற நாமத்தை சொன்னால் பலநலங்கள் கூடிவருமே
கல்கி என்று சொல்லுவோர்க்கு நல்ல வினைப்பயன் கூடுமே
போற்றி போற்றி கல்கிபகவான்
போற்றி போற்றி கல்கிபகவான் 2

கல்கி என்று சொல்லுவோர்க்கு துன்பம் தரும் பிணி நீங்குமே
கல்கி என்று சிந்திப்போர்க்கு நன்மைகள் பலகூடுமெ
போற்றி போற்றி கல்கிபகவான்
போற்றி போற்றி கல்கிபகவான் 2

கல்கி என்று தானங்கள் செய்தால் நடப்பெல்லாம் நலமாகுமே
கல்கிசேவை செய்வோர்க்கு நட்புற உள்ளே தோன்றுமே
போற்றி போற்றி கல்கிபகவான்
போற்றி போற்றி கல்கிபகவான்

கல்கி என்று அன்புடன் சொல்வோர்க்கு இல்லத்தில் உறவுஓங்குமே
கல்கி என்று முழங்குவோர்க்கு மழலை இல்லாக்குறை நீங்குமே
போற்றி போற்றி கல்கிபகவான்
போற்றி போற்றி கல்கிபகவான்

கல்கி நாமம் சொல்லுவோரின் குலம் தழைத்து ஓங்குமே
கல்கி பூஜை செய்யுமிடத்து பத்மாவதி அருள் சேருமே
போற்றி போற்றி கல்கிபகவான்
போற்றி போற்றி கல்கிபகவான் 2

## நன்றிகள்...

ஆ....ஆ....ஆ....ஆ....
நன்றி நன்றி பகவானே
நன்றி அம்மா பகவானே (2)

உன்னுடன் பிறக்கச் செய்தாயே – நன்றி
உன்னோடு உறவு தந்தாயே – நன்றி
மூச்சிலும் பேச்சிலும் உனை உணர

ஜீவன்முக்தி தந்த பரமனே நன்றி
ஜீவன்முக்தி தந்த தெய்வமே நன்றி
ஜீவன்முக்தி தந்த பரமனே நன்றி

நன்றி நன்றி பகவானே
நன்றி அம்மா பகவானே (2)

குயிலின் ஓசை கேட்டேன் நன்றி
குழந்தையின் சிரிப்பை பார்த்தேன் நன்றி
இன்றே நான் உனை அனுபவிக்க (ஜீவன் முக்தி)

நன்றி நன்றி பகவானே
நன்றி அம்மா பகவானே
ஆ...ஆ...ஆ...ஆ...

வாழ்வின் பூரணம் கண்டேன் நன்றி
தூய எண்ணங்கள் கொண்டேன் நன்றி
எதிலும் எப்போதும் ஒரு நிலையாய் (ஜீவன் முக்தி)
நன்றி நன்றி பகவானே
நன்றி அம்மா பகவானே

தியாகத்தின் அக்னியை ஏற்றிவைத்தாய்
பிரக்தியுடன் எனை ஒன்றிணைத்தாய்
அற்புதமே அருள் வெள்ளமாய் வந்து (ஜீவன் முக்தி)

நன்றி நன்றி பகவானே
நன்றி அம்மா பகவானே
ஆ...ஆ...ஆ...ஆ...

# சரணாகதி பக்தியால் உனைப்பாடி

பக்தியால் உனைப்பாடி சரணடைந்தோம்
பக்த பராதீனனே கல்கி பக்த பராதீனனே
இராமராய் கிருஷ்ணராய் தர்மம் காத்த நீ
கல்கியாய்க் கலியினில் அருள்மழை பொழிகின்றாய்
(பக்தி)

பொற்காலம் துவக்கி தெய்வத் தொடர்பளித்துத்
தெய்வீகப் பாதையில் வழி காட்டுகின்றாய் (பக்தி)

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே
ஹரே கல்கி ஹரே கல்கி கல்கி கல்கி ஹரே ஹரே
ஹரே கல்கி ஹரே கல்கி கல்கி கல்கி ஹரே ஹரே

**சாந்தி மந்திரம்**

லோகா ஸமஸ்தாஸ் சுகினோ பவந்து 3
(எல்லா உலகங்களும் இன்புற்று வாழட்டும்.)

ஹரிஹி ஓம் தத்சத் பிரஹ்மார்ப்பணம் சுபமஸ்து

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

# Sri Kalki Ashtottara Sata Namavali
## ஸ்ரீ கல்கி அஷ்டோத்ரம்

1. Om Sree Sree Kalki Eeswaraaya Namaha
   ஓம் ஸ்ரீ ஸ்ரீ கல்கி ஈஸ்வராய நம:
2. Om Sampoorna Avataaraaya Namaha
   ஓம் சம்பூர்ண அவதாராய நம:
3. Om Pranavaaya Namaha
   ஓம் ப்ரணவாய நம
4. Om Bhakta Hridaya Vaasinyai Namaha
   ஓம் பக்த ஹ்ருதய வாஸின்யை நம:
5. Om Jyotirmaye Namaha
   ஓம் ஜோதிர்மயே நம:
6. Om Ananadaaya Namaha
   ஓம் ஆனந்தாய நம:
7. Om Ananta Roopaaya Namaha
   ஓம் அநந்த ரூபாய நம:
8. Om Moola Prakrutyai Namaha
   ஓம் மூல ப்ரக்ருத்யை நம:
9. Om Sarva Aaadhara Shaktiye Namaha
   ஓம் ஸர்வ ஆதார சக்தியே நம:
10. Om Sachitananda Swaroopaaya Namaha
   ஓம் சச்சிதானந்த ஸ்வரூபாய நம:
11. Om Jayaayai Namaha
   ஓம் ஜாயை நம:
12. Om Mangalaayai Namaha
   ஓம் மங்களாயை நம:
13. Om Padmavati Pataye Namaha
   ஓம் பத்மாவதி பதயே நம:
14. Om Moksha Pradaartaye Namaha
   ஓம் மோக்ஷ ப்ரார்த்தயே நம:
15. Om Karunaa Saagaraaya Namaha
   ஓம் கருணா சாகராய நம:

16. Om Sukshmaaya Namaha
ஓம் சூக்ஷ்மாய நம:
17.Om Kaarunya Sindhuve Namaha
ஓம் காருண்ய சிந்துவே நம:
18.Om Papa Naasiniyai Namaha
ஓம் பாப நாஸின்யை நம:
19.Om Ramyaayai Namaha
ஓம் ரம்யாயை நம:
20.Om Ramaneeye Gunaatmane Namaha
ஓம் ரமணீய குணாத்மனே நம:
21.Om Divyaayai Namaha
ஓம் திவ்யாயை நம:
22.Om Bhakta Vatsalaaya Namaha
ஓம் பக்த வத்ஸலாய நம:
23.Om Bhakta Paraadheenaaya Namaha
ஓம் பக்த பராதீனாய நம:
24.Om Nityaaye Namaha
ஓம் நித்யாய நம:
25.Om Anityaaya Namaha
ஓம் அநித்யாய நம:
26.Om Sarvaaya Namaha
ஓம் ஸர்வ ஸ்தள வ்யாப்தாய நம:
27.Om Sarva Athala Vyaptaaya Namaha
ஓம் ஸர்வாய நம:
28.Om Sarva ya Namaha
ஓம் ஸர்வ தோஷ நிவ்ருத்தாய நம:
29.Om Sarva Paapa Haraaya Namaha
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
30.Om Vaachapataye Namaha
ஓம் வாசஸ்பதயே நம:
31.Om Bhaya Haraaya Namaha
ஓம் பவ பய ஹராய நம:
32.Om Kaala Swaoopine Namaha
ஓம் கால ஸ்வரூபிணே நம:

33.Om Ashta Dikpaalaaya Namaha
ஓம் அஷ்ட திக்பாலாய நம:
34.Om Pancha Bhoothaaya Namaha
ஓம் பஞ்சபூதாய நம:
35.Om Satya Loka Vaasaaya Namaha
ஓம் ஸத்ய லோக வாஸாய நம:
36.Om Sarva Antaryaamine Namaha
ஓம் சர்வ அந்தர்யாமினே நம:
37.Om Satya Lokasaya Raajya Paripaalane Namaha
ஓம் ஸத்ய லோகஸ்ய ராஜ்ய பரிபாலனே நம:
38.Om Neecha Paapi Rakshakaaya Namaha
ஓம் நீச்ச பாபி ரக்ஷகாய நம:
39.Om Mahato Maheeyane Namaha
ஓம் மஹதோ மஹியனே நம:
40.Om Aadi Sutradharuye Namaha
ஓம் ஆதி சூத்ரதாரியே நம:
41.Om Viswa Jananyai Namaha
ஓம் விஸ்வ ஜனன்யை நம:
42.Om Aadi Chitanya Swaroopaaya Namaha
ஓம் அதி சைதன்ய ஸ்வரூபாய நம:
43.Om Sankata Haraaya Namaha
ஓம் சங்கட ஹராய நம:
44.Om Gnaana Swaroopaya Namaha
ஓம் ஞான ஸ்வரூபாய
45.Om Atindriaya Namaha
ஓம் அதீந்திரியாய நம:
46.Om Aadi Sakthaye Namaha
ஓம் ஆதி சக்தயே நம:
47.Om Aadi Sundaraya Namaha
ஓம் ஆதி சுந்தராய நம:
48.Om Parama Pavitraaya Namaha
ஓம் பரம பவித்ராய நம:
49.Om Trimoorty Swaroopaaya Namaha
ஓம் த்ரிமூர்த்தி ஸ்வரூபாய நம:

50.Om Jagadodharaaya Namaha
ஓம் ஜகதோத்தாராய நம:
51.Om Triguna Teerthaaya Namaha
ஓம் திரிகுண தீர்த்தாய நம:
52.Om Trikaalaaya Namaha
ஓம் த்ரிகாலாய நம:
53.Om Trikaalaa Gnaana Sampannaaya Namaha
ஓம் திரிகாலா ஞான ஸம்பன்னாய நம:
54.Om Parama Purushaaya Namaha
ஓம் பரம புருஷாய நம:
55.Om Krupa Sahaaraaya Namaha
ஓம் கிருபா ஸாஹுராய நம:
56.Om Prema Pradaataaya Namaha
ஓம் ப்ரேம ப்ரதாதாய நம:
57.Om Satyaaya Namaha
ஓம் ஸத்யாய நம:
58.Om Satya Prema Swaroopaaya Namaha
ஓம் ஸத்ய ப்ரேம ஸ்வருபாய நம:
59.Om Sapeeta Vastraaya Namaha
ஓம் ஸபீத வஸ்த்ராய நம:
60.Om Sarvesaaya Namaha
ஓம் ஸர்வேஸாய நம:
61.Om Jagat Kukshaye Namaha
ஓம் ஜகத் குஷ்ஷியே நம:
62.Om Mahaatmane Namaha
ஓம் மஹாத்மனே நம:
63.Om Mahaa Tejasvine Namaha
ஓம் மஹா தேஜஸ்வினே நம:
64.Om Ramanaaya Namaha
ஓம் ரமணாய நம:
65.Om Dakshaaya Namaha
ஓம் தக்ஷாய நம:
66.Om Akrooraaya Namaha
ஓம் அக்ருராய நம:

67.Om Deena Bandhuve Namaha
ஓம் தீன பந்துவே நம:
68.Om Deena Dayaala Namaha
ஓம் தீன தயாளா நம:
69.Om Anoraneeyane Namaha
ஓம் அனோரணியனே நம:
70.Om Jagannadhaaya Namaha
ஓம் ஜகந்நாதாய நம:
71.Om Aadi Moortaye Namaha
ஓம் ஆதி மூர்த்தயே நம:
72.Om Viswa Roopaya Namaha
ஓம் விஸ்வரூபாய நம:
73.Om Sreshtaaya Namaha
ஓம் ஸ்ரேஷ்டாய நம:
74.Om Bhakta Lokaika Varadaaya Namaha
ஓம் பக்த லோகைக வரதாய நம:
75.Om Jeevesaaya Namaha
ஓம் ஜீவேஸாய நம:
76.Om Jananaaya Namaha
ஓம் ஜனனாய நம:
77.Om Daaridra Dhwamsinyai Namaha
ஓம் தாரித்ர த்வம்ஸின்யை:
78.Om Poorna Bodhaaya Namaha
ஓம் பூர்ண போதாய நம:
79.Om Sarva Siddhi Varapradaaye Namaha
ஓம் ஸர்வ சித்தி வரப்ரதாய நம:
80.Om Sarvaatmane Namaha
ஓம் ஸர்வாத்மனே நம:
81.Om Sarvottamane Namaha
ஓம் ஸர்வோத்தமனே:
82.Om Mahaneeyaaya Namaha
ஓம் மஹ நீயாய நம:
83.Om Saasvataaya Namaha
ஓம் ஸாஸ்வதாய நம:

84.Om Anantayaaya Namaha
ஓம் அநந்தாய நம:
85.Om Parameswaraaya Namaha
ஓம் பரமேஸ்வராய நம:
86.Om Punya Seelaaya Namaha
ஓம் புண்ய ஸீலாய நம:
87.Om Anaadha Rakshakaaya Namaha
ஓம் அனாத ரக்ஷகாய நம:
88.Om Kaamita Varapradaayine Namaha
ஓம் காமித வரப்ரதாயினே நம:
89.Om Bhaki Gnaana Vairaagya Pradaataaya Namaha
ஓம் பக்தி ஞான வைராக்ய ப்ரதாதாய நம:
90.Om Purushttamaaya Namaha
ஓம் புருஷோத்தமாய நம:
91.Om Karunaa Poorna Hridayaaya Namaha
ஓம் கருணா பூர்ண ஹ்ருதயாய நம:.
92.Om Satya Yuga Raajaaya Namaha
ஓம் ஸத்ய யுக ராஜாய நம:
93.Om Jeevan Mukthi Pradaataaya Namaha
ஓம் ஜீவன் முக்தி ப்ரதாதாய நம:
94.Om Durita Nivaaranaaya Namaha
ஓம் துரித நிவாரணாய நம:
95.Om Mahaa Maayaaya Namaha
ஓம் மஹா மாயாய நம:
96.Om Shaantaaya Namaha
ஓம் ஸாந்தாய நம:
97.Om Sulabhaaya Namaha
ஓம் ஸுலபாய நம:
98.Om Vedaaya Namaha
ஓம் வேதாய் நம:
99.Om Muktaa Naama Paramagataye Namaha
ஓம் முக்தா நாம பரமகதயே நம:
100.Om Trilokeswaraaya Namaha
ஓம் திரிலோகேஸ்வராய நம:

101.Om Jitaa Mitraaya Namaha
ஓம் ஜிதா மித்ராய நம:
102.Om Saatveekaaya Namaha
ஓம் ஸாத்வீகாய நம:
103.Om Maha Vidyaaya Namaha
ஓம் மஹா வித்யாய நம:
104.Om Pateeta Paavanaaya Namaha
ஓம் பதீத பாவனாய நம:
105.Om Oushadhaaya Namaha
ஓம் ஔஷதாய நம:
106.Om Narajanma Vinaashaaya Namaha
ஓம் நரஜன்ம வினசாய நம:
107.Om Sahasra Koti Yuga Dhaarine Namaha
ஓம் ஸஹஸ்ர கோடி யுகதாரிணே நம:
108.Om Tejmaya Nija Roopaaya Namaha
ஓம் தேஜோமய நிஜ ரூபாய நம ரூபாய நம:

## மங்களம்


மங்களம் கல்கி தேவாயா ப்ரத்யஷ தெய்வதாயனஹ;
பத்மாவத்யை சதத்தேவ்யை பகவத்யைசு மங்களம்
மங்களம் திசதாத் கல்கி பகவான் பக்தவத்சஹ;
கல்கி தேவி ததாகுர்யாத் சர்வேஷாம் நகசு மங்களம்

**பொருள் :~** பிரத்யஷமான தெய்வமான ஸ்ரீ கல்கி தேவனுக்கும் மங்களம் உண்டாகட்டும்.
வாத்சல்யத்துடன் ஸ்ரீகல்கி பகவான் பக்தர்களிற்கும் மங்களத்தை அளிக்கட்டும்...
அனைவரிற்கும் மங்களம் உண்டாக கல்கி தேவியும் அவ்வாறே அருளட்டும்.

# வாழி

கலியுகம் தனில் வந்து கல்கியாய் அவதரித்தாய்
வாழியவே வாழி...நீ வாழி...
புவனம் தனை உய்விக்க நேமத்தில் நீ கொண்ட இக்கோலமும்
வாழி...நீ வாழி
யுகம் யுகமாய் அவதரித்து தர்மத்தை வாழவைக்கும்
வாழியவே வாழி...
சுகமான உன்நாமம் சொன்னாலே எழுந்தருளும் பகவானே நீ
வாழி... நீ வாழி...
நத்தத்தில் தான்பிறந்து பெரம்பூரில் வாழ்ந்தவனே
வாழியவே வாழி...நீ வாழி...
பார் புகழும் மன்னவனே பரந்தாமன் கல்கியே பகவானே நீ
வாழி... நீ வாழி...
பொங்கிடும் மங்களங்கள் எங்குமே தங்கிடவே
வாழியவே வாழி...நீ வாழி
சச்சிதானந்தமே பரப்பிரம்மரூபமே
வாழியவே வாழி...நீ வாழி
புருஷோத்தம பரமாத்மா கல்கி அவதாரமே நித்தியமே நீ
வாழி... நீ வாழி...
பல்லாண்டு பல்லாண்டு பலகோடி ஆண்டுகள்
பரம்பொருள் கல்கியே வாழியவே வாழி...நீ வாழி

*ஆதாரமான நூல்கள் :- ஸ்ரீகல்கி கிருபாதர்ஷன், அம்மா.*
*பகவனுடன் சில மணி நேரங்கள்*





Contact :- "Oneness University". Avanthi Road, Govardhanapuram,
Varadaiahpalem, Chittoor (DT), Andhara Praedesh, India.
Phone : 0091 8576- 279948, 279960, 279967.

"Amma Bhagavan Alayam" Nemem, Andersanpet,
Thirumalizai Vazhi, Thiruvalloor (DT), Tamilnadu.
Phone : 0091 4426- 273354

Website :- www.onenessindia.org
www.onenesslk.org
www.experiencefestival.com
www.onenessuniversity.org
www.onenessflorida.org

" Sri Kalki Saran" Ideal, No- 01, Sinsaba Road, Colombo 06, Sri Lanka.
Phone : 0094 112-554888, 554889, 593874, 554909 Fax : 593874



வெளியீடு:- "ஸ்ரீ கல்கிசரன்" ஐடியல், இல-01 சின்சபா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு, இலங்கை.
தொலைபேசி:- 0094-112554909 தொலைநகல் 0094-112593874.
Email :- antaryamin@live.com